2953

அடையா...
சென்னை-20

உ

சிவமயம்:

திருச்சிற்றம்பலம்.

# திருப்பணைசைப்புராணம்

இது

பனைப்பாக்கம் செங்குந்தமரபு

மொ-அம்பலத்தாடி-முதலியார்குமாரர்

நாராயணமுதலியார் அவர்களாலும்,

ஷையூர்-ஷைமரபு-கண்டிமுதலியார்குமாரர்

எல்லப்பமுதலியார்அவர்களாலும்

ஷைகிராமத்தார்வேண்டுகோளால்

இயற்றப்பட்டு

இந்நூலாசிரியர்களின்போதகாசிரியராகிய

மகாவித்வான்

ஐ. சிவப்பிரகாசையரவர்களால்

பரிசோதிக்கப்பட்டு,

பிரசிங்காமிர்தம் பாலூர்-வேலுதேசிகரவர்களால்,

பார்வையிடப்பட்டு,

ஷையூர் சாந்தான் சேஷப்பமுதலியாரவர்கள்

குமாரரும்

ஸ்ரீ காளத்திநாதசுவாமியார்தேவஸ்தான

தருமகருத்தருமாகிய

ஸ்ரீமான்-இராமலிங்கமுதலியாரவர்களால்

சென்னை

ஞானசம்பந்த அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சாதாரண௵ ஆவணி௴.

1910

இது-இப்புராணத்தில்
புலியும் மயிலும் பூசித்த
ஐதீகத்திருவுருவப்படம்.



சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துமகாவித்துவான்
சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்
பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்
இயற்றிய.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மங்களமே வியதமிழி னுயர்மறைகள் சிவமணமே மலிந்து வீசத்
தங்கியமுப் பானிரண்டு மாதளிக ளங்கமெனத் தாங்கி ஞானப்
புங்கவர்க ளனிவிழைந்து தவமுஞற்ற வத்துவித போக மீயுந்
துங்கமிகு பாலிநதி விளையாடும் விளைநிலமார் தொண்டை நாட்டில்.

நிலமுழுது மிசைவாய்ந்த விரும்பதிகள் பலவற்று ணேர்மை
பெற்று, நிலவனைய மணிமாளி கைகளுலு நெடுமறுகு நியமஞ் சூழ,
நலமதிக மாயுதவு மேதாவி யர்சங்க நாளு மேவப், பலமெலையும்
பொழிபொழில்கள் சூழ்தருநன் னகராகப் பாரிலோங்கும். (உ)

திருப்பனைசைப் புராணமென வொருபெருங்காப் பியமதுதான்
றிறமாச் சொற்றூர், பொருப்பதனி லொளிருமொரு தீபமெனவே
நாளும் பொலிந்து லாவ, விருப்பமுட னவலர்கள் பற்பலருஞ் சிரந்
துளக்கி வியந்து பேச, இருப்புறநீ டூழிகா லம்வரையி லேவிளங்கி
யிலிக்க மாதோ. (ங)

அத்தகைய புலவர்சிகா மணிகளியா ரெனவினவி லறைதுங்
கேண்மின், சுத்தமுறுகௌசிகோத் திரசிவருக் கிரமதனிற் றோன்றி
நாளும், பத்திமையி லேசிறந்த செங்குந்தர் மணிவிளக்காய்ப் பாரி
லோங்கும், உத்தமவப் பனைசைநக ரம்பலத்தா டிக்கோமா னுயர்த
வத்தில். (ச)

வந்துசிவ னடியாரைச் சிவமெனவே பாவிக்கும் வண்மைகொண்
டே, ஐந்தெழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக வுறிவிற்
கொண்டு, செந்தமிழி னுளவரிய நயமனைத்து மேதேர்ந்த சிறப்பு
வாய்ந்து, புந்தியினி னயசுகுணந் தங்கியநா ராயணனும் புலவன்
றனும். (ரு)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

அந்தகைய கோத்திரஞ்சூத் திரமரபிற் கோரணியா யமர்ந்து வாழ்ந்த, உத்தமனப் பனைசையினிற் கண்டியெனு மாவிபுத னுருற்று நோன்பாற், சித்தபுத்தி யுடன்றோன்றித் தமிழ்க்கடலையேமடுத்துச் சிவத்தின் றெண்மீட, தைத்தமனத் தினனுகு மெல்லப்ப நற்கவிஞன் றானுங் கண்டீர். (௬)

இப்புரா ணத்திலுள வலங்கார கற்பனைக ளினிது நோக்கி,யவ்ப்பனைய தொடைபொருட்சொ னயமோடு பன்னரிய வண்மைசூழ்ந்தே, இப்புவியெங் கணும்பரவத் தன்னுளத்தி லேயுன்னி யெவருமெச்சத், திப்பியவச் சினிலேற்றி யாவருக்கு முபகாரஞ் செய்திட்டானால். (௭)

தன்னியர்வாழ் பனைசையினிற் காளத்தி நாதனுக்கோர் தளியுண்டாக்கி, மன்னியதா னந்தருமஞ் செயும்வள்ள லடுத்தாரை மகிழச்செய்யுங். கன்னியன்கு பேரனிகர் சம்பத்தும் புத்திரருங் கனிவா யுற்றோன், உன்னருஞ்சீ ருயர்சாந்த னிராமலிங்க னெனுஞ்சீமா னுண்மை யோனே. (௮)

உ

சிவமயம்.

# சாத்துகவிகள்.

## மகாவித்துவான்குமாரதேவையரவர்கள்

குமாரரும், இந்நூலாசிரியர்களின் போதகாசிரியருமாகிய

## ஐயன்பேட்டைசிவப்பிரகாசையரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திங்களணிசடைப்பரமன்றிருவடியைத்தொழுதேத்தித்
திகிரிவேந்தன்
மங்கைமயிலுருவகன்றபனைசைமான்மியத்தையவ்வூர்
வாழ்செங்குந்தர்
சங்கையறத்தமிழ்ச்செய்யுளாலியற்றித்தருகவெனச்
சாற்றவாணர்
சிங்கமெனக்கலைவல்லோர்புகழ்நாராயணக்கவியாஞ்
செம்மறானும். (௧)

செப்பரியபலகலைதேரெல்லப்பநாவலனுரை
செஞ்சொனோக்கு
மொப்பரியபொருளோக்குமதாடைநோக்குநடைநோக்கு
மொளிரச்செய்தா
ரிப்பெரியதிருப்பணைசைப்புராணத்திற்கிணையாக
விந்நூலன்றிச்
செப்பரியதொருநூலுமெனப்புலவரபிக்கையுடன்
றெரிப்பர்மாதோ. (௨)

# சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

பூவை. கல்யாணசுந்தரமுதலியாரவர்கள்மாணாக்கர்
பிரசங்காமிர்தம் பாலூர் வேலுதேசிகரவர்களாலியற்றிய

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருமலிசெங்கமலமலர்வாவிகள்சூழ்
செழும்பணைசைச்சினோர்காதை
யிருந்தமிழாலகத்தியனுந்தலையசைக்க
வகமகிழ்ந்தேட்டான்றோர்மெச்ச
முருகுவிரிநீபமலர்த்தொடையணிந்தோன்
முன்னமகிழ்ந்தம்பிமாரி
னருங்குலவெல்லப்பனுராயணனென்
றுமிருவரறைந்தாரன்றே.

சை அவதானியார்மாணாக்கரும்
மதுரைத்தமிழ்ச்சங்கத்துவித்துவானுமாகிய
வண்ணக்களஞ்சியம்
காஞ்சி-நாகலிங்கமுதலியாரவர்கள்
இயற்றிய
பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

புண்ணியர்பற் பலருறையுந் திருப்பணைசை மாநகரின்புகழுனைத்
புலவர்கள்கண் டதிசயிக்க நவரசமு மேயபெரிய புராணத்

சொற்றூர், எண்ணருஞ்சீ ருபயசுப் பிரமணிய மரபினுக்கிங்கிருகண் ணென்ன, விலங்கிச்செந் தமிழ்க்கடலை யுண்டேப்ப மிட்டபெருமேற் றம் வாய்ந்து, நண்ணியநா ராயணனெல் லப்பனெனு நாவலரா நற் பேர் பெற்றோர், நயமிகுமப் புராணத்தி னருமையினை நனிசூழ்ந்து நன்கச் சிட்டான். எண்ணியதா னந்தருமஞ் செய்வள்ளல் சிவபுண்ய னிருங்கு பேரன், எழிலார்ந்த வுயர்சாந்தா னிராமலிங்க னெனுஞ் சீமா னெனவாழ் வானே.

காஞ்சிபுரம்-ம-ள-ள-ஸ்ரீ

சோணாசலபாரதியார்அவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

தெனைப்பாக்கம்வாழைகரும்பையுமுடுத்த
சாலிக்குஞ் சேலைநல்கும்
பனைப்பாக்கமகிமைநாராயணவே
ளெல்லப்பப் பாவலோனு
முனைப்பாக்கமிதுவெனச்சொற்புராணமதை
யிராமலிங்க முன்னோனன்பி
னினைப்பாக்கமாமென்றேயச்சிட்டு
வழங்கினா னீடுவாழி.

சிவமயம்.

# சோதனைபத்திரம்.

| பக்கம். | பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| ௨ | ௬ | ௪ | னெழி | ளெழி |
| ௩ | ௧௧ | ௧ | பருதி | பரிதி |
| ௭ | ௨ | ௩ | செயத | செய்த |
| ௧௩ | ௪௪ | ௮ | மருத | நெய்த |
| ௧௮ | ௨௪ | ௨ | தூய | மேய |
| ௸ | ௸ | ௸ | துளங் | விளங் |
| ௩௪ | ௧ | ௩ | னென்ன | ளென்ன |
| ௪௫ | ௭ | ௫ | ஆர்த்தாள் | ஆர்த்தார் |
| ௬௮ | ௭ | ௨ | காங்நதி | காந்தி |
| ௬௨ | ௧௩ | ௨ | நெடுங்கண் | நெடிங்கண் |
| ௮௫ | ௮௩ | ௪ | ஐம்முகன் | ஐங்கான் |
| ௸ | ௮௬ | ௨ | வதிரத | வதிதர |
| ௯௪ | ௩௭ | ௧ | வடசுர | வடலசுர |
| ௧௭௫ | ௩௩ | ௨ | பாஞெருர் | பாஞ்ஞுரர் |

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பனசைப்புராணம்.

## பாயிரம்.

### விநாயகர்காப்பு.

நந்தமென் மாமல ரூடுறை வோனரி கண்ணகல் விண்ணிறைவை
குந்தல நீங்கி யிரிந்திட வேயமர் கொள்கய முகவவுணன்
வெந்துயர் கொண்டய ராவி விளிந்திட வெஞ்சமர் செய்தருள்சம்
பந்தவி நாயக னாரடி சென்னி பதித்து பழிச்சிடுவோம்.

### திருப்புலீசர்.

சுருப்பொலி குழலியற் சுகித்த லாலுறு
கருப்பொலி வகன்றிருட் கதியைச் சார்தர
திருப்பொலி தடவைசூழ் தால மாபுரித்
திருப்புலி நாதனைச் சிந்தை செய்துவாம். (க)

### மாயூரநாதர். (வேறு.)

கேயூர மணிப்புயங்கொ ளாவலூர் நாவலன்சொற் கேள்வி யின்ப
மாயூர மனமகிழ்ந்த னவன்விருப்பின் படிபரவை மனையிற் காலன்
பாயூரச் சென்றவடம் பிணக்கறுத்துச் சுகமளித்துப் பதத்தை யீந்த
மாயூர நாதனிரு மலரடியென் மனத்தடத்துண் மலரு மாதோ. (உ)

### சௌந்தரநாயகியார். (வேறு.)

†சந்தமுறு மலையரையன் றனைய ளாகிச் சார்கைலை மலைக்கிறைவன்
றேவி யாகிப், பந்தமுறு முலகமெலா மளித்துந் தாழாப பருமுலைசேர்
குமரியெனப் படைத்தா ளாகிச், சந்தமுறுங் கவிபுனைய ஞானப் பா
லைச் சண்பையர்கோன் றனக்களித்த தனத்தா ளாகிக், கந்தமுறும்
பொழிற்றலை நகரின் மேவுங் கருணைபொழி சுந்தரிதாள் கருத்துள்
வைப்பாம். (ங)

### காளத்திநாதர். (வேறு.)

நாளத்தி னுட்கிடந்த நாகர்வேந் தினைத்தொடர்ந்து நலித்த பாவம்
நீளத்தி னுறச்செய்த கடம்பவனத் துறுமடவார் நிறைந்த வன்பாற்
காளத்தி நகர்க்கேகுங் கா‡லாற்றுத் துணையாகிக் கதியை யீந்த
காளத்தி நாதனிரு பதமலரை யெஞ்ஞான்றுங் கருதி வாழ்வாம் (ச)

---

† சந்தம்-அழகு, சந்தம்-இசை.   ‡ ஆற்றுத்துணை-வழித்துணை.

### ஞானம்பிகையார்.

அளிமிகுநற் றவருளத்தில் வெளியாக விருந்தருளு மதுவே யன்றி †யிளிமிகுவஞ் சகருளத்துந் தோன்றாம லிருந்தருளி யிருளைத் தேய்த்துச், ‡களிமிகுவெம் பிறவியெனும் பெருங்கடற்குத் தோணியுமாய்க் கருதா நந்த, வொளிமிகுசீர்க் கரைபுகுத்து முமைஞானம் பிகைபாத முன்னி வாழ்வாம். (௫)

### நடேசர்.

சீர்தந்த மறைக்கோவுஞ் செழும்பணிலத் திருமாலுஞ் செறுநர்த் தேய்த்த, கூர்தந்த திரிசூலக் கரவிறையுந் தங்கடொழிற் குறையா தாற்ற, வார்தந்த களபமுலை யுமைகாண விருமுனிவர் மகிழ்ந்து போற்ற வேர்தந்த மணிமன்று ணெழினடனஞ் செய்பவர்தா ளிறைஞ்சி வாழ்வாம். (௬)

### சிவகாமசுந்தரியார்.

உருவளிக்கு மயன்படைத்த வுலகிலெண்ணான் கெனுமறத்தை யோங்கச் செய்த, தருவளிக்குங் கரத்தாளைத் தந்திமுக னுண்டாகும் பத்தனத்தி னாளைக், கருவளிக்கு மிருவினையாங் கன்மமொழித் தரிய வின்பங் காட்டு முத்திக், திருவளிக்கும் பதத்தாளைச் சிவகாம சுந்தரியைச் சிந்தை செய்வாம். (௭)

### விநாயகக்கடவுள். (வேறு.)

எண்டிசைக ளும்பருவ தங்களகி லாண்டமுட னேழ்கடலு மம் பொன் மலையு,மண்டபகி ரண்டமு மதிர்ந்திட நடம்பயிலு மைம்மையயித யஞ்சமழ்ப்பப், பண்டொருதினம்பத மெடுத்துநட னஞ்செய்பசு பதி மகிழ்ந் தினிதுதவிய, கொண்டல்பொழி கின்றதென மும்மத மொழுக்கியவொர் கொம்பனிரு தாட்பணிகுவாம். (௮)

### சுப்பிரமணியக்கடவுள். (வேறு.)

சமரி னின்றிடு தானவ ரின்னுயிர்
*திமிர வேல்கொடு நீக்கிய தென்னவென்
றிமிரம் யாவுஞ் சிதைத்தரு டந்திடக்
குமர வேளின் குரைகழ லேத்துவாம். (௯)

### வீரபத்திரக் கடவுள்.

§ஆர பத்தி யதளணி யைம்முகற்
சார பத்தியி லாதவோர் தக்கனை
யீர பத்திர மோடெழுந் திட்டநம்
வீர பத்திர னல்வினை யோட்டுவாம். (௰)

---

† இளி-இழிவு, ‡ களி-மயக்கம். * திமிர-ஓட.
§ ஆர்-ஆத்தி, அப்பு-கங்கை, அத்தி-எலும்பு, அதள்-தோல்.

இலக்குமி நாரணர். (வேறு.)

பங்கமு றும்பவ பந்தம தாமயல் பருதியின் முனமிருள்போற்
றங்குறு மாயில தாகி யழிந்து பிசானு பவந்தருமால்
சங்கமு நேமியு மங்கையின் மீது தரித்துயர் தாலநகர்
தங்கு மிலக்குமி நாரண னாரிரு தாண்மலர் துதிசெயவே. (கக)

நாமகள். (வேறு.)

தண்டார் சூடித் தாள்பர வடியார்
கண்டே தண்டா யுதனோர் காதம்
விண்டே போக விழிக்கடை நோக்கும்
வெண்டா மரையாண் மெல்லடி பணிவாம். (கஉ)

திருநந்திதேவர். (வேறு.)

மருக்கிளர் கொன்றை வேய்ந்தோன் மலரடி தொழுவான் வந்த
தருக்கிளர் வானோர் தங்க டடமணி மகுட கோடி
குருக்கிளர் மணிகள் சிந்தக் குடங்கைவைத் திரங்கொண் டோச்சித்
திருக்கிளர் கயிலை காக்குந் தேவனைத் தொழுது வாழ்வாம். (கங)

நவவீரர். (வேறு.)

கீர வாகுழற் கவுரியி னருள்விழிக் கருணை
சேர வாகுவி னுந்தக மேந்திசே னாடர்
சூர வாகுலந் தொலைத்திட வுதித்தசுந் தரஞ்சேர்
வீர வாகுவே முதனவ வீரர்தாள் விழைவாம். (கச)

சமயாசாரிகள்பொது. (வேறு.)

அரவுகொன்ற பிள்ளையாவி யடைய வேத வனமதி
லுரவுகொண்ட கதவுமீள *வொலியலாறு விட நரி
பரியதாக வந்துதித்த பாவலோர்க ணால்வர்தஞ்
சரணவம்பு யஞ்சிரத்தில் சாற்றியாடு வாமரோ. (கரு)

திருஞானசம்பந்தர். (வேறு.)

ஈன மற்ற வெழிற்கடத் தத்தியைப்
யான லங்கட் பணிமொழிப் பைந்தொடித்
தேன ருங்குழற் சேயிழை யாக்கிய
ஞான சம்பந்த னற்பத மேத்துவாம். (கசு)

அப்பர்.

கரணம் வாக்கணி காயமிம் மூன்றையு
மரணி மூன்றெறித் தார்க்கருத் திட்பெரும்
†பரண நீங்கிய பைந்தமிழ்ச் சொல்லிறை
சரணி ரண்டுநெஞ் சத்து ளிருத்துவாம் (கஎ)

---

*ஒலியல்-ஆறு. ஆறுவிட-வழிவிட. † பரணம்-பந்தம்.

### சுந்தரமூர்த்தி.

மந்த ரப்புய மாலு மறியொணுச்
சுந்த ரப்பதஞ் சோரப் பரவைபாற்
*சந்த ரன்றனைத் தானடப் பித்தநற்
சுந்த ரன்பொற் றுணைச்சரண் டாழுவாம். (௧௯)

### மாணிக்கவாசகர்.

ஏத மார்பவத் தின்னல் களைந்திடச்
சீத வார்பொழிற் றில்லையுண் மேவிய
பூத நாதர்க்குக் கோவை புனைந்திடும்
வாத வூரன் மலர்ப்பதந் தாழுவாம். (௧௧)

### தண்டியடிகள்.

ஈச னிட மேற்குளின் மாலிய
மாசை யோடளித் திட்ட வடியர்தம்
பாச நீக்கிப் பயனளிக் கும்பவ
நாச னுகுஞ்சண் டேசனை நாடுவாம். (௨0)

### சிவனடியார். (வேறு.)

சீராரு மைந்தெழுத்தை செபித்துமணிக் கண்டிகைமெய் சிறக்கத் தாங்கி, யோராருந் திருநீறு புனைந்துமன மெய்ம்மொழியா லியைந்த பத்தி, நீராருங் கடற்புவியிற் பலவாறு புரிந்தருளை நிறையப் பெற்ற காராரு மிடற்றிறைவ னடியவர்தங் கழலிணைகள் கருத்துள் வைப்பாம். (௨௧)

### ஆசிரியர்வணக்கம். (வேறு.)

இக்குவல யத்திலெழுத் தென்ப தோரா
வெய்க்கருள்செய் தவையறிவித் திலக்கி யத்தின்
றக்கவரும் பயன்காட்டி யிலக்க ணத்தின்
றன்மையறிந் திடுமுணர்வு தந்த மேலோன்
மிக்கபுக ழைபனகர் மேவி வாழும்
வீரசைவ மரபினிதாய் விளங்கத் தோன்றுந்
தொக்கபுகழ்ச் சிவப்பிரகா சையன் பொற்றாட்
டுணைக்கமல மெம்முடியிற் சூடி னேமால். (௨௨)

### முதனூல்வழி. (வேறு.)

தெளிவுறு சிந்தை வியாதமா முனிவன் றெளித்தமு வறுபுரா ணத்து, ளளியின முகளு மலர்ச்சடைப் பரம னற்றல்கூர் புராண மீரைந்தி லொளிர்பிர மாண்ட முத்தர காண்டத் தோங்குகை லாயசங் கிதையின், வளமலிந் துறுவி லாசகாண் சியின்மா வண்மையுண் டனதமெ டுத் துரைப்பாம். (௨௩)

---

*சந்து - தூது.

முனந்தணி கையில்வாழ் முருகவேள் கடவுண் முகந்தனு முனிவ
னுக் குரைத்தான், சினந்தவி ரந்தச் செம்மலும் வியாத முனிவனுக்
கோதின னவனும், மனந்தனி லன்பு மீக்கொடா னைமா மாயைகளை
மாதியைத் தணந்து, வனத்தனே ரமிழ்துற் றேழுங்கிடு சூத வண்ண
லுக் கவையியம் பினனால். (உ௪)

## மொழிபெயர்த்தவிதம்.

போதகமிகுந் தோரடியைப் புந்திவைத்துப் பகல்திருநாட் டிப்பொ
லிவும் புகழார் தாலைத், நீதறுநன் னகர்தருப்பை வனச்சிர் கைலைத்
திருவுமுனி யாத்திரையு மும்மையா னாந்தி, நாதனைவி ரப்புலியாய்ப்
பூசைசெய்த நல்லுங்கா ளத்தியின்மான் மியமும போகி, கோநகற்
றுக் கொண்டதுவும் வாணி கேள்வன் குறித்தருச்சித் தேத்தியவக்
கொள்கை தானும். (உ௫)

தேன்பிலிற்றுங் குல்லையணி திருமால் பூசை செய்ததுவுஞ் சிறுவி
திதுன் பொழித்த வாறுங், கான்பயிலி ராகவன்பா வங்க ளர்த்த கா
தையுமன் மதன்பூசை கணித்த வாறும், நான்முறைசெங் கோலியற்
றியமன் சிந்தை நோதலொழிந் தமையுமருள் விரன் வந்த,
மேன்மையுநல் லகத்தியன்பூ சித்தநேரும் விமலனரு மணப்பெருவி
ஞேந்த மியாவும். (உ௬)

சீர்மருவு மாரியத்தி லுரைத்த வாறே செழித்தோங்கி வளர்பஞ்ச
தால நீடிக், கார்மருவு மெழிற்பனைசைப் புராணந் தன்னைக் கன
மருவு மறுமூன்று சருக்க மாகக், கார்மருவு புலவன்பின் நேமி யோ
னைத் தானடக்கச் செய்துநதி தானே நின்று, நேர்மருவு *மாறுவிடச்
செய்ததாய நிகரறுநற் றமிழதனு னிரைத்திட் டேமால். (உ௭)

## நூல்செய்ததற்குக் காரணம்.

புரையறுநன் வடமொழியி லுரைத்திருந்த புராணமதை நீ புகன்ற
வாறே தென்னி, னுரைகயிலைப் புரைமகிமை யுடையதிந்த நற்றல
மா மிதன்பெருமை நயந்து ரைத்தோர், கரையறுமின் பெய்திசுக
மடைவ ரென்று கண்ணுதல்வாக் கியவேதக் கருத்தை யோர்ந்தித்
தரையினின்மெய்ஞ் ஞானமுற வெண்ணி யாமுஞ் சாற்றினேம் பரு
ணிதர்க டையையான் மன்றே. (உ௮)

## அவையடக்கம். (வேறு.)

தொல்புகழ் சான்றோர் மேய தொண்டைமா நாட்டின் மிக்க
பல்கலைப் புலமை சான்ற பருணிதர் முன்ன மேரு
வில்லியோ னமருந்தால வியனகர்க் கதையான் கூறல்
நல்லெழிற் பொதுவர் வீதி நாடியோர் விற்றல் மானும். (உ௯)

---

# திருப்பனந்தைப்புராணம்.

இதுவுமது. (வேறு.)

பஞ்ச காவிய விலக்க ணங்கண்முதல் பார்த்துணர்ந்த கவி வாணர்
றன், செஞ்சொ லின்பொரு டெரிந்திடும் புலமை தேக்கிடும் புல
வன் யானுமென், றஞ்சுரு தறைய வெண்ணி வந்தனைநல் லாறு
முடி யணி நாகமும், பஞ்ச கோதரர்க ளாமெனப் புகலுநாங்கூ ழொர
குமிவை யாலரோ. (௧௰)

## சிறப்புப்பாயிரம்.

முனந்திருநன் வடமொழியி லிருந்ததைச்சீர் மருவவளூர் முற்குலத்
திற்,கனந்தரவோங் கியதிருவேங் கடநாதன் மொழிபெயர்த்துக் கினி
யாய் நல்க, வனந்தரஞ்செந் தமிழ்ச்செய்யு ளால்கவி ருரைபினென்
வணிசேர் தால, வனந்தனில்வாழ் பவர்வினைவ விருமையினும் பயன்
பெருமென் மகிழ்வி னாலே. (௧௧)

தேங்கமழ்பூங் காவுறையுந் திருப்பனந்தை நகரதனிற் சிறந்து மேவும்
பாங்கெயனுற் கிளையநவ வீரர்குலத் துதித்துமிகக் கருணை வாய்ந்த
வோங்குபுகழ்ச் சிவப்பிரகா சையனிடைக் கலைபயின்ற வுறுதி கொ
ண்டு,நீங்கறுமிக்காதையைநா ராயணனெல் லப்பனிவர் செப்பினாரே.

பாயிர முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௨.

# திருநாட்டுச் சருக்கம்.

உமைநன் மணலைக் குவித்திலிங்க வுருவ மாக்கிப் பூசிக்குஞ்
சமையந் தன்னிற் கம்பைதனைச் சந்து விடுத்துத் தனக்குறியமெய்
யமையும் படிசெய் தருள்கம்ப னமருந்தொண்டை நாட்டணியை
யமையும் புன்சொ லறிவின னாவே னறிந்த படி யறைவேன். (௧)

ஆலமார் கடவுள் கணங்களுண் முதன்மை யானதுண் டீரனுண் டதனாற், கோலமே வியதுண் டீரநன் னாடாய்க் கோதிலாத் தண்டக வேந்தன், சீலமோ டரசு செய்ததா லுலகிற் சீர்பெறு தண்டக நாடாய், ஞாலமேற் றொண்டை மான்புரந் ததனால் நவிற்றுவர் தொண்டை நாடென்றே. (௨)

வட்டவாய்க் கமல மலர்த்திரு மார்பன் மருவிய கச்சப வடிவை யட்டசூ லச்செங் கரத்தினோன் மகிழ்வோ டமர்தரு காஞ்சிமா நகரை, விட்டொளி காலு மணியினாற் குயிற்று மேதரு மாரமாய்த் தன்பா, லிட்டமாய்க் கொண்ட பாலிநா டொருமூன் றெனச் சொலுஞ் சகத்துயர்ந் ததுவே. (௩)

தரைசெறி யினிய போகம தருத்திச் சார்வினைத் துவக்கொழித் ததற்பி, னுரைசெறி யறத்தி னாற்றினா லுயிரை யுவமையி லருங்கதி யிசைத்து, விரைசெறி தருவார் தனதரும் போகம் விலக்குறிக் கிழக் கினி லிருத்தும். புரைசெறி துறக்க விண்ணினை யிழித்துப் புகன்றத் தொண்டைநன் னாடு. (௪)

கோள்தமக் குரிய நிலையினிற் பிறழ்ந்து கொண்டல்நீர் பொழிதரா விடினு, மாள்வினை யதனை விரும்புவி யதனை யகழ்தொறுந் தூய்த் திடு நன்னீர், நீள்திரை செறியார் கலியெனவோடு நிகரறு மாநதிக் குலத்தா, னாள்தொறு மேனை நாட்டினைப் பழித்து நக்கது தொண் டைமா நாடு (௫)

அடியவர் குறையைத் தீர்ப்பதே விரத மாக்கொளும் பசுபதி யுரைத்த, முடிவிலா கமத்தின் முறைநெறி யொழுக்கு முப்பதோ டிரண் டெனு மறமு, மடிவிலா வின்ப நிறையும்விம் மிதமு மருவிய நீக்கமி லணியாய், படிமுழு தளித்த வுமையினா லணியப் பட்டதத் தண்டக நாடு (௬)

(வேறு.)

வாய்மையா லறிவா லன்பினா லருளால் வனப்பினாற் பெரும்புக ழதனா; லோகையாற் கலையி னுணர்ச்சியா னெறியா லுற்றதோர் வலியினா லறத்தா, லீகையா லசைவின் மனத்தினால் வாழ்வா லிருங்குடி வளத்தினா னெறியா, லூகையாற் குலத்தாற் கீர்த்தியாற் குறைபா டிரைக் கொறுத் தொண்டைநன் னாடே. (௭)

(வேறு.)

இப்பர் மாதரெண் ணிருந்தனந் தோய்தலி னிகழ்விற்
கப்பி டும்பொறி குல்லைக ளேய்தலிற் கனிப்பி
னொப்பி கந்திடுங் கவுத்துவ மணியுறைந் துளதாற்
றப்பின் மானிற மென்னலாந் தண்டக நகரே. (அ)

இப்பர்-செட்டிகள், மாதர்-அழகிய, இருந்தனம்-பெருஞ் செல்வம், இப்பர் மாதர்-இடைஸ்திரீகள், அழகிய இருந்தனம்-அழகிய பெரிய கொங்கை, நிகழ்-பொருந்திய, வில்-காந்தி, கப்பிடும்-பிரகாசிக்கும், பொறி-தேர், இகழ்வு இல்-இகழ்ச்சியில்லாத, கப்பிடும் - பொருந்திய, பொறி-இலக்குமி, குல்லை-வெட்சி-துளசி, கவுத்துவமணி-பதுமராகம்-கவுத்துவமணி, மானிறம் - மால், மார்பு.

மாயன் வெள்ளிற முசலியாய் மகபதி திசைக்குப்
போய தொத்துறுவெண் முகிற்குழாம் புணரியி லண்மி
யாய வெண்டிரைப் புனன்முகந் தன்னவ னவர்
நேய னாகவந் தெனக்கறுத் தந்தர நிறைந்த. (கூ)

முன்ன மோர்பகன் மலையினுன் முகிலினம் பொழியு
மன்னு மாமழை தடுத்ததீம் மழைக்குறு வணமுஞ்
சென்னி வண்கிரி கட்குறு செருக்கடங் கிடவு
முன்னிக் கண்ணனே மழைசொரி தரவர லொக்கும். (ய)

விண்ணு லாமுடி நந்திமால் வரைமிசை மின்னிக்
தண்ணு லாய்பெரு நீர்மழை பொழிவன சலசக்
கண்ணு லாந்திரு நாயகன் பனைசைவாழ் கடவுட்
குண்ணி லாவுமன் பொடுபுன லாட்டுவ தொக்கும். (கக)

நீடு மாமலை நின்றுநீ சிழிந்திடல் நிருத்த
மாடு மெண்குணத் தோன்றிரு முடிமிசை யணிந்த
கோடு வெண்பிறை யொழுக்கிய வமுதெனக் குலவி
யோடி வந்ததை யொத்ததவ் வொலிகெழு நீத்தம். (கஉ)

முன்னர்த் தேனுவின் பயநிறை யான்வரை முகட்டிற்
றுன்னிக் காரினம் பொழிந்தநீர் தூயபா லளவிப்
பன்னர்க் காம்பெயர் பாலியா நதியெனப் பாந்தள்
மன்னர்க் காஞ்சுமை வார்கலி வையமேற் பெயர்ந்த. (கங)

பரவை மாநிலத் ததிகதூ ரத்தினிற் படர்ந்து
மருவிப் பல்லிடம் வைகியாங் காங்கினும் வயங்குந்
திரவி யந்தனைக் கொண்டுதன் பதியினைச் சேர
வருவ போனதி வார்கட லேடியே வருமால். (கச)

களிகொள் நெஞ்சிலா மெலியர்தஞ் சிறையினைக் களைந்து
அளிகொள் வல்லவர் மீட்டழைத் தேகுத லனைய
தெளிகொள் நீத்தம்வார் திண்பெறுங் கரையினைச் சிதைத்தே
யொளிகொள் வாவியி னுள்ளநீர் கொண்டினி தோடும். (௧௫)

வான மீதுறு வலிகெழு கோளரா வாய்ந்த
வான வீர்ங்கதி ரென்னவங் காந்திட வளஞ்சேர்
கான் மேவிநீ டிரையெனுங் கையினான் வதிந்த
யானை மாமருப் பினையெடுத் தெறியுமந் நீத்தம். (௧௬)

திரைவி ரும்புனற் றொண்டைநன் னாட்டினிற் றிகழுந்
தரைவ ளங்களை யிரப்புவ தன்றியுந் தகைசே
ருரைசெய் யூழுறு செம்மணி யாதியா யுள்ள
வரைவ ளங்களுந் தந்திட வந்ததவ் †வனமே. (௧௭)

சாப நீடிரைச் சாபநா ணடுவுறச் சார்ந்த
¶சோப மாருமென் கொடியடு கூர்ங்கணை சுடர்செய்
தீப மோடுறழ் மரைமுகை யாக்கொடு §திரைமேற்
கோப மோடமர்க் கேகுதல் போன்றவக் குடிஞை. (௧௮)

வேக மோடொரு ஞாங்கர்செம் மணியையும் வேறோர்
‡வாகு நீலமா மணியையு மொதுக்கியே வரலால்
வாகை யோடிரு மருங்கினு மரியயன் மருவு
மேக பாதமூர்த் தியைக்கடுத் திருந்தவவ் விருநீர். (௧௯)

புகரில் லிவகைகா வேரிசம் பாநதி புகல்பொன்
முகரி பெண்ணைசே யாறுட னளவளாய் முழங்கு
மகர வாரியி னோங்கியா ருயிரினு மல்கு
நிகரி லான்றனை நிகர்த்தவப் பாலிமா நீத்தம். (௨௰)

அந்த மார்சிலம் படியினிற் பொருந்திமிக் கரிய
சந்த நித்திலத் தோடொளி மணிப்பணி தரித்துக்
கந்த சந்தனந் திலகமெய் கமழ்தரப் புனைந்து
சிந்தை கூர்ந்தெழிற் பாலியாந் திருமகள் போந்தாள். (௨௧)

(அ-பொ-ள்.) சிலம்படி-மலையடி, தண்டைக்கால். நித்திலத்தோடு-முத்தின் காதணி, முத்துடன். மணிப்பணி - இரத்தினாபரணம், மாணிக்கமுடைய பாம்பு. சந்தனம்-சந்தனமரம், திலகம்-மஞ்சாடிமரம், சந்தனம்-திலகம்.

---

† வனம்-நீர். ¶ சோபம் - அழகு. § திரைமேல்-கடலின்மீது.
‡ வாகு-பக்கம்.

இளைத்தா ருய்ப்பெரு வானைக டாக்கலி னிளநீ
ரொளித்தி வாகரன் றேரிடை விசையினி லுறவாய்
கிளைத்து நீர்நசை யோடம ரருணனுண் டிருந்தா
னளிக்கு மூமெழுவ ணிருக்கினு மருந்துவ தியல்பே. (உஉ)

(வேறு.)

கள்ளவிழ் மலருஞ் சந்தங் கதிர்மணிக் குழையு நாவான்
விள்ளருஞ் சிலையுந் தாங்கி விரிமணித் திகிரி மேற்கொண்
டெள்ளலின் மாக்கள் சூழ வெழிற்றிரை யாற்று வேந்து
பொள்ளெனக் கடலோர் காத மெதிர்புகுந் தழைப்பப்போமால். ()

(அ-பொ-ள்.) மலரும் சந்தும் குழையும் சிலையும் தாங்கி-ஆறு, பூ சந்தனம் தளிர் ஒலி இவைகளையுடைத்தாய், அரசன்-பூமாலை சந்தனம் காதணி வில் இவைகளைத்தாங்கி, திகிரிமேற்கொண்டு-ஆறு, மூங்கிலைத் தன்மீதுகொண்டு, திகிரிமேற்கொண்டு-அரசன், இரதத்தின் மேலேறிக்கொண்டு, மாக்கள்சூழ-ஆறு, மிருகங்கள் சூழ, மாக்கள்சூழ அரசன், மனிதர்சூழ.

தோய்ந்தவர் புறத்து மாசுந் தொலைவிலா வகத்து மாசு
மோய்ந்திட வகற்றி மீட்டு முருவகை புரிந்து போகந்
தோய்ந்திட வளித்து மேலைச் சுகமுறும் பதவி நல்க
வாய்ந்தவோர் நீத்தம்பாலி யல்லது மகியின் யாதோ. (உச)

அத்திரு நதியின் சீர்த்தி யறுகொடு தும்பை சூடு
நித்தனே யுரைக்க வேண்டு மன்றியா னிகழ்ந்தற் கொண்டு
வுத்தமத் தவஞ்செய் தாலு முயர்வுறு மொருகாற் றோயின்
முத்தியை யடைவ ரென்னி னதன்புகழ் மொழியற் பாற்றோ. (உரு)

ஆரணத் துதித்த வெண்ணெண் ணருங்கலை முதற்பன் னூல்போற்
பூரணப் பெருநீர் வெள்ளம் புநிதமா மகழி பொய்கை
வாரண வோடை யெங்கும் வளமுற வோடி வேத
காரண னடியா ருள்ளங் கனிந்தவன் பென நிறைந்த. (உசா)

நிறந்திகழ் பாலி நீத்த நீண்மடை வழியாய்ச் செல்ல
வுறந்திகழ் மள்ள ரார்த்துள் ளுவப்புடன் குழுமிச் செய்க்கண்
டிறந்திகழ் பகடு பூட்டிச் சேயிழை மாத ரந்தாட்
புறந்திகழ் சிலம்பெ னச்சால் புவிகிழித் துழுவ ரன்றே. (உஎ)

கூற்றுவ னூர்தி யன்ன கோடியர் பகடமடர் பூட்டி
யூற்றமோ டோச்சி மள்ள ருழும்பணை யன்னஞ் சங்கைப்
போற்றிடு மண்ட மென்னப் பொருக்கென வெடுத்து விண்போய்
வேற்றுநங் தெனவி டுப்ப வீழ்தல்வெண் மதியையொக்கும். (உஅ)

உழுதளி சேறு செய்வோ ருரப்பொலி யோதை யெங்கும்
பழுதறு பத்தி ஞற்றைப் பறித்தசை நடுவோ ரெங்கு
மிழுக்கறு நேர்ந் திலங்கு சேற்றி லெழில்விதை விதைப்போ ரெங்கும்
வழுவிலிந் திரமெய் வத்தை வழுத்துதல் செய்வோ ரெங்கும். (உகூ)

பயிர்களை களைய வெண்ணிப் பாவையர் தம்மை நோக்கிச்
செயிரறு மொழியீர் நுங்கள் சேயிதழ் வதன மோடு
*வயில்விரி குமுதங் கஞ்ச மடர்த்துநிற் கின்ற வென்ன
வெயில்விரி வளை கலிப்ப வெறுத்தவை களைதல் செய்வார். (௩௰)

(வேறு.)

செங்குமுதம் வாயெனவுஞ் செழுங்குவளைக் கண்ணெனவு
மம்புயமென் முகமெனவு மணிவள்ளைக் காதெனவும்
பம்புவளைக் கடைசியர்கள் பாரா தகழ்ந் தெறிவா
ரங்கெழுபுன் முதலியவை யனுக்குவதற் கஞ்சுவரோ. (௩௧)

செழுமலர்க்காந் தண்முகிழ்போற் சிறுவிரலா ருழத்தியர்கள்
கொழுவயலி னுறவெந்தக் கொள்கையின்மைக் கண்களினாற்
பழுதுபட வெமையிகழ்ந்தோர் படர்வதென்னென் றறக்கொதித்து
வெழிலமையுஞ் சேலினங்க ளெழுந்தவரை யெற்றிடுமால். (௩௨)

அம்புயமென் னறைமலர்க ளலர்ந்தடர்ந்த வதன்மருங்கில்
வம்புபெறுந் தனமாதர் வடிவழகில் வாய்ந்திருத்தற்
செம்பதும மலரினுறை திருவுருவெண் ணிலவெடுத்து
வம்புறையு மலர்கடொறும் வதிந்தனபோல் வயனிற்பார். (௩௩)

அலைபுனற்றண் பணையகத்து ளார்ந்தசெழுஞ் செந்நெல்லோ
ரிலைப்புடையின் வளைவுறமிக் கிர்ம்பசுமென் கதிர்களெலா
நிலைபெறவங் கெழுந்ததன்மே னிமிர்ந்தெழில்செய் திடுதோற்றங்
கொலைமதமால் யானையினங் குசங்களையொத் திருந்தனவால். (௩௪)

உண்ணவரும் புள்ளினங்க ளும்பர்மிசை யேயொதுங்கப்
பண்ணுவபோல் வாளையெங்கும் பாய்நலத்த பண்ணையினில்
வண்ணமிகுந் தோங்குபயிர் வான்பாலி நாட்டவர்செய்
புண்ணியமீ தென்றுணர்த்தும் படிவிளைந்த போலுமரோ. (௩௫)

* அயில்-அழகு.

நிவர்தருபைஞ் சுருஞ்விரித்த நிகரறுமென் பைங்கூழ்க
டேவர்நிறமாய்ப் பால்நிறைந்து §சொற்பழுத்த விதந்தேர்ந்து
‖கவர்குலையைக் கொய்வனபோற் /கடிக்குயங்கைக் கொண்டரிந்தே
¶தவர்புகழ்வின் னளவினும்போர் சமைப்பர்கருங் காண்மள்ளர். ()

போர்க்களஞ்சேர்ந் தவைசாய்த்துப் புரம்வியர்க்க வெடுத்தடித்துச்
சூர்க்கருங்கார் நிறப்பகட்டாற் றுவைப்பித்து *வழுதகற்றி
யார்த்தெழு†வேற் றலம்வருவ தறிந்துபத டிகண்மாற்றிச்
சீர்த்திகழ்நென் மலையெனப்போர் செய்தனர்நன் மள்ளர்களே. ()

(வேறு.)

வித்தினை யுணக்கு வார்களோர் பாலின் விரைதரு மஞ்சளிஞ் சிக
ளைக், கொத்துடன் கிண்டி யெடுப்பரோர் பாலிற் கோதினற் கரும்
பினைக் கடிந்து, சுத்தவா லையினிற் கொடுப்பரோர் பாலிற் சுவைரத
மட்டலோர் பாலின், றத்தியே கமுகின் குலைதலைசாயத் தடிந்தவ
ணுய்ப்பரோர் பாலின். (௩௮)

மன்னனுக் கோர்பா லாகிய கூற்றை மற்றவர்க் களித்துபி னைந்தைத்
தென்புல வாணர் தெய்வநல் விருந்து தேடியிட் டதன்பினு வொக்க
றன்மனை மக்க ளோடுநான் குண்டி தகுதிகொ ளறுசுவை யருந்திப்
பின்னர்நால் வேத மோதல்சாத் திரங்கள் பேசுதல் கேட்டவ
ணுறைவார். (௩௯)

எள்‡விறுங் குழந்து சாமை§மஞ் சூர †மேனல்கம் பவரையுங்
கோதில், §கொள்ளரு ‡முற்க *மாடகி முதலாக் கொண்டபுன் செய்
ப்பலன் வண்டி, வில்லவே யிட்டுத் தம்மனை கொடுபோய் விரிமுக
டுறும்படி யடுக்கித், தள்ளரும் விருந்தோ டடியவர்க் கூட்டித் தகு
மதி திகளை நோக் குறுவார். (௪௰)

திணைமயக்கம்.

உவரியிற் சூழிந் நிலத்தினிற் றிணைநான் குள்ளன மற்றவை நிற்க
வவைகளி னொன்றோ டொன்றுபோய் மயங்கு மருந்திணை மயக்கு
ரைத் தருளத், தவமுறுங் கச்சி யப்பமா முனிக்காஞ் சாற்றுத
லெமக்கரி தெனினு, மவனரு ளோடும்பா வாணர்தங் கிருபை யானு
மங் கவையெடுத் தறைவாம். (௪௧)

---

§சொல்-நெற்கதிர், ‖கவர்-வாழை, /கடி-கூர்மை, ¶தவர்-முனிவர். *வழுது வைக்
கோல். †வேற்றலம்-காற்று. ‡இறுங்கு- சோளம், §மஞ்சூரம்-கடலை, †ஏனல்-
தினை, இரண்டாமடியில் §கொள் அருமுற்கம் எனப்பிரித்து, கொள்ளும்,
அருமையாகிய, பயறும் எனக்கொள்க. ‡முற்கம்-பயறு, *ஆடகி-துவரை.

தெங்கிருங் குரும்பை வெளிவரா முன்னர்த் திண்ணிய பாளையான்
முடிப், பொங்கமாய் வெளிவந் திட்டவோர் காலைப் போர்வைநீத்
திடல்முகிழ் முலையுட், டங்கிய வேலைக் கச்சினுண் முடித் தனம்
வெளி வரக்கலை திறக்கு, மங்கையர் போலு மௌநகை முல்லை மல
'ருதிர் தரக்கனி புடைக்கும். (௩௨)

மருதநிலத்திலுள்ள தெங்கினைப்பார்த்து முல்லை நிலத்திலுள்ள முல்லை மலர் நகைத்தலால், அத்தெங்கு தன் கனியினால் அம்முல்லை மலரைச் சிதைக்கும்.

(வேறு.)

†பெருகுழக்கும் *வெளிலோசை கேட்டபுலிக் குருளைதமைப் பே
ணுந் தாயி, னுரியவருங் குரலாமென் றொலியடங்கி யெதிர்பார்க்கு
'முற்றந் தோடு, கரியநிறக் குயிற்குரல்கேட் டாங்கணிளங் குழவி
கள்கண் ணயரா நிற்குஞ், சுரிகுழல்கொள் செவிலித்தாய் தாலாட்டு
மோதையெனத் துணிந்து மன்றே. (௩௩)

முல்லைநிலத்திற் றயிர்கடையுமோசையைக் குறிஞ்சிநிலத்திலுள்ள புலிக்குட்டிகள்கேட்டுத் தன் றாய்க்குரலோசையென் றெதிர்பார்க்கும். மருதநிலத்திலுள்ள குயிலோசையை முல்லைநிலத்திலுள்ள சிறுகுழந்தைகள் கேட்டுத் தன் றாய்மார் தாலாட்டோசையாகக் கொண்டு நித்திரைசெய்யும்.

‡கிரிசரந்த னினமென்ன மகரமீன் றனையெண்ணிக் கீள்வருக்கை, யரி
யநறுஞ் சுளைவாரி வாரியுள வம்மீனை யடிக்கச் சீறிப், பெரிய†கலை
சுளையோடும் பெயர்ந்துகிரி யிடைமோதல் பெருங்கணைசன், விரி
வுறுவா தமங்கடலில் வீசவதை நந்திகொணர் விதமே போலும். ()

குறிஞ்சிநிலத்திலுள்ள யானை நெய்தனிலத்திலுள்ள மகரமீனை மருதநிலத்திலுள்ள பலாக்கனியாலடிக்க, மருத நிலத்திலுள்ள மகரமீன் குறிஞ்சிநிலத்திற்பாயும்.

மாதிரத்துச் சிறுமாத ரேனல்கவர் குரீஇயினங்கள் மறுக வீசும்
§பீதகத்தி னுறுதழற்செம் மணிவந்து தாக்கவந்தப் பெற்றி கண்டு
தாதுதிரும் பூம்பாளைத் தெங்கினிளங் காய்பறித்துத் தாக்கு மந்தி
யேதமிலா வரதனமு மிளநீரு மீரிடத்து மியலு மாதோ (௩௫)

குறிஞ்சிநிலத்திலுள்ள வேடப்பெண்கள் கவணில் எறியும் மாணிக்கங்கள் மருதநிலத்துத் தென்னமரத்திலுள்ள குரங்கின் மீதுபட, அக்குரங்கு மருதநிலத்திலுள்ள தேங்காயைப்பறித்து குறிஞ்சிநிலப்பெண்களின்மீதெறியும்

---

† பெருகு—தயிர், * வெளிலோசை—மத்தோசை. ‡ கிரிசரம்-மலையானை.
† கலை-மகரமீன். § பீதகம்-பொன், தழல்—கவண்.

கணக்கிறந்த கொடிச்சியர்க †ளூதநா தன்னெயிற்றைக் கானல்
வாயி னுணக்குமீ னிடைக்கிடைதந் தேகொளுவ ரப்பாக்கத் துறு
நர் கோட்டை, யிணக்கியே தருபாக்கு மருதகத்துத் தடதியர்கை
யிப்பி முத்தைக், குணிப்புடனீந் துஞ்சல்தரக் குழமகவை யதிற்
கிடத்திக் குலவு வாரால். (௪௬)

குறிஞ்சி நிலத்திலுள்ளபெண்கள், யானைக்கொம்பைக் கொடுத்து நெய்தனிலத்திலுள்ள பெண்கள்விற்கு மீனைக்கொள்ளுவார். அந்த நெய்தனிலத்திலுள்ள பெண்கள் வாங்கின யானைக்கொம்பை மருதநிலத்திலுள்ள தச்சருக்கு முத்துக்களைக் கூலியாகக்கொடுத்துத் தொட்டில் செய்துகொள்ளுவார்கள்.

இருபுறவக் கருப்பொருளா மிளங்கிளியுங் குமிழமுத்த மேயு
மின்னு, ருருகுமொழி கற்கவுமூக் கிற்கிணையா கவுமவண்வந் தூற்ற
தொக்கு, மருதவய லுறுகுவளை யாம்பன்முன மொழிநிலத்தின்
னயங்கு மோடை, மருவுசுனை யுறலன்ன லாவிழிவாய் வளங்கவர
வந்த தேய்க்கும். (௪௭)

இருபுறவமாவது-குறிஞ்சி, முல்லை. முத்தமாவது-மருதநிலம். குறிஞ்சி நிலத்துலுள்ள கிளியும், முல்லை நிலத்திலுள்ள குமிழம் பூவும் மருதநிலத்திற் பொருந்தியது. மருதநிலத்திலுள்ள நீலோற்பலமும் ஆம்பலும், முல்லை நிலத்து நீரோடையிலும், குறிஞ்சி நிலச்சுனையிலும் பொருந்தியது.

(வேறு.)

மருதமேய் மாதர் நாசி வளத்தினை மறைந் திருந்து
திருடின குமிழ மென்னுந் தேமலர் தூற்றக் கஞ்ச
மரு‡மரை முல்லை நல்லா ரணிமுலை கவர்ந்த தென்ன
மருவிய குமிழும் வாய்த்த மதுசல முமிழு மாலோ. (௪௮)

மருதநிலத்திலுள்ள தாமரை, தங்கள் நிலத்திலுள்ள பெண்களின் மூக்கினழகைக் குமிழமலர்திருடிக்கொண்டு முல்லைநிலத்திற்குப்போயின தென்றலர் தூற்ற, முல்லை நிலத்திலுள்ள குமிழமலர் தங்கள்நிலத்திலுள்ள பெண்களின் கொங்கையினழகைத் தாமரைமலர் கிரகித்துக்கொண்டு மருத நிலத்திற்குப் போயின தென்று வாய்நீருமிழும்.

இனையநா னிலத்தி னுள்ள விருங்குடி யாவும் நீதி
தினையள வேனு மாறாத் திருத்தொண்டை நாட்டின் சீர்த்தி
கனைதிரைக் கடல்சூழ் வைப்பிற் கருதியா ருரைக்க வல்லார்
தனைநிகர் கற்ப நாட்டுஞ் சாற்றுதற் கரிது மாதோ. (௪௯)

† ஊதநாதன்-தலைமையாகிய யானை, எயிறு-கொம்பு, கானல்-நெய்தல், பாக்கம்-குறிஞ்சி நிலத்தூர். ‡ மரை-தாமரை.

திருநாட்டுச்சருக்க முற்றிற்று.

பாயிரமுட்படத் திருவிருத்தம்-௮௧.

# திருநகரச்சருக்கம்.

நந்தி டாவிலக் கணமுணர் நாவல ரருளாற்
சிந்தைக் கூர்மையி லேஞ்சில நாட்டணி தெரித்தே
மந்த முள்ளதோர் பனைசைமா நகரணி யறைவா
னுந்து மெம்மனத் தாசையா லுரைதர லுற்றேம். (க)

(வேறு.)

பாதல மணிப்பூம் பொய்கை பாம்பிறை மரையி னுளம்
பூதல மணங்கொள் போது புகலரு மேனை நாடு
மீதல ரிதழ்க டொண்டை மேதகு நாடுள் ளேடு
தாதல ரப்பூங் கொட்டை தாலமா நகர மாமால். (உ)

அகலிட மென்னு மாதி னணிமுகம் போலு மன்னாள்
சுகமுறு நுதலிற் நீட்டுஞ் சுந்தரத் திலதம் போலுங்
ககமெனுங் கண்ணே போலுங் கருதுமெவ் வுலகுங் கொண்ட
பகவனு ரகடு போலும் பனைசைமா நகர மம்மா. (௩)

திருமறு மார்ப னூருந் திசைமுக னுறையு மூருந்
தருவளஞ் செறியு மூருந் தனதனூர் வதியு மூரும்
பொருவரு முரக ரூரும் பொலிவினாற் பொருந்தா தென்னப்
பரிவுகொண் டிறைவன் மேவும் பனைசைமா நகர மாதோ. (௪)

இரவிவெண் மதிவா சுக்க ளெண்டிசைப் பாலர் சித்தர்
தருவிழ லுறையும் போகி தானவர் பகைவர் வேட்கைக்
கரிசறு முனிவர் நாகர் கருதிவந் தென்று நீங்காப்
பரிவுடன் பணிந்து போற்றும் பனைசைமா நகர மாதோ. (௫)

கரும்பல நெல்லே யென்னக் கமுகல கரும்பே யென்ன
விரும்புறுங் குலைத்தெங் கல்ல மிளிர்கமு கெனவ ளர்ந்து
பொருந்திய வளங்க ளெல்லாம் பொலிவுட னோங்கி யார்க்குந்
தருந்திற முடைய தந்தத் தண்பணைச் சூழன் மன்னே. (௬)

ஆலைவாய்ப் புகையோ மாத ராரணி கொள்ளுந் தங்கள்
‡வாலமார் தரப்பு லர்த்து மகிற்செழும் புகையோ வன்றிச்
சீலமார் மறையோர் யாகத் தீத்திரட் புகையோ வென்ன
மேலெலா முகில்க டோய விளங்கிய மலர்ப்பூஞ் சோலை. (௭)

‡ வாலம்—மயிர்.

சிறந்தசெஞ் சாலி யாங்கர் செறிந்துநின் றோங்க வாங்கண்
விறந்தநெட் டிலைப்பூ வல்லி வீக்குறப் பூக நிற்ற
லறந்தவா தருளும் பெம்மா னணிவிழாத் தருப்பைப் புல்லாற்
புறந்தழீஇ விளங்கா நிற்கும் பொற்கொடி மரமே போலும். ()

மாதரார் மிடறெம் மோடு மானுமோ வென்று பூகந்
தாதுலாம் பாளை நிற்ற றகுதியன் றென்ன வெண்ணித்
தீதிலா தெழுசெஞ் சாலித் தீங்கதிர் தூறடாய்க் கொண்டு
*காதகஞ் செயலே போலுங் †கந்தியின் கழுத்திற் சாய்தல். ()

பெருகுநீர்த் தடத்தி னோர்சார் பிறங்கிடு முகையைச் சார்ந்து
வரியறு காலாற் கிண்டி வார்மது வுண்டு றங்கல்
சரிகுழற் பெதும்பை மாதைச் சார்ந்தொரு விடலை யண்மித்
திருகிவா யமுத முண்டு காமத்திற் றிளைத்தற் போலும். (௰)

(வேறு.)

தடங்க ளின்மட வனங்கடா மரையிடைத் தயங்க
லடஞ்செ யங்கலார் நடைக்குடைந் திடுவதை நாணி
யடங்கி யங்கன லிடையிருந் தருந்தவ மாற்றி
‡யிடங்கொ ளும்படிக் கற்பதற் கெண்ணுவா னேய்க்கும். ()

மயில்கு யிற்சுக மந்நகர்ச் சோலையின் மருவ
லுயிலெ லும்விழி யந்நலார் சாயலைக் குரலை
வொயில்கொள் சொற்களின் வளங்களைக் கற்குமா றுன்னிப்
பயில்வ தற்கொளித் திருந்திடு பான்மையை நிகர்க்கும். (கஉ)

கூட்டி னிற்பயில் பூவைக ளாகமங் கூறுங்
கேட்டு மஞ்ஞைகள மகிழ்வுட னடிக்குமென் கிளிகள்
பேட்டொ டும்பக ரைந்தெழுத் தோசையாம் பெரும்பண்
பாட்டு ளத்தமைத் தின்புறுங் *தூதுணம பறவை. (கங)

கடுவன் மந்திக்கீந் திடச்†சுளிக் கனிப்பலைக் கரததான்
முடுகிப் பற்றியீர்த் ததைவிடக் கருநிற மூகிலின்
லுடுவு றும்படி யுரிஞ்சிட வந்தநீர்த் துளியைப்
படுப னித்துவ லென்றுல கோரினம் பகர்தல். (கச)

---

* காதகம்–கொலை. † கந்து–பாக்குமரம். ‡ இடம்-பெருமை.
தூதுணம்-புறா. † சுளிக்கனி–மாங்கனி.

நாகர் வாழ்ந்திடு நகரிடை யிந்நகை நலமுண்
டாகு மோவெனக் காண்பமென் றகழியு மெயிலுஞ்
சோக மின்றியே யெழொடு மேலுமாய்ச் சோரா
தேகு கின்றன போலுமா லப்பதி யிடத்தே. (கரு)

முக்க ணன்புர மெரிசெய மேருவை ¶முனியாக்
கைக்கொள் வானது காற்புவி கவிழுமென் றறிந்து
திக்க நான்முகன் பலமலை நிறுவிய தென்னத்
திக்கு நான்கினு மோங்குவ செறிந்தகோ புரமே. (கசா)

அண்ட கோளமுங் கிழியநீண் டகன்றகோ புரத்தா
லெண்டி சாமுகத் திருள்வலி கெடுக்குமேழ் பரியோன்
கொண்ட தேர்செலா திருமருங் கினுஞ்செலல் குறித்துப்
பண்டை யோரிரண் டயனமென் றினிதுறப் பகர்தல். (கஎ)

அன்ன மாலயத் தயற்புறம் நிறுவியே யகப்போய்ப்
புன்ன காபர ணன்பதம் பணிந்துமீள் வதன்மு
னன்ன லார்நடை விழைந்தவர் பின்செல வாங்கு
தன்ன தூர்தியைக் கண்டிலா தயன்மிகத் தளர்வான். (கஅ)

(வேறு.)

ஆடக மணியி னங்க ணமைத்தசெய் குன்றின் மீது
நீடு†மம் ‡பாவி நீங்கல் நிகரறு காமங் கொண்டு
நாடிய தலைவர் காண நகைமுகங் காட்டித் தூசின்
மூடுபு திறக்கும் வேசை மாதரார் முலைகள் போலும். (கசா)

அலவிடி யதிர்ச்சி யாற்றெங் கருங்கனி வயலின் வீழா
நலமுறு வளைகள் சேற்றி *னளைத்துட னமிழ்த்த நாளுந்
தலைவடு வாலைச் சாறங் குறுத்தலுஞ் சங்க மேற்சென்
றுவமையில் வேழக் கான மூர்ந்துமுத் துதவு மாலோ. (உ0)

மங்கல வொலிக ளெங்கும் மகரதோ ரணங்க ளெங்கும்
பொங்கொலி முரச மெங்கும் பூரண கும்ப மெங்குஞ்
சங்கலம் பொலிக ளெங்குஞ் சதுர்மறை முழக்க மெ
செங்கதிர்த் தீப மெங்குந் திருவிழா வீதி யெங்கு

¶ முனி-வில். † அம்-மேகம். ‡ பாவி-பரவி. * நளம்-

பாசநீங் கியது வந்தோர் பரசிவ மதனை மிக்க
நேசமாய்க் கண்டு நெஞ்சம் நெக்குவிட் டுருகு மாபோற்
றேசுலா மதியைக் கண்டு தெண்ணிய நீரைக் காலு
மாசிலா விந்து காந்த மாளிகை வரிசை மாதோ. (௨௨)

பொன்னிறச் ¶சதனத் தின்கீழ்ப் புறத்துமே னிலையி டத்து
மன்னிற நீலம் வைரத் தமைத்தகா லதர்கண் மேனாட்
பன்னரு மிறைவன் செங்கேழ் பதமுடி காண மாய
னுன்னரும் பிரம னென முன்னமாய்த் தேட லொக்கும். (௨௩)

(வேறு.)

நாய கற்றுரீஇ நவமணி குயின்றமா ளிகையின்
றாய வந்நலார் முகமதி துளங்கொளிப் பளிங்கிற்
பாய வெண்கதிர்த் திங்களென் றெணிக்கருப் பாம்பங்
கேய பின்னஃ தெய்திலா மையிற்புறம் போமால். (௨௪)

துன்னு மாமதி முற்றமேற் றாக்குமேற் கட்டித்
தன்னி லார்த்தவெண் முத்தமும் வைரமுந் தயங்கி
மின்னு முண்மைகண் டறிகலா மேதினி யோர்க
ளின்னுந் தாரகை மண்டல மெனவெடுத் திசைப்பார். (௨௫)

(வேறு.)

வான்றொடாம் பரத்தின் கனியடுப் பாக்கி வளைந்தகூன் குழிசியி னிடைக்கோற், றென்றெளி வுலைவார்த் தறவுமிழ் மணியின் றெறு கனன் மூட்டிமித் திலத்தின், வான்படு மரிசி பாலினுற் கழுவி வள முறப் பெய்தமு தாக்கி, மான்விழித் துவர்வாய் நுணங்குறு முலை யர் மறுகெலாம் வண்டலாட் டயர்வார். (௨௬)

(வேறு.)

பண்டரு மிசையி னோசை பாவையர் சிலம்பி னோசை
யெண்டரு முழவி னோசை யினியயா ழிசையி னோசை
தொண்டர்க டுதியி னோசை தோகையர் நடன வோசை
கண்டிஃ தின்ன வென்று கழறலாந் தகைமைத் தன்றே. (௨௭)

---

¶ சதனம்-வீடு.

வீதியின் விழவு தப்பா விருந்தினர்க் குணவு தப்பா
சாதியா சாரந் தப்பா தருமநன் னெறிக டப்பா
மாதர்கண் *முல்லை தப்பா மைந்தர்கள் விருத்தி தப்பா
வாதிபாண் டரங்கன் பூசை யடியவர் பூசை தப்பா. (உ௮)

(வேறு.)

மனமெ னும்புலத் தினைவிசா ரத்தினுன் மடக்கி
யினிய புந்தியா லுழுதரன் பத்திமை யென்னு
மனக மாம்வித்தை யினைவிதைத் தரியபே ரன்பாம்
§வனமி றைத்தருட் சிவமெனும் பயிரினை வளர்ப்பார். (உ௯)

திகலை மென்முலைச் சுரிகுழற் றெரிவையர் முகம்போன்
மதிவ ளர்ந்துமொவ் வாமையின் மற்றவர் நுதல்போற்
சதிருட் டன்கலை குறைந்துபார்த் தவ்வளஞ் சாரக்
கதியி லாமையி னுலகினு மதியெனக் கழறும். (௩௰)

சந்த மார்கதிர்த் தரளமென் முலைநெடும் பணைத்தோள்
கொந்து லாமலர்க் கோதையர் நடைபெறக் குறித்து
வந்து பின்றிரி பிடிக்குமந் நடைவரா மையினுன்
மந்த மாவெனப் பெயரனுண் முதற்கொடு வகுத்தார். (௩௧)

(வேறு.)

உதைபடு வனமத னனையவ ருரமே
ததைபடு வனவணி தையரிரு தனமே
பதைபடு வன*பகல் படுபவர் மனமே
சிதைபடு வன†வரில் சேர்பவர் தொடையே. (௩௨)

‡மாவின முறைவன மனைதொறு மறுகான்
†மாவின முறைவன மலர்தொறு மசையு
¶மாவின முறைவன மதிதொறு மதமார்
§மாவின முறைவன வளமலி மறுகே. (௩௩)

---

*முல்லை—கற்பு. §வனம்—நீர். *பகல்படுபவர்-பிரிந்தவர்.
†அரில்சேர்பவர்-ஊடல்கொண்டவர்.
‡மா-இலக்குமி, †மா-வண்டு, ¶மா-கொடி, §மா-யானை.

(வேறு.)

பரத்தையர்வீதி.

தினங்கொ ளும்படி ¶ யிடையினை யிரவினிற் றெரிப்பேங்
தனங்கொ ளொன்றினுக் கிரட்டிகாட் டுவதலாற் றூரேம்
மொனங்கை யிற்பெறு வேமெனப் பொதுவர்வீ தியிற்கே
தனங்க §டேசிகர் கொடியினை நகைப்பபோற் றயங்கும். (௩௪)

சிலேடை.

மறைகள் காட்டிநற் சுவர்க்கத்திற் சேர்த்தலின் மாந்தர்க்
கறையு நல்லவா யமுதினை யருத்தியை யங்க
முறைக ளோதிப்பின் முடித்தலின் கணிகையர் வீதி
குறைவில் வேதியர் வீதியோ டொப்பன குறிக்கின். (௩௫)

வேதியருக்கு (இ-ள்.) மறைகள்காட்டி-வேதங்களினெழுக்கத்தைக்காட்டி, நல்சுவர்க்கத்தில் சேர்த்தலின்-நற்பதவியை யடைவித்தலின், மாந்தர்க்கு-மனிதருக்கு, அறையும் நல்ல ஆய் அமுதினை அருத்தி-நன்மையாய் ஆய்ந்த உணவினை உண்பிக்கச்செய்து, ஐஅங்கமுறைகள் ஓதி-பஞ்சாங்க கிரமங்களைச் சொல்லி, பின்முடித்தலின்-அவாளவாள் காரியங்களை நிறைவேற்றுதலால்.

வேசியருக்கு (இ-ள்.) மறைகள்காட்டி — இரகசியஸ்தானத்தைக் காண்பித்து, நல்சுவர்க்கத்தில் சேர்த்தலின்—அழகிய தனத்தில் அழுத்தலின், மாந்தர்க்கு-மனிதருக்கு, அறையும் நல்லவாய்அமுதினை அருத்தலின்—சொல்லற்கரிய நன்மைவாய்ந்த அதரபானம் அளித்தலின், ஐ அங்கம் உறைகள் ஓதி—அழகிய தேகத்திற்பொருந்திய தேன்நிறைந்த கூந்தலை, பின்முடித்தலின்—பின்பக்கத்தில் முடிப்பதனால் என உரைக்க.

கடைவீதி.

அலைவி லாவணந் தனிற்பணி யிழுந்தவு ரங்கண்
மலையு மாந்தர்க ளொருக்கிறோ மாதவர்க் கன்றித்
தலைவ ளோந்தறி யாமையோ தந்தனச் செருக்கோ
தொலையு மப்பொரு டுருவின ரில்லையாற் றொடர்ந்தே. (௩௬)

---

¶ இடை-அளவு, மருங்குல். § தேசிகர்-செட்டிகள்.

### வேளாளர்வீதி, சிலேடை.

பொன்ன ரிச்சுவை யொடுநவ மணிகளும் பொருந்தி
நன்ன ரேரணி வளங்களு †நன்குறப் படலான்
மன்னு மங்கர் சூத்திரர் வாழ்ந்திடு மறுகு
மன்னர் பின்னவர் வீதியை யனையது மாதோ. (௩௭)

(இ-ள்.) பொன்னரி-பொன்மாலை, அழகியநெல். நவமணி-ஒன்பது இரத்தினங்கள், நவதானியங்கள். ஏர்அணி-அழகிய ஆபரணம், ஏருழும் அழகு.

### வைசியர்வீதி.

அதிக வட்டிக்கா சைப்பட ாருந்தவத் தமைந்த
நிதியி னைப்பெருக் குவருயிர் கேயர்க ளெனினும்
வதியு நாணயமில்லெனி லொன்றையும் வழங்கா
மதியு டைப்பெரு வணிகர்வாழ் வீதியும் பலவால். (௩௮)

### மன்னவர்வீதி.

முடிமு தற்சொலு மூவெழு சின்னமுங் குழுவாந்
தொடிகொள் மந்திரி முதலிய வைவருந் துணையாங்
கெடிபெ றும்மதி யமைச்சர்மு னெண்மருங் கெழுமிப்
படிபு ரந்திடு மன்னவர் வீதிபற் பலவால். (௩௯)

அரசர்க்குச்சின்னம் உயக. அரசர்க்குக்குழு ரு. அரசர்க்குத்துணைவர் அ.

### இதுவுமது.

மனுமு றைப்படி வுலகினைப் புரந்துமற் றங்கைத்
தனுவி னற்கர வடரொடு விலங்கினைத் தடிந்து
கனம தாமிரு மூன்றினி லொன்றெனுங் கடமை
தனதெ னக்கொளு மன்னவர் மூன்றிலுந் தயங்கும். (௪௰)

### இதுவுமது.

நகை யாளரிற் கன்னனே யுலுத்தனு குவனோர்
வாகை விற்றிறத் திராகவன் பின்றரு வானு
ரோகை மாதரிற் றிலோத்தமை யழகினிற் றேற்பண்
மாக மீதுயர் மாளிகை மறுகிடை வரினே. (௪௧)

### மறையவர்வீதி.

இறைவ னென்றென வுணர்ந்திரு வினையையு மிகந்து
செறியு மூன்றுதீ வளர்த்துநால் வேதமுந் தெரிந்து
கறைசெ யைம்புலன் களைந்தறு தொழிலினைக் கைக்கொண்
டுறையும் வேதியர் வீதியாங் கெண்ணில வுளவால். (௪௨)

---

† நன்கு-மிகுதி.

### வேறு.

சொல்வரிசை காட்டுவர்க டொழுங்குலத்து மாதவர்கண்
மல்வரிசை காட்டுவர்கண் மன்னரிள மாக்களெலாங்
கல்வரிசை காட்டுவர்கள் கனம்பரவு மிளங்கோக்க
ணெல்வரிசை காட்டுவர்க ணீதியுறும் பின்னவரே. (சங)

வேரியம்பூங் கொம்பனையும் விதமென்னத் துவளுமிடை
நாரியர்க ளாடலும்பின் னிசையொலியு நான்மறையுஞ்
சீரியசெந் தமிழ்த்துதியுந் திசையெட்டுந் தான்விழுங்கும்
பேரியமுங் கண்ணுறங்காப் பிஞ்ஞகனார் திருக்கோயில். (சச)

பெரும்புலியி லுள்ளவர்தம் பிணிதபுத்துப் பேரின்பந்
திருந்துமடி யார்மகிழச் சேவடியாம் பெருநிழலைத்
தரும்பரம னார்க்குநிழ றனளிக்க வைந்தருவாய்ப்
பொருந்தியபோ தின்பெருமை புகலவெவர் திறத்தாமால். ()

### (வேறு.) சிலேடை.

வான ரம்பையு மாவைந் தருக்களுந்
தேனு வும்பூ வசந்தமுந் தீர்த்தருந்
தான மாவுந் தரித்தலி னப்பதி
யூன மற்ற ¶வுயர்நிலை யொத்ததே. (சசு)

(இ-ள்.) வான் அரம்பை—பெருமையுடைய தெய்வப்பெண், ஆகாயமளாவியவாழை. பூவசந்தம்—அழகிய இந்திரன்மாளிகை, புட்பவாசனை. தீர்த்தர்—கடவுளர், பரிசுத்தர். தானமா—ஐராவதம், கொடைக்குரிய செல்வம்.

சத்த மாவுச்சி சார நிற்றி §இன
னித்த மேழு நிமிடநின் றந்நகர்
வித்த கத்தை வியந்துகாண் பானெனி
லத்தி ருப்பதிக் காரணி யோதுவார். (சஎ)

### (வேறு.)

பூவினிற் சிறந்த சாதிமா மலர்போற் புலவரிற் சிறந்தவள் ளுவர்போற், பாவினிற் சிறந்த வெண்கலி போற்செம் பசுக்களிற் சிறந்தமீக னுவைப்போற், காவினிற் சிறந்த கற்பக வனம்போற் கனிகளிற் சிறந்தமுக் கனிபோற், றேவினிற் சிறந்த திரிபுராந் தகன்போற் சிறந்தவப் பனைசையம் பதியே. (சஅ)

---

¶ உயர்நிலை—தேவலோகம். § இனன்—சூரியன்.

## திருநகரச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—கஉக.

உ

# நைமிசாரணியச்சருக்கம்.

ஆல மார்க ளத்தெ மண்ணா லன்பு கூர்ந்த மர்ந்திடுங்
கால மாக கர்ப்§பி றங்கல் சாற்ற வல்ல ரியாவரே
சீல மேவு மாத வத்தர் சேர்ந்து மாத வஞ்செயுங்
கோல மேவு நைமி சங்கு லாய மேன்மை கூறுவாம். (௧)

‡சூத லால னைய கொங்கை தொங்கல் பண்டி வாய்த்துள
பூத ரப்பு கல்வி நாத னையு ளம்பொ ருந்தினோ
ராத ரத்தி னோட மர்ந்த ருந்த வம்மி யற்றுதற்
கேத மற்ற தான மாயி ருக்கு நைமி சக்கடம். (௨)

கனக மேவு மலர்நி றைந்த கற்ப காட விக்கணோ
ரினிய போக மின்ன லென்றி கழ்ந்தி மாவ னத்திடை
யனக வின்ப மெய்த வெண்ணி யருள்க வென்ன வீசனைப்
||புனிதன் வேண்டி னப்பொ ழிற்பு கழ்ந்து ரைப்ப தாரரோ. ()

நந்தன் மைந்த னுந்தி வந்த நான்மு கன்க டாவலால்
வந்த மைந்த பைம்பு னேமி வரமி குந்த நைமிசத்
தூந்து சீல மேன்மை வாய்மை யொளிரு ஞான மாதவ
ரெந்தை மீது சிந்தை சேர்த்தி யற்றி னார்க ளற்றவம். (௪)

அன்ன காலை யக்க டத்தி லமர்ந்த மாத வக்குழாந்
துன்னி யின்ன நீர யாங்கொ டங்க வேண்டு மாமக
மென்ன வென்று சாவி நயமி டுக்க ணிங்கு சத்திர
மென்னு நாம யாக மல்ல தில்லை யென்று தேர்ந்தனர். (௫)

அனைய யாக மாற்று தற்க மைந்த பல்வ ளங்களுஞ்
சினம கன்ற முனிவ ரங்கு சேக ரித்து நற்சுப
தினம தின்ன லோரை வந்து சேரு நாளு ணர்ந்துநன்
முனிவர் தம்மை வருக வென்ன மொழிமு டங்கல் போக்கினார்.

---

§ பிறங்கல்-பெருமை. ‡ சூது-சொக்கட்டான், அல்-இருள், ஆல்-ஆலிலை, பூதரம்-மலை. || புனிதன்-தேவேந்திரன்.

பிருங்கி ரோம சலக ணுசி பீடு றும்பு லத்திய
னருங்கை வல்லி யன்ம ரீசி யத்தி ரித்த தீசிதும்
புருங்க ருக்கன் வாம தேவன் புனித சூதன் குற்சரன்
சிருங்கி யோடு சனக னாதி முனிவர் வந்து சேர்ந்தனர். (எ)

நிகரி லாத முனிவ ரோடு நேர்ந்து நைமி சத்துளார்
புகரி லாத சத்தி ரத்தைப் பூர்த்தி செய்ய வெம்பிரான்
பகரு மாக மத்து ரைத்த படிவ குத்த குண்டமுன்
னிகலி லாதி ருந்து யாக மின்ப மோடி யற்றினார். (அ)

¶நிரத மோய்வி லாது ஞற்றி நிகரின் முனிவர் யாவரும்
பரத மாடு மெம்மை யாள்ப ராப ரன்மு னவிபு
தரர்க ளுண்ண வவிப கிர்ந்து தந்து பூர்த்தி செய்‡தவ
பிருத நான மாற்றி யன்பு பெருக வீற்றி ருந்தனர். (கூ)

தொக்கி ருந்த சவுன காதி முனிவர் சூதர் துணையடிப்
புக்கி றைஞ்சி யெம்மை யாட்கொள் புனித முன்ன ரெங்களுக்
கக்க மாலை யோனி றக்கு மவர்வ லச்செ விக்கமு
தொக்க மூல மனுவை யோது முயர்பெ ரும்ப திக்கணே. (௰)

கயிலை யொக்கு மிந்த காசி காஞ்சி யென்ற தன்கணை
§குயிலு நீவி லாச காஞ்சி யின்வ ளங்கள் கூறிலை
பயில்வ தாய கச்சி யைங்கு ரோச வெல்லை யிற்படு
மெயில்கொ ளன்ன தலம கத்து வங்க ணீயி சைத்தியால் (கக)

என்று நைமி சத்து ளாரி சைக்க முக்கு றும்பினைக்
கொன்ற சூத முனிவன் வாத ராய ணன்கு ரைகழ
லொன்ற வுள்ள மைத்துச் செங்கை யுச்சி கூப்பி விழியினீர்
துன்ற நாத்த ழும்ப வன்பு தூண்ட வோது வானரோ. (கஉ)

---

¶ நிரதம்-எப்போதும்.

‡ அவபிருதஸ்நானம்-யாகபூர்த்திசெய்தபின் செய்யும் ஸ்நானம்.

§ குயிலல்-சொல்லல்.

(வேறு.)

அங்கணர்க் கிடமாய்ப் புவியினின் மருவு மாலய மறுபதோ டெட்டா, மங்கதின் மேன்மை யுறுதல மிரெட் டதனிலு மனமு வந் துறையுந், துங்கநற் பதிக ளென்குட மென்றுஞ் சொல்லுமிப் புரிகளே தென்னின், கங்கைசேர் காசி காஞ்சிகா ளத்தி கருதருந் தில்லைமா மதுரை. (௧௩)

இன்னக ரைந்தி னதிகமாய்த் தேவ ரிடமிலா தூழல்வதா யுமையா, டன்னருந் தவத்திற் கிரங்கிவந் தாளுந் தலமதாய்த் தற்பர னுறையு, நன்னக ராய காஞ்சியென் றொருமா நகருள ததற்கிணை யாக, வுன்னரு நகரொன் றுளதனை விலாச காஞ்சியென் றுரைப் பர்கண் மாதோ. (௧௪)

அன்னநற் றலத்துட் பாலியென் றுரைக்கு மருநதி யொன்றுள ததன்பாற், றுன்னிமே மூலத் தோடுவா ருணமாந் துகளறு மனு வைவா யோதி, நன்னய ‖ வங்குட் டத்தினு $மநாமி கையினு நாகிதொட் டந்நீர், தன்னிடை மூழ்கி னுந்திவ லைகடாந் தாக்கினும் ப்ரகதி தருமால். (௧௫)

ஆகவ னீய முதலிய முத்தீ யாக்கலெத் தினுக்கழ லைந்தி, னுகமும் வருந்தகமிருந் தேசெய் யருந்தவ மெத்தினுக்கலது, மூகமாக் குகையுட் டங்கியே யிருகண் மூடியோ கிருத்தலெத் தினுக்கோ, சோகமற் றந்தக் குடிஞையின் பெயரைச் சொலவரு மோக்கமை வலியம். (௧௬)

அருமைகொ டேவர் முனிவரர் சித்த ராயவ தரித்தத னுலென், றிருவுள வேகச் சக்கரா திபராய்ச் செனித்துல காளிலென் மேன்மை மருவிய விலாச காஞ்சியின் மயிலை மச்சமீ சிதல்மரம் புற்பூ, †வுரு கிரி விலங்கு புட்புழு வாக வுதித்திடி னமலவீ டுறுமே. (௧௭)

(வேறு.)

பனசையம் பதிமிறைநீ ரோடைவா விகள்சூழும் பண்பான் மிக்க
பனசையம் பதிக்குநிகர் நகருளதோ வெனவெணிப்பா வவியு நல்விற்
பனசையம் பலவேறிப் பார்த்துமில தாய்க்கண்ணீ ராறு னம்
பனசையம் பலமுமதற் றிணையென்ன வுலகிலெவர் பகரற் பாற்றே.

‖ அங்குட்டம்-பெருவிரல், $ அநாமிகை-பவித்திரவிரல்.

† உரு-அட்டை.

(இ-ள்.) பல்-பலரும், நசை-ஆசைகொள்ளும், அம்பு-சலமானது, அதி-அதிகமாக, நிறை - நிரம்பிய, நீரோடை - கயங்கள், வாவிகள் - குளங்கள், சூழும்-இவைகளாற் சூழ்ந்திருக்கும், பண்பால்-குணத்தினால், மிக்க - மேன்மையுடைய, பனசையம்பதிக்கு-அத்தாலமாபுரிக்கு, நிகர்-ஒத்த, நகர்-பட்டினம், உளதோஎன - இருக்கின்றதாவென, எணி - யோசித்து, பாவகியும்-முருகக்கடவுளும், நல்-நல்ல, விற்பன - ஆச்சரியமான, சையம் - மலைகள், பல-அநேகமாக, எறிப்பார்த்தும் - இவர்களதுகண்டும், இலதாய்-இல்லாமையினால், கண்ணீர்-ஆநந்தவெள்ளம், ஆருனென் - ஆற்றைப்போல் பெருக்கினன், நம்பன் - கடவுள், அசை - ஆடும், அம்பலமும் - சிதம்பரமும், அதற்கிணையென்ன-அத்தலத்திற்கு நிகரென்று, உலகில் - பூமியில், எவர்-யாவர், பகரற்பாற்று-சொல்லுந் திறமுடையது என்க.

காவிரிவாய்க் கவின்பனைசைக் கலுழியிடைக் கடைக்குலத்தோனுடு வானேற், காவிரிவாய் முற்குலத்தோன் மனுவோதிக் குளித்ததனுற் காணும் பேறுங், காவிரிவாய்க் குடநிறைக்குங் கங்கைதனிற் குடைந்ததனுற் காணும் பேறுங், காவிரிவாய் தனுக்கோட்டிப் படிந்தாடும் பேறனைத்துங் காண்பன் மாதோ. (௧௯)

(இ-ள்.) கா-சோலைகள்-விரிவாய், விசேடமாய்-கவின், அழகைத்தரும்-பனைசை, அத்தாலமாநகரத்திலுள்ள - கலுழியிடை, கலங்கல் நீர்னிடத்து-கடைக்குலத்தோன், பஞ்சமசாதான், ஆடுவானேல் - மூழ்குவானாகில், காவிரிவாய்-காவேரிநதியில், முற்குலத்தோன் - மறையவன், மனுவோதி - மந்திரஞ்சொல்லி, குளித்து அடைய-மூழ்கிப்பெற, காணும்பேறும்-அடையும்பிரயோசனமும், கா-காவடியிலுள்ள, விரிவாய்-விரிந்தவாயையுடைய, குடம்-குடத்தில், நிறை-நிரம்பவிடும், கங்கைதனில் - கங்காநதியில், குடைந்து அடைய-மூழ்கிப்பெற, கருதும்பேறும் - எண்ணும்பிரயோசனமும், கா-துன்பத்தை, இரி - ஓட்டுதல், வாய் - வாய்ந்த, தனுக்கோட்டி - சேதுவில், படிந்தாடும்-பொருந்திமூழ்கும், பேறு-பிரயோசனமும், அனைத்தும் - யாவும், காண்பன்-அடைவான் என்க.

புலிமயிலும் பூசைபுரிந் திடுதால புரிநாதற் போற்றுவோரம், புலிமயிலுமப ரிஞூர வாழ்ந்திடுவ தன்றியிசை போதத் திக்குப், புலிமயிலும் புண்ணியர்கள் கொண்டாட யிம்மையின்பிப் புவனந் துய்த்துப், புலிமயிலும் பர்களோடு மறுமையிலின் புறுவதெமமாற் புகரற்பாற்றே. (உ௰)

(இ-ள்.) புலிமயிலும்-புலியும், மயிலும் - பூசைபுரிந்திடு, பூசைசெய்திடும்-தாலபுரி, பனைசையம்பதியிலுள்ள-நாதன், கடவுளை-போற்றுவோர்-துதிசெய்பவர், அம்புலி-சந்திரனும், மை - மேகங்களும், இல் உம்பரில்-மாளிகையின்மீது, ஊர-தவழ, வாழ்ந்திடுவது-வாழ்வைப்பெறுவதும், அன்றி-அல்லாமல், இசை-கீர்த்தியானது, போத - மிகவாக, திக்குப்புலிமையிலும் - திசைபத்திலும்உள்ள, புண்ணியர்கள் - சர்ச்சனர்களும், கொண்டாட - புகழ்ந்துசொல்ல, இம்மை - இந்தச்சநநத்தில், இன்பு - சுகத்தை, இப்புவனம்-இந்தவுலகத்தில், துய்த்து-அனுபவித்து, புல்இமையில் - கண்இமைசேர்தல்இல்லாத, உம்பர்களோடு-தேவர்களுடன், மறுமையில்-மறுசநநத்தில், இன்புறுவது - சுகமடைவதை, எம்மால் - எம்போலிகளால், புகரற்பாற்றே - சொல்லுந்திறத்ததோ என்க.

(வேறு.)

உடலினிற் கவய வங்கஙொவ் வொன்று முத்தம மென்பது கண் டும், மிடலுள சிரமுத் தோத்தம மென்றே மெய்த்தவர் புகன் மொழி போலு, மடலவிழ் மலர்க ளுடுதா மரையே மாமல ரென் பது போலும், புடவியி னுள்ள சிவக்குறி யின்மேற் போந்ததச் சிவக்கொழுந் தாமால். (உக)

அச்சிவ லிங்கந் தனையருச் சித்தே யம்பிகை மயிலுரு வகன்றாண் மெச்சிய நந்தி வேங்கையி னுருவை விலக்கின னறுதொழி லொழுக் கம், நச்சிய மறையோற் கன்றுகா ளத்தி நாதனவ் வூரிடை நண்ணி, வச்சிர தேக மகவளித் தென்றும் வதிந்தனன் றென்கயி லையைப் போல். (உஉ)

இந்திரன் மகனுங்கே ரண்டமா முருப்போ யிடவருச் சித்தனன் றிருமா, லுந்தியின் வந்தோன் சிறகிழந் திட்ட வுனச்சுத முறக் தொழு திட்டா, னிந்திரை கொழுநன் சூர்க்கியன் களத்தி னெழுகன லவிந்திடப் பெற்று, னந்தநற் றக்க னருளுஞ்சிவ நிந்தை யால்வரும் பாவநீங் கினனால். (உங)

தயரதக்குமரன் கானிடைக் கொடுபோய் தம்பியாற் சனகியை விடுத்த, செயிரினை யொழித்தான் மதனனு மரன்மேற் செழுமலர்க் கணையினை யெய்த, செயலினால் வந்த தீவினை யொழித்தான் றீக் கணும் பாசமுங் கொண்ட, வியமனு மரன்மேல் வீசிய பாச விடும் பையை யொழித்தன னன்றே. (உச)

உக்கிர னடைந்தோர் பார்த்திவன் சமண்மா சொழித்தறி வுறவ வற் குரைத்தான், மிக்கநற் கும்ப யோனிதன் பெயரான் மெய்ச்சிவ லிங்கமேய் வித்தா, னக்கனங் கருமா மலைமக டன்னை நன்மணஞ் செய்தன னதனாற், றக்கவத் தலத்தின் பெருமையை யெவரே சாற்றுவர் தாரணி மீதே. (உரு)

ஆதியிற் கிரவுஞ் சத்தினை யழித்த வறுமுகக் கடவுளு மலய, மீதி னிற் றமிழ்நங் கடலினை வளர்த்து மேதினி சூழ்கருங் கடலைப், போதினி லடக்கிக் குறுகென விந்தப் பொருப்பினி லொருகரம் வைத்த, மாதவற் கரிய தணிகையி னுரைத்தான் மகிழ்ந்தெமைக் கேட்ட விக்காதை. (உசா)

பொன்னவிர் சடிலப் புனிதமா தவனைப் போற்றியே தணிகையங் கிரியி, னின்னறீர் முருக வேளகத் தியனுக் கெத்திணுக் குரைத் தன னதனைப், பன்னுவி ரென்ன நைமிச வனத்துப் பண்ணவர் வினவலு மகிழ்ந்து, பன்னகா பரணன் றிருவடி மனத்திற் பதித் தவை பகருவ தானுன். (உஎ)

திரிபுர தகன னருள்விழி நோக்காற் செனித்தவிட் சாரணி யத் தைதக், கரிசறு மும்மைத் தமிழ்வலோன் மனதிற் காணுதற் குன் னியங் கணுகி, யுரியவிம் மிதங்க ளுைக்குமீஇத் தவஞ்செய் துறை பரத் துவசமா முனிவன், பரிவொடு முகமன் மொழிந்தவண் வதி யும் பன்னசா லையிற்கொடு புக்கான். (உஅ)

அடைந்தவம் முனியை யாதனத் தேற்றி யருச்சனை செய்தன மருத்தி, மடந்தவிர் சிந்தை மாதவ விவணீ வந்தவா றேதெனக் கொடிய, விடம்புரை வஞ்ச வேடங்கொண் டுறையும் வெறிமுகத் தினடரு சேயைக், குடங்கையிற் றடவிக் கொன்றவ னுவகை கொண்டபின் கூறுவ தானுன். (உகூ)

மண்டல மீதிற் பரவுசெந் தமிழின் வருமொழிப் புணர்ப்யெழுத் தளவு, கொண்டுறை தருமைந் திலக்கண மறியக் கோலயாழ்ச் சுருதியி னிசைப்ப, வண்டடர் குயில்க ளின்னிசை பாட மயினட மிடச்சினை வேங்கை, கண்டுபொன் சொரியு மிவ்வனத் தடைந் தேன் கழிந்ததென் குறையென விசைத்தான். (௩0)

கேட்டமா முனிவ னுளத்தினிற் றேர்ந்து கிளர்நெடுஞ் சடிலமா தவனிக், நாட்டொா ரதனுட் பொருளினை விரித்து நவினுதற் குரியரோ யானைக், கோட்டணி முலைசெங் குமுதவா யசலக் குமரி யை யிடத்தினி திருத்து, நாட்டமூன் றுடைய நாயக னுரைப்ப னனுகுதி கயிலையி னிடத்தே. (௩க)

இவ்வண முரைத்த பரத்துவா சன்ற னெழின்முக மருளொடு நோக்கிச், ¶செவ்வண வுடலந் தழுவியப் பரிசே சேர்குவ னென விடை யேற்று, மை‡வணக் கூந்தன் மனைவியுஞ் சீட வருக்கமுஞ் சூழ்தரக் கிரியைக், *கைவண வலியால் வளைத்தவன் வாழுங் கயிலை யைச் சாரவெண் ணினனால். (௩உ)

---

¶ செவ்வை-திருத்தமாகிய, வண்ணம் - வடிவுஅமைந்த, ‡ வண்ணம்-அழகிய,
* கை-வலியால்.

நைமிசாரணியச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௬க.

# திருக்கயிலாயச்சருக்கம்.

நைமி சந்தனை நனியி யம்பினுங்
கையின் மான்மழுக் கனல மேந்துமெம்
மையன் வாழ்கயி லாய மன்னதின்
மொய்கொள் சீர்த்திமேன் மொழிகு வாமரோ. (௧)

(வேறு.)

அருத்தியி னடைந்து நந்தியெம் பெருமா னடியிணை தொழுதவன் விடுப்பக், கருத்தினி லுவகை கூர்தரச் சென்றங் கண்கணீர் வழிதர வங்கைச், சிரத்தினி லழுத்தி யரகர வென்னத் தேவரு முனிவரும் வேண்டப், புரத்தினைச் சிரித்துப் பொடித்தவ னுறையும் பொருப்பது திருக்கயி லாயம். (௨)

கந்தரத் தூருங் காரியே முதலாங் கடவுளர் வாழ்பதங் கமல, வுந்தியிற் பிறந்தோ னுயர்பத முவண முயர்த்தவ னுறைபத மிவைக, ணந்திடப் பிரள யங்கள்கோத் திடமெங் நாளினு முலைவிலா தறிஞர், புந்தியைப் பொன்மேன் மேலுயர்ந் தோங்கும் புகழுடைத் தந்த மால் வரையே. (௩)

சிலேடை.

திருந்திய வானக் கங்கைமேற் றரித்துச் சிரத்தின்மா கம்பட வகித்துப், பொருந்தம ரங்க சக்கக முடலிற் பொறுத்துபொன் னிலங்கை ராவணனை, வருந்துறப் பொடித்து வளர்தரு புகழ்சேர் மாதங்கமுற் றுவர சிவர்க்காய், திருந்தலர் புரத்தைத் தீயெழ நகைத்த சிவனை யொத் திருந்ததக் கயிலை. (௪)

மலைக்கு (இ-ள்.) திருந்திய - தெளிவுள்ள, வானக்கங்கை - ஆகாயகங்கையை, மேல்தரித்து - தன்மேற்கொண்டு, சிரத்தில் - முடியில், மாகம்பட வகித்து-ஆகாயமளாவத்தரித்து, பொருந்த-அமைய, மரம்-விருக்ஷம், கசம்-யானை, ககம்-பறவை, உடலில்பொறுத்து - இவைகளைத் தன்மீது தாங்கி, பொன் இலங்கை ராவணனை-அழகிய இலங்காபுரியையுடைய இராவணனென்னும் அரக்கனை, வருந்துறப்பொடித்து - துன்பமடையும்படி அமிழ்த்தி, வளர்தருபுகழ்சேர் - மிக்க புகழ்வாய்ந்த, மாதங்கம் உற்று - பெருமையுடைய பொற்சன்னங்களைப்பொருந்தி,

சிவபிரானுக்கு (இ-ள்.) திருந்திய-திருத்தமாகிய, ஆன் - இடபக்கொடியும், அக்கு-எலும்பு மாலையும், அம்கை-அழகியகரத்தினும், மேல் - திருமேனியின்மீதும், தரித்து-தாங்கி, சிரத்தில்-சென்னியில், மா-பெருமைபொருந்திய, கம்-கங்காதேவியை, பட-பொருந்த, வகித்து-தரித்து, பொருந்து - வாய்ந்த, அமர்-யுத்தஞ்செய்யும், அங்கசன்-மன்மதனது, ககம்-அம்பை, பொறுத்து-தன்மேல்தாங்கி, பொன்இல் - இலக்குமியின் வீடாகிய தாமரைமலர்போன்றி, அம்கை-அழகிய கையையுடைய, இராவணன்-இருள்நிறமுண்டைய மன்மதன், வருந்துற-துன்பமடைய, பொடித்து-எரித்து, வளர்தருபுகழ்சேர்-மிக்க புகழ்வாய்ந்த, மாது - உமையம்மையை, அங்கம்உற்று - தன் மேனியிற்கலந்து, வானவர்க்காய்-தேவர்கள் நிமித்தமாய், திருந்தலர்புரத்தை - பகைவரது திரிபுரத்தை, தீயெழ-அக்கினிப்பட, நகைத்த-சிரித்த, சிவனை-கடவுளை, ஒத்திருந்தது-ஒப்பாயிருந்தது, அக்கயிலை-அந்தக் கைலாயம் என்க.

அரிதனை வகித்துக் குல்லையைத் தரித்தா ரணிகொள்சா ரங்கங்
கை யேந்தித், திரிசிரற் கரையக் கோலமேற் கொண்டு செய்யகோட்
டங்களை வளர்த்துப், பெரியகோத் திரங்கட் கேய்ந்தநற் றலைமை
பெற்றரி யெனமுன மழைத்த, கரிகவர் கராவைக் கணத்தினிற்
றுணித்த கண்ணனை நிகர்த்ததக் கயிலை. (௫)

மலைக்கு (இ-ள்.) அரிதனைவகித்து-சிங்கங்களைத் தன்னிடத்தில்வைத்து குல்லையை-குராமரங்களை, தரித்து - உடைத்தாகி, ஆர் - பொருந்திய, அணிகொள்-அழகைக்கொண்ட, சாரங்கம் – மான்கூட்டங்களை, கை-பக்கங்களில், ஏந்தி-தாங்கி, திரி-சஞ்சரிக்கின்ற, சிரல்-சிச்சிலிப்பறவைகள், கரைய-ஒலிக்க, கோலம்-இளகுக்கொடிகளை, மேற்கொண்டு-தன்மீதுகொண்டு, செய்ய-செம்மையாகிய, கோட்டம் - வாசனைப்பண்டங்களை, வளர்த்து - விருத்திசெய்து, பெரியகோத்திரங்கட்கு - பருத்தமலைகளுக்கு, ஏய்ந்த-பொருந்திய, நல்தலைமைபெற்று-நல்லமுதன்மையைவகித்து,

விஷ்ணுவுக்கு இ-ள்.) அரிதனைவகித்து-சக்கராயுதத்தைத் தரித்து, குல்லையைத்தரித்து-துளபமாலையையணிந்து, ஆர்-நிறைந்த, அணிகொள்-அழகைக்கொண்ட, சாரங்கம்-வில்லை, கைஏந்தி - கரத்திற்றாங்கி, திரிசிரன்-திரிசிரனென்னும் அவுணன், கரைய-துன்பமடைய, கோலமேற்கொண்டு-ஓர்ஆயுதத்தைக்கொண்டு, செய்ய - செம்மைதங்கிய, கோட்டங்களை - பசுக்கூட்டங்களை, வளர்த்து - விருத்திசெய்து, பெரியகோத்திரங்கட்கு - பெரியகாடுகளுக்கு, ஏய்ந்த-பொருந்திய, நல்தலைமைபெற்று-நல்ல முதன்மைபெற்று, அரியென முனமழைத்த-ஆதிமூலமேஎன முன்னங்கூவிய, கரி-யானையை, கவர்-பற்றிய, கராவை - முதலையை, கணத்தினில்துணித்த - சீக்கிரமாய்ப்போய்க் கொன்ற-கண்ணனைநிகர்த்தது அக்கயிலை-விட்டுணுவையொத்திருந்தது அந்தக் கைலாயம் என்க.

நாவினற் கலைமா திருத்தலின் முகங்க ளான்கினு மறைபர வுதலின், பூவினிற் பொலித லின்னன மேறப் பெறலினற் றண்டமேந் தலிற்செங், காவியங் கண்ணு டெனுங்கவுக் காமர்கனகியை யுடையவ னுந்திப், பூவினிற் பிறந்து பூவினைப் படைக்கும் புவிதனை நிகர்த்ததக் குன்றம். (௬)

மலைக்கு (இ-ள்.) நாவி-கஸ்தூரிமிருகமும், நற்கலை-நல்லமானும், மாது-விருப்பமாக, இருத்தலின் - வாசம்செய்வதால், முகங்கள்நான்கினும்-நான்கு திசையிலும், மறைபரவுதலின் - வேதங்கள் துதிசெய்வதால், பூவினில்-பூமியினிடத்தில், பொலிதலின் - அழகுடனிருப்பதால், அனம் - கவரிமான், ஏறப்பெறலின்-தன்மீதிருக்கவைத்தலால், நல்தண்டம் - நல்லபொக்கசத்தை, ஏந்தலின்-தாங்கியிருப்பதால்,

பிரமனுக்கு (இ-ள். நாவில்-நாக்கில், நல்கலைமாது-நல்ல சரச்சுவதி, இருத்தலின்-இருப்பதனால், முகங்கள் நான்கினும்-நான்குமுகத்திலும், மறைபரவுதலின்-வேதமோதலினால், பூவினிற்பொலிதலின்-புட்பத்தின்மீது வாசம் செய்வதால், அனம் ஏறப்பெறலின்-அன்னத்தின்மீது ஆரோகணித்தலால், நல்தண்டம் ஏந்தலின்-நல்ல தண்டாயுதத்தைக் கைக்கொண்டிருப்பதால், செம்காவி அம்கண்-செவ்விய நீலோற்பலத்தையொத்த அழகிய கண்ணையும், நாருஎனும் களம்-சங்கென்று சொல்லும் கழுத்தையும் உடைய, காமர்-அழகிய, கனகியை-இலக்குமியை, உடையவன்-மார்பில்தரித்த விட்டுணுவின், உந்திப்பூவினில்-நாபிக்கமலத்தில், பிறந்து-உதித்து, பூவினைப்படைக்கும்-உலகத்தைச் சிருஷ்டிக்கும், புநிதனை-பிரமனை, நிகர்த்தது அக்கயிலை-ஒத்திருந்தது அந்தக் கைலாயமலை என்க.

சிறந்தவச் சிரமுந் தெளிவுறு சசியுந் தேங்கொளி துளும்புமா நிதியுஞ், செறிந்தவைந் தருவுந் தேனுவும் வடிவு திகழ்தரு வெள்ளையா னையுநல், லறந்தவா தியற்று மையர்தங் குழுவு மனுதின முடைமையிற் சீர்சா, னறந்தமென் மலர்வா சிகைப்புய மணிந்த நாகர் கோனனையதக் குன்றம். (எ)

மலைக்கு (இ-ள்.) சிறந்த-சிறப்புற்ற, வச்சிரமும்-வைரமும், சசியும்-சந்திரனும், தேங்கு ஒளிதுளும்பும்-மிக்ககாந்திவீசும், மா-பெருமைபொருந்திய, நிதியும்-பொன்னும், செறிந்த-நெருங்கிய, ஐ-அழகிய, தருவும்-மரங்களும், தேனுவும்-பசுவும், வடிவுதிகழ்தரு-அழகமைந்த, வெள்ளை ஆன்-வெளுத்த ரிஷபத்திற்கு, ஐ-தலைவனாகியகடவுளும், நல் அறம்-நற்கருமங்களை, தவாது இயற்றும்-விடாது அனுட்டிக்கும், ஐயர்தங்குழுவும்-முனிவர் கூட்டங்களும், அனுதினம் உடைமையில்-தினமும் பொருந்தியிருத்தலின்,

இந்திரனுக்கு (இ-ள்.) சிறந்த-மேன்மையுடைய, வச்சிரமும்-குலிசாயுதமும், தெளிவுறு - அறிவிற்சிறந்த, சசியும்-இந்திராணியும், தேங்கு ஒளிதுளும்பும்-மிக்க ஒளிவமைந்த, மா-பெருமையிற்சிறந்த, நிதியும்-சங்கநிதிபதுமநிதியும், செறிந்த-நெருங்கிய, ஐந்தருவும்-பஞ்சதருக்களும், தேனுவும்-காமதேனுவும், வடிவுதிகழ்தரு-உத்தம அங்கம்வாய்ந்த, வெள்ளையானையும்-ஐராவதமும், நல் அறம்தவாது இயற்றும்-நல்ல தருமமார்க்கத்தை விடாதுசெய்யும், ஐயர் தங்குழுவும்-தேவர்கூட்டங்களும், அனுதினம் உடைமையின்-தினமும் பொருந்தியிருப்பதால், சீர்சால்-மிக்க சிறப்பினையுடைய, நறந்தமென்மலர்-மணம் நிறைந்த மெல்லிய புட்பங்களாலமைந்த, வாசிகை - மாலையை, புயமணிந்த-தோளில் தாங்கிய, நாகர்கோன்-தேவேந்திரனை, அனையது-ஒத்தது, அக்குன்றம்-அந்தக் கைலாயமலை என்க.

ஈடிலக் கயிலை யினிற்பர மேச னெழுந்தரு ளிருக்கைபுண் டதன்சீர், சேடன்வான் மீகி யகத்தியன் முதலோர் தேர்ந்துரைப் பதற்கரி தாகும், பீடுறு மம்மண் டபத்திடை மணியாற் பிறங்கொளி துளும்பெழிற் சிங்க, பீடமீ துமையோ டருள்விடை யிவரும் பிஞ்ஞக னிருந்திடு மேல்வை. (அ)

கின்னரர் முனிவ ரியக்கர்காந் தருவர் கிம்புரு டாதிவா னவரும், பன்னுதற் கரிய பழமறை நாவிற் பழிச்சிவந் திடரொழித் தாளுங், கன்னலைப் பழித்த மொழியுமை யிடங்கொள் கண்ணுத லடிதொழு மமைய, முன்னுதற் கரிய குறுமுனி யுலோபா முத்திரை யோடவ ணடைந்தே. (௯)

முன்னவன் பதும முகங்களுங் கிருபை முதிர்ந்திடு விழிகளுந் துவர்வாய்ப், புன்னகை யரும்பும் பொலிவையு நோக்கிப் பொழிதர விழியிலா னந்தந், தன்னையு மறந்தா னந்தசா கரத்திற் றாழ்ந்தரு டிளைத்துப்பி னொருவா, றன்னவ னருளாற் றெளிந்தவ னடியி லன்புமீக் கூர்ந்தக மகிழ்ந்தே. (௰)

நித்தவா னந்த நிருத்தனே சகள நிட்களச் சிற்சுகோ தயனே, சுத்தமெய்ஞ் ஞானச் சோதியே தோன்றாத் துணைவனே சுகப்பெருங் கடலே, முத்தனே மூவா முதல்வனே நீற்று முண்டனே தொண்டர்க ளொத்து, மத்தனே யுன்ற னடைக்கல மெனையா ளையனே யெனப்பல துதித்தான். (௧௧)

(வேறு.)

இத்துதி கேட்டர னிதய மார்வமுற்
றெத்திறம் வேண்டுவ தியம்பு வாயெனப்
பத்தியோ டடியிணை பணிந்து ளத்தினின்
முத்தமி ழிலக்கண முணர முன்னினேன். (௧௨)

இன்றுமிக் கயிலையி லிருந்து பைந்தொடி
யின்னகைத் துவரித ழினிய மென்மொழி
மின்னிடை யுமையொடு மேவு நின்னடி
தன்னையான் றொழுதிடச் சார்ந்து ளேனரோ. (௧௩)

எனப்புகன் மொழியினுக் கிரங்கி யாருயி
ரனைத்தையும் படைத்தளித் தழிக்க வல்லவன்
மனக்குறும் பொழித்தருண் மாத வன்மன
மினித்திடு மிலக்கண மிசைத்தி யம்புவான். (௧௪)

ஆர்புக முருந்தவம் பயின்று ளாய்நினக்
கார்¶தர நாமெடுத் தறைந்த யாவுநற்
சீர்பெறு மடியர்தஞ் செவியி லேற்றுதற்
கார்கலி சூழுல கடைய வேண்டுமால். (௧௫)

எரிகதிர் மதிமுத லிணையில் கோள்களைப்
புரைபட வதரிடைப் போதல் நீக்கிவிண்
வரையுயர் விந்தமால் வரையி னுச்சியிற்
கரமுறப் பாதலங் காண வீழ்த்தியே. (௧௬)

அன்னதன் றெற்கினி லமருந் தண்டகந்
தன்னில்வா தாவிவில் வலனைச் சாய்த்தொரீஇத்
தன்னிகர் பொதிகையைச் சார்ந்தி லக்கியங்
கொன்னவி லிலக்கணங் குவல யத்தினில். (௧௭)

அடுத்துள மாணவர் தம்மை யாய்ந்துபின்
பெடுத்திலக் கியவிலக் கணங்க ளின்சுவை
மடுத்திட வுணர்த்திநீ மலயம் வாழ்கவென்
றடுக்கல்வில் லேந்தினோ னருளி னனரோ. (௧௮)

அருளிய முக்கண னடியி றைஞ்சியே
மருளறு முனிவரர் தேவர் வாழ்ந்திடுங்
கரிசறு வெள்ளியங் கயிலை விட்டியா
னொருவுதற் கென்னுள முவந்த தில்லையால். (௧௯)

இங்கிருந் தரியநின் கோல மெப்பொழு
துங்கணிற் கண்டிட றுதித்தல் விட்டியான்
மங்குமுன் றவத்தைசேர் மக்கள் வாழ்நிலந்
தங்குற விதித்திடிற் றமிய னுய்வனே. (௨௰)

என்றடி தொழுமுனிக் கிரங்கி நீதொழ
நின்றநம் முருவநித் தியமு மாணவந்
துன்றுறு மாயையின் றொடர்பு முள்ளதாற்
பொன்றுறு மிஃதெனப் புந்தி கொள்வையால். (௨௧)

நித்தியம் பூரணம் நிமல சின்மயம்
வித்தகம் பரவெளி விளங்கு நிட்களம்
பத்தியிற் படுபொருள் பகரு மின்னவை
யுத்தம நமதுமெய் யுருவ மாகுமால். (௨௨)

---

¶ தரம்-சமானம்.

உண்மையா நமதுரு வுணர வுன்னினோர்
தண்மைகொ ளறிவினைச் சார வேண்டுமவ்
வண்மைசேர் ஞானமும் வருத லெண்மையோ
திண்மையார் புவியினைச் சேர்ந்தி டார்க்கரோ. (உரு)

அவனியி லடைந்துமட் டாங்க யோகமு
துவகையோ டியற்றலஃ தூறுமவ் யோகமு
முவமையிற் பொறையினு லுதிக்கு மாங்கவை
தவறிலாச் சித்தசுத் தியினிற் சாருமால். (உச)

அதுவரற் கேதர னடியர் தங்களுக்
கிதமுடன் பணிவிடை யியற்ற லீதெலாம்
விதிமுறை யியற்றுதற் குரிய மேதினி
யதினுறி னமதுரு வடைத றிண்ணமாம். (உரு)

ஆதலி னுங்கடைந் தமரர் போற்றிடு
மேதகு தலத்தினு மேன்மைத் தாகிநாங்
காதலி னமர்தரு விலாச காஞ்சியி
னேதரு நங்குறி யொன்ற மைத்தரோ. (உசு)

(வேறு.)

தேன்படு சந்தின் வாசந் திசைதொறுஞ் சிறுகால் வீசும்
வான்படு சிகர மேரு மலயமீ தடைந்து மாந்த
ரூன்படு கண்ணிற் காணு வுண்மைநம் வடிவை ஞானந்
தான்படு விழியி னேக்கிச் சார்தியென் றருளிச் செய்தான். (உஎ)

இன்னடையஞ் சடையார் சொற்கேட் டெழுந்தடி பணிந்து போற்றி
யண்டர்நா யகனே நின்ற னருங்குறி காண்டி யென்றீர்
விண்டிடற் கரிய சீர்த்தி விளங்குமவ் விலாச காஞ்சிப்
பண்டைய சிறப்பின் மேன்மை பகரெனப் பரமன் சொல்வான். ()

அத்தல மகிமையாவு மணிகொளுந் தணிகை மேவிச்
சுத்தநுங் குரவ னுகுஞ் சுரேசனை வினவித் தேறிச்
சித்தமுற் றிருந்த சங்கை தீர்கென வருள லோபா
முத்திரை யுடனுந் தற்சூழ் முனிவரோ டடிப ணிந்தான். (உகூ)

முன்னவ னருளிச் செய்த மொழியினைச் சிரமேற் றாங்கி
யன்னவன் வாழும் வெள்ளி யத்திரி யொருவற் குள்ளம்
பின்னிடப் பரமன் வார்த்தை பெயர்ந்திடு மெனவி வேக
முன்னிழுத் திடவந் துற்றான் முனிவனும் புவியின் மாதோ. (௩௰)

திருக்கயிலாயச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-கசுக.

உ

# அகத்தியன்யாத்திரைச்சருக்கம்.

வன்னிபூ மத்தை கொன்றை வனைந்தவ னிடத்தின் மேவுங்
கன்னிமா துமையா ளுள்ளங் கலங்கமா திரமெ டுத்த
வன்ன§கம் பத்தா னுய்ய வருள்சுரந் தோன்வாழ் கைலை
யுன்னதமுரைத்தாங் கும்ப யோனியாத் திரையு ரைப்பாம். ()

காமுறத் திரைநீர் தன்னைக் கடிதயின் றருளும் யோகி
யரிபரந் தொளிருஞ் செங்க ணம்மைவெம் முலைக்கோ டுற்ற
¶மருமமா ரணியற் றாதை வண்டிமிர்ந் திசைகள் பாடும்
வரமுறு வான்றோய் கூர்ம வரையினைக் கண்டா னன்றே. (௨)

நேரிலாப் பவங்கள் செய்தோர் நேர்ந்தவக் கணத்தின் முத்தி
சீரவே யளிக்கு மிந்தத் தடங்கிரி யென்னு நாணு
வீரமா மதியோன் வாழ்வ் விறைமலை விளர்ப்பச் செய்கே
தாரவண் கிரியைக் கண்டான் றவத்தினிற் றலைமை கொண்டான்

(வேறு.)

காட்சி யாற்றமைக் கண்டிடு மாந்தரை
மாட்சி யோடுயர் வானுல கேற்றிடு
மீட்சி தங்கு மமல னுறைவிரு
பீட்ச மென்னும் பதியினைக் கண்டனன். (௪)

வாத்தி யங்களி னோதையும் வண்மறைச்
சாத்தி ரங்கள் முழக்கமுந் தண்கட
லார்த்த வோசை யடக்கெழின் மானதக்
கேத்தி ரத்தைக் கிளர்தரக் கண்டனன். (௫)

‡குவரை யேந்திக் குடஞ்சுட்டைக் கோகுலத்
தவரைத் தந்தியைத் தையலைத் தாடொழு
பவரை யைவரைக் காக்கும் பகவனார்
துவரை தன்னைத் துரிசறக் கண்டனன். (௬)

உந்து மூழ்விலங் கின்னுயி ருண்டுளி
சிந்து கோலஞ் சிலையலை யாயுடைச்
சுந்த ரத்தி யமுனை துலங்குகா
ளிந்தி யென்னு மெழினகர் கண்டனன். (௭)

---

§ கம்-தலை. ¶ மருமம் ஆர் அணியல் தாது ஐ வண்டு எனப்பிரிக்கவும்.
‡ கு-பூமி. † உண் துளியெனப்பிரிக்கவும்.

(வேறு.)

பிறைதவ ழலங்கல் வேணிப் பிஞ்ஞக னுறையுஞ் சீர்சால்
பிறபதி கலையுங் கண்டு பெரிதுவந் தருச்சித் தேத்திக்
கறைமிடற் றவனுக் ¶காசான் கருதருங் குமரனாக
வுறைதரு காசி மூதூ ருசிதவெல் லையி னடைந்தான். (௮)

மூசுவண் டினங்க ளெல்லா முரன்றிடு வனமுஞ் செம்பொற்
றேசுறு §சிதர்கொள் வாசத் தேமலர்த் தடமுங் கூனல்
காசறு முத்த மீனுங் கழனியுங் கடந்து மென்மேல்
வீசலை யுடைய கங்கை வியன்கரை கண்டு சார்ந்தான். (௯)

சிங்கியா னதுகு ளிர்ந்துஞ் சிவனை யொழிக்கு மாபோற்
றங்குதண் ணீரெனப்பேர் தரித்தும்வெந் தழலாய்ச் சார்ந்தோர்
பங்கமா னதையெரித்துப் பற்பமா யியற்ற வல்ல
கங்கையின் விதியி னாடிக் களிப்பெனுங் கடலு ளாழ்ந்தான். ()

வாரியின் மறைக ளார்க்கு மறுகினை வலஞ்சூழ்ந் தேகி
நாரியைப் பாகம் வைத்த நம்பனா லயமுன் றாழ்ந்து
மாரியொத் திருகண் டாரை வழிந்திட வலஞ்செய் தேத்தி
வேரியங் கடங்கா றுண்டி விநாயகன் றிருத்தாள் போற்றி. ()

(வேறு.)

மாட்சி மிக்க வரத்தை யடியர்பாற்
றாட்சி யின்றித் தரவுளங் கொள்விசா
லாட்சி யம்மை யணிவுரு வங்களின்
காட்சி யைக்கண் களிப்பக்கண் டேத்தினான். (௧௨)

போதனோ டுந்தி பூத்தவன் காணொணாச்
சோதி யாகத் துவன்றிய விச்சுவ
நாத னேயெனை யாட்கொளும் நம்பவென்
றோதி யீச னுறையிடம் புக்கினான். (௧௩)

உலக மேத்து முருவரு வாயவற்
||கலரி சேர்திரு மஞ்சன மாட்டிவண்
$டுலவை மாம துணைவலு ராய்க்கெடுத்
தலைவி னும மறைந்தருச் சித்தனன். (௧௪)

---

¶ ஆசான்-சுக்கிரன். § சிதர்-மகரந்தம்.
|| அலரி-அழகு. $ உலவை-குலம்;

இந்த வண்ண மிருந்துசின் னாள்கழித்
தந்து மார்வ முடனர் நகருறை
யந்தி வண்ண னடிதொழு தண்டநீள்
விந்த நோக்கி விரைவுடன் சென்றனன். (௧௫)

தந்தி ரம்வரு மந்தவ நாரத
னுந்து வஞ்சனை யாலுயர்ந் தோங்கிவா
னிந்து செங்கதி ராதிக் கிடர்தரு
மந்த சைய மருகணைந் தானரோ. (௧௬)

அன்ன வெற்பினைக் கண்ட வகத்திய
னன்ன யங்கொள வேருகைத் தவ்வரை
தன்னை யம்பொதி யாசலஞ் சாரயா
னுன்னி னேன்வழி விட்டிடென் றோதினான். (௧௭)

கேட்ட வவ்வரை கேடிலென் னுள்ளத்து
ணாட்ட நீயறி கிற்றிலை நற்றவ
சேட்டு ளங்கும் பரிதி செழுமதி
யோட்ட முந்தடுத் தேன்வழி யுண்டுகொல். (௧௮)

போதி போதி யெனப்புக லுற்றகண்
டாதி நாம மகத்திடை யுன்னியே
நீதி யிற்செருக் குற்ற நெடுவரை
மீது செங்கைவைத் தான்றவ மிக்குளான். (௧௯)

அங்கை வைத்தழுத் துற்றலு மவ்வரை
பங்க முற்றுப் பிலத்திடைப் பட்டன
*பொங்க ரேயதத் தூடு புகுந்தவே
லெங்க ணுண்மைகொண் டார்கதி யெய்துவார். (௨௰)

மலையு மட்டிட்ட தென்னுமம் மாற்றமிவ்
வுலகி னூடுமின் னுற்றன வும்பர்க
வலையொ ழிந்து வழுத்தி நறவுகான்
மலரை வாரி மழையெனப் பெய்தனர். (௨௧)

ஆய போதி லருந்தவ னந்தரந்
தோயு மென்பணைத் தண்டகச் சோலையிற்
றேயு நுண்ணிடைத் தேவியோ டாங்குறுந்
தூய மாதவர் சூழல்வந் துற்றனன். (௨௨)

---

பொங்கர்-மலை.

உற்ற போதங் குயர்வரைச் சாரலிற்
குற்ற மென்பவெ லாமுருக் கொண்டெயி
றிற்று மாள விருந்தவர் நூலெலாங்
கற்று ணர்ந்த முனிவனைக் கண்டனர். (உ௩)

நங்கு லத்தை நலிவுசெய் நாகருக்
கிங்க ணாமிடர் தீர்த்திட வெய்தினா
னோங்கி னன்கட னீரை கொடிக்குளே
தங்கு மன்ன வனைத்தடி வாமெனா. (உ௪)

வெய்ய வஞ்சக வில்வலன் றம்பியைச்
செய்ய கண்ணுந் திரிமருப் பும்பெறு
மைய தாக்கி மறைமுனி யாகவந்
தையன் முன்ன ரடைந்திவை யோதுவான். (உ௫)

அடுத்தி ருந்தென் சிறுகுடி லய்யவெற்
றெடுத்தி ருந்த பவங்க டொலைந்திடத்
தடுத்தி டாதுப்பி லாப்புற்கை யேனும்வாய்
மடுத்துச் சேட மகிழ்ந்தரு ளென்றனன். (உ௬)

மன்னு காம மயக்க மிகுத்துளான்
சொன்ன சொல்லுண்மை யென்று துணிந்துபின்
றன்ன கந்துட் கருணை ததும்பிடப்
பன்னு வான்படி றென்றும் பழகிலான். (உ௭)

நாலு பத்தொடெ ணாயிர நற்றொகைச்
சீல மாமுனி வோரிற் சிறந்துளாய்
பால லோசன னாருட் பார்வையாற்
கோல மெய்க்கதி கூடினை நீயெனா. (உ௮)

முக்கு றும்பை முனிந்த முனிவரன்
றக்க வாசி புகன்று தவத்தநீ
புக்கி லேது புகன்ற மொழிப்படி
துய்க்க யானுந் தொடர்குவ னென்றனன். (உ௯)

நாத னானிது காறு நயந்துசெய்
மாத வப்பயன் வாய்த்ததென் றேயவற்
காத லோடு கடிமனை யிற்கொடு
தீதி லாசன மீதுறச் சேர்த்தனன். (௩௰)

இருத்தி னன்முக மன்க ளியம்பியே
திருத்த மாகுஞ் செழும்புன லிற்படிந்
துருத்தி ரஞ்சொலிப் பாவ மொழிக்குநீ
றருத்தி யோடணிந் §§தையி லடைந்தனன். (௫௧)

புனித சாணங்கொ டில்லினைப் பூசிநற்
கனக குண்டங் கழுவி யடுப்பினி
லனக வாரழ லாக்கி §மடை¶யமைத்
தினிய †பாளித முற்று மியற்றியே. (௫௨)

(வேறு.)

தம்பியாந் தகரை யந்தத் தமிழ்முனி முன்ன ரீர்ந்து
வெம்பிய பிசிதந் நீக்கி வேறுவே றரிந்தெ டுத்துச்
‖சம்பரங் கொண்டு மூன்று தரங்கழீஇச் சுத்தி செய்து
வம்புலா மிளகுப் பாதி மருவுசம் பாரங் கூட்டி. (௫௫.)

அடுப்பினி லேற்றி யானெய் யமைவுற விடுத்துப் பின்னர்த்
துடுப்பினிற் றுழாவி மூடித் தூமணப் பொடிக டூவிக்
கடுத்திடா வகைபொ ரித்துக் கமழ்தரப் பிட்டு செய்து
மடுத்துள *செப்ப வென்பி னுங்குழம் பினித மைத்தான். ()

பின்னர்மாங் கனிசெவ் வாழைப் பிலிற்றுதே னறிய பாக
றன்னருஞ் சாரந் தீம்பாற் சருக்கரைக் கண்டு கோற்றே
னன்னய மாகச் சேர்த்து நாரண னயனுங் காணு
முன்னவன் பூசை கும்ப முனிசெய வமைத்துப் பின்னர். (௫௫)

ஓடிவந் தடியிற் றாழ்ந்தின் றுனைப்பசி வருத்த நாயே
னீடிய காலந் தாழ்த்தே னினையலை யேழை குற்றஞ்
சேடுறு புனலிற் றோய்ந்து சிவலிங்க பூசை யாற்றி
வாடுத னீங்க வுண்டி வகையுண வருக வென்றான். (௫௬)

அன்னவை கேட்ட கும்ப யோனியு மருநீ ராடிப்
பின்னர்பூ சனைமு டித்துப் பேருணச் சாலை யெய்தத்
தன்னுயி ரிழப்போ னந்தத் தயையினிற் றூய னானே
மின்னொளிப் பீடத் தேற்றி மிசைதரு கலன்றி ருத்தி: (௫௭)

ஐவகை யுண்டி யோடு மறுசுவைக் கறிப டைத்து
நெய்வழி தரவே பெய்த நீளன நடுவே வைத்தெம்
மையனின் னமுது கொள்கென் றடியிணை பணிந்து போற்ற
மெய்யதென் றெண்ணி ஞான மிகுத்தவ னினிதுண்டானல். ()

§§ஐ-இல். §மடை-சோறு. ¶அமைத்து-சமைத்து. †பாளிதம்-குழம்பு.
‖சம்பரம்-நீர். *செப்பம்-மார்பு.

உண்டபின் வாய்மை பூசி யோரிடத் துறையும் வேலைப்
பண்டுதான் புசித்த வேறு பற்பல வுறுப்பு மொன்றி
மிண்டுட லயமாய் நிற்க வில்வலன் வரத்தை யுன்னி
யண்டரு நடுங்க வாய்விட் டழைத்திட நினைத்தா னன்றே. ( )

தம்பிவா தாவி நின்றன் றசையினை யுண்ட தீயன்
பம்பிய பண்டி கீறிப் பாரினில் வருதி யென்று
வெம்புவில் வலனு முக்கால் வீறுட னழைத்தல் கேட்டுக்
கும்பியூ டுறுவா தாவி கூறினன் வருவ லென்று. (௪௰)

அன்னவை கேட்ட கும்ப மாமுனி யறிந்து தீய
ருன்னிய கொடுமைக் கேற்ப வுதரத்தை வருடி யாங்கே
நின்னிலை தவறி மாய்தி யெனத்திரு நீறு பூச
வன்னிமண்டியபுதற்போன் மாய்ந்தனன் கொடியவெய்யோன்.

பின்னர்வான்கொண்டலென்னப் பெருந்தவத்தவன்முன்னின்ற
முன்னவன் றம்பி மாய்ந்த முறையுணர்ந் தழன்று பொங்கித்
தொன்னிலை யுருவு கொண்டு தொடர்ந்தனன் தண்ட மேந்தி
பன்னிலை கண்ட தூயோ னரனெழுத் தைந்து மோதி. (௪௨)

அங்கொரு குசையைக் கையேற் றரன்படை யாக வுன்னி
பொங்கெரி கதுவக் கண்கள் பொருக்கென விடுப்ப வன்னோன்
றங்குட லிருகூ றாகத் தடிந்துயி ரழித்த திப்பா
லெங்ஙனே பதக ருய்வா ரீசர்தம் மடியார் சீறின். (௪௩)

(வேறு.)

முன்னமார் கலிமுகந் துண்டமா முனிவரன்
பன்னருங் கொடியவப் பதகர்வாழ் வனமொரீஇ
மின்னைநே ரிடையொடும் மெய்த்தவக் குழுவொடுந்
தன்னைநேர் சேயி லந்தனைச் சார்ந்தனன். (௪௪)

ஆங்குமைக் கண்டமோ டங்கைமான் மழுவையுந்
தாங்குமெய்ச் சச்சிதா நந்தனைத் தாதுலாம்
பூங்குழற் சுந்தரப் பூதரப் புதல்வியோ
டோங்குபே ரன்பினூ டுறுதவன் றொழுதரோ. (௪௫)

தக்கணத் திசைவழித் தவர்தொடர்ந் திடநடந்
திக்குவின் மதனைமுன் னெரிபடுத் திடுவரன்
கைக்கனிக் காயுல கைவலஞ் செய்குகன்
புக்கிவாழ் வேங்கடப் பூதரத் தெய்தினன். (௪௬)

அந்தரத் தண்டர்தம் மயர்வொழித் தவுணர்பே
*ரந்தரத் துடல்கிழித் தாருயிர்ப் பருகும்வேற்
கந்தனைக் கண்டுபொற் கழலிணை தொழுதுபின்
றந்திபாம் பேத்துதென் கயிலையைச் சார்ந்தனன். (௪௭)

கண்டனுன் றெழுதிணைக் கைகுவித் துச்சிரங்
கொண்டனன் †சிதமலர்க் கோதையோர் பாகனைப்
பண்டனைப் பண்கொடே பாடிவந் தனைசெய்மார்க்
கண்டனைக் காத்தமைக் கண்டனைக் கண்களால். (௪௮)

அன்னதென் கைலைவிட் டாலநீள் வனமடுத்
தென்னையா ளுடையவ னெழினடங் கண்டுமற்
றன்னருங் கயிலைவா ழீசனன் றேறிய
மன்னெழிற் றணிகைமா மலைவழிக் கொண்டனன். (௪௯)

(வேறு.)

தெளிதரு கங்கை யாறுசூழ் காசித் தெற்கிரு நாறுயோ சனையி, லளியுள்ளர் சோலை யகழிசூழ் காஞ்சிக் காம்வடக் கிரண்டினிற் குணக்கே, யொளிர்கடன் மேற்கி னைந்தினில் விரிஞ்சிக் குறுவட கிழக்கி னின் மூன்றில், வளிகொள்கா ளத்திக் கேய்இரு தியினில் வாய்த்ததனி பூரணக் கிரியில். (௫௰)

சுலவுறு பெருங்கட் புன்றலைப் பொறிக டோன்றுடற் ‡கீணவா லதிகொண், டிலகுசா ரங்கம் பலவமைந் திருத்த லிதழ்விரி மலரணி கடம்பன், மலைவிலொண் டொடியா ரிருவரை மணந்தான் மகட்கொரு மனக்குறை நேரி, னலிவகற் றினிய நவிலுதற் குறையு நாட்டமொத் திருந்தன வொருபால். (௫௧)

கழைநிரை முன்னர் கமுகுதீங் கரும்பு காயிளங் கதிர்கொள்செஞ் சாலி, யிழையிடைப் புகுதா வீணைமூலைக் கொடிநே ரிடைக்கொடிச் சியர்கள்கா வேனற், றழைதரா வொன்றி ஞென்றுளே யுறுத றணிகையங் கிரியிசை யிவர, விழைதரு மடியர்க் கமைத்தசோ பான மேயென விளங்குவ தொருபால். (௫௨)

---

அந்தரம்—இருள்.

† சிதமலர்க்கோதை-ஞானப்பூங்கோதை.

‡ கீணம்—குறைவு.

ஆழ்தரு நிலைநீர்ச் சுனையிடைக் கருநத் தங்கலா ரரிதினிற் கொண்டு,
வீழ்தரு நாக மணியினைப் பறவை விலகவொண் கவண்கொடு வீச,
சூழ்தரு பொருள தென்னினும் விருப்பந் தருவதே லரியவா மரிய,
* காழ்தரு மேனும் விருப்பிலார் விரும்பா ரென்பதற் கேய்ந்தன
வொருபால். (௫௩)

கன்மிசை நொச்சிப் பாசிலை யன்ன கான்மயிற் † றழைவிரித் தாட,
மின்மணித் திரள்சிந் தருவியி னீட்டம் விசையுட னிழுமெனத்
தாழ்த, வன்னெறிச் சேட னம்மயிற் கண்டு நடுங்கிமெய் வேர்த்து
ளம்புழுங்கித், தன்னுல கொல்லை சார்ந்திடற் கேகுந் தன்மைபொ த்
திருந்தன வொருபால். (௫௪)

இன்னணந் திகழும் வளங்கெழு வெற்பை யியற்றமிழ் முனிவர னெ
ய்தித், தன்னிக ரில்லாத் தகைமைசேர் புனித சரவணப் பொய்கை
யின் மூழ்கிக், கன்னிபங் காள னைந்தெழுத் தோதிக் காமர்வெண்
ணீறணிந் தடல்கூ, ரின்னுயிர் பருகு மையவேற் குமர னிணையடி
தொழுதெழ நினைந்தே. (௫௫)

குன்றிற கரிந்தோன் குறைதவிர்த் தாண்ட கூர்வடி வேற்குணக்
குன்றே, வென்றிகொ ளவுணக் குலவிரு ளொழித்த விமலஞா
னத்தின மணியே, மன்றிடை நடித்தோன் மார்பிடை நடிக்கு மரு
மலர்ப் பதத்தருட் கடலே, யென்றுபற் பலவாத் துதித்தடிக் கடி
வீழ்ந் தெய்தினன் கோபுர வாயில். (௫௬)

ஆங்குறு பசுந்தார் துயல்வரு தடந்தோ ளடல்புனை வீரவா குவி
னம், பூங்கழல் வணங்கி நினைப்புலாற் கமழும் பொங்கொளிப் பரிதி
வேற்கடம்பன், பாங்குற விருக்குஞ் செவ்விதேர்ந் தறத்தின் பண்
புறுந் தாலையம் பதியி, னோங்குறு புகழ்கேட் டுவந்திட வேட்ட
வுளத்தனாய்க் குகன்முன முற்றான். (௫௭)

எட்டினு மைந்தி னுஞ்சிலம் பணிந்த விணையடி தொழுதெழுந்
தூறி, வட்டிலே யார்வ முருக்கிட வெய்யோ னுறுகிர ணத்தெதிர்
வெண்ணெய், பட்டதை யென்ன நெகிழ்ந்திரு விழியிற் பனிதரு
மருவிநீர் வார, மொட்டுறு கஞ்ச மெனக்கரஞ் சிரத்து முகிழ்த்தி
வை யோதுவதானான். (௫௮)

---

* காழ்-ஒளி. † தழை-கலாபம்.

(வேறு.)

கருணைசேர் முகங்கள் போற்றிக் கண்களீ ராறு போற்றி
பருணிதர் புகழ்முந் நான்கு படைக்கலக் கரங்கள் போற்றி
தருணவிண் மணிபோற் றேளிற் றூழ்செவிக் குழைகள்போற்றி
*கருணிலை யனைய மார்பிற் கலந்தமுப் புரிநூல் போற்றி. ()

மாண்டகு பசுங்க லாப மஞ்ஞையூர் பவனே போற்றி
யாண்டலைக் கொடியு யர்த்த வாறிரு புயனே போற்றி
காண்டகு செங்கேழ்க் கஞ்சக் கமலமென் பதத்தாய் போற்றி
பூண்டயங் கயில்வே லேந்தும் புநிதனே போற்றி போற்றி. ()

இருவினைத் தொடக்கை யன்பர்க் கிரித்தருளிறைவ போற்றி
விரிதரு முலகை மேனாண் விதித்திடு முதல்வ போற்றி
கருதரு முயிர்க்கு ளெல்லாங் கலந்துவாழ் விமல போற்றி
யருமறை முழங்குஞ் சீபூ ரணகிரிக் கதிப போற்றி. (சுக)

என்றெதிர் பழிச்சி நின்ற விருந்தவ னுடலங் கைதவந்
தின்றுநீ வேட்ட தென்னை யியம்புதி தருது மென்னக்
குன்றவர் மகள்வ லத்துக் குமரவேள் வினவ விந்தக்
குன்றடக் கிய தவத்துக் குறுமுனி பணிந்து கூறும். (சுஉ)

(வேறு.)

வேதமூ திகனி னுள்ளமெய்ப் பொருளின் விதிவிலக் கனைத் தையு மோதி, யேதமா மிருண்மா மலத்திடை யாழ்ந்த வென்னை யின்னருளினு லாண்டா, யாதலா லடைவ தின்றொரு குறையு மழகமர் தாலையம் பதியின், மேதையாம் பலவிம் மிதந்தனை வினவ வேண்டிய விருப்பமே யல்லால். (சுங)

திருவுளக் கருணை செய்தடி யேற்குத் தெளித்தரு ளென்றுமுக் குறும்போ, டிருண்மலப் பகையை யிரித்தவன் மீட்டு மிருங்கழ லடிமிசை வணங்க, மருமலர்க் கடப்ப மாலையோ னுளத்தின் மகிழ் வொடு தாலையம் பதியின், பொருவின்மான் மியங்க ளிவையிவை யெனத்தாழ் புரிசடை முனிவனுக் குரைத்தான். (சுச)

கருணி-மலே.

அகத்தியன்யாத்திரைச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-உ௱௫.

உ

# சிமாயூரச்சருக்கம்.

பொன்னவிர் சடிலச் சூதமா முனியைப் போற்றிநீ யருளிய
காதை, தன்னிலெம் மனது குதுகல மடைந்த தாயினு முமைமயி
லுருவ, மனனகர் தன்னி லகற்றின னென்ன வறைந்தனை யதன்
விரி யெமக்குப், பன்னுவீ ரென்ன நைமிசவனத்துப் பரவுநா சகர்க்
கவ னறைவான். (௧)

துண்டவெண் பிறையோ னடிதொழுந் தவத்திர் தொலைந்தவோர்
கற்பது றதன்முன், வெண்டிரு நீறு புனையுமெம் பரமன் மேனியு
முள்ளமுங் குணமுங், கொண்டதென் றிசைப்ப வொள்ளொளி
விரிக்குங் கோதிலா விரசிதக்குன்றி, னண்டர்நா யகனுஞ் சிவனு
மையோடு மணிமணி யாதனத் திருந்தான். (௨)

அரந்தையை யடியார்க் ககற்றருட் பரம னடிதொழக் காவதங்
கமழும், பெருந்துளி நறவு பிலிற்றிடுந் துளவப் பிணையலார் திரு
மறு மார்பன், முருந்துறழ் நகைவெண் பாரதி கேள்வன் மும்மத
வெள்ளிப வூர்தி, யருந்தவ முனிவர் சித்தர்சா ரணர்க ளந்தரத்
தெவரும்வந் தடைந்தார். (௩)

அதுலனும் பரம னவனியை யளித்த வமலையோ டினிதமர்ந் தரு
ளுஞ், சதுரது நோக்கிச் சங்கர சம்போ தாண்டவ சச்சிதா னந்த,
முதுமறை முடிவின் விளங்கிய விமல மூர்த்தியே முக்கணு னவனே,
நதிமதி சூடும் நம்பனே ஞான நகமகட் சமேத சிற் சுகனே. (௪)

அருவமா யுருவா யருவுரு வாய வாதியே வகத்திரு டறந்தோர்க்
குரியவா னந்த சோதியாம் பொருளே யுயர்குணக் குன்றமாம் பர
னே, வொருமையா மனத்துத் தூயவர் களிக்க வுமைமன மகிழவம்
பலத்தே, யிருமையு மளிக்கத் திருநடம் புரியு மீசனே யெனப்பல
துதித்தார். (௫)

சுரிகுழற் றுவர்வாய் முகமதி முருந்தின் றூநகைப் பாமகள் விளர்
ப்ப, விரகுள விச்சா தரருமெய் மறந்து விழித்தகண் ணிமைத்
திடா திருப்பக், குரலெனு மிசையே முதலவா யெழுங் குழகனு
ரிருகுழைக் கமுதாய்ப், புரிநரம் புளருந் திலவுயா ழிசைதும் புரு
வுநா ரதருமொத் திசைத்தார். (௬)

கருமுகி லொலிபோற் கறங்கிடு முழவுங் கலைமதி கிகர்த்தொளிர் சங்குங், கரமிரு வாறு சூரனும் பானு கம்பனும் வாய்கர மொத்து, பிருவிசும் புறைவோர் செவிகர முகிழ்ப்ப வெண்டிசா முகங்களு மதிரச், சிரமதை யுரக வேந்தனும் பனித்தல் செய்திடச் செழிப் புடனூர்த்தான். (எ)

பாடுவர் சிலர்பொற் பதமலர் சிரத்திற் பரிப்பவர் சிலர்பவ மகல, நாடுவர் சிலர்மெய்ப் புளகம தரும்ப நண்ணுவர் சிலர்சுக ஞானங், கூடுவர் சிலர்கைக் கொட்டியார்த் தெழுந்து குதிப்பவர் சிலர்மன முருகி, யாடுவர் சிலரிவ் வண்ணம தாக வாயின ரவையிடை மிடைந்தோர். (அ)

வாரமென் மேற்கொள் மனத்தின ராகி மாதவ ரெவருமங் கிருக்கு, நேரமுற் சாக மாமலர வல்கு னெகிழிடை வாள்விழிக் கமஞ்சூற், காரென மளகக் கனதனத் துவர்வாய்க் காரிகையுடன்பொழின் மேவு. மாரனைப் பொடித்தன் னேன்சதிக் கருள்செய் மால்விடை யவ்விளைங் தனனால். (௯)

வேங்கைபுன் னாகம் பாடலம் வகுளம் வேய்சுர புன்னைகர்ச் சூரங்
கோங்குமந் தாரை சண்பகம் பூகங் குராகடு வத்தியா லரசு
தேங்கம பூர மாதுளை யசோகு சிவந்திகூ விளைகுருக் கத்தி
திங்கனிப் பலவு கடம்பகில் காயா திலகமா மருதநா ரத்தை. (௰)

நாரிகே ளந்த மால்முள் ளிலவு நமையரிச் சந்தன மாத்தி, பாரிசா தம்வெண் ணொச்சிவேம் பாச்சா பாலைசெம் மரம்பனை தேவ, தாரமா விலிங்க மிலந்தைவெள் ளாத்தி தானழமுந் திரியொடு கொய்யா, பேரரை நாவல் கற்பக மழிஞ்சி பிதிரொளி சோதிநிந் திருணி. ()

முள்ளரை முருக்கு விளாமலை வேம்பு முள்ளிதா ளிப்பனை வாழை, கள்ளிணர் மதுக மோமைவெட் பாலை காட்டுவா ழைக்கரு நெல்லி, விள்ளரு மிருளிக் கொடியெலு மிச்சை விண்ணுயர்ந் திடு மருதாணி, யுள்ளம துவிக்கும் புன்குகிச் சிலியோ டோங்கெலு மிச்சைநெல் லியுமே. (௧௨)

கருந்துணர் துளசி குங்கும மேலங் கள்ளிதக் கோலநொச் சிலி
யுஞ், செருந்திவெள் ளெருக்கு துத்தியூ மத்தை *சேயதி மதுரகர்ப்
பூரம், புரந்தரற் கிளையோ னணிந்திடுந் துளசிப் பொலிவுறு சவேத
பத் திரியுந், திருந்திய லவங்கம் வச்சிரங் கோட்டந் திகழ்†வசு வாசி
மென் தகரம். (௧௩)

மல்லிகை சோதிக் கொடியொடு சிந்தில் மதுரவள் ளிக்கொடி
‡சூரல், துல்லிய மருவேர் முல்லைசம் பங்கி சோமவல் லிக்கொடி
குருவேர், ‖வல்லிகம் வயலை மாதவி யிரத்த வல்லிபர்ப் பாடகக்
கொடிநே, ரில்லென வுரைக்கும் வல்லிசா தகத்தி னிலதைவெள்
ளிலைக்கொடி நிறைந்து. (௧௪)

அரியின முழுது புரிமுறுக் கவிழ வலரரக் காம்பல்வெண் ணெய்
தல், யிருடும்§யென்று கண்டலர் மரைசே யிதழ்விரி முண்டகங்
குவளை, வரிசையி னலர்ந்து மழையெனப் பொழியு மதுவினுல் நிரம்
பிய வாவிக், கரிசுறு நிரைநீ ரோடைகால் கூவங் கனதடஞ் சுனைபல
வுளதால். (௧௫)

விண்டவா யெண்கு சூகரஞ் செந்நாய் மேதிகாட் டாமரை யுன்
னிப், புண்டரீ கங்கல் லானைசவ் வாதுப் பூனைகத் தாரிமா மிரு
கந், திண்டிற லுறுமை யானைவங் கடமை திரிமத வாரணஞ் சிறுத்
தை, ¶மண்டலி ஞாளி யாளியெய் முயல்மான் மன்னரேர் வராந்
திறற் கடுவன். (௧௬)

சக்கர வாகஞ் சசிநில வருந்துஞ் சகோரமன் றிற்சுக டார்ந்தை
குக்கில்பா ரத்து வாசநீர்க் கோழி கோகிலங் கூகைசிச் சிலிவெண்
கொக்குநா கணவா யனஞ்சில்ல் காடை கொடிமயூ ரம்புறு நாரை
மிக்குறு வானம் பாடிசார்த் தூலம் வியிறை கண்டபே ரண்டம். ()

தேவர்கண் முனிவ ரிருடிகாந் தருவர் சித்தர்விச் சாதரர் முதல
யாவரும் விண்ணு டுறையுமா னதம்விட் டிழிந்திவ ணுடுறு மரிய
மாவிரி கதிரான் முருகுல வியபூ மரைவிரிந் தரியொலி மழுங்கா
சேவுயர் கொடியோன் கங்கைபோ னென்னச் செப்பருந் தடம்பல
வுளவால். (௧௮)

---

*சே-சேரான்மரம். †வச்சிரம்-சதுரக்கள்ளி. ‡சூரல்-பிரம்பு.
‖வல்லிகம்-மிளகு. §என்று-சூரியன்.
¶மண்டலி-பூனை.

இத்தகை வாசத் தருபிரு கங்க ளிணர்க்கொடி செடிதடா கங்கள், சுத்தமிக் கெழுமென் சிறையுடைப் பறவைச் சாதிசா லங்களா னிறைந்து, புத்தியி லுயர்ந்த சேடன்வான் மீதி பூமின்று பூவை யுண் டாக்கும், வித்தகன் புகழும் கயிலேயின் மருங்கு விளங்குவ தோர்திருப் பழுவம். (கக)

கருமுகில் தவழக் காவிறன் சேவை கருதிவந் தடைந்தவ ரெவரு, முறைதரு வேத வொலியினும் பழிச்சி யுடன்வர னந்திமு ன்டப்ப, வரிய வுருவ மாறியுங் காணு வடிமுடி யுடையவெம் பரமன், விரிதரு புகழ்சுந் தரவுமை யொடுவெள் விடையினி லிவர் ந்துவந் தமர்ந்தான். (உ0)

கனிமுதிர்ந் தொழுகுங் கமழ்தரு செந்தேன் கரைபொரு நதி யெனப் பெருக, பனிமதி தவழ முயர்சினைப் பலவின் பலமதைப் பகடுடைக் கொண்டங், கனைவருங் காணக் கடுவனுந் தாவி யக்கரை மந்தியைச் சாரும், புனிதமா வனத்துப் புதுமையை நோக்கிப் புராரிதன் பொற்றொடிக் குரைப்பான். (உக)

(வேறு.) கிரனிரை.

மாத ரோதிகை சக்குவள் களரிவண் கணைக்கா
லோத தற்கிணை யின்மையி னுடையிற் பதியஞ்
சூதொ டுற்பலம் *வள்ளை †சங் கினை ‡வராற் சூழ்ந்து
சாத னன்னிவந் திறங்கின போனுமாற் §சதியே. (உஉ)

ஓதி-கூந்தல், கை-கரம், சக்கு-கண், வள்-காது, களரி-கழுத்து, கணைக்கால், தியம்-பாசை, சூது-தாமரை, உற்பலம்-நீலோற்பலம்.

கரிய மென்குழற் கலைமதி நிகர்க்குமொண் முகத்தா
யரிய நின்னிடைக் கொதுங்கியிவ் வனத்திடை யடைந்தே
பெரிய மும்மத வாரணங் கண்டலாற் பிறவா
வரியி னங்களெண் ணிலநிகழ் கின்றன வழிவாய் (உஙு)

வரிய மென்சிறைப் புள்ளின மதுவுணு மாலைக்
கரிய வண்குழற் கலைசொறு மறம்வளர் கரத்தா
§யரிய நின்னடைக் கஞ்சியிக் கானிடத் தடைந்தே
பெரிய மால்கயப் பிடியினங் கிரிதல்காண் பேதாய். (உச)

---

*வள்ளை-வள்ளையிலை, †சங்கு-சங்கு, ‡வரால்-மீன். §சதி-பார்வதி
§அரியமா-சூரியன்.

அன்ன மிட்டமென் றவ்வைசொன் மேற்கொளு மறிஞர்
பன்ன ருஞ்சிவ னடியரோ டுறுவபோற் பரிந்து
கொன்ன விற்கொடி தானுமுன் னினங்களைக் கூவி
பின்ன ருண்டிகொள் பெருமையைக் காணுதி பேதாய். (உரு)

படியி லுள்ளன யாவையும் பயந்தநுண் ணிடையாய்
கடிய மின்குழற் காடென விருண்டவிக் கானில்
கெடிகொள் சிங்கமுங் கிரிசரத் தந்தியுங் கெழுமி
கொடிய தங்களுட் பகையின்றிக் குலவுதல் குறியாய். (உசு)

(சிலேடை.)

வடம ணிந்துசூர் முதலறக் காய்ந்தொளிர் வள்ளிக்
கொடியி னோடுவே லேந்திவே டுவருடன் கூடிக்
கடிம ணஞ்செயப் பெறுதலிற் கௌரியிக் கானந்
திடமி குந்தநின் னிளையசே யனையது தெரிவாய். (உஎ)

முருகக்கடவுளுக்கு (இ-ள்). வடமணிந்து - முத்தாரந்தரித்து, சூர்முதல் அறக்காய்ந்து-சூரபதுமன்முதலிய அசுரரைமிகக்கோபித்து, ஒளிர்-பிரகாசிக்கும், வள்ளிக்கொடியோடு-வள்ளிநாச்சியாருடன், வேல்ஏந்தி - வேலாயுதத்தைத்தாங்கி, வேடுவருடன்கூடி-மறவர்குலத்திற்சேர்ந்து, கடிமணஞ்செயப்பெறலின்-நல்லவிவாகம்செய்யப்படுவதால்.

வனத்திற்கு (இ-ள்.) வடம்அணிந்து, ஆலமரங்களைஉடைத்தாகி-சூர், அச்சத்தை-முதல்அற,அடியோடுகெடுத்து-ஒளிர்,விளங்காநின்ற-வள்ளிக்கொடியினோடு, வள்ளிக்கொடிகளுடன்-வேல்ஏந்தி, வேலமரங்களைத்தாங்கி-வேடுவர் மறவர்கள்-உடன்கூடி, ஒன்றுசேர்ந்து-கடிமணஞ்செயப்பெறுதலின், நல்ல வாசனையைவீசப்பெற்றிருத்தலால், கௌரி-பார்வதி, இக்கானம்-இவ்வனம், திடமிகுந்த-வல்லமைமிகுந்த, நின்-உன்னுடைய, இளையசேயனை-சுப்பிரமணியனை, அனையது-ஒத்தது, தெரிவாய்-காண்பாய் என்க.

சக்க ரங்கொடு பாற்கவி பரித்துகோ தண்டஞ்
சிக்கெ னத்தரித் தத்தியைக் காத்துகட் செவிதன்
பக்க மேய்ந்தொளிர் பரிதியை மறைத்தலாற் பழுவம்
மிக்க நின்னருஞ் சோதர னனையகாண் மின்னே. (உஅ)

விட்டுணுவுக்கு (இ-ள்.) சக்கரம்கொண்டு - சக்கராயுதத்தைக் கொண்டு, பாற்கவிபரித்து - இலக்குமியைத்தாங்கி, கோதண்டம் சிக்கெனத்தரித்து, வில்லைக்கொண்டு - அத்தியைக்காத்து, கஜேந்திரனைரக்ஷித்து-கட்செவிதன் பக்கம்ஏய்ந்து, பாம்புகளைத் தனதிருபுறத்திலுந்தரித்து, ஒளிர்பரிதியை-பிரகாசிக்குஞ்சூரியனை, மறைத்தலால்-மறையப்படுத்தியதால்,

வந்திற்கு (இ-ள்.) சக்கரம்கொடு-சக்கரவாகப்புள்ளைக்கொண்டு, பால்-கடமையையும், கவி-குரங்குகளையும், பரித்து-தாங்கி, கோ-இலந்தைமரங்களையும், தண்டம்-ஊன்றுகோல்களையும், தரித்து-உடைத்தாகி, அத்தியை-அத்திமரங்களை, கீர்த்து-விருத்திசெய்து, கட்செவி-பாம்புகளை, தன்பக்கம்எய்ந்து-தனது பக்கங்களிற்பொருந்தி, ஒளிர்பரிதியை-காந்திபொருந்திய சூரியகிரணத்தை, மறைத்தலால்-மறையப்படுத்துவதால், பழுவம்-இந்தவனம், மிக்க-மேன்மையுடைய, நின்-உனது, சோதரன்-விட்டுணுவை, அனைய-ஒத்தது, காண்பாராய்-மின்னே-பெண்ணே என்க.

தன்னிகர்ச்சுரும் பினஞ்சுதி பாடிடத் தடாரி
நன்ன யத்துடன் வானர முழக்கிட நாரை
பன்னு *பாணொலி செயக்குயில் பண்ணிசை பயிற்ற
வன்ன மாமயி லாடுவ காணுதி வனிதாய். (உ௯)

†என்ற ளாவிய வேயின தும்பரி னேறி
நின்று வானரங் கூத்தரி னாடிடு விருத்தஞ்
சென்று சாரிகைக் குயில்தெரிந் துளமகிழ் திளைக்கக்
கொன்றை பொன்சொரிந் திடுதிறங் காணுதி கோதாய். (௩௰)

மாத னச்சிறு மெல்லிடை மெய்க்கழை மானே
சாத னங்களை யறிந்தவா வொழித்தருஞ் சலச
வாத னத்திருந் தைம்பொறிப் புலன்களை யடக்கித்
தீதி னம்பதம் விரும்பிய முனிவரைத் தெரிவாய். (௩௧)

கதிர்த்த பைந்தொடைக் கலையினங் கவரிக ளிரட்ட
வதிர்க்கு மோரிக ளருகிருந் தரசிய லறைய
மதத்த யானைக ளேவலிற் பற்பல வதியக்
கதத்த வெம்புலி யரசுசெய் வைபவங் காணாய். (௩௨)

சூழ்த்த மென்கறிச் சோதிமா விருக்கத்தைச் சூழ்ந்து
பூத்த முல்லையின் புதரின்கீ ழுறங்கிடு மெண்கின்
றோற்ற முன்பிரா வணனிர சிதக்கிரி தூக்கச்
சேர்த்த ணைத்தவன் றிறத்தினை நிகர்த்ததே யிழையே. (௩௩)

கோல மீக்கொளுங் கோற்றொடைத் தேவருக் குணவு
சால வேமணி யடித்தருத் தடியவர் சதுர்போல்
மேமெல லாந்திருத் தேவுரு மேவருட் சேதா
சீல மார்கள மணியசைத் திரைகொள றேர்வாய். (௩௪)

கான நல்லிசை பயிற்றிவந் திரந்தவர் களிக்க
வூன மம்மலர்த் தளித்திடு மறிவுளோ ரனைய
தேனி னங்கடே னருந்திடச் செறிந்தவான் சினைக
டான லர்ந்தளித் திடுதிறங் காணுதி தையால். (௩௫)

---

* பாணொலி-பாண்வாத்தியம். † என்று-சூரியன்.

சலைவ ளர்த்திடு மதியுட னேய்ந்துகண் டுதி
நிலைபெ றச்செயுஞ் சினையுடைச் சண்பக நிறைந்த
வலையி லாமல ரரும்பியு மரியினுக் குதவா
நிலையெ னுங்குணத் தவனையொத் திருந்தனே ரிழையே. (௩௬)

மற்ற தொப்பிலா வடிவுடை மங்கைமா மரலம்
பொற்ப மைந்தலர் பூத்தநிற் கின்றவப் பொலிவு
கற்ப மைந்தொளிர் மகளிர்தங் கணவரைத் தழுவி
யற்ப மைச்சிறு மகவையீன் றணைத்ததொத் தனவால். (௩௭)

என்று தேனின மதுநுகர்ந் தரியபா ணிசைக்குங்
கொன்றை மாமலர்த் தொடையலம் புயத்தினிற் குலவும்
வென்றி சேரிறை விளங்கிழை யுமைக்குரைத் திட்ட
பொன்றி லாவளம் பொருந்திய பொதும்பரி னுப்பண். (௩௮)

(வேறு.)

ஆதி சேடன துச்சி யின்மிசை யத்தி வார மிருந்தி வெண்
சோதி சேர்படி கத்த மைத்த தளத்த தாய்சுடர் தோன்றும்
பீத கத்தக டிட்டு யர்த்திய பீட மைந்தகு றட்டினில்
வீதி யாய்ப்பல கால்க ளூட்டி விளங்கு போதிகை வைத்தரோ. ()

செம்மணித்திர ளுத்திரந்தவர் செய்தமைத்த கொடுங்கைமேல்
மைம்மலிந்திடு மணிபரப்பிவின் மறைவுசெய்து புறத்தினில்
வெம்மையின்றிய விந்துகாந்த வியன்சுவர்ப்படி கப்படி
பைம்மையிற்பொலி மரகதத்தில் பதித்தசாளர பத்தியே. (௪௰)

சிந்துரக்கரி யாளிவல்லுளி சியநற்பரி யஞ்சுகஞ்
சந்தமென்னடை யன்னமாமயில் தங்குதூண்வரி சைக்குளே
விந்தையாம்படி கத்தியற்றி விளங்குமொண்சுடர் சாலமோ
நந்துறுதொளி வீசிகள்ளிரு ளூடுறும லகற்றுமே. (௪௧)

எண்டிசைக்கணு மேயிதற்கிணை யில்லையென்றுரை செய்யுமம்
மண்டபத்தின் மருங்குமைவிழி மாதிரக்குய மின்மொழித்
தொண்டையங்கனி யொத்தவாயிதழ் சுந்தரத்துமை மாதுட
னண்டர்சூழ்தர வாலுகைக்குமெ மண்ணலூர்வமோ டண்மியே. ()

வேதனென்ன விளங்கிவாழும் விரிஞ்சனு மதன்புகழ்
நீதியாக வுரைக்கிலோநெடு நாளினும்முடி யாதென
வோதவுள்ளன மண்டபத்தெழி லோங்கன்மாயகள் காணவே
சாதலோடு பிறத்தலின்றிய சங்கரன்றெரி வித்தரோ. (௪௩)

நேரில்லென வேயொளிர்ந்திடு நீளிரத்தின மண்டபத்
தாரமென்மலர் சேகளிதற்ப மருங்கிணங்கி யதன்மிசை
காரிருட்கதி ரோடுசேர்ந்து கலந்திருந்தலை மானவே
வாரணப்பொரு ளாகுமையனெம் மம்மையோடு மமர்ந்தனன். (சச)

வம்புலாமலர் மாலைவேய்மலர் மாதரோரிரு பாலினு
மம்மவென்பணி செய்கவென்றவ ராட்டிடப்பெறு மற்புதக்
கொம்மைவெம்முலைக் கோதையோடு குலாவிநின்று களித்திடு
மெம்மையாளுடை யீசனூர்வ மியப்பலான திறத்தவோ. (சரு)

அவ்வயின்னுமை யண்டரண்ட மனைத்துமாகி நிறைந்திடு
மெவ்வமில்லரு ளீசனம்புய விணையடிப்பத மேத்தியே
செவ்விதாயெனை யாளுஞ்சந்திர சேகராவெ னுளத்துளே
யிவ்வயின்னொரு சங்கைநேர்ந்த தியம்புவேனது கேட்டியால். (சசு)

சந்ததம்பொழி வண்டராற்று தருக்களோங்கு வனத்தினிற்
சிந்துரம்புலி யாளியாதி செழித்தமாமிரு கங்களு
மிந்துகாந்திய ருந்துபுள்ளெழு வாயபக்கி யினங்களும்
விந்தையாக விளங்கவென்னுரை விமலவென்றடி தாழ்ந்தனள். ( )

கனிமிகுஞ்சுவை யனையமென்மொழி காரிருட்குழன் மாதுமை
வினவுரைக்கெதி ருரைகளின்றி விளங்குமுப்பொரு ளுண்மையை
யனகமாம்பரி பூரணச்சுக மார்ந்தயிக்கிய மேவிடச்
சனகனாதிய ருக்குரைத்தவர் தாமடைந்தனர் யோகமே. (சஅ)

(வேறு.)

அந்தச் செய்தியை யமிழ்கரும் பனையசொன் னகிலக்
கொந்து வார்குழற் கொடியிடை யறிந்தவ ணிருந்த
விந்த மாமென விளங்குவெள் விடையினி லேறிச்
சந்த மாவனச் சிறப்பினைக் கண்டிடச் சார்ந்தாள். (சகூ)

ஆசி லாவமு தனையமென் மொழிகொளு மையை
நேச மாகிய விறைவனை நீங்கிமா மலரின்
வாச மேவிய வாவியின் றடங்கரை மருங்கு
காசி லாவெறு கண்கவ ருன்னதங் காண்பாள். (ருய)

வாச மார்தரு நீழலில் வதியுமிந் திரன்முன்
காசு லாமலர்க் கணிகைய ராடல்போற் சிறகி
னோசை *கோவென வொலித்திடக் கோமள மஞ்ஞை
வீசி யாடவும் வண்டிசை பாடவும் வியலை. (ருக)

* கோ-ஒலிக்குறிப்பு.

கண்டு கேட்டுடல் கம்பித மின்றிமிக் கரிய
திண்டி றற்படை யவுணனு மயிடனைச் செற்ற
கண்டெ ணும்மொழிக் கனியிதழ்க் கௌரியுண் மகிழ்வு
கொண்டு பற்பல கடிகையீங் கிடக்குறித் திருந்தாள். (௫௨)

கடம திற்பல விலங்கினைக் கண்டுகண் களிக்கச்
சடமெ லாம்வரிப் பொன்னெனத் தசைகெழும் பேழ்வா
யுடைய வெம்புலி யொன்றவ னுலவிட வூழா
விடப தேவனு மினிப்பொடு நோக்கின னிருந்தான். (௫௩)

கங்கை வார்சடைக் கண்ணுதல் மான்மழு தரித்த
செங்கை யார்சிரத் தெரியலந் தோளுடைத் தேவன்
துங்க மோனமிட் டையையொரீஇத் தூகளறு மோங்கன்
மங்கை யுந்திற லானையு மருங்கினிற் காணான். (௫௪)

இவர்ந்து செல்லெழி லிமிலுடை விடையொடு மெமது
பவந்த னைத்தெறும் பனிமொழி யின்மையும் பரம
னுவந்து நோக்கியுற் றதையுணர்ந் தொருவலா னுள்ளங்
கவர்ந்தெ ழுஞ்சின மீக்கொளக் கவலடைந் தன்றே. (௫௫)

அன்று நீங்கிய விருவர்தஞ் செருக்கடங் கிடவோ
வின்று தம்முரு விகத்துளோர் கண்டிய வெணியோ
குன்றெ னுந்தனத் துமையொடு குண்டையைத் துறந்து
துன்று நாட்சில தனித்திருந் துறையவோ தூயோன். (௫௬)

தூய மண்டபந் தனைவிடுத் தவனுறுந் துறவோர்
மேய விண்ணவர் கணத்தொடும் மேன்மைசார் கைலை
யாய மாமலை யமருமத் தாணியி னுப்ப
ணேயி னானவ னேக்கறி வாரெவ ரேயோ. (௫௭)

காத னீங்கலு மவ்வன நல்வளங் குறைந்து
பாத வங்கனின் றிடுதிறம் பவந்தனைக் கெடுத்த
மேதை யோர்களுறு மூழ்வழிக் காமத்தான் மெலிந்து
*போது மாதராற் பொலிவழிந் திருத்தல்போன் றனவால். ()

இன்ன வாறவண் வளமெலா மொழிந்துறா விழந்த
கன்னி போன்மெனக் கண்ணெதிர் தோன்றுமக் கூடத்தைக்
கன்னி யாமெம தன்னையு நந்தியுங் கண்டி
தென்ன காரண மீசனா லறிகுவ மென்னா. (௫௯)

* போதல்-வரல்.

பரிவி னோடுமுன் னிருந்துழி யடைந்தெழிற் பரமன்
கரும மிக்குறு தவிசினி லிருந்திடக் காணார்
வெருவி யுள்ளநெக் குருகுபு வோடியே விரைவோ
டருவி பாய்தரு வெள்ளியங் குன்றினை யடைந்தார். (௬௰)

ஆங்க ணுற்றழ லாடியி னடியிணை யணைந்து
நீங்கு பார்வையி னடைந்தென நிறைமகிழ் வெய்திப்
பூங்கு ழற்பக வதியுநந் தியும்பதப் பூசை
தீங்கிலா தியற் றிடவவர்க் கிறைவனுந் தெரிப்பான். (௬௧)

(வேறு.)

முன்னை யூழ லப்ப வென்னை நீவிர் நீங்கி மூசுவண்
டின்னி சைப்ப யிற்று சோலை யெய்தி மஞ்ஞை புலிநடங்
தன்னை நோக்கி யெனைம றந்த தன்மையா லடற்சகத்
தன்ன மஞ்ஞை யுந்*த ரக்கு மாக வென்ற றைந்தனன். (௬௨)

ஆக வென்ற றைந்த சாப மன்று தன்செ விப்படச்
சோக மோடி ருந்து நெஞ்சு துண்ணெ னத்த ளர்ந்துமெய்
யேக நாத னடியில் வீழ்ந்தி றைஞ்சி யெந்தை யிப்பிழை
யேகு மாற ருட்க டைக்க ணித்தி யென்றி சைப்பரால். (௬௩)

†கோணி யாமை கோடு மோடு மாக மீது கொண்டுளாய்
‡வேணி $வேணி யிற்ற ரித்து வேணி யாந்த லத்துளாய்
காண் முன்னி னன்ப ருக்கோர் §காணமீந்த ¶காணியா
வாண வத்தி னால கந்தை கொண்ட வர்க்க கன்றுளாய். (௬௪)

சிராத ராசு ராசு ராதி பேர்தொ ழுந்தி கம்பரா
சராச ராவி புதவி ராச சர்வ லோக சரணியா
பராப ரா‖சு ராரி யோடு பாரி லாடு பண்ணவா
வராக ராக ராக வர்ந்த பாலன் மீட்ட ளித்தவா. (௬௫)

தசமு கத்த னுய்ய வன்பு தந்த வெங்க டானுவே
கசமு கத்த ரக்க னைக்க னன்று ரித்த கர்த்தனே
யசமு கித்த னடல்கெ டுத்த வைய னார்த /மையனே
திசைமு கத்து ளோர்கள் சேவை செய்ய நின்ற தேவனே. (௬

---

* தரக்கு-புலி. † கோணி-பன்றி. ‡ வேணி-கங்கை. $ வேணி-ஆகாயம். அது-சிதம்பரம். § காணம்-பொன். ¶ காணி-தோல். ‖ சுராரி-பேய். / ஐயன்-ஐயனாரையன்.

காமன் மெய்பொ டித்த நீல கந்த ராச வுந்தரா
*சேமன் வேணி மீது சோம சேக ராக்ரு பாகரா
வேமன் விழ வன்றுதைத்த வெம்ப*ராசி தம்பரா
மாமன் வேள்வி யைத்த விர்த்த †மாத ராசி ராதரா. (சுஎ)

(வேறு.)

என்றுபல துதிகள்புகன் றிமையமலை மானுமெழி லானு மீட்டு, மன்றினடித் திடுபாத மலர்த்துணையை வழுத்தியுனை மறந்து காவிற், சென்றபெரும் பிழைபதனைத் தீர்த்தடியே முய்யும்வகை செய்ய வேண்டு, மென்றிரந்த விருவருக்கு மெம்பெருமான் கனிவொடிவை யியம்பலுற்றான். (சுஅ)

(வேறு.)

பாவிய வொலிசேர் திரையிக வாத பரவைசூழ் மாநில மதனி
லேவரும் போற்றப் பிரளயந் தனிலு மிகலுட னழிவிலா தோங்குந்
தாவிலாக் காஞ்சிக் காசுகத் திசையிற் றயங்குமோ ரைங்குரோசத்திற்
‡கேவல முதவு கயிலையின் மேலாக் கிளர்ந்திடு மொருதல முளதால்.

குடக்கினி தெல்லை குறிக்கிற்பஞ் சீசன் கோயிலார் காவிரிப் பாகை
வடக்கினிற் புந்நா கீச்சுர நாதன் வாழ்தரு நென்மலி நகராங்
கடக்கரு மணிகண் டீசன்மாற் பேறு க்ருதரும் பூருவத் திக்கி
னிடக்கிறென் கீழ்ப்பா லின்வரா கேச மேய்ந்திடுந் தாமீலம் பதியே.

இயம்புமித் தலத்தி னிடைமுனி வரர்க ளேத்துமோர் நகருளதனிற், சுயம்பிர காசத் தூய்மையாய் விளங்குஞ் சோதிலிங் கத்தினையடைந்து, நயப்பெறச் சபரி செய்யினுஞ் சாப நையுமென் றெரிமழுமானுங், §கயங்§தரக் ¶கதளும் புனைந்திடு பரமன் கனிவொடு கழறினனன்றே. (எக)

அகனிலத் திருளை யகற்றுசெங் கிரண வாதவ னெயிறுகப் புடைத்துக், ககபதி முதலோர் பாறிடத் தண்ணென் கதிரவ னுடலினைத் தேய்த்தோன், புகலுறு சாபம் பொன்னவிர் திதலைப் பொம்மல்வெம் முலையுமை யேற்று, சகமதி லிணையிலாதொளிர் புனித தாலையும் பதியினைச் சார்ந்தாள். (எஉ)

---

* சே-இகப்பு. † மாது-கங்கையும், அரா-பாம்பையும், சிராதரா-சிரத்தில்தரித்தவனே. ‡ கேவலம்-மோட்சம். § கயம்-யானை. § தாக்கு-புலி. ¶ அதள்-தோல்.

அயில்விழி யுமையு மயிலுரு வாய்முன் னறிவொழிந் தகனில வை
ப்பிற், பயில்பற வைகள்போற் சேவல்செம் போத்துப் பருந்தரி நா
கண வாய்ப்புட், குயின்முத லாய குடிஞையி னாடு கூடிநீண் முழை
யுடைக் குன்று, வெயில்விரி யிந்து காந்தமா மேடை விளங்குசெய்
குன்றெலா முலவி. (௭௩)

புரிமுறுக் கவிழ்ந்து தேறல்வார்ந் திழியும் புதுமலர்ப் பொதுளல்
கண் ணூற்று, வரியின முரன்று பூந்துகள் குடைந்து வருமது நுகர்
ந்துளங் களிக்கும், விரைகமழ்ந் தெங்கும் வீசுமென் மலர்கள் விர
விய பற்பல தருக்கள், வரிசைய தாக நிறைந்துவிண் ணோங்கி வய
ங்கிய வுத்தியா னத்தும். (௭௪)

எரிகதிர்ப் பசும்பொ னிமைத்திடு நாஞ்சி லெழிலெ துலங் கெயிற்சிக
ரத்தும், வரிசையாய்ப் பொறிக ணிறைந்துசே ணோங்கு மணிநெ
டுங் கோபுரத் தலத்தும், மரகதக் கால்க ணிறுவிவான் மறைக்கு
மண்டபத் துச்சியி னிடத்து, மிரவலர் தம்மை விளித்தல்போ
லாட்டுங் கு மெழிற்கொடி மீதினு மிருந்து. (௭௫)

குடவளை யினங்கள் வயாவுட னீன்ற குளிர்கதிர் விசும்பித் திலத்
தை, மடவனப் பேடை தாம்பெறு மண்ட மாமென மகிழ்ந்தடை
கிடக்குந், திடமுள கமுகின் மிடறொடித் தெழுந்த தீங்குலைத் திர
டனை வளைக்கு, மடைவுகொ டொறடாங் கதிருடைச் செந்நெ லரு
ம்புலத் தாருண வயின்று. (௭௬)

உறைகழித் தொளிரு மிரத்தினத் தூணி னொளிவிரி கற்றையங்
கதிருங், கறையிலா வெண்சாந் தணிந்துமித் திகையின் கணம்பொதி
கிரணமு மொருங்கே, நிறைதலாற் பகலு மெல்லுமாய்த் தறியா
நீண்மணி மாளிகை யும்பர், சிறகினை விரித்து மகிழ்வொடு நடனஞ்
செய்தணி வீதியிற் றிரிந்து. (௭௭)

கழனியுட் புகுந்தங் குறுவலிப் பகட்டேர் கடவிவன் கருநிற
மள்ள, ருழுதொலி யுரப்பால் வெரீஇயெழுந் தும்ப ருடுசெல் பறவை
களோடு, தழையமென் சிறையை விரித்தடித் தசைத்துத் தாவியே
விசையுடன் சென்று, மிழைமுகி றவழு மணிக்கொடி யணமந்த மா
ளிகை மீதெலா மமரும். (௭௮)

இன்னணம் பலநா ளெய்திய வுருவிற் கேற்பவெங் கெங்கணு
முழன்று, முன்னவன் மொழிந்த சாபமு மூலப்ப முகில்வரக் களிக்
குமா மஞ்ஞை, பின்னரோர் பகலிற் பவப்பிணி யொழிக்கும் பிரச
மா மலர்ச்சிவ கங்கை, தன்னைநேர்ந் தாணுக் தருக்குட னாடித் தண்
புன லருந்திய தன்றே. (௭௯)

அருந்துமவ் வளவிற் பண்டைய வறிவங் கணுகிடத் தான்செய்
முற் பிழையால், விரிந்திடு தோகை மஞ்ஞையாய் விமலன் விதித்த
துமித் திருப்பதியிற், பொருந்திய சிவலிங் கத்தினைப் பூசை புரிந்தி
டிற் றீர்ந்திடு மென்னாக், கரைந்தவா சகமு முணர்ந்தறி வுருவாய்க்
கம்பித மற்றிருந் ததுவே. (௮௰)

தரையினிற் புனித மாகுமக் கங்கை தனையொரீஇ விமலனைக் கா
ணைக், கரையற வெழுந்த வன்புமுன் னீர்ப்பக் கட்புன லாறுபின்
றள்ளத், துரிசறு பனைசைத் தொன்னகர் முழுதுந் திருவியெய்
வேர்த்துடல் வெதும்பி, இரைகொளா தேங்கி யிருந்துபின் சோதி
யிலிங்கமங் கிருத்தல்கண் டதுவே. (௮௧)

கண்டதுந் தாயைக் கண்டசேய் போலக் கரையிலா தெழுந்தபே
ருவகை, மண்டிடத் தணந்த காதன்மீக் கூர மகிழ்வுடன் சிறகராற்
றழுவிக், கொண்டுடல் புளகித் துளத்தினில் யாருங் குறித்திடா
திருவருக் கரிய, வண்டர்நா யகனை யன்புடன் பூசை யாற்றிடக் கரு
திய தன்றே. (௮௨)

கரையிறந் தெழுந்த வன்பெனுந் திருமஞ் சனத்தினாற் கவின்பெற
வாட்டிப், புரையிலா தொளிருந் தத்துவ மலரைப் புனைந்துயி ரோடு
நல் லறிவை, விரைநறுந் தூப தீபமாய்க் காட்டி விண்ணென விள
ங்குமான் மாவை, யுரைதருந் தூய வமுதமா யருத்தி யுளமகிழ்ந்
திருந்திடு மேல்லை. (௮௩)

மாதையோர் பாக மறைத்தவ னருளால் மயிலுரு வாஞ்சட மக
ன்று, தீதிலா விருளிற் றெரிதரு மின்னிற் றேசுமிக் கிலங்கெழி
லமைந்த, மாதரு வடைந்து மன்னுயிர்க் குயிராய் மருவுமெய்ப் பர
மனா ரிரண்டு, பாததா மரையைச் செந்துவர் வாயாற் பழிச்சுத றொ
டங்கின ளன்றே. (௮௪)

ஆதியே யண்ட மனைத்துமா யிலகு மமலனே யிருவருக் கரிய, சோதியே பிரச முமிழ்தரு கொன்றைத் தொங்கலார் மௌலியே யிணையி, னீதியே சனக னாதியர் தமக்கு நிருமலப் பொருடெரித் திடுமே, னாதியே யடியா ரிருண்மல வலியை நலிவுசெய் ஞானவின் மணியே. (அ௫)

பலபலா கமத்தின் படியருச் சனையான் பண்ணுமா றறிந்திலேன் பொன்னம், பலதலா *தலத்தான் முயலகன் கர்வம் பாறிட மிதித் தருள் பரனே, பல†சிலா தலமாய்ப் ‡பட்டமங் கையி$னாற் படுமியக் கியர்க்கருள் புரிந்து, பலபலா தவனுக் குதிர்ந்திட வறைந்த பரம னே போற்றிபோற் றியவே. (அ௬)

விண்ணவர் முனிவர் சித்தர்யோ கியரும் விரும்பியுன் னடியிணை நீழ, லண்ணுமா றெண்ணித் துறுகலே போல நாளுமிந் தியங்களை யொடுக்கிப், பண்ணருந் தவஞ்செய் துணைவொழித் திருந்தும் பாகவ னிடையினி திருந்தாங், கண்ணுறக் காண்டற் கரியவெம் பரனே காட்சிதந் தருளெனத் துதித்தாள். (அ௭)

(வேறு.)

பங்கய மெல்லடி பைந்தொடி பாரக்
கொங்கை யுருத்திரை கூறுரை கேளா
திங்களோ டாத்தி செழுந்துணர் கொன்றை
கங்கை தரித்தருள் கர்த்த னுவந்து. (அஅ)

மான்மழு வேந்து மலர்க்கையு மார்பில்
வான்மதி போலும் வயங்கு முனூலுந்
தான்பொலி வெய்த தயாபர னான்மேல்
வான்மலை மங்கை மகிழ்ந்திட வந்தான். (அ௯)

இன்னமு தங்கனி யின்சுவை யாவும்
பின்னிடு மாறுரை பேசிடு மின்னே
கொன்னவி லுன்றுதி கொண்டு களித்தே
னென்னவு னெண்ணி மிசைத்திடு கென்றான். (௯௰)

---

* தலத்தால்-உள்ளங்காலால். † சிலாதலம்-பாறை. ‡ பட்டமங்கை ஓர் ஊர்.
$ ஆல்-ஆலமரத்தின்கீழ்.

தீன தயாபர ளுகிய தேவன்
கானமர் மாமலர் சாற்றணை தாழா
தேனமர் தாரணி தேங்குழன் மாது
மானதம் யாவும் வருத்துரை செய்வாள். (சுக)

வாஞ்சைசயி னும்பர் வழுத்திடு சீர்சால்
காஞ்சியின் மாடு கவின்பெற லாலிந்
நாஞ்சி லெயிற்பெறு நகணிர விலாச
காஞ்சி யெனப்பெயர் கழறுதல் வேண்டும். (சுஉ)

இத்தல மீதிலெ ளுடைமர் வுற்றுப்
பத்திமை யோடு பழிச்சுனர் தங்கட்
குத்தம நல்வர மொன்றருள் செய்ய
நத்திய வென்மன நல்குதி யென்ருள். (சுங)

மையொளிர் கூந்தன் மதர்த்த செழுங்க
ணையைநீ யுன்னிய வாறருள் செய்தோம்
மெய்யழ கோடு விளங்கலி னிற்குத்
தையல் சௌந்தரி யென்பெயர் தந்தோம். (சுச)

என்றுமு னம்மை யிகந்திடு மஞ்ஞை
யொன்றுட னேக்கி யுருத்திர ளுத
*னென்றுறழ் சோதி யிலிங்கம தாடே
யொன்றி யமர்ந்தினி துற்றன னன்றே. (சுரு)

கந்தர மென்குழல் கண்டெனு மின்சொற்
செந்துவர் வாயுமை தேவி களித்தே
யந்தி நிறத்தழ லாடி யிடத்தின்
மைந்துற மன்னி வதிந்தன ண்மாதோ. (சுசா)

எழுத்து வருத்தனை.

ஒருபொருள்பயப்ப தோர்சொல்கூறி யதனி லோவ்வோ
ரெழுத்து நீக்க வெவ்வேறு பொருள் பயப்பது.

(வேறு.)

தால மாபுரித் தலத்தினிற் ருபதர் வாழுஞ்
சீல மேவிய கயிலையிற் றெரிசித்த வளவி
லால மார்களக் கண்டனு மைம்முக னிடத்துக்
கோல மாதுமை கொண்டது கைவகை யுவகை. (சுஎ)

தாலமாபுரியில் கொண்டது, கை-பக்கம்.
கயிலையில் கொண்டது, வகை-பிரிவு.
தெரிசித்தவளவில் கொண்டது, உவகை-சந்தோஷம்.

* என்று-சூரியன்.

(வேறு).

தெரிந்திடும் யரலவக்கரத் துயிர்தாஞ் சேர்ந்துமென் மொழிமுதலாக, வருந்திற மின்றி யுயிரொடு மருவி வருதல்போ லுமையுளத்தீசன், பிரிந்திடா திருந்துந் தற்செய லொன்றும் பிறங்கிலா டாலமாநகரின், மருந்தன மொழிசுந் தரியுமை யரன்பால் மருவியெவ் வுயிர்க்குமீன் றனள். (௯௮)

ஐயவெம் பரம னோக்கினுற் கெண்டி யங்கமின் றெழுந்தவைந்திருக்கள், வெய்யவ னெழுங்கீழ்த் திசையினிற் கமுகு மேற்றிசைப்பாளையந் தாழை, வையகந் துதிதென் றிசையில்கச் சூரம் வடக்கினிற் பனையிவ ணைப்பண், டெய்யமார் தாலிப் பனையுமாய்ச் செழித்துத் தோன்றிமிக் குயர்ந்தன வன்றே. (௯௯)

சந்தமார் களபத் தனவுமை மயிலாஞ் சடத்தினிற் றோன்றிவானோங்கி, வந்துள கமுகு தெங்குவா னவர்க்கு வண்பய னுதவியேமற்றைச், செந்திரு பிதிர்தே வதைக்குரித் தான செழும்பல னளித்திடு சிறப்பாற், சந்தத மிமையோர் வந்துவந் திறைஞ்சுந் தகுதிபெற்றிருந்தன மாதோ. (௱)

அத்தரு பஞ்ச தாலமா விருக்கத் தடியினி லன்னமென் னடையுந், தத்தைபோன் மொழியும் பொற்றொடிக் கரமுந் தரித்தசுந் தரியுமை யோடும், நத்தணி குழையைத் தரித்தமா யூர நாதனு மினிதமர்ந் தடியார், பத்தியோ டேத்திப் பணிந்திட வவர்க்குப் பயனளித் திருந்தன னன்றே. (௱௧)

(வேறு).

எழிலா ருமைமஞ் ஞையினுருவா யிறைவன் றனைப்பூ சித்ததனு
லழலா டியைமா யூரேச னுமென் றறைவ ரப்பதியை
யிழையா ரிறைவி மயிலுடலி லெழுந்த பனைக ளுறைவதனுல்
வழுவில் தால புரமெனவே வகுப்பா ருலகில் வடசொல்லால். (௱௨

பொன்னார் திதலைப் பூண்முலையாள் புகழ்சேர் விமலைப் பூசனைசெ
யென்னு யகனை யருச்சித்தே யேத்தித் தொழுதோ ரெஞ்ஞான்றுந்
துன்னார்வலியு நமன்வலியுந் தொலைத்துத் துயர்தீர்ந் திந்நிலத்தின்
மன்னும் வாழ்வ ரெனச்சூதன் முனிவா சிகளுக் குரைத்தனனுல். ()

ஸ்ரீமாயூரச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-ஈடுஅ.

உ

# திருப்புலிச்சருக்கம்.

ஓது மஞ்ஞையி னுண்மைச் சரிதையை
வேத யாமெனக் கேட்டு வியந்தனம்
சூத ரேபுலி யின்கதை சொல்லென
மாத வர்க்கு மனமகிழ்ந் தோதுவான். (௧)

ஆர ணப்பொரு ளாய்ந்தவ ருள்விடை
நார ணிக்கிறை வன்சாப நல்கிய
கார ணத்திற் கடும்புலி யாகியித்
தார ணிக்கண் டருக்குட னுற்றதே. (௨)

வெய்ய வன்கதிர் மேவுத லின்றிமுட்
பெய்ய றைச்செந் தருக்கள் பிறங்கிடுஞ்
செய்ய கானினுந் திண்வரை மீதினும்
வெய்ய வூகம் விருப்பொடு சென்றதால். (௩)

*முதைய லும்†முளி முட்புறக் கானினுந்
ததைசெ ழுங்கொடி தாவுறு ‡மத்தமும்
புதரி யைந்த பெரும்புற வத்தினு
மதிக வேகமோ டெய்தி யடர்ந்ததால். (௪)

தூங்கு கையுட் டுளைநெடு நாசிசேர்
வீங்கு மால்கரி யானையும் வீழ்த்திபுற்
பாங்க ரோங்குமுட் பன்றியு மெண்கையு
நீங்க வாருயிர் நேர்ந்துகொன் றிட்டதால். (௫)

நிறை செழுந்தரு நீள்வனத் துற்றுறை
கறவை மேதி கடமை நரியெலா
மறலி யைக்கண்ட மன்னுயிர் போன்மெனக்
கறைசெ யும்புலி யைக்கண் டிரிந்ததே. (௬)

ஆற லைக்கு மசடரைக் கண்டஞ்சி
வேறி டத்தில் விரைந்துறை மாக்கள்போற்
றாற டர்ந்த தொறுகன் முழைதொறும்
பாறி மாக்கள் பதுங்கி யமர்ந்ததே. (௭)

---

*முதையல்-முதுகாடு. †முளி-உலர்ந்த செடி. ‡அத்தம்-வழி.

கரந்த கள்வரைக் காவலர் பற்றல்போல்
*விருந்த மோட வியாளந் தொடர்ந்துபோ
யரந்தை யெய்த வழித்தவ னற்றவம்
புரிந்த வர்க்குறு புன்க ணிபற்றியே. (௮)

பருப்ப தங்க டொறுஞ்சென்று பாய்ந்துவா
னுருப்பொ லிந்தங் குறுமேட ராசிகண்
டிருப்ப திங்கய மேயுண வாமெனு
விருப்ப மோடதன் மீதுறத் தாவுமால். (௯)

## மாத்திரை வருத்தனை.

ஒருபொருள் பயக்கும் ஒருசொல் ஒருமாத்திரை பெற்று வேறு சொல்லாய்ப் பொருள் பயந்து நிற்பது.

அளபொன் றான்மிகு பாம்பதி ரார்ப்பினால்
அளபொன் றான்மிகு சாதி யயர்ந்தன
அளபொன் றான்மிகு முன்னெழுத் தஞ்சின
அளபொன் றான்மிகு பானு வதிர்ந்தவே. (௰)

(இ-ள்.) அளபு ஒன்றால் மிகுபாம்பு - ஒரு மாத்திரை யேறிய பாம்பு (பாம்பு-உகம்) (அளபொன்றால் மிகு உகம் என்றமையால்) ஊகம் - புலியென்னும் ஓர் மிருகம், அதிர் ஆர்ப்பினால்-ஒலிக்கும் முழக்கத்தால், அளபு ஒன்றால் மிகுசாதி-ஒரு மாத்திரையேறியசாதி, (சாதி - நகம்,) (அளபு ஒன்றால் மிகுசாதி யென்றமையால்) நாகம்-மலை, அயர்ந்தன-சோர்வுற்றன, அளபு ஒன்றால் மிகு முன்னெழுத்து-ஒரு மாத்திரை யேறிய முன்னெழுத்து, (முன்னெழுத்து-அ) (அளபு ஒன்றால் மிகு முன்னெழுத்தென்றமையால்) ஆ-பசு, அஞ்சின-பயந்தன, அளபு ஒன்றால் மிகுபானு-ஒரு மாத்திரையேறிய பானு (பானு-தரணி) (அளபு ஒன்றால் மிகுதரணி யென்றமையால்) தாரணி-பூமி, அதிர்ந்த-கம்பித்தன, (புலியின் முழக்கத்தால், மலை அயர்ந்தன, பசு பயந்தன, பூமி அதிர்ந்தனவென்னும் கருத்து,)

பின்ற லின்றிப் பெரும்புலி மீதெலாஞ்
சென்று வெந்திறற் சீற்ற மிகும்புலி
கன்று சிந்தையோ †டோதிமங் கானோரீஇ
மன்ற லோங்கு மருத மடைந்ததால். (௧௧)

மாலை யாய்வரி வண்டுளர் சோலைசூழ்
மானி நேய நதிக்கரைப் பாங்கரிற்
காலை யாய கரும முடித்துளோ
ரேர்ல் மேயிட் டொலையவந் துற்றதே. (௧௨)

---

* விருந்தம்-விலங்கின்கூட்டம். † ஒதிமம்-மலை.

சேணிடைக் கண்ட தேயத் தவரெலாம்
வாணெ டுங்கண் மகளிரோ டேகியே
நீணெ டும்புற வத்து நெருங்கிட
மாணெ டும்புல் மலைத்ததென் னோதினான். (௧௩)

ஈது கேட்ட விருடியர் யாவருஞ்
சூத மாமுனித் தூய்யசெந் தாமரைப்
பாத மேத்திப் பரம னருள்விடை
காதி நோய்செயக் கற்றதென் னோதென்றார். (௧௪)

(வேறு.)

வெம்மையை யொழித்த வேத வித்தகர் வினவு மாற்று
மும்மையு முணர்ந்த சூத முனிவனு முணர்ந்தா னந்த
விம்மித முடையோ னாகி விருப்பொடு கருணை செய்தே
செம்மைசேர் நெறியி னின்றீர் தெரிவிப்பன் கேண்மி னென்றான்.

நிலத்தியல் பாகத் தோன்று நீரென மாந்தர் தங்கள்
குலத்தியல் பற்றே யாருங் குணமெனக் குணத்தின் மிக்க
நலத்தவொள் ளிடப தேவும் நண்ணிய வுருவிற் கேற்பக் [முண்டோ
கொலைத்தொழிற் பயின்றான் யார்க்குங் குலத்தொழிற் கிழுக்கு

என்னமெய்த் தவத்தின் மிக்கோ னியம்பலு முனிவர் சீர்சால்
பொன்னடிக் கமலம் போற்றிப் புதையிருட் கதிரைக் கண்ட
தென்னவெம் முளத்திற் சங்கை யிரிந்தன வெறுழ்மா வேங்கை
பின்னரெங் குற்ற செய்தி பேசெனப் பேச லுற்றான். (௧௭)

கான்மலை சோலை வாவிக் கடற்கரை திரிந்து பன்னா
ணான்கொரு கையோன் றந்தை நல்குழு ழுலப்ப வந்து
தேன்விரி கொன்றை வேய்ந்த திகம்பர னிடமாக் கொண்ட
கான்பொழிற் செறிவி லாச காஞ்சியி னடைந்த தன்றே. (௧௮)

மல்லலம் பரிச வேதி மருவிய விரும்பும் பொன்னா
மொல்லையி லென்ன வான்றோ ருரைத்திடு மொழிக்கொப் பாயவ்
வெல்லைகால் வைத்த ஞான்றே யெறுழ்வலிக் கொடுவ ரிக்குத்
தொல்லையி லிருந்த வெந்தீத் தூர்க்குண மொழிந்த மாதோ. (௧௯

*கழிந்தநல் லோதி சாந்தங் கருணையா ருயிர்மே லன்பு
வழிந்தொழு குதலை மான மலர்க்கணு ளீந்த வாரி
பொழிந்திடப் புளக மெய்திப் போந்தவிக் குணத்தா லிந்தச்
செழுந்திரு நகரி லென்றே சிறப்பெனத் தேடு மெல்லை. (உ௧)

(வேறு.)

வான ரம்பைய வான்சிலை யிலிங்கமா வமைத்து
வான ரம்பைய வருங்கனி வைத்துண வாக்கி
வான ரம்பைய ராடல்போன் மகிழ்ந்தெதி ராட
வான ரம்பைய சேடனீண் மணிமுடி துளக்கும்.

(இ-ள்.) வானரம்-குரங்குகள், பைய-மெல்ல, வான்-மேலாகிய, சிலை-கூழாங்கற்களை, இலிங்கமாவமைத்து-கடவுளாகவைத்து, வான்-ஆகாயமளாவிய, அரம்பைய-வாழையினது, அருங்கனி-நல்ல பழங்களை, வைத்து உணவாக்கி-திருமுன்வைத்து நிவேதித்து, வான் அரம்பையர்-தேவரம்பையர்கள், ஆடல்போல்-நடிப்பதுபோல், மகிழ்ந்து-களிகூர்ந்து, எதிர்-எதிரில், ஆட-கூத்தாட, வான்-மேலாகிய, அரம்-பாதலத்திலுள்ள, பைய-படத்தையுடைய, சேடன்-அனந்தனது, மணிமுடி-அழகிய கிரீடத்தை, துளக்கும்-அசைக்கும். ()

தேன்தருக்களை முசுக்கலை பிணவுடன் சேர்ந்து
தேன்தருக்களை மலர்பறீஇச் சிலையினைச் சாத்துந்
தேன்தருக்களை வண்டுகள் தோத்திரஞ் செய்து
தேன்தருக்களைத் திகழிறால் சேர்ந்தினி திருக்கும்.

(இ-ள்.) தேன்-வாசனை பொருந்திய, தருக்களை-விருக்ஷங்களினிடத்து, முசுக்கலை - ஆண்குரங்கு, பிணவுடன்சேர்ந்து - பெண்குரங்குடனணைந்து, தேன்-தேனை, தரு-கொடுக்கும்படியான, களை-அழகிய, மலர்பறீஇ-பூக்களைக் கொய்து, சிலையினைச்சாத்தும்-கல்லாலமைத்த கடவுளுக்குத்தரிக்கும், தேன்-பெண் வண்டுகளோடு, தருக்கு-சந்தோடமாய், அளை-கலந்து, வண்டுகள்-பிரமரங்கள், தோத்திரம்செய்து-துதிபாடி, தேன்-அது, தென்-கருமையானது, தருக்கு-மிகுந்த, அளை-குகையில், திகழ்-பொருந்திய, இறால்-தேன்கூண்டில், சேர்ந்து-அடைந்து, இனிதிருக்கும்-சுகமாய் வதியும். (உஉ)

கரையலைத்திடு மலையுடைப் பாலியின் கரையி
னொருதுறைக்கரி யாளிதன் புழைக்கையி னுழிஞ்சிப்
பருகு மொன்றொடொன் றாட்டியே பரும்புலி முலைப்பா
லருகி னுற்றபுல் வாய்க்கருத் திடும்பசி யகல. (உ௩)

---

*கழிந்தநல்லோதி-மிகுந்த நல்லறிவு.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

பச்சை யோங்கிலெம் பசியினா லலைந்திடல் பாரா
விச்சை யோடிரை தேர்ந்ததற் கீந்திடு மஞ்ஞைக்
கச்ச மின்றிப்பை யாணிழல் செய்திடு மரவை
மெச்சு கிரியும் பாதுகாத் தஃதனை மேவும். (௨௪)

அஞ்சு கத்தின்பார்ப் பாதவன் கிரணவெள் ளிடையில்
நெஞ்ச மங்கிமெய் வெளிந்துற வதற்கிரா சாளி
வஞ்ச மின்றித்தன் சிறகினா னிழல்செய நந்தின்
*மஞ்சு நீர்முகந் துகுத்திடும் வாயினாற் பூனை. (௨௫)

இன்ன வாறுபுள் விலங்கின திருஞ்செய னோக்கி
யுன்னு தற்கரி தாமிறும் பூதுள மெய்திப்
பொன்ன வாம்வரிப் புலிமகிழ் வோடிவ ணின்னு
மென்ன விம்மித முண்டுகொல் காண்குவ மென்னா. (௨௬)

செல்லு போழ்தினிற் செழித்தபுற் றாளியி னடியிற்
சொல்லு மெய்யறி வானந்த வுருவமாய்த் துரிய
வெல்லை வாழ்முத லாயடி யீறிலா விறையாய்ப்
புல்லு சோதிலிங் கந்தனைக் கண்டது புலியும். (௨௭)

கண்டு வீழ்ந்தெழுந் தானந்தக் கடலினுட் டிளைத்து
மண்டு காதலாற் கண்கணீர் மல்கிட வாடி
கொண்ட மெய்ப்புள கத்துட னுள்ளமுங் குளிர்ந்தே
யண்டர் நாயகற் கருச்சனை யாற்றலுற் றதுவால். (௨௮)

ஒலிமி கும்பல பறையெனப் பறவைக ளொலியும்
பொலியு நீலநீ ரோருக மலைகளிற் பொருந்தி
மலியும் வண்டொலி யுந்திகழ் தீர்த்தத்தின் மருவிப்
புலியு மூழ்கிநீர் வாயினின் முகந்தவின் போந்தே. (௨௯)

---

* மஞ்சு-குளிர்.

(வேறு.)

அந்திருமஞ் சனந்தன்னை யையனுடல் குளிரவபி டேக மாற்றி,
மொய்த்தளிகள் கிண்டியுணா முனமேத முளவகற்றி முருகார் வாசச்
மெத்திசையுங் கமழ்தருநன் மலரெடுத்துக் கொடுவந்தவ் விறைக்
குச் சாத்திப், பத்தியுட னறுங்கனிகள் பறித்தலம்பித் தலைவன்
முனம் படைத்த பின்னர். (௩௰)

அரும்பளிகை தாக்கியபி னப்பெயர்போ யலரெனும்பே ரானவா
போற், சுரும்பிமிருங் கொன்றையணி சூடுமர னருணைக்காற்
றொடர்ந்த வெய்ய, விரும்புலியி னுருவகன்று பண்டையுரு வெய்
திடலு மிணையி லார்வப், பெரும்புணரி யிடைமூழ்கிப் பேச்சிறந்து
நின்றதெம்மாற் பேசற் பாற்றே. (௩௧)

நந்தியின்மேன் முனமவைத்த நண்பானும் பூசைபுரி நலத்தி
னானுந், தந்துளவக் கொடுஞ்சாபந் தனையகற்றித் தடுத்தாளு மிணை
வா னீலக், கந்தரமுங் கணபணகங் கணமழுமான் கரதலமுங் கங்கை
கொன்றைக், கொந்தமருந் திருமுடியு நாற்புயமு முப்புரிநூற்
கொண்ட மார்பும். (௩௨)

அறுகுமதி தும்பையெருக் கணிசடையும் பவங்கெறுசீ ரக்க
மாலை, யுறுபுயமுஞ் சூலடம ருகமபய வரதமிவை யுற்ற கையும்,
* முறுகுகணா மதளுடையுஞ் சிரிசிரமு முனிவர்குழா முவந்து சா
த்து, நறுமலரேய் சேவடியு முகத்தில்வழிந் தொழுகுமிள நகையுந்
தோன்ற. (௩௩)

குரைகடல்சூ ழுலகர்புகழ் பனைசையில்வாழ் சிவலிங்கக் குறியிற்
றோன்றி, விரிதருமா வொளிவிருக்கத் தரியபசுங் கொடிசூழும் விக
த்தை மான, வெரிமணிப்பொ னணிகுலவுஞ் சவுந்தரநா யகியிடப்பா
லின்று மேவ, வரியயனுங் காணாதா னிடபகந்தி கரணவுவர் தடைந்
தா னன்றே. (௩௪)

---

* முறுகுகண்-விருபாக்ஷம்.



MAHAMAHOPADHYAYA DR U.V. SWAMINATHA IYER

எனைத்துயிர்க்கு முயிராகு மீசனைமுன் கண்டளவி லினிய பாலிற், றெளித்துமடல் விரிபசிய கதலியொட்டு மாவேரிற் றேன்று பாக, லினித்தகனி கலந்தருந்து வான்முனம்பின் னெய்தரிய வீர்ங்கோற் றேனும், * பனித்ததென வுவகையின்மேற் பேருவகை பெருக வெதிர் பழிச்ச லானன். (௫௫)

(வேறு.)

சங்கரா போற்றி ஞாலந் தந்தவா போற்றி மாது
†பங்கரா போற்றி ஞானப் பண்ணவா போற்றி யோரீ
ரைங்கரா போற்றி கங்கை யணிந்தவா போற்றி வேதன்
‡கங்கரா போற்றி நீல கண்டனே போற்றி போற்றி. (௫௬)

முக்கணா போற்றி வேயின் முளைத்தவா போற்றி மன்றுட்
டக்கணா தகவென் றுடுந் தாணுவே போற்றி §யங்கஞ்
சக்கண னயனுங் காணாத் தாண்முடி யுடையாய் போற்றி
யிக்கண யடியேன் முன்வந் திடர்தவிர்த் தாண்டாய் போற்றி. (௫௭)

மூலமா முதலே போற்றி முழுமணிச் சுடரே போற்றி
கோலமா மருப்ப ணிந்த கொற்றவா போற்றி யங்கா
ளாலமா ரமுதா யுண்டன் றளித்தரு ளரனே போற்றி
தாலமா புரியி லுற்ற தாணுவே போற்றி போற்றி. (௫௮)

என்னமின் றேத்து நந்தி யிறைவனை யினிது நோக்கி
உன்னரு மனத்தி னுள்ள பொருடனை யுரைத்தி யென்ன
முன்னவன் மொழித லோடு முகமலர்ந் துருகி யன்பா
லென்னையாண் டடிமை கொள்ளு மிறைவனுக் கிதனைச் சொல்வான்.

அரியய னறிய வொண்ணா வற்புத வடிவந் தன்னைத்
தெரிதரத் தமியேன் முன்னஞ் செய்தவ மேதுங் காணேன்
கரிசுறு மெனது சாபங் கழிந்தன குறையொன் றில்லை
விரதமின் னடிநீங் காவோர் வரமெனக் கருளல் வேண்டும். (௬௰)

* பனித்தல்-சொரிதல். † பங்கு அரா-பாதியிலுடையஅரனே.
‡ கம்கரா-சிரக்கையனே. § அம்கஞ்சக்கணன்-விட்டுணு.

இனையன நந்தி யெம்மா னியம்பலு மிமய மாது
தனையிடப் பாகம் வைத்த சங்கரன் மகிழ்ந்து நீயு
மெனையக லாது தாங்கி யிருமென விசைத்துப் பின்னும்
நனையரு *மதலை வேய்ந்த நம்பன்மற் றிதனைக் கூறும். (௪௧)

அமையுமித் தலத்தைச் சார்ந்தோ ரடைதலாற் சித்தி யின்ப
மிமையவ ரிதனை †யீச னிருக்கையென் றிசைப்ப ரன்பா
லுமையெனை வழுத்த மாயூ ரேசனென் றுரைப்ப ருன்று
லெமையுல கவர்தி ருப்பு லீசனென் றறைவர் மாதோ. (௪௨)

பனியமு தொழுகுந் திங்கட் பகிர்மருப் புடைய நந்திக்
கினையன புகன்று நின்ற விமையவர் முனிவர் காண
நனையவிழ் கடுக்கை வேணி நம்பனவ் விலிங்கந் தன்னிற்
பினையுருக் கரந்தா னந்திப் பெரிதுவந் திருந்தான் மன்னோ. (௪௩)

இவ்வகை யீச னந்திக் கினியநல் வரம ளித்த
வெவ்வழி லிப்பு ராண மெழுதினோர் படித்தோர் காதிற்
செவ்வனே கேட்டு ணர்ந்தோர் திருவொடிம் மையிலின் பூர்ந்தே
யவ்வயி னரிய போக மடைகுத றிண்ண மாமால். (௪௪)

---

*மதலை-கொன்றை. † ஈசனிருக்கை-சிவதலம்.

திருப்புலிச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௪௱௨.

# திருக்காளத்திச்சருக்கம்.

அளவில் கருணைச் சூதனிவை யருள நைமி சாரணியர்
பளக முறுமே னியராகி மீட்டுந் துதித்துப் புலிக்க தையை
யெளிதி னுணர்ந்தோங் காளத்தி யீசன் சரிதங் கேட்க வுளங்
களிமிக் குடையோ மெனவினவக் கனிவோ டதனைக் கழறுவனால்.

ஆல மமுதாக் கொண்டமரர்க் கருள்கூர் முதல்வன் செஞ்சடையிற்
பாலினரிய வெண்ணொளியைப் பரப்புங் கிரண மதிமரபோன்
சால வரசு புரிநகருட் டகைசேர் நகர மொன்றுளதா
லேலவ ணைதரா மேச்சுரமென் றிசைப்ப ரெனவு மறுத்துரைப்பார்.

அந்த நகரிற் கலர்பதுமத் தமருஞ் சதுமா முகக்கடவுள், தந்தை
பெயரு மிளந்திங்கட் சடையிற் புனைந்தோன் றன்பெயரும், வந்து
சேரக் கரும மென்கொல் வகுத்தி யதனை யென்றடியிற், கந்த மலர்
தூய்ப் பழிச்சுதலுங் கரும மொழிந்தோன் கனிந்துரைப்பான். (௩)

அணியா ரயோத்தி புரிவேந்த னரசர்பணியுந் தயரதனுந், திணியார்
திண்டோ ளவன்புதல்வன் சிறந்தபுகழார் சீராமன், மணியார்
கொங்கைச் சிற்றவைசொன் மதித்துத் தனது மனைவியொடும்,
பணியார் பணியுமிளவலொடும் படர்ந்தே கானிற் பயினுளில. (௪)

தலையீ ரைந்து நாலைந்து தடந்தோண் மலையு முளவரக்கன்
றலையா வலிரா வணன்சோரத் தொழிலாற் சீதை தனைக்கொடுபோ
யலையா ரிலங்கை சேருதலு மரிவை தனைத்தே டினராகி
யுலையா மனத்தோ டுழன்றுமன மொருங்கு தேடிக் கண்டிலராய். ()

அடலார் சுக்கி ரீவனைநண் பாக்கி யவன்முன் னவன்வாலி, யுடனே
போர்செய் வலியிலனா யொளித்தங் கிருந்தே யொருகணை போய்ப்,
படவே பெய்து வாலி தனைப் படுத்துக் கவியின் வெள்ளத்தாற், கட
லை யடைத்துப் போயிலங்கைக் காவலனாரின் னுயிர்போக்கி. (௬)

சீதை தனைக்கொண் டவண்மீண்டு திருவா ரயோத்திச் சேகின்ற
போதில் காந்தி விமானமப்பாற் போகா திருக்க முறுக்கவிழத்
தாது குடைந்து பாண்முரன்று தங்கியறுகாற் றேனுகருஞ்
சீத மலர்வா சனைகமழுந் தெரியல் வேய்ந்த சீராமன். (௭)

உள்ளங் கவன்று குலக்*கோமா னுபய வடியை நினைந்தேத்த
வெள்ளக் கரிய சடைமுடியும் விளங்கும் புரிநூற் கமண்டலமுங்
கொள்ளும்வசிட்ட மாமுனிவன் †கொள்ளார் முடிக ளுழச்சிவந்த
கள்ளீர்ங் கமல வடியுடைய ‡கனலிக் குரிசின் முனமடைந்தான். ()

அப்போ தரக்க ராருயிரை யகற்றுங் கொடிய கோதண்டங்
கைப்போ துடையான் றவமுனிவன் காலில் விழுந்திக் காரணமென்
னிப்போ தடியே னிடரகல விதற்கோர் சூட்சி யியம்புகென
முப்போ துணருந் திறமுடைய முனிவன்கனிவோ டிவைமொழிவான்.

பணியார் பணியுந் திறலுடையோய் பாதி மதிச்செஞ் சடைப்பரம
பணியா ரடியை யுளத்தமைத்த வடற்$கம் பத்தோன் சிரங்கரத்துக்
§குணியா லறுத்துக் கொன்றனையக் கொடிய பழிவந் தடுத்தவது
தணியா லிலிங்கப் பதிட்டையலாற் றக்கோ யமைத்துத் தொழு
கென்றான். (ய)

தெருளார் முனிவ னுரைக்கவுளந் தெளிந்து விமானத் துடனிழிந்து
மருவார் மாலைத் துயல்தடந்தோண் மன்னன் சிவலிங் கக்குறிவைத்
தரியார்ந் திசைபா டலர்கொடுவந் தருச்சித் தேத்திக் குறைதவிர்ந்தா
னிருமா தலத்தி ரத்தகையா லிராமேச்சுரமென் றியம்புஃரால். (கக)

என்று கருணைச் சூதமுனி யிசைப்ப நைமி சாரணியந்
துன்று முனிவ ரடிபணிந்து தொலைவி னகரப் பெயருணர்ந்தே
மின்று முனம்நீர் மொழிந்துளநல் லிசைகூர் சரிதங் கேட்கவுளத்
தொன்று நசையே மென்னவதை யுயர்மா தவனு முரைப்பானால். ()

(வேறு.)

அத்திரு நகரின் வாழ்வோ னருமறைக் குலத்து வந்த
வுத்தம னாதி சைவ னொருமறை நான்கா றங்கம்
புத்தியி லுணர்ந்தோ னீசன் பொற்கழ லருச்சித் தேத்தும்
வித்தகன் வெறுக்கை யாவும் வேட்டவர்க் குதவுந் தூயோன். ()

---

*கோமான்-ஆசாரியன். † கொள்ளார்-பகைவர். ‡ கனலி-சூரியன்.
$ கம்பத்தோன்-இராவணன். § குணில்-வில்.

நிதி*நிகே தனங்க ளெல்லா நிறைவுறக் கொண்டோன் சால
மதியினி லாதி சேட மகிபனை நிகர்த்தோன் வேத
விதிவிலக் கறிந்தோன் வாய்மை விரதமாக் கொண்டோன் ஞாலந்
துதிசெயு மவன்சொ ரூபா கரனெனச் சொல்லும் பேரான். (௧௪)

அன்னவன் மனைவி கல்வி யறிவுநல் லொழுக்கஞ் சீலந்
துன்னிய கற்பு சாந்தந் தோன்றுதற் கிடமாய்ப் பெண்க
டன்னருங் கலமா யுள்ளா டமைமிகு சுசீலை யென்ன
மன்னிய பெயரா ளினனோர் மனையற நடத்து நாளில். (௧௫)

நன்னெறி காட்ட மைந்த னிலையென நைந்து துன்பந்
துன்னிய வுளத்த ராகித் தொலைவில்செல் வங்க டானேன்
பொன்னணி யில்லந தானென பொருள்களே னென்ன நெஞ்சின்
மன்னிய வெறுப்புற் றீசன் மலரடி தொழுதி ருந்தார். (௧௬)

நலிவுகொண் டிருக்கு மந்த ஞான்முன் னனிவ ருக்குங்
கலியினு லலமந் துள்ளங் கலங்கிய வொருவன் றனைப்
பொலனிறை தசும்பு தேடிப் போயடைந் தென்ன மாசி
னலனிறை யகண்டா னந்த நற்றவ முனிவந் துற்றான். (௧௭)

வந்தவம் முனிவர் கோமான் மனங்கனி வரநின் றேத்தி
யுந்தொளி பரப்புஞ் சீர்சா லுயர்தவி சிடையி ருத்தி
யெந்தமா தவமோ நாயே னில்லிடை யடைந்த தென்ன
கந்தமென் மலர்க டூவிக் கைகுவித் தினைய சொல்வான். (௧௮)

ஐயநின் னடிய னேனுக் கரியதொன் றிலையே பூமேற்
செய்பவ ளருளும் பெற்றேன் செகத்தவர் புகழப் பெற்றேன்
றுய்யநல் வடமீ னென்னத் தோகையைத் தாரம் பெற்றேன்
வையகத் தெனக்கொப் பில்லை யெனினுமோர் மறுக்க முண்டால்.

இகபர மிரண்டுக் கேற்ற விருநிதி யனைய நல்ல
மகவிலை யென்னு முள்ள மறுக்கமே மறுக்க மான
நிகரிலா கமபு ராண நிலையறி நிமலா வென்ற
னகமுறுந் துயரை மாற்றி யருளெனத் தொழுது சொன்னான். (௨௰)

---

* நிகேதனம்-வீடு.

அந்தண னுரைத்த வாய்மை யருந்தவ முனிவன் கேட்டே
யிந்தவா றிசைப்பன் மெய்ம்மை யிருபிறப் பாள கேண்மோ
மைந்தரு முண்டு நல்ல வாழ்வுமென் மேலு முண்டு
சிந்தையின் மகிழ்வு முண்டு தீவினை தீர்த லுண்டு. (உக)

பார்புகழ் குடத்திற் செய்ய பாற்கர னடைந்த திங்கள்
சீர்பெறு மமர பக்கத் திதிபதி னான்கில் வானோ
ரோர்பெறத் திருக்கா ளத்தி யீசனை யன்றி ராவி
லார்கலி யுலகி லேத்தி யரும்பத மடைந்து ளாரால். (உஉ)

அத்தினந் திருக்கா ளத்தி யப்பனுக் குரிய நாளாம்
புத்தியி னுயர்ந்த வேத புங்கவ திருக்கா ளத்தி
யத்தல மணைந்து மிக்க வகத்திய னாற்று நல்ல
முத்தியை யளித்தி டும்பொன் முகரிநன் னீரிற் றோய்ந்து. (உ௩)

சொன்னவித் திங்க டம்மிற் றோன்றுநல் லரனி ராவி
லென்னையா ளுடைய காளத் தீசனைப் பூசை செய்து
கன்னல்பால் கதலி மாத்தேங் கனிபலா *வபூபம் பாய
சன்னமும் படைத்துத் தீபா ராதனை புரித னன்றே. (உச)

எனமுனி யுரைத்துப் பின்னு மியம்புவா னாதி நாளி
லனமிசை யூரு வானு மத்தியு மரவு நல்ல
தனிமொழிக் கருங்க ணாருங் கல்விசேர் கீரன் றானுந்
தினமரற் குரிய பூசை செய்சிவ கோசன் றானும். (உரு)

அளவின்மா தவவ சிட்ட னகத்திய னாதி யானோர்
வளமுறப் பூசை செய்து மைந்தரும் வாழ்வும் பெற்றே
யளவறு வலிமை யுற்றிவ் வவனியிற் போகந் துய்த்துத்
தளர்வில ராகி வெள்ளிச் சயிலத்தை யினிது சார்ந்தார். (உ௬)

ஆதலால் யான்சொல் வண்ண மாகநீ ரன்பா யெங்க
ணாதனுங் காளத் தீச நம்பனைத் தொழுவீ ராகிற்
காதலார் மகவைப் பெற்றுக் கைப்பொருள் பெற்று வாழ்ந்து
பூதநா யகன்வாழ் வெள்ளிப் பொருப்பையும் பெறுவீ ரென்றான். ()

---

* அபூபம்-அதிரசம்.

இப்பரி சகண்டா னந்த விருந்தவ னுரைக்க வந்த
வொப்புய ரகன்ற வேத வுத்தம னுவகை மீக்கூர்ந்
தப்பரி சியற்ற னல்ல தாமென வொருமித் தந்த
செப்பரு மாக மாத சிவனிராத் தினமு ணர்ந்தே (௨அ)

இருந்தனன முனிசொற் றிங்க ளிசைந்தபி னிறைவன் கங்குல்
வருந்தின முணர்ந்தே யவ்வவ் வருடமுங் காளத் தீசப்
பெருந்தகை முன்ன ரேதன் பிரியையோ டினிதாய்ச் சென்றங்,
கருந்திறன் மகவை வேண்டி யருச்சனை யியற்றி னானால். (௨௯)

இப்படிச் சிலவாண் டாங்க ணிருவரும் போய்சே விக்க
வொப்பிறென் கயிலை யாளி யோங்குயர் கருணை யாலே
*வப்பிரக் கூந்த னீல மணைந்தன முலைமு கட்டிற்
†சுப்பிர மலர்க்க ணின்றுந் தொடர்ந்தன வுடல மெங்கும். (௩௰)

உண்டிலை யெனுநு சுப்பங் குறுநர்கண் ணோக்கிற் பட்ட
வெண்டரு புளிங்கா யுண்ண விச்சைகொண் டனநா மெய்யிற்
கண்டன பசுந ரம்பு சமலைசேர் சாந்தா னில்லி
னுண்டவர் வயிறு போன்மே லுயர்ந்தன வுதர மாதோ. (௩௧)

மாந்தளி ரனைய மேனி மதர்விழிச் சுசீலைக் கொன்பா
னாந்தகை மதிபோய் பத்தா யமர்மதி மாசி யாக
வாய்ந்திலன் விரத பங்க மாகுதல் வழக்கன் றென்னாக்
காந்தையோ டந்த னாளன் காளத்தி வழிக்கொண் டானால். (௩௨)

(வேறு)

குறுகுகுறு கெனவிண்டு வினைப்பிடித்துக் குறுமுனிவன் குழைத்த வூரு, மறுகொடெருக் கணிபரம ‡னுதும்பரவச சபையதனி லாடு மூருஞ், சிறுவியுறு கருநோயைத் தீர்க்கமருத் தாவதியெனச் சென்றவூரு, நிறைசெருத்த லாண்மெழவுந் திருமூலன் கதிபெறவு நேர்ந்த வூரும். (௩௩)

1. திருக்குற்றாலம். 2. திருநெல்வேலி. 3. திரிசிரபுரம். 4. திருஆவடுதுறை.

அப்பிரம்-மேகம், † சுப்பிரம்-வெளுப்பு.

‡ உதும்பரம்-செம்பு.

ஓலமிடு மிளவலுக்கா வியமனைவீழ்த் திடுபதியு முயர்சீ தேவி
நீலநிறக் கணவனுயிர் பெறப்பூசை புரிபதியு நிகமநான்குஞ்
சாலவுர னடியேற்றிக் கற்கதவ மிடுபதியுந் தடத்தின் பாங்கர்
பாலகனுக் கன்றுமையாள் பாலளித்துப் பசிதீர்த்த பதியு மப்பால்.

1. கடவூர். 2. ஆரூர். 3. மறைக்காடு. 4. சீர்காழி.

உணர்வுற்றங் கடைந்திறந்தோர் செவியினிடை மனுவையுப தேசஞ் செய்யு* மணிமுத்த நதித்தலமும் வரியரவு தொழூந்தலமு மறைக ணான்கு, மிணையற்ற பரமனடி யிணையேத்து தலமுமுமை யெண்ணான் கென்ன, வணைவுற்ற வறம்வளர்த்தே யரியதவம் பயில் தலமு மடைந்து பின்னர். (௧௫)

1 விருத்தகிரி, 2 சிதம்பரம், 3 ஒத்தூர். 4 காஞ்சி.

நதிமதியைத் தரித்த*வரா கீசனுறை நகரடைந்தன் னாதன் றன்னை, விதிமுறையிற் றொழுதந்த வியன்பதியி லுறைவோரை விடையோன் வாழும், பதியெவனுள் ளதுவெனலும் பார்வதியு மயிலுருவப் படிவம் நீங்கிக், கதிபெறுமாத் தலமொருகாற் காவதத்தி லுளததன்பேர் கழறக் கேண்மோ. (௧௬)

திருமருவு பனைசைநக ரெனவுரைப்பர் வழிதவறித் தியங்கி யேனு, மொருதினமங் குறைந்தாலுஞ் சித்தியெலா மடைவரென வுரைப்ப னூல்க, ளிருமறையோ யத்தலத்தை யடைதனல மெனமொழிய வந்த ணாளன், புரிகுழல்மா தோடுமன மொருமித்துத் திருத்தாலப் புரியைச் சார்ந்தான். (௧௭)

கனிவொடுமை பூசித்த கண்ணுதலை யருமறையோன் கண்டு வாசப், பனிமலர்தூய்த் தொழுதந்தப் பரமனிகே தனத்துக்குத் தரத்தி லம்பைக், குனிசிலையிற் றொடுத்துவிடும் விசைதூரங் குறுகசுடர்க் கிரண வெய்யோன், கனிமொழியா டனதுவயாக் காணமன மிலன்போன்மேற் கடலு ளாழ்ந்தான். (௧௮)

நமரிலளாய்த் தனியிருக்கு நாயகியா டனக்குதவி நாம்செய் வோமென், றிமகிரணப் பிறைநுதலா வெழிலுடுக்க ளாரமதா விரத்த வான, †மிமவரையிற் பட்டுடையா யிசைவானம் பாடிமே கலையா யேங்க, வமைதருநோய் தீர்மருத்து வதியென்னக் கங்குலும்வந் தடைந்ததன்றே. (௧௯)

* வராகீசனுறையும்நகர்-தூமல். † இமம்-அற்பம்.

10

திகந்தமுழு தும்பரவுஞ் சீர்த்தியுடைத் தென்கயிலைத் தலத்தின் மேவுஞ், சுகந்தரு மணங்கமழுஞ் சுரிகருங்கார்க் குழலுமையின் றுணையேயல்லாற், சகந்தனில்வாழ் பவர்கணை யின்றிவயா வேதனையாற் றளர்ந்து வெள்ளி, நகந்தனில்வாழ் பவனருளா லாண்மகவைப் பெற்றரிய நலனே பெற்றாள். (௪௰)

அளிமுரலுங் கோகனக வரும்பவிழப் புள்ளினங்க ளார்ப்பு மல்கத், துளிநறவம் பிலிற்றுமரைத் தொடைபுனையு மருமறையோன் றுயர நீங்கக், களிமதமா வுரிபுனையெங் காளத்தி நாதனுருக் கரந்து செய்யு, மளிகிளரா டலைக்காண வாதவன்கீழ்த் திசையினைவந் தடைந்தா னன்றே. (௪௧)

அருமறையின் பொருளுணரு மறுதொழிலோ னிகபரத்தை யளிக்க வல்ல, வொருமகவைப் பயந்துமன மூவகையின் றித் தெளிநறவ மொழுக்குங் கொன்றைப், புரிசடையெங் காளத்திப் புண்ணியனைச் சிவநிசியிற் பூசை செய்யும், விரதமினே கெடவந்த தென்றுமன னைந்துருகி மெய்சோர் வேலை. (௪௨)

குயில்முகமென் சிகழிகையுங் குறும்படுநீ றணிநுதலுங் குழையார் காதும், *மயில்படரித் திலமிடையா ரக்கமணி யணிகளமு மரையிற் பட்டும், வெயில்விடுகோ வணவுடையும் விளங்குமூனூ லசைமார்பும் †வெங்கை யேற்குங், ‡கயிலழகா ரமைத்தண்டுங் கொண்டாதி சைவனெனக் காளத் தீசன். (௪௩)

வீசியமென் சிறுகாலான் முக்கனியின் மணங்கமழும் விண்சேர் சோலைப், பேசரிய தென்கயிலைப் பிறங்கலிடைப் பிறைநுதலெம் பிராட்டி யாயக், காசணிமென் றிதலைமுலைப் புலமலர்க்கோ தையையிருத்திக்கரந்து ஞாலத், தாசகலுந் தாலபுரி யமர்மறையோன் காணவுவந் தண்மி னானல். (௪௪)

எண்ணரிய பரம்பொருளை யெதிர்சென்று திருவடியி னிறைஞ்சி யேத்தித், துண்ணெனவாங் கேகொடுபோ யாதனத்தி னமர்வித்துத் தொன்மை போற்ற, புண்ணியமே யுருவாக வந்தனைய பெரியோயெம் புன்மை தீர, நண்ணியதென் னீருறையு நகரேது ணைம மெனவ நாயேற் கின்னே. (௪௫)

---

அயில்-அழகு. † வெங்கை-பிட்டு. ‡ கயில்-கையில்.

பகர்தருவா யென்றுசொரூ பாகாரனும் வினவவவன் பரிவு நோ
க்கி, யகலிடமெங் கணுமிருப்பே மெமக்கெனவோ ரிடமிலை நீ யறி
யாய்கொல்லோ, தகவுடனாண் டாண்டுதொறுஞ் சிவசிசியிற் றென்
கயிலைத் தலத்தினீவிர், நகமகளு தனைப்பூசை புரிந்தேத்துஞ் சம
யத்தினுங்கண் டேமால். (௪௬)

நம்பெயர்கா ளத்தீச குருக்களென்ப ரன்பரக நாடி யாங்கே, செம்
மைபெறக் கூடியவர்க் கினிதளிப்போ மித்தலத்துஞ் சிவனென்
றன்பர், தம்மையுளத் துறுமடியார்க் காணியவர் தோம்பரமன் றனை
யேத்து, மும்மையிவண் கண்டேமற் றன்முகஞ்சேர்ந் திருந்ததெவ
னுரைத்தி யென்றான். (௪௭)

அய்யனே னரவணியுங் காளத்திப் பெருமானை யாண்டு தோறுந்,
துய்யவர னிரவினிற்கண் டருச்சிப்ப தெனவிரதந் துணிந்துட் கொ
ண்டே, வையமிசை யிதுகாறு மனுட்டித்து வந்தோமிவ் வருடந்
தன்னிற், பையரவி னுருக்கொண்ட பரமனைக்கா ணியயாமும் பட
ரும் போதில். (௪௮)

தாலமா புரியெனுமித் தலத்தினிலாண் மகவினையென் சதியுமீன்றாள்
ஆலமார் கண்டனிர வாந்தினமு மின்றாக வண்மிற் றலென்
சீலமார் விரதமினை கெடவந்த தெனவுளத்திற் செறிந்த துன்பஞ்
சாலவேயுளதென்னத் தனதுருவங்கரந்துவந்தோன் சாற்றலுற்றான்.

ஆபத்து வந்தவிடத் தரும்பாவ மில்லையென வகிலத்தோர்கள்,
தாபித்தல் கேட்டிலையோ தண்மதியைச் சென்னிமிசை தரித்து ளா
னைக், கோபத்தை யொழித்தகுணக் குன்றனைய முனிவரர்தாங் குறி
த்தாங் காங்கே, பாபத்தை யொழித்தனரென் பதுபகரக் கேட்டிலை
யோ பகர்வன் கேளாய். (௫௰)

(வேறு.)

பதஞ்சலி வியாக்கிர பாதர் மன்றுளே
நிதந்தரி சனஞ்செயு நியம மாறிடா
விதந்தர் வரனுளம் விரும்பிக் கூடலிற்
பதந்தரு நடனமும் பார்த்த தில்லையோ. (௫௧)

ஆப்பனூ ரினிலர சாளும் பாண்டியன்
மாப்புகழ் பரவுசோ ழாந்த கன்முனம்
ஆப்புனை கொடியுடை யரனென் றன்னிய
வாப்புரு விலிங்கமா யமர்ந்த தில்லையோ. (ருஉ)

இந்தச் சரித்திரம் திருவிளையாடற்புராணம் அருச்சனைப்படலம் ௩ரு-ம் செய்யுளின் உரையிற் காண்க.

எள்ளுத லின்றியே யிருக்கும் வைசிய
விள்ளருங் குலத்தினில் மிகுத்து வாழ்ந்திடுங்
கள்ளமில் வணிகமல் லய்யன் காண்டர
*வள்ளம திலிங்கமாய் வதிர்ந்த தில்லையோ. (ருங)

இந்தச் சரித்திரம் வசவபுராணம் வணிக மல்லய்யர் சருக்கத்திற் காண்க.

வாசமென் மலர்த்தொடை வனையுங் காடவன்
நேசமோ டிழைத்ததை நீக்கி நின்றையூர்ப்
பூசலார் மனத்திறைற் புனைந்த வாலயத்
தீசனு ரன்புகூர்ந் திருந்த தில்லையோ. (ருச)

இந்தச் சரித்திரம் பெரிய புராணம் பூசலார் நாயனார் சருக்கத்திற் காண்க.

ஆதலி னீயுமிங் கானை யித்தின
மோதரும் பூசனை யுஞற்றி னுனக்
கேதமில் சிவதரி சனமு மீங்குறு
மாதவ காரண மனம தாகுமால். (ருரு)

தீதினன் மறைகளின் சிரத்து நின்றவ
னோதிய வாசக முணர்ந்து மற்றவன்
கோதைஞா னம்மையுங் குழகன் றன்னையு
மேதமின் மனத்தினி லிருத்திக் கூறுவான். (ருசு)

கூறுவ கேட்டியால் குணக்குன் றேயனுய்
நாறுபூஞ் சுனையுடை †நவிரத் தின்றகை
யூறுபா டொன்றிலாக் ‡கடத்தி னுண்மைவா
னுறுசேர் சடையுடை யமலன் செய்கையே. (ருஎ)

---

*வள்ளம்-படி. †நவிரம்-மலை. ‡கடம்-காடு.

மூன்றொரு நாட்டவ முனிவ சிட்டனார்
சிந்தைகொள் புத்திர சோபந் தீர்தர
வந்தரத் துயர்கயா ரணியத் தண்மியே
வைந்தடர்த் தருந்தவ மாற்றி னாரோ. (ருஅ)

ஆயபோ தைந்தலை யூரவு ருக்கொடு
பேயொடா டியுமவன் பிறங்கி லிங்கமாய்
தூயமேற் றிசைமுகந் தோன்ற வந்தடர்ந்
தேயமா முனிக்கரு ளளித்தி ருந்தனன். (ருகூ)

இந்தவா றிறையவ னிருப்ப தோர்ந்துபூங்
கொந்துலா மலர்க்குழற் குமரி வல்லையின்
மைந்தர்*கோ வண்ணல்சீர் வடுக னாரியன்
சந்தமா ருருத்திரக் குழுவுஞ் சாரவே. (கூய)

வெள்ளியங் கிரியினை விடுத்†து வாக்கடத்
துள்ளுறு மன்பினோ டுறைம யேச்சுர
வள்ளல்பா லடைந்தவண் வாழ்ந்தி ருந்தன
ளொள்ளவில் ‡புலமலர்க் கோதை யென்றரோர். (கூக)

(வேறு.)

அப்பொழு தருங்கயிலை யம்பொன்மக மேரோ
டொப்பறு §முவாக்கட றுறைந்த வதனாலே
செப்பரிய தென்கயிலை யென்று திரு நாம
மிப்புவியு ளோர்சொலி யிறைஞ்சினர்கண் மாதோ. (கூஉ)

வந்துபணி கின்றவரை வான்மதி மிலைந்த
வெந்தையிரு சேவடி யிருத்துமய லற்ற
புந்தியினி லுன்னுமவ ரைப்பொருவி லாச்சீ
ரிந்திர பதத்திலினி தேற்றுமிலை தன்றி. (கூங)

(சித்திரக்கவி.) (மாத்திரைவருத்தனை.)

ஒரு பொருள் பயக்கும் ஒரு சொல் ஒரு மாத்திரைபெற்று
வேறு சொல்லாய்ப் பொருள் பயந்து நிற்பது.

---

* கோவண்ணல்-நந்தி.

† உவாக்கடம்-கயாரண்ணியம்.

‡ புலமலர்க்கோதை-ஞானப்பூங்கோதை.

§ உவாக்கடறு-கயாரண்ணியம்.

ஓரள பேமிகுத் தோங்கிய வண்டின
மோரள பேமிகுத தோங்கரை யன்றனே
டோரள பேமிகுத் தோங்கயா வைக்கலந்
தோரள பேமிகு மெய்யகன் றுற்றவே. (கூச)

(இ-ள்.) ஓர் அளபேமிகுத்து ஓங்கியவண்டினம்-ஒரு மாத்திரை மிகுந்த வண்டினம், (வண்டினம்-அளிக்கூட்டம்) (ஒரு மாத்திரைமிகுந்த அளிக்கூடடம் என்றமையால்) (ஆளிக்கூட்டம்) ஆளியென்னும் ஓர் மிருகக்கூட்டம், ஓர் அளபேமிகுத்து ஓங்கு அரையன்-ஒரு மாத்திரைமிகுந்த அரையன் (அரையன்-மன்) (ஒரு மாத்திரைமிகுந்த மன் என்றமையால்) (மான்-கலை மான்கள், தனோடு-தன்னோடு, ஓர் அளபேமிகுத்து ஓங்கு அயர்வு-ஒரு மாததிரைமிகுந்த அயாவு, (அயர்வு-களை) (ஒரு மாத்திரைமிகுந்த களை என்றமையால்) காளை-இடபத்தை கலந்து-சேர்ந்து, ஓர் அளபேமிகுமெய்-ஒரு மாத்திரை மிகுநதமெய்) (மெய்-உடல்) ஒரு மாத்திரைமிகுந்த உடல் என்றமையால், ஊடல்-பகை, அகன்று உற்ற (அவ்விடத்தில்) நீங்கியிருநதன. ஏகாரம் ஈற்றசை (ஆளிககூட்டம்-மான்களோடு இடபத்தைச்சேர்ந்து விரோதமின்றியிருந்ததென்பது கருத்து.)

## (மாத்திரைச்சுருக்கம்.)

ஒரு பொருள் பயக்கும் ஒரு சொல் ஒரு மாத்திரையைக் குன்றப்ப வேறு பொருள பயக்கும் சொல்லாய் வருவது.

வீரை தன்னி லோர் மாத்திரை வீந்தது
மாரந் தன்னி லளபொன் றருகலு
மார மொன்றுய்ய யவ்வழிக் கானவர்
சீரு ளொன்றெழி யார்ப்பொடு சேருமால். (கூரு)

(இ-ள்.) வீரைதன்னில்-வீரையென்னுஞ்சொல்லில், (வீரை-வாரி) ஓர் மாத்திரை வீந்ததும்-ஒரு மாததிரையைச் சுருக்க வரியென்றாயிற்று; வரி-புலியின் ஒலியும், ஆரம்தன்னில்-ஆரம் என்னுஞ் சொல்லில், (ஆரம்-ஆத்தி) அளபு ஒன்று அருகலும்-ஒரு மாத்திரையைச்சுருக்க, அத்தியென்றாயிற்று, அத்தி-யானையொலியும், ஆரம்-ஆரம் என்னுஞ் சொல்லின், (ஆரம்-மாலை) ஒன்றுமாய் - ஒரு மாத்திரையைச் சுருக்க மலையென்றாயிற்று, அவ்வழி-அம் மலையில் வசிக்கும், கானவர்-குறவர்களது, சீருள், (ஈயம்) ஒன்றொழி-ஒரு மாத்திரையைசசுருக்க-இயம் என்றாயிற்று, இயம் - வாத்தியத்தின், ஆர்ப்பொடு சேரும்-ஒலியொடுகலக்கும், ஆல்-அசை. (புலியின்ஒலியும். யானையின்ஒலியும் மலையில் வசிக்கும் குறவர்வாத்திய ஒலியுடன் சேர்ந்து ஒலிக்கும் என்பது கருத்து.)

## (எழுத்து வருத்தனை.)

ஒருபொருள்பயப்ப தோர்சொல்கூறி யதனில் ஓவ்வோரெழுத்து நீக்க வெவ்வேறு பொருள்பயப்பது,

கண்கள் கொண்டன காந்தர்கள் கொண்டன
எண்கொள் பூடண மாமென்றுங் கொண்டன
பண்கொள் சாரலிற் பாசிழைப் பாவைமார்
மண்கொள் சீரணி மைதகைம பேதமை. (சுசு)

(இ-ள்.) பண்கொள்சாரலில் பாசு இழை பாவைமார் கண்கள் கொண்டன - இசைநிரம்பிய மலைச்சாரலில் வாழும்நல்ல ஆபரணங்களணிந்த குறமகளிர்கள் நேத்திரங்கள் கொண்டன, மண்கொள்மை - மாட்சிமைகொண்ட அஞ்சனம், காந்தர்கள் கொண்டன-கணவர்கள் மனைவியராக்கொண்டது, சீர் தகைம-சிறப்புவாய்ந்த தங்களை, பாவைமார் எண்கொள் பூடணமாமென்றுங் கொண்டது-அக்குறமகளிர் மதித்தற்குரிய ஆபரணம்போல் எப்பொழுதும் கொண்டது, அணிபேதமை-அழகிய அறியாமை. குறமகளிர் கண்கள்கொண் டனமை. கணவர்கள் கொண்டன. குறமகளிர்தமை. குறமகளிர் தாங்கள் கொண்டன பேதமை, என்பது-கருத்து,

நான்காம்அடி நிரல் நிரையாக மண் சீர் அணி மை தகைம பேதமை கொள்என்னும் வாக்கியத்தைக் கடைநிலைத் தீபமாகச்சேர்த்து. மண்கொள் மை-மாட்சிமைகொண்டமை, சீர்கொள்தமை-சிறப்பைக்கொண்ட தம்மை, அணிகொள்பேதமை - அழகைக்கொண்ட பேதமை என விரிக்க.

(திரிபங்கி.)

ஒரு செய்யுளாய் உறுப்பமைந்து ஒரு பொருள் பயப்பதனை மூன்றாகப் பிரித்து எழுத வெவ்வேறு செய்யுளாய்த் தனித்தனியே பொருள்பயந்து தொடையும் கிரியையும் தனித்தனியே காணவருவது.

(காப்பியக் கலித்துறை.)

கந்தர மார்தடங் காவி னெலாங்கனி யார்தருவின்
பைந்தரு வீநெடுஞ் சார லெலாம்பனி மென்மலரைத்
தந்துள தேன்படுங் கூரி னெலாந்தனி மந்திகள்போய்
நந்திய தாலடர்ந் தேயளி போநனி சிந்திடுமால். (சுஎ)

(இ-ள்.) கந்தரம் ஆர் தடம் காவின் எலாம் தனிமந்திகள்போய் பனி மென்மலரை நனிசிந்திடுமால் - மேகமளாவிய விசாலமான சோலைகளிலெல்லாம் வலிமிகுத்த வானரங்கள்சென்று குளிர்ச்சிபொருந்தியபூக்களை மிகவாய் உதிர்க்கும், நெடுஞ்சாரல் எலாம் கனி ஆர்தருவின் தந்துளதேன் நந்தியதால்-நீண்ட மலைப்பக்கங்களிலெல்லாம் பழங்கள்நிறைந்த விருக்ஷங்கள் தரப்பட்ட தேன்பெருகும், பைந்தருவீபடும் கூரின் எலாம் அடர்ந்தே அளிபோம்-பசிய மரங்களிலுள்ள பூக்களுதிர்ந்துகிடக்கும் சுனைகளிலெல்லாம்நெருங்கி வண்டுகள்செல்லும்.

(இக்கலியுள் பிரீத்த செய்யுள்கள்.)

வஞ்சித்துறை.

கந்தரமார், பைந்தருவி
தந்துளதே, னுந்தியதால். (சுஅ).

(இ-ள்.) கந்தரம்ஆர்-மேகமளாவிய, பைந்தருவீ - பசியமரங்களிலுள்ள பூக்கள், தந்துளதேன்-தரப்பட்டதேன், உந்தியது-பெருக்கமாயது.

(செய்யுள்.)

தடங்காவி னெலா, நெடுஞ்சார லெலாம்
படுங்கூரி னெலா, மடர்ந்தே யளிபோம். (சுகூ)

(இ-ள்.) தடம்காவின் எலாம்-பெரியசோலைகளெல்லாவற்றிலும், நெடும் சாரலின் எலாம்-நீண்ட மலைப்பக்கங்களெல்லாவற்றிலும், படுங்கூரின் எலாம் அம்மலையிற்பொருந்திய சினைகளெல்லாவற்றிலும், அடர்ந்தே அளிபோம்-நெருங்கி வண்டுகள் செல்லும்.

(செய்யுள்.)

கனியார் தருவின், பனிமென் மலரைத்
தனிமந் திகள்போய், நனிசிந் திடுமால். (எம)

(இ-ள்.) கனியார்தருவின்-பழங்கணிறைந்த மரங்களிலுள்ள, பனிமென் மலரை-குளிர்ச்சிபொருந்திய பூக்களை, தனிமந்திகள்போய்-வலிமிகுந்த வானரங்கள் சென்று, நனிசிந்திடுமால்-மிகவாயுதிர்க்கும்.

(கோமூத்திரி.)

இரண்டிரண்டுவரியாக ஒருசெய்யுள் எழுதப்பட்டு-மேலுங்கீழும் ஒன்றிடைவிட்டு வாசித்தாலும் அச்செய்யுளே வருவது.

கலிவிருத்தம்.

கான கந்தனி லாமணி லேணமே
யேன லந்த னிடமதி லேயுமே
தான நாகமுந் தக்க குகையுளும்
வான ளாநகந் தொக்க குலையுறும். (எக)

(இ-ள்.) கானகந்தனில் ஆம்-காட்டினிடத்து உண்டாகிய, அணில்-அணிற்பிள்ளையும், ஏணம்-மானும், ஏனல்-தினைவிளையும், அம்-அழகிய, தன்னிடம் அதில்-மலைச்சாரலினிடத்து, ஏயும்-அத்தினையினை யுண்ணச்செல்லும், தானம்-யானையின் மதசலமும், நாகம்-கஸ்தூரியும், தக்க-பொருந்திய, குகையுளும்-மலைக்குகையினிடத்து, வான் அளா-ஆகாயத்தையளாவிய, நகம்-மரத்தினது, தொக்க-கூட்டமாகிய, குலை-பூங்கொத்துகள், உறும்-பொருந்தும்.

## கழிகுளம்.

ஒருசெய்யுள் எவ்வெட்டெழுத்தாக நான்குவரி யெழுதப்பட்டு மேனி ன்று கீழிழிந்தும் கீழ்நின்று மேலேறியும் புறநின்று வந்துண்முடிய அவ்வரி நான்குமேயாகி யச்செய்யுளே வருவது.

### வஞ்சித்துறை.

சமழ்க வாவாகும், மரநிழ லய்யேகு
மினிறலு கனெய்வா, கழலுள வாகலவா. (எஉ)

(இ-ள்.) சமம்-மோக்ஷவின்பத்திற்கு, இகவா ஆகும்-குறையாத (இன்பம்) தருவதாகிய, மரம் - மரங்களினது, நிழல் - நீழலில், அய் - அழகாக, ஏகும்-சென்று (உறங்கும்,) மின் - மின்னல்போலும், இறல்-சாம்பாளை, உகன்-ஒருயுக காலமாக (எண்ணிய,) எய் — காட்டுப்பன்றிகளினிடத்து, வா-விரைவையுடைய, கழலுள-கால்நடையுள்ள, ஆ-காட்டுப்பசுக்கள் கலவா-சேராவாம்.

மரநிழலில் உறங்கும் முழுமல தேகியாகிய பன்றியுடன் நின்மல தேகியாகிய பசுக்கள் சேராவென்பது கருத்து.

### சருப்பதோபத்திரம்.

நிரையாக அறுபத்துநான்கறை கீறி எவ்வெட்டெழுத்தால் ஒவ்வோரடியாகத்தொடுத்த நான்கடியு மேனின்று கீழிழியவுங் கீழ்நின்று மேலேறவும் எழுதப்பட்டு, மேனின்று கீழிழியவும் கீழ்நின்று மேலேறவும் முதல்தொடங்கி யிறுதியாகவும் இறுதிதொடங்கி முதலாகவும் மாலை மாற்றாக நான்கு முகத்திலும் வாசித்தாலும் அச்செய்யுளே வருவது.

### கலிவிருத்தம்.

ஏமா றுமா மாறு மாயே, மாறு வீதா தாவீ றுமா
றுவீ யேகா காயே வீறு, மாயே காபூ பூகாயேமா. (எங)

(இ-ள்.) ஏமாறு-சோம்பலில்லாத, மா-மிருகங்களும், மாறு—காய்ப்பு நீங்காத, மா—மரங்களும், ஏம்-இறுமாப்பு, ஆறு-தணியாத, வீ-பக்ஷிகளும்; தாது-தாதுமாதுளைமரங்களும்,' ஆ-காட்டுப்பசுக்களும், ஈயேகா-வண்டுகள்நீங்காத, மால்தாவு-மேகத்தையளாவிய, வீறு ஆ - பெரிதான, கா - சோலைகளும், ஏவு-, அம்பால், ஈறு-பிளக்கப்படாத, மா-பன்றிகளும், பூ-இலைகளையும், பூ-பூக்களையும், காயே - காய்களையுமேஉடைய, கா - மாமரங்களும், ஏகா (அம்மலையை விட்டு) நீங்காவாம்.

சோலை மிருகம் பக்ஷி இவைகள் அம்மலையில் இருக்கின்றன வென்பது கருத்து.

## காதைகரப்பு.

ஒருசெய்யுள்முடிய எழுதப்பட்டதனீற்று மொழியின் முதலெழுத்துத் தொடங்கி ஒவ்வோரெழுத்து இடையிட்டுவாசிக்கப் பிறிதொரு செய்யுள் போதுவது.

## ஒருபோகு கோச்சகம்.

உழலு விபலு கமெய்யே னமலீ
ரழகா ருவநீ ணதிநூ னமிலா
வழியா மெனமா வினன்னிரை மீள்வ
தழும்போ முனிவினர் வாகை விலார். (எச)

(இ-ள்.) உழல்-காட்டில்திரியும், நாவி-கத்தூரிமிருகமும், பல்நாகமும்-அநேகயானைகளும், எய்-முள்ளம்பன்றியும், ஏனம்-பன்றியும், மலி-நிறைந்து, அழகு-சிறப்பமைந்த, நீள்நதி-நீண்டகான்யாற்றுக்கு, மாவின் நல்நிரை-நல்ல மிருகக்கூட்டங்கள், ஆருவ-நீரைக்குடிக்க, ஊனம் இலாவழி ஆம்என-குற்ற மற்ற வழியீதாகுமென்று (செல்ல,) முனிவினர்-வில்லையுடைய வேடரது வாகை - வெற்றிபொருந்திய, வில்தழும்பு-வில்லினுலெய்தகாயம், ஆர்-பொருந்தி, மீள்வ - (அம்மிருகங்கள்) திரும்புவன. ஓ-அசைநிலை.

காட்டிலுள்ள பலமிருகங்களும் கான்யாற்றில் நீர்குடிக்கச் சென்று வேடர்வில்லாலடிக்கத் திரும்பினவென்பது கருத்து.

## காதை கரப்பிற் கரந்தது.

வானணி போழுவ
மீனின மாமெழி
லானதி நீருழ
லீனமெ னுவிழ. (எரு)

(இ-ள்.) வான் ஆம்-ஆகாயகங்கையிலுள்ள, மீன் இனம்-மீன்கூட்டங்கள், நீர்உழல் - அந்நீரில்சஞ்சரிப்பது, ஈனம்எனு-இழிவென்றெண்ணி, எழில்ஆ-அழகாகிய, நதி-அந்தக்கான்யாற்றில், விழ-வந்தடைய, நனி-மிகவும், போழுவ-(ஆகாயத்தைக்) கிழிக்கின்றன.

ஆகாயகங்கையிலிருக்கும் மீன்கள் கான்யாற்றில் வந்தடைய ஆகாயத் தைப்பிளக்கும் என்பது கருத்து.

## உபயநாகபந்தம்.

இரண்டு பாம்புதம்முள் இணைவனவாக உபதேசமுறையால் வரைந்த வற்றுளிரண்டுகவி யெழுதப்பட்டுச் சந்திகளினின்ற எழுத்தே மற்ற விடங் களினும் உறுப்பாய் நிற்கவருவது.

## கலிவிருத்தம்.

தீம்பு னாகமுந் தேடளி நெல்லிபு
மாம்புல் மாவரை மன்பிர தனாத்தியால்
வேம்பு வேல்வனி நாகு புளிமர
மோம்பு கின்றதேக் கென்வள னோதுகேன். (௭௬).

(இ-ள்,) தீம்-மாதுரியம்பொருந்திய, புனாகமும்-புந்நாகமரமும், அளி தேடுநெல்லியும்-வண்டுகள் இரைதேரும் நெல்லிமரமும், மாபுல்-பெருமையுடைய சோதிப்புல்லும், மா-மாமரமும், வரை-மூங்கிலும், மன்பிரதன்-பெருமை வாய்ந்த சூரியனையளாவிய, ஆத்தி-ஆத்திமரமும், ஆல்-ஆலமரமும், வேம்பு-வேப்பமரமும், வேல்-வேலமரமும், வனி-வன்னிமரமும், நாகு-இளமைதங்கிய, புளிமரம்-திந்திருணிமரமும், ஓம்புகின்ற-பாதுகாத்துவளர்க்கின்ற, தேக்கு-தேக்கமரமும் (உடைய,) வளன்-(அம்மலையின்) சிறப்பினை, என் ஓதுகேன்-யாதென்று சொல்லுவேன். (பலவித விருக்ஷங்களும்) (அம்மலையில் உள்ளனவென்பது கருத்து.)

## ஷை இரண்டாவது.

தும்பி காரிவேங் கையனு கந்தரை
பம்புந் தூயெலி மன்கெ வுளியரி
பைம்பொன் மாமுசு வன்காரி புன்னரி
பைம்பு னந்தகைப் பீலியென் னொய்விலை. (௭௭)

(இ-ள்.) தும்பி-யானை, காரி-கரிக்குருவி, வேங்கை-புலி, அல்நாகம்-கரும்பாம்பு, தரை பம்புந்தூய்எலி-பூமியில்மிகுதியான வெள்ளெலி, மன்கெவுளி-நிலைபெற்றபல்லி, அரி-சிங்கம், பைம்பொன்மா-அழகிய பொன்னிறமுடையகுதிரை, முசுவன்-கருங்குரங்கு, காரி-கிளி, புல்நரி-அற்பகுணமுடையநரி, தகைபீலி-அழகியமயில் (இவைகள்,) பைம்புனம்-(அம்மலைப் பக்கங்களிலுள்ள) தினைப்புனத்தில், ஓய்வுஇலை-ஒழிதல் இல்லை. (பலவித மிருகங்களும், பக்ஷிக்கூட்டங்களும் அந்தமலைச்சாரலிலுள்ளதினைப்புனத்தில் நிறைந்திருக்கின்றனவென்பது கருத்து.)

## மாலைமாற்று.

ஒரு செய்யுளின் ஈற்றெழுத்தை முதலாகக்கொண்டு கீழ்நின்று வாசித்தவரின் அச்செய்யுளே வருவது.

தேடா விகா சேமா லாரா
வாடா வாழ தாதே யாமா
மாயா தேதா ழவா டாவா
ராலா மாசே காவி டாதே. (௭௮)

(இ-ள்.) தேள் தா வீ கா-வானத்திலுள்ள விருச்சிகராசியைத் தோயாநின்ற புட்பங்கள் நிறைந்த சோலையிலுள்ள, சே மால் ஆர் ஆ வாடா-எருதுகளும் பெருமையுடைய காட்டுப் பசுக்களும் உடல்வாடாவாம், வாழை தாது எய் ஆ மா மாயா - வாழைமரமும் மகரந்தம்பொருந்திய ஆச்சாமரமும் மாமரமும் (எந்நாளும்) அழியாது, தே தாழை வாடா வார் ஆல் ஆ மா சேகு ஆவீடாது - கடவுள் (விரும்பாத) தாழைமரமும் கெடாத நீண்ட ஆலமரமும் ஆச்சரியத்தைத் தரும் அழகமைந்து வலிமிகுத்தனவாகி (அம்மலையில்) கெடாதிருக்கும், எ-ஈற்றசை.

அந்தக் கயாரணியத்திலுள்ள மிருகங்கள் உடல்வாடாதென்பதும் அம்மலையிலுள்ள மரங்கள் கெடாதென்பதும் கருத்து.

## ஏகபாதம்.

நான்கடிகளும் ஓரடிபோல் நின்று பொருள் வேறுபட்டு நிற்பது.

### கலித்துறை.

வானம் பரந்துடைக் குங்கயி லாயத்தன் வண்கிரியே
வானம் பரந்துடைக் குங்கயி லாயத்தன் வண்கிரியே
வானம் பரந்துடைக் குங்கயி லாயத்தன் வண்கிரியே
வானம் பரந்துடைக் குங்கயி லாயத்தன் வண்கிரியே. (எகூ)

(வேறு.)

இவைபல வுடைய தென்கயி லாயத் திறைவனை யிம்பரி லனந்தந்,
தவமுனி வரரு மும்பரும் விலங்குஞ் சதுமறை விதியினு மதற்குத்,
தவறுறும் விலக்கு வழியினும் பூசைத் தகைபெறப் புரிந்துனத்
துற்ற, கவலையை யொழித்துப் பவக்கடல் கடந்து கருத்தரு மின்ப
மெய் தினரால். (அμ)

இத்தகை யாங்கா ளத்திநா தன்வா ழியற்பதி தனக்கிதை யிணையாய், வைத்தரன் றன்னை யருச்சியென் றுரைசெய் வாக்கையெவ் வாறுநம் புவல்யா, னுத்தம நின்சொ லுண்மையென் றெண்ணு தொருவவு மனந்துணி கில்லே, னத்தனுங் காளத் தீசனு ரருளெவ் வளவதோ வறிகிலே னென்றான். (அக)

என்றுரை மறையோ னுளத்துளன் பினையு மியைந்தவை ராகமுமெண்ணி, நன்றுநன் றென்று நகைசெய்தே நம்பனு மறையவ னுரைப்பான், குன்றெனுங் கயிலைக் காசிகா ளத்தி குறைவில் சீர் காஞ்சியா மிவைகள், பொன்றிகழ் சடிலத் திறைவன்வாழ் தலத்துட் புனிதமா மித்தல மதனுள். (அஉ)

உமையவ டக்க னியமன்வான் மீகி யுபேந்திர னும்பர்கோ னுல
கச், சுமைகொளுஞ் சேட னயன்வெண் மலராள் *சுபாங்கியின்
னிவர்தொழு நர்களு, மமையெனுந் தோள்கொ ளுமையுமுன் மைந்த
னாகிய வைம்முகனை வியாதனை, †சமையொரு மூன்றிற் றேடுடைப்
பாடற் சாற்றினோ னிவர்தொழுந் தலமாய். (௮௩)

எத்தகைப பிரள யத்தினு மழியா திருத்தலிற் பிரளய சித்தென்,
றெத்திசை யவரும் புகழ்திரு நாம மியைதரப் பெற்றுவா னவருஞ்,
சித்தரும் பரவும் புகழுடைக் காஞ்சித் திருநகர் சிறந்ததா மதினு,
முத்தம மறையோய் சிறந்துள தலமொன் றுளவதை யுரைப்பன்கே
ளுதியால். (௮௪)

சுரர்தொழுஞ் சுரபித் தீஞ்சுவை யமுதந் தொக்குமீஇ யிழுமென
விரங்கி, வரர்முனி வரர்கள் வசித்திடு நந்தி வரையினி லிருந்திரு
பாலு, நரர்முதற் றேவர் தரிசன வளவி னன்கதி புகுத்தலே வீசி,
யிருமருங் கரசா லாரமா ‡விளவி னெழினிழ ருக்குபா னதியும். ()

தெங்குகச் சூரங் கமுகுசீ தாளஞ் சேணள வுயர்ந்திடு பனையு,
மங்கைமா துமையி னுடலினுற் பவித்து வதிரதப் பட்டவிம் மிதமு,
மெங்கணு யகியாங் கௌரியு மிடப தேவனு மிறைஞ்சிடு சிறபபுந,
துங்கமாம் விலாச காஞ்சியென் றுரைக்குஞ் சொல்லெழுத் ததிகமு
முளதாய். (௮௬)

எழுதரு மறையி லிசைத்தபன் மனுவி §லெழுமைகா யத்திரி
யெய்ப்பய், பழுதறு முலகி னுள்ளநற் றலங்கள் பலவினுஞ் சிறந்
தெவ ராலுங், தொழவுள விவ்வி லாசகாஞ் சியினிற் றாயபா லிக்
கரை மருங்கின், வழுவற வமல பூசனை யியற்றி வழுத்துதி
யரனெதிர் வருமால், (௮௭)

ஈதுகா ளத்தி காதனு ருரையென் றெண்ணுதி யென்சொலென்
றெண்ணேல், தோதக மலமெய்ச் சுகமுறத் தின்னஞ் சோகநீங்
கெனச்சொலி மறைந்தான், பாதகர் களுக்கு மெனுக்கறி வரிய
பரமனு ளன்புளார்க் கென்று, மாதவன் போலு மொளிகொளு
முருவா யமர்ந்துளத் திருந்தரு ளமலன். (௮௮)

---

* சுபாங்கி-இரதி. † சமை-வருடம்.
‡ விளவின்-விளாமரத்தின்.
§ எழுமை-உயர்ச்சி.

கைப்படு நெல்லிக் கனியெனப் பரனைக் கண்டனன் றேறிலே னென்னு, மெய்ப்புள கருமப நாத்தமே மாற விம்மித முற்றமனத் தினனாய், வம்புரை கூந்தன் மடநலாய் வந்த மன்றயவ னம்மையாட் கொள்ளு, மொய்யிலாக் காளத் தீசனு ரைத்தநா முணர்கில மென மொழிந் தனனால். (அகூ)

வேதமே தியனுஞ் சிவபிரான் மொழிந்த விதிப்படி யியற்றுள்தெ ன்னு, மாதர்மென் றரங்கக் கரங்கள்ாற் றரள மணியினை யிருமருங் கொதுக்குந், தீதிலாப் பாலிக் கரையினிற் சிறந்த சிவபிரான் றனை யுந்தென் முகமாய், தாதவிழ் மலர்மேய் புலமலர்க் கோதை தன்னையும் பதிட்டைசெய் தனனால். (கூ0)

தந்துவச் சேட்டை யொழிந்திடச் சுழுத்திச் சாருதல் போற்பல விருக்கந், தத்திடும் பறவைச் சாதியி னொலியுந் தழங்குத லின்றியல் மருவ, வத்தலை தடித்தா மரையுளத் திருத்தா தகம்பல் முறுமன மென்ன, வொத்திருண் டனமும் ஞெளிகளிர் தோங்கி யுயர்தலை யுடையவவ் வானம். (கூக)

இச்சிவ னிசியி லெம்மையாள் காளத் தீசனே டிடமதி லமருங் கச்சணி திதலை யரும்பிள முலைஞா னம்மையுங் கனவயி டைக மிச்சையர்ங் வேத விதிப்படி யியற்ற லெண்ணிய மனத்தனாய் நியம முச்சித மாருந் தானபா னுதி யுறுதொழிற் குறைவற முடித்து. ()

சுத்தியைந் தியற்றி பீர்தில நெய்மாத் துளரி சணரிகலி முள்ளரி, வித் தக வானோந் துங்கிரு தியம்பால் வெண்டயி னரயமு தம்மா, கொத்துதிர் கதலி மாதுளை முருக்கு கூர்தம ரத்தைநா ரத்தை, தித்தியங் குளஞ் சித் தேன்திரட் டியபால் செங்கரும் பாட்டுதீஞ் சாறும். (கூ௩)

நாரிகே ளப்பா னியரு லன்னம் நளிர்தரு வில்வநீர் பொன்னீர் பூரணந் தெழுரத் தோதகம் பஞ்சகர்ப் பூர்வா சம்புனு கார மலரணை விதியி னடைத்திடு தாமரை யற்புதக் கலசநீ ரிவைகள், காரணந் தவறு தொன்றனியி னுன்றுய்ப் காளத்தி யாண்டவன் றனக்கு. ()

நிசியினி ஞன்கு யாமமுந் தவறு நியமமாய்த் திருமுழுக் காட்டி, பிசைபெறு பூதி சந்தனத் திலகமிட் டெழுந் தக்கனத் தூபித், திசையி னிற் கமழ்தன் சிந்துபூ மாலை சிறந்திடச் சாத்தியேவண் டேசு, முசித மோ டணிந்தி *ராகமார் மணிப்பூ ணுகலணி புரமனுக் கணிந்தே.

---

*இராகம்-இரத்தம்.

சருக்கரை பாகு திரட்டுபொற் றெங்கு ததிமரு வோதன மருத்தி
விருப்புறு பாகு வெள்ளிலை யுதவி விரைகமழ் தூபதீ பந்தோர்
திருத்தகு நக்கத் திரமிணை மூன்று சீருறு பஞ்சம நாகங்
கருத்திரு நான்கு கயல்பஞ்ச தட்டு காயத்ரி வக்கதை கும்பம். ()

ஆகுமித் தீப மானதோ டைந்தா யமர்கினை கருப்புரச் சோதி
வாகுட னெடுத்துக் கஞ்சனங் கவிகை வானிறக் கவரிநற் சிவிறி
ஆகம விதியி னெறிமுறை யுதவி யமலபூ சையைமுடித் தாங்கே
யோகையா வெழுத்தைந் தோதியே வலம்வந் துளமகிழ்ந் திணையுண
வுணைப்பான். (௯௭)

(வேறு.)

புரியார்முகை விரியப்பணி பூந்தாது குடைந்து
விரைசார்மது நுகரும்வரி மேவுந்திரு வணியல்
வரைசேர்புய மீதேகொளும் *வாருக்கிட ரேசெய்
தருதார்புர மெரிசெய்தருள் காளத்தீச் சுரனே. (௯௮)

வாரார்குய ஞானம் பிகை வலமேவிய வள்ளால்
சீரார்தரு மகவேற்கருள் செய்தாயதன் கைம்மா
றூராயிலெ னுடலாவியொ னல்லாற்பிறி தில்லேன்
காரார்பொழில் சூழ்தாலயில் காளத்தீச் சுரனே. (௯௯)

சிறுசீறடி மகவேற்கருள் செய்தாய்வினை கொய்தாய்
மறுவற்றிடு மறையோனென வந்தென்னை யளித்தா
யுறுமுத்தொழி லுனதென்பதை யென்மட்டி லுணர்ந்தேன்
கறையுற்றிடு களமார்தரு காளத்தீச் சுரனே. (௱)

வேலாயுத னையுமங்குசம் வேய்ந்தோனையு முதவுஞ்
சேலாகிய விழியாயிடர் தீரும்படி யடியேன்
பாலாகியே யருணல்வரம் பாரோர்துதி பணைசை
சாலாரண முடிமீதுறை ஞானம்பிகை யுமையே (௱௧)

அறமுற்றினு மீராழிநெல் லதனாற்செயு மனையே
பிறவித்துய ரதிலெய்த்திடு பேயேற் கருள்செய்வா
யறவர்க்குறு மிடமாய்திரு வழகார்தரு பணைசை
நறவக்குழ லிசைவண்டுறை ஞானம்பிகை யுமையே. (௱௨)

* வார்—தேவர்.

எண்ணும்பொறி புலன்மாழ்கமிக் கிடர்பட்டறி வழிய
வண்ணாற்றரு மன்சேர்பொழு தடியேனிட மணுகித்
திண்ணார்தரு குடிலைப்பொருள் செவியிற்புகல் பனைசை
நண்ணும்மலை மகளாகிய ஞானாம்பிகை யுமையே. (௯௩)

இவ்வாறு துதித்தேதொழு மறையோர்க்கரு ளீவா
னெவ்வாவெழின் ஞானாம்பிகை யுடனேடிட பத்திற்
செவ்வேளிப முகவன்றிரு மாலோடயன் மேவக்
*கவ்வையறிய நெஞ்சுள்ளவர் காணாவரன் வந்தான். (௯௪)

(வேறு.)

வந்துமயனமால காணா வள்ளலை மறையோன் றானுஞ்
சிந்தையி லார்வம் பொங்கத் தெரிசித்து வணங்கி யேத்த
கந்தனை யளித்தோ னன்பாற் கருதிய பொருளை யெல்லா
முந்துற மொழிதி யென்ன முகமலர்ந் திவையு ரைப்பான். (௯௫)

விரிஞ்சன்மான் முதலா யுள்ள விண்ணவர்க் கரிய வுன்றன்
றிருந்தெழில் மேனி தன்னைத் தெரிசித்தேன் விழிகள் முன்னம்
புரிந்துள தவத்தி னாய புணர்ப்பினை யறியே னின்னைப்
பரிந்துள மகிழ்வாய்ப் பூசை பண்ணுநல் வரமு மின்னும். (௯௬)

இமையவர் பரவு மிந்த வெழில்பெறு கேத்தி ரத்தி
னுமையுட னகலா தென்று முறைந்தருள் வரமு மன்பா
னிமலவுன் றனைப்பூ சிப்போர் நினைத்துள வரமு முன்றன்
கமலநேர் கழலி லென்னைக் கலந்தருள் வரமு மீவாய். (௯௭)

(வேறு.)

எனப்பூ சுரனீ திசைத்திடலு மிமவான் மகணா யகன்மகிழ்ந்துன்,
நினைப்பின் படியா மெனவிசைத்து நிகரொன் றில்லாச் சிறுவன்
மிசை, மனப்போ தினிற்பே ரருள்பெருகி வாயாற் பின்னு மரு
†மதலை, நனைப்போ தணிந்த பொலன்வேணி நாத னிதனை நவிற்
றுவனால். (௯௮)

---

* கவ்வை-தீங்கு. † மதலை-கொன்றை.

திருமா றுறையு மித்தலத்திற் செழுமா மணிப்பொற் சினகர
மொன், றருமா மறையோ ரெமக்கியற்றி யருளில் சுகபோ கங்க
ளுவார், திருமா வினையை யொழித்தெனது மிணையா ரடியி லெய்து
மென, வருவா யுருவாய் நின்றிலங்கு மையணிலிங்கத் தடைந்
தனனால். (௱௯)

(வேறு.)

எல்லையி லுவகைக் கடலினுண் மூழ்கி யிருக்குணர் மறையவ
னீசர்க், கொல்லையிற் றளியு முணமக்குச்சே திமமு முனுற்றிமெய்ப
பத்தியிற் றவரு, தல்லுநன் பகலு மருச்சனை பலவு மருமறை விதிப்
படி யியற்றிச், சொல்லருந் தலத்திற் பற்பகல் செல்லச் சுதனொடுந்
துணையொடு மிருந்தே. (௱௰)

பிறையணி முக்கட் பிஞ்ஞக னருளைப் பெருந்துணை யாக்கொடு
தான்மு, னுறைதரு பதியிற் புகுந்தனன் பின்ன ரொப்பிலத் தாலை
யம்பதியிற், கறைகளக் காளத் தீசனுந் தன்னைக் கருதுறு மடியவர்
தமக்குக், குறைவறப் புத்தி முத்திக ளியாவுங் கொடுத்தினி தமர்ந்
தன னன்றே. (௱௧௧)

திருக்காளத்திச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-ருகங.

# இந்திரன்பூசணைச்சருக்கம்.

கருதார்கள் புரமூன் றினுந்தீ யெழச்செய்த காளத்தியீச்
சுரநாதர் கதைகேட் டுவந்தோ மருந்துண்ட சுரர்வாழ்புரிக்
கரசாயி னானவ னருச்சித்த தோதென்று மருமாதவர்க்
கொருவாத தவவாய்மை யுளசூத முனிபின் புரைக்கின்றனன். (௧)

(வேறு.)

உயரத முடையவ னோங்க யோத்திம
னயரத மொழியின னாம வேலினான்
றயரத ரிடைச்செயுஞ் சோரற் காய்ந்தவன்
றயரத னெனும்பெயர் தாங்கு செம்மலே. (௨)

சத்திரஞ் சாதுர்மா சியமு னாமகங்
*குத்திரத் தியற்றியுங் கோளர் தஞ்சிரந்
தத்திர தம்பரி தாக்கி வெற்றிகொள்
புத்திர ரிலாமையாற் புழுங்கி னொந்தனன். (௩)

†விசிட்டமே வுறுதவ விரதம் பூண்டுள
வசிட்டனுந் தனையர்மேல் வாஞ்சை வைத்துளம்
‡நொசிட்டநீ நோன்பரா லியாகஞ் செய்தநி
¶னுசிட்டமே பெறுவையே லுறுமென் றோதினான். (௪)

கேட்டவவ் வளவினிற் கிளரு மாமக
நாட்டவல் லவரெவர் நவிலெ னக்கலைக்
கோட்டுமா முனியலாற் கூடி டாதவர்
நாட்டினிற் கழையென நாதன் கூறினான் (௫)

எவ்வுழி யருந்தவ னிருந்து ளானவ
னிவ்வுழி வருவதற் கியையு மோவெனத்
தெவ்வுழித் திறம்பெறு முரோம பாதனு
டவ்வுழி யமர்ந்துளா னணுகி லெய்துவன். (௬)

---

*குத்திரம்-விரைவு. †விசிட்டம்-மேன்மை.
‡நொ-துன்பம், சிட்ட-சீடனே, நோன்பர்-தவசிகள்.
¶ உசிட்டம்-உச்சிட்டம்.

என்னலு முனிவனை யிறைஞ்சி மன்னவன்
றன்னருஞ் சேனைதற் சூழ ரோமபா
தன்னக ரடைந்துநற் றரும சீலனம்
மன்னவற் கண்டுள மகிழ்வு கூர்ந்தனன். (எ)

துன்னுழி யடைந்தவத் தயர தன்பதப்
பன்னருங் கமலமேற் பணிந்து ரோமச
னென்னைநீர் வேண்டியிங் கெய்தல் கூறெனத்
தன்னருங் குறையினைச் சாற்ற லுற்றனன். (அ)

மைந்தனில் லாக்குறை மனத்து ணீங்குதற்
கைந்தடர் வசிட்டன தடியி றைஞ்சினேன்
கொந்தலர் சடைகலைக் கோட்டு மாமுனி
வந்திடி லுன்னெணம் வாய்க்கு மென்றனன். (க)

அம்முனி யுன்பதி யமர்ந்தி ருத்தலின்
செம்மனீ யவனையென் னோடு சேர்த்துமா
வெம்மைசெய் மனக்குறை விலக்க வேண்டினேன்
பொய்ம்மையி னெறியுடைப் புநித வென்றனன். (ய)

மன்னவற் கரையவுன் வாய்மை யின்படி
யுன்னருங் கலைமுனிக் குணர்த்தி யாமுனின்
பொன்னக ரடைகுவன் பொருந்து சேனையோ
டென்னக ரடைகென வுற்று ளானரோ. (கக)

உற்றபி னுரோமபா தோங்க னான்முறைக்
கற்றவ ரியாவருங் கைதொ ழுந்திறத்
துற்றதன் மருகனுக் குரைத்த ழைத்துடன்
பொற்றடந் தேரினிற் பொருந்தி னனரோ. (கஉ)

யானையு மிரதமு மிவுளி யீட்டமுந்
தானையு முவரியிற் றன்னைச் சூழ்தரப்
பானுவின் குலத்திறை பதியை யண்மியே
மானவி லொற்றரால் வரவை யோதினான் (கங)

(வேறு.)

விலைக்கோட்டி மலர்க்கணைவெய் வீரமதன் காமவெறி
வலைக்கோட்டுங் கண்மாதர் வரவறியா மேவந்தோன்
றலைக்கோட்டுந் தரித்துலகில் சார்ந்துவரு தாபதனுங்
கலைக்கோட்டு முனிவரனைக் காதலுடன் கேட்டுவந்தே. (கச)

இரண்டொருயோ சனைதூர மெதிர்சென்று முனிவர்பத
மிரண்டொருதன் முடிவணங்கி யெம்பிரான் வருகவெனத்
திரண்டபுயத் தயரதமன் றிருமதலை யுடன்கொடுபோ
யரண்டருமா ளிகையினிற்சிங் காதனத்தி விருத்தினனால். (கரு)

மக்கட்பே றின்மையினம் வசிட்டனும்மா லெய்துமெனப்
பக்கமுட னுரைத்தனனெம் பரிவகல வப்பேற்றை
யிக்கணத்திற் சுதன்மகம மியற்றியருள் கெனவேண்ட
வக்கலைக்கோட் டருந்தவனுங் காகுகவென் றியைந்தனனே. (கசு)

மகப்பொருளைக் குறைவின்றி மன்னுதவ வாறிருது
மகப்பொருடோர் கலைமுனிவ னாற்றியா குதிநிறைக்க
மிகப்பெரும்பூ தஞ்சிரசின் மேற்*கூழ்தட் டிற்பிண்டஞ்
சுகப்படக்கொண் டினிதுதவித் துண்ணெனச்†சித் தொளித்ததுவே.

அச்செழிய வமுதினையாங் கருந்தவன்சொற் படியேந்தன்
கச்சணிமென் முலைமாதர் காரிகையார் மூவருக்கு
மெச்சமிலா தளித்துவகை யெய்துதய ரதமன்னன்
‡கொச்சையிலா வுலகனைத்துங் கொண்டாட விருந்ததற்பின். (கஅ)

ஆசலைசெய் யைங்கணைபோ லைம்பொறியா லலைவுண்டே
யூசலைப் போன் மனமுழலா தொடுக்குதய ரதன்மனையாங்
கோசலைதன் றிருவயிற்றிற் குழவியென வவதரித்தான்
வீசலைகொள் பாற்கடலில் விழிதுயிலு மாதவனே. (க௯)

மொய்§§கேசி போலிடையு மொய்த்தநறு மணங்கமழு
§மைகேசி யன்னநடை மௌவனகைக் கொவ்வையிதழ்க்
கைகேசி பெற்றெடுத்தாள் காதலனுக் காதலொடு
¶கைகேசி சூதனன்றன் கரத்திலமர் படையையரோ. (உ௰)

‖சமுத்திரைகொ ணன்/னடையுந் தூயுடையு நற்குணமும்
(*) விமுத்திரையாஞ் செம்மேனி விரைகுழலாள் மனமுவந்து
(†) சமுத்திரையி லெழுமமுதந் தனைநிகரா மவியுண்டு
சுமுத்திரையி லக்குவன்சத் துருக்கனையுந் தானீன்றாள். (உக)

---

* கூழ்-பொன். † சித்து-யூகம். ‡ கொச்சை-இழிவு.
§§ கேசி-சிங்கம். § மைகேசி-கறுத்தமயிர். ¶ கைகேசி சூதனன் என்பதில்,
கை-ஒழுக்கம், கேசிசூதனன்- கண்ணன்.
‖ சமுத்திரை-நிதானம். / நடை-ஒழுக்கம். (*) விமுத்திரை-பூந்தளிர்.
(†) சமுத்திரை-சமுத்திரம்.

மக்களைப்பெற் றெடுத்தரசன் மாநிலத்திற் களிதூங்க
மிக்ககலை களைப்பயிற்றி மிகுவாழ்வி லிருந்திடுநாட்
டொக்கமுனி வரரோடுந் தூயகவு சிகன்வேண்ட
லக்கணமே ராகவனை யனுசனுட னனுப்பினனால். (௨௨)

ஏராருந் தாடகைசெற் றேய்ந்தவரு மகமுடித்து
வாராருந் தனமாக வழியினுறுகன்மிதித்து
*நீராரு மிதிலையிற்போய் நெடியவிலை முறித்ததற்பின்
சீராருங் குழலுடைய சானகியைக் கைப்பிடித்தான். (௨௩)

அத்திரநே ரம்பகச்சா னகியோட யோத்திநகர்
புத்திரனோர் தலைக்கண்டு புளகரும்பத் தயரதனு
†மித்திரனே ராதனத்தின் மீதிருத்தி யிவ்வுலகைச்
சத்திரநீ ழலிலரசு தான்புரிய வருள்செய்தான். (௨௪)

இத்திறங்கை கேசியறிந் திருண்டபெருங் கான்புகுதக்
குத்திரத்தாற் கலைக்கயிலக் குவனொடும்வை தேகியொடு
மத்திரமாய்த் தாய்மொழியை வரிசிலையோ னுளத்தமைத்துச்
சித்திரகூ டப்பொருப்பைச் சேர்ந்திருக்கு மமையத்தே. (௨௫)

வானவர்கோன் மகனொருநாண் மண்ணுலகின் வனத்தெய்திக்
கானமர்பூஞ் சோலையின்வாய்க் களித்திருக்குங் காகுத்தன்
பானலஞ்சொற் பன்னியெழிற் பண்புணர்ந்து காமுகனாய்த்
தேனலரும் பூங்கணையாற் சிந்தையுழன் றனன்மாதோ. (௨௬)

விரகமுறு மனனாகி விளைவதுமே தறிகிலனா
யரிவைதனைச் சானகியா ளங்குயர்ந்தீண் டிடக்‡கொடியி
னுருவினனாய்ப் புகலரிய வுன்னதஞ்சேர் தவச்சாலை
யொருவிலளா யாங்குறையு மொண்டொடிபா லுற்றனனால். (௨௭)

கரியநிறச் சுரிகுழலுங் கணைபுரைசே யரிக்கண்ணும்
விரிகதிர்மா மதிநுதலும் விளங்கெழிற்சண் பகமூக்கு
மெரிநிகர்மா மணிக்குழைக ளிலங்குமக ரச்செவியுந்
துரிசறுவித் துருமவிதழ்த் தூத்தரள வின்னகையும். (௨௮)

வலம்புரிநேர் கந்தரமும் வாடுகொடி போனுசுப்பு
நலம்பெறுமும் மடிவயிறு நற்கனியாம் பெருந்தனமுந்
தலம்புகழுங் §கவர்தூங்குஞ் சரத்தூணிக் கணைக்காலுஞ்
சலங்கெழுதா மரையடியுந் தனிக்கலனு ரவயவமும். (௨௯)

---

* நீர்-சலம். † மித்திரன்-சூரியன். ‡ கொடி-காக்கை. § கவர்-வாழை.

உடையதிருச் சானகியா மொண்டொடியு மொருதனியா
யுடையளிது போதுளத்தி னுறுமென்ன முடித்துமெனக்
கொடியுருவா கியசயந்தன் கூர்நகத்தாற் றனங்கீண்ட
வடிவுடைவேற் றயரதன்சேய் வந்தெதிர்ந்து கண்டனனால். (௩௰)

விங்கமலை யனையபுய விறல்வேந்தன் கோபமனத்
துங்கமருங் குளதருப்பை யொன்றெடுத்தோ திமமுயர்த்தோன்
மந்திரமுச் சரித்துயினா வவ்வாது தொடர்கென்னச்
சிந்துதலுங் கணைதுரத்தத் தெருமரலுற் றோடினனால். (௩௧)

அரியிடத்து மயனிடத்து மபயமெனச் செலவவருங்
கரிசறுமிக் கணைவிலக்கக் கருதலர்முப் புரநகையா
லெரிபடுத்தோன் றன்னாலு மிசையாதக் காகுத்தன்
விரைமலர்த்தா ளடைதியென மீண்டவன்றாள் வீழ்ந்ததுவே. (௩௨)

அஞ்சலென வந்தவரை யாதரிப்போ னுதலினாற்
றஞ்சமென வந்துசரண் டழுவியவா யசநோக்கிக்
கஞ்சமலர்க் கண்ணொன்றே கணைக்கிலக்கா யிந்தசுர
வஞ்சகரி னிவ்வனத்தில் வாழுதியென் றுரைத்தனனால். (௩௩)

அம்மொழியேற் றவ்வனத்தி லடசுர னுய்க்காரி
தம்மதலை யெமதுபிரான் றன்னருளில் லாதவர்போற்
செம்மையுறு குலத்தருமஞ் சிறிதின்றி யுயிர்க்கிடர்செய்
தும்மைவினை வந்துலப்பத் தமகுணமுற் றுறைந்தனனே. (௩௪)

(வேறு.)

இவ்வகை யெலாஞ்சுரர்த மிறையவ னறிந்து
கொவ்வையிதழ் கொண்டவயி ராணியொ டரன்வா
ழவ்வரை யடைந்திடப வுண்ணலடி தாழாச்
செவ்விதி னுரைத்தெனிடர் தீரென விரந்தான். (௩௫)

வானவர்க ணாயகன் வருத்தமொழி கேளா
ஞானவெளி தன்னினுறை நந்தியு னயந்தே
தானவர் முடித்தலை தடிந்தகுலி சத்தோ
யூனமுறு தீவினை யொழிக்கவழி கேண்மோ. (௩௬)

புந்தியில னயசுரர் போலிட ரிழைக்கு
முந்தன்மத லைத்துய ரொழிந்திடுக வேவ
*சுந்தரையி னூழ்வழி தொடர்ந்துள பவத்தைச்
சிந்திடுமோர் தாலநக ருண்டவை தெரிப்பாம். (௩௭)

* வசுந்தரை-பூமி.

தாலமிசை மேன்மையுறு தாலங்கள் தன்னி
னீலிமயி லாயிடயம் நீள்புலியு மாகி
பாலவிட முண்டருளு மையனடி யேத்திக்
கோலமுறு தன்வடிவு கொண்டனர்கண் முன்னம். (நஅ)

இத்தகைய மாநகரி லெய்தினர்க ளீசன்
பத்தியொ டருச்சனைகள் பண்ணினர்கள் வாயாற்
புத்தியொடு சேயவடி போற்றினர்கள் வீடாஞ்
சித்தியடை வாரதன் சிறப்பெவர் தெரிப்பார். (நகூ)

அத்தல மதற்குன தருஞ்சுதனொ டுண்மிச்
சித்தமொரு மித்தரிய சீதமலர் கொண்டவ்
வத்தனடி யைத்தொழுவை யாயினம சர்க்கு
ளுத்தம மனக்குறை யொழிந்தருளு மென்றான. (சய)

என்றுசொலு நந்தியிறை யின்கழ லிறைஞ்சிக்
குன்றின திருஞ்சிறை குறைத்தவ னெழுந்து
துன்றுசசி யோடவனி துன்னுமக னோடுஞ்
சென்றன னிரும்பனைசை சோந்தரனை யோர்ந்தான். (சக)

ஓர்ந்தன னருங்குமர னோடுசிவ கங்கை
சேர்ந்தனனின் மூழ்கிமதி சேகரனை நேர்ந்தின்
பார்ந்துடல் மயிர்ப்புள கரும்பநனி யாசை
கூர்ந்தரனை வானவர்கள் கோன்*சபரி செய்வான். (சஉ)

ஆலமர் களத்திறை யருச்சனை யியற்ற
வேலுமுப கரணமுள யாவையு மெடுத்தே
சீலமுட னெய்திடு கெனச்சிலரை யேவக்
காலினும் விரைந்தமரர் †கற்பம தடைந்தே. (சந)

ஐந்தரு வளித்திடுபொன் னுடையணி வாசச்
சந்தன நெடுங்கழை சருக்கரை மதுக்கால்
கொந்தல ரலங்கல்கனி கோற்பிரச மோடா
னைந்தமுது வானுதக மாமிவை யனைத்தும். (சச)

குறைவற விமைப்பிலவர் கொண்டணுகி தேவ
ரிலறயினை யடித்தொழு திருந்தினி தளிக்க
மறைமுறையின் மஞ்சனம தாட்டிமலர் சூட்டி
கறையுறு களப்பரனை ‡காரிதுதி செய்வான். (சரு)

---

* சபரி-பூசை. † கற்பம்-தேவலோகம். ‡ காரி-இந்திரன்.

(வேறு.)

அருவா யுருவா யருவுருவா யகண்டா காரப் பேருருவாய்
வருவா யடியர் பவத்துயரை வாட்டி யோட்டி வினைவலியாற்
றருவா யகப்பட் டுழலாமற் கழலார் பதுமத் திருவடியைத்
தருவா யென்ப தறியாமற் றளர்ந்தேன் கருணைப் பரஞ்சுடரே. ()

ஒன்றா யிரண்டா யைந்தாகி யுயர்வான் முதலா யையைந்தாய்
நன்றாய்த் தீதாய் நடுவாகி ஞாலங் காத்த நாயகனே
குன்று முலைசுந் தரவுமைதன் கொழுந வமரர் தினம்பரவு
மூன்று ளடைந்தே னல்வினைவந் துலப்ப வடியே னுய்ந்தனனால். ()

அடியார்க் கெளிய னெனவுலக மறைதற் கேற்க வெண்மதலை
கொடியாக்கொண்ட வுருவகற்றிக் குறைதீர்த் தெனையு னடியரிலோ
ரடியா னெனவிவ் வுலகியம்ப வருள்வா யெனவுன் பாலடைந்தேன்
கடியார் கொன்றை முடியுடையோய் காவா திருத்தல் கடனன்றே. ()

என்னு வாகண் டலனிசைப்ப விறைவன் களிகூர்ந் திவர்க்கருள
முன்னு விமய வல்லியுடன் மூரிச் சினவெள் விடையிவர்ந்து
துன்னு முனிவர் பண்ணவர்க டொழுது போற்ற வானிறைவன்
முன்னு வடைந்தான் பகைவர்புர மூன்று மெரிசெய் முழுமுதல்வன்.

அதுபோ தமரர்க் கிறையவன்மிக் கார்வத் துடன்கண் டகமகிழ்ந்து
புதுமா மணங்கொள் சேவடியம் புயமென் மலரைத் தொழுதேத்த
வுதமார் வனசத் துறைமடவா ருச்சிப் புனையு மணிச்*சுடிகை
நிதமுந் தோயச் சிவந்தவடி மிமலைக் கொழுந னீதிசைப்பான். (௫௰)

தருநா டுறையு மமரரிடர் தவிர்த்தே வரிவண் டினமுரலு
மருவா ரணிய லணியாக வனையுந் திருத்தோட்ட கயர தன்சேய்
தருசா பங்க டொலைத்தனமுன் சயந்த னெடுமின் சதியுடனே
பெருவா னடைதி யெனப்பரமன் பேசிப் படிவங் கரந்தனனால். ()

திதலைப் †புளக மரும்புதனத் தேவி யோடுஞ் சயந்தனெனு
மதலைப் புளக மரும்பமக வானு மகியிற் பஞ்சாங்க
விதமெய்ப் புளக மரும்பவிரு விழிநீர் பெருக விழுந்தெழுந்து
சதமெய்ப் புனித மகத்திறையுந் தணந்தா னரன்வாழ் திருக்கோயில்.

---

* சுடிகை-முடி.

1 † புளகம்-வீங்குதல், 2 புளகம்-மகிழ்ச்சி, 3 புளகம்-மயிர்சிலிர்த்தல்.

(வேறு.)

ஆங்கதற்குத் தென்மேற்கி லம்புவிடும் விசைமூன்றி
லோங்குமுயர் சிவலிங்க மொன்றியற்றிப் பூசித்துத்
தேங்கமழுங் கற்பகத்தின் செழுநிழற்கீழ்த் தவிசேறிப்
பாங்கினிற்புங் கவர்சூழப் பண்ணவர்கோ னினிதிருந்தான். (௫௩)

அந்தவர னிந்திரனுக் கருணைவொளி யாகவெளி
வந்ததனா லருணாசலேசனென வசுந்தரையோர்
முந்தமொழிந் திடுவரந்த மூர்த்தியிணை யடிதொழுவோ
ரிந்திரன்வா ழுலகடைவ ரெனச்சூத னியம்பினனால். (௫௪)

## இந்திரன்பூசனைச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௫௱௭.

# பிரமனருச்சனைச்சருக்கம்.

என்றுசொலுஞ் சூதமுனி யிணையடியைத் தொழுதேத்தி
நன்றுலவுந் திருவுள்ள நைமிசா ரணியத்தோர்
குன்றினிருஞ் சிறகெறிந்தோன் குறைதவிர்த்தல் கேட்டுவந்தோம்
பொன்றிகழ்பங் கயன்பூசை புரிந்தவைசொல் லுதியென்றார். (க)

ஆங்கவரீ துரைத்திடலு மன்புமனத் தினின்மிகவு
மோங்கிமுனி வரைநோக்கி யுயர்பனசைத் தலத்திலயன்
றீங்கறப்பூ சித்தவகை செப்புவன்யான் கேண்மினெனத்
தேங்குமருட் கடற்சூத னன்பினொடுஞ் செப்புவனால். (உ)

உலகமுழு துப்படைப்போ னொருபகற்றன் னணிநகரி
லிலகொளிவீ சுஞ்செம்பொ னெரிமணிக்கோ யிலினுள்ளா
லலர்தருமா யிரந்தோட்டா டகமலரி னம்பொகுட்டிற்
பலர்புகழ்நா ரதனாதிப் படிமத்தோர் புடைசூழ. (௩)

அடலுறையுங் குலிசவைவா ளாயிரங்கண் ணன்முதலாங்
கடவுளர்க ளிருமருங்குங் கைகட்டி நிறைந்துநிற்ப
வடிவுடைய வியக்கர்விஞ்சை மன்னவர்*நால் வகையும்பர்
சுடர்மணிசே ருரகர்சித்தர் சுற்றுமிடைந் தனரிருப்ப, (௪)

* நால்வகையும்பர்-ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர். எனநால்வகையாகிய முப்பத்துமூன்றுகோடி தேவர்கள்.

ஏழிசையோ ருருக்கொண்ட வெனவெழில்கந் தருவரெலாம்
யாழிசையாற் செவிநிறைப்ப விழைநுசுப்போ திமக்கொங்கை
தாழிருங்கூந் தற்றுவர்வாய்த் தளிரியலார் மிகுதிப்பா
லாழியின்வெண் டிரைமருட்டு மழகியவெண் மயிர்வீச (௫)

பொன்னுறழ்வேத் திரமதனைப் பொருந்தியகை யினர்முன்னின்
றின்னரிவ ரென்றுரைக்க விறைஞ்சிடுவோர் தமைக்காணாத்
தன்னருளை யவரவர்க்குத் தக்கபடி யீந்தொருகாற்
சென்னிமக மேருவெனச் சிறந்தினிதா யரசிருந்தான், (௬)

ஆர்ந்தவமை யத்தினின்மிக் கார்க்குமலை கடலதனின்
முந்தவெழுந் தளவமுதா முழுமதியுஞ் சேர்ந்தொன்றாய்
வந்தவுரு வெனத்திகழும் வடிவுடைய திருமேனி
சந்தனமார் குவிமுலைவாள் தனையுறழ்கண் ணிசைமடந்தை (௭)

சேயவொளிக் கலனெறிப்பச் சீறடிநூ புரங்கலிப்ப
மேயமழை வளைரம்பான் மெல்லியலார் புடைசூழ
நேயமண மனன்பரியுண் ணெகிழுநடை யால்வந்து
நாயகனோ டிருந்தனள்பூ நாண்மலர்ச்சேக் கையின்மீதே. (௮)

இத்தகைய வயனூரு மெழிலார்செஞ் சூட்டன்னம்
புத்தியில்மா னதவாவி புகுந்தாட லினைந்தொருநா
ளுத்தமவா வியிற்புகுந்தங் குறுவனங்க டமைச்சிறிக்
குத்தியல காலுகிராற் கொடுந்துயர்மிக் கிழைத்தனவால். (௯)

அனங்கடமை யரசவன மஞரிழைத்தல் கண்டுமிக
மனங்கசிந்தம் மானதமு மறிதிரைக்கை யாலனத்தைச்
சினந்தரிய சிறகர்விழச் சேதிப்ப வெகினமிக
மனந்தளர்வுற் றெழில்குன்றி மலரவன்மு னடைந்தனவால். (௰)

(வேறு.)

பாரதி கொழுந னன்னப் பறவையை நாலி ரண்டு
கூர்விழி யதனை நோக்கிக் குலவுமுன் சிறகர் வீந்த
காரண முரைத்தி யென்னக் கண்களுழ்ந் தெகின மாங்கு
நேரிலா விடர்வந் துற்ற நிலைமையை யுரைத்த தன்றே. (௧௧)

சீர்மலி சலசத் துண்டஞ் சேயரித் தடங்கண் வள்ளை
யேர்மலி மகர கேள்வி யிக்குவிற் புருவஞ் சீர்சால்
வார்மலி குவவுக் கொங்கை வாமமே கலைநு சுப்புக்
கார்மலி குழல்வெண் மேனிக் கலைமகள் கேள்வன் கேளா. (௧௨)

ஊழ்வினை வலியா லிந்த வுன்னத்தின் சிறகர் வீழத்
தாழ்வினை நிகழ்ந்த தெம்மாற் றடுக்கலாந் தகைமைத் தன்றே
வாழ்வினை யுயிர்க்கு நல்கும் வண்புக ழரன்பா லுற்றிச்
சூழ்வினை தொலைத்து மென்னாத் துணிந்தன னன்ன வூர்தி. (௧௩)

அணிச்சமென் மலரி னெய்ய வாய்சிறை யனத்தை யேந்திப்
பணித்தட நெடுங்கண் வேலைப் பழித்ததோட் குவவுக்கொங்கை
யினித்தமென் மொழிம ருங்கு லிழைபுரை மலைமா தோர்பாற்
றனித்திடா திருக்க வைத்தோன் சார்தருங் கயிலை சார்ந்தான். (௧௪)

புதுமணங் கமழா நிற்கும் பொன்னிற மலரின் மேவும்
விதியவன் பவளச் செங்கான் மென்சிறை யனத்தை நோக்கி
நதிமதி புனையும் வேணி நப்பனைத் தொழுநர்க் கிந்த
மதிநிறக் கயிலை காக்கும் மாதவ னருள்முன் வேண்டும். (கரு)

என்னமா மலரின் மேய விறைபவன் புகலச் செஞ்சூட்
டுன்னமன் னவன்செந் தாளி லுச்சிசேர்த் திரசி தக்குன்
றின்னருங் காவல் செய்பு பெ ம்பிரான் பெருமை முற்றும்
பன்னுவி ரென்ன வானோர் ப னவன் பகர லுற்றான். (கசு)

முன்னமோர் பகலிக் குன்றின் முராரிவா னவர்வ சுக்க
ளுன்னருங் கருடர் சித்த ருருத்திர ருரகர் திக்கின்
மன்னவ ராதி யானோர் மருங்கர கரவென் றேத்த
வன்னமென் னுமையோ டெம்மா னணிமணித் தவிசி ருந்தான். ()

அருளுடை யமல மூர்த்தி யமர்தரு மமையத் தன்னோன்
றிருமுனம் விபஞ்சி வல்லோன் சென்றிசை பாடி யேத்தக்
கருமிடற் றிறைவன் வேண்டுங் கருத்தினை யியம்பு கென்ன
கருதருங் குற்ற மூன்றுங் கடிந்தநா ரதனி சைப்பான். (கஅ)

ஒருவனுய் முதல்வ னாகி யுறுவரங் கொடுப்போ னாகி
மருவுமுக் குணங்க ளைத்து மனத்திடை நினைத்தற் கொண்ணுத்
திருவரு ளுடையோய் நின்றன் சேவையின் பலத்தா லெம்பா
லொருகுறை யில்லை யேனு மொன்றுள திசைப்பன் கேண்மோ. ()

(வேறு.)

உலகு யிர்க்குயி ராகிய மர்ந்தரு ளுரக கங்கண வன்புகழ் பொன்றி மன், ஞுலகி லஞ்செழுத் தோசையு நீறுநல் லோத்து கீத வொலி யுமெய்ப் பத்தியு, மிலகு கண்டியுங் காவியு மாந்தர்பா லின்மை யா லிச் சமனெறி மல்கிமேற், குலவு சைவங்கி மைவிர தங்கள் குன்றி யம்புவி பார மிருந்ததால். (உ௰)

ஆல மொத்த வசுரர் விபுதரை யச்சு றுத்தலே யொத்தம ளார்க் குழாஞ், சால நீடித் தழைத்தருங் குன்றினிற் சாருந் தீப மெனப் பொலி வுற்றது, யேனு மண்ணி லிசைத்த வெழிற்குடத் திட்ட சோதி யெனவுன் னடியவர், கோல மின்றிக் குறைந்துநின் மந்தி ரங் கூற வஞ்சிக் கொடுந்துயர் மூழ்கியே. (உக)

எந்த நாளினில் விடரொழி வாகுமென் றேங்கு மின்னடி யார்துய ரேகவே, சந்த மார்மண் ணுலகில்வந் தக்கொடுஞ் சமண ழித்துத் திரிவித பத்தியை, நந்த லின்றி நடத்திட வென்னுள நாடி னே னெனு நார்ந்தர் நோக்கியிந், நந்தி யென்னையொப் பாவ னவன்ற னுல் ஞனி லத்தி லுறுகுறை போக்குநும். (௨௨)

என்ன வோதம யத்திம வான்மக ளீச னைத்துதித் துப்பணிந் தோதுவாள், பன்ன ருங்கணம் பற்பல வற்றிலும் பண்பு பெற்றவ னுமென்று நந்தியைச், சொன்ன காரண மென்னென வாரணத் தேரல ணிந்தரு டோன்ற லுளந்தனி, லுன்ன ருங்களிப் போங்க வமலைகே ளோது வேனென வோதலுற் றனரோ. (௨௩)

சில மேவுஞ் சிலாதர ஞோர்தினஞ் திருப்ப ருப்பதஞ் சேர்ந்து நிருதியிற், *காலை †மாரி யருந்தியு நோற்றனன் கால மூன்றரைக் கோடிச் சமைச்செல, யேல வேண்டுவ தென்னென் றவனுழி யெய்தி யிருதுங் கேளென வன்பினிற், சால வேகரங் கூப்பியுன் பேசவொரு தனையன் வேண்டு மெனக்கெனச் சாற்றினன். (௨௪)

அவனி டத்தினி லுற்றுள வன்பினு லந்த வண்ண மளிக்குவ லென்றுபின், றவறி லாதெனைத் தாங்குமிந் நந்தியென் றன்னைப் போனின் மலமன முள்ளவன், பவமி லான்றவ மேயுரு வாயினன் பகரு தற்குரி யானுப சம்புவாய், புவன மூன்றுந் தொழுந்திற மேயவிப் புனித னுன்வரும் புத்திர னவனல். (௨௫)

என்று நந்தி யெழின்முக நோக்கிநீ யெய்தல் வேண்டு மிவர்க்குப் புதல்வனு, யன்றி யான்சென் றுதித்திடல் வேண்டுமென் றறைய வங்ஙன மோனிச னுயுதித், தொன்று நம்பதத் தன்பருட் சிந்தைசீ ரோங்கு பத்திக ளியாவு முடன்பிறந், தன்று சிற்பர தத்துவம் பாலதா யரும்பெ றற்குரு தியானமு னெண்ணையாய். (௨௬)

வேத மென்மழ லைச்சொற்க ளாயதில் விள்ளு கின்ற சிவாசார மேகொளுங், கோதி னன்னடை யாக்குபை யர்கமா குடிலை யின்னுயி ராயமை ‡கோபதி, யேத மிற்றவஞ் செய்வ தமரர்கண் டேத்த வேண்டிப் §படிவமுற் றனைத, யோத வேண்டு மெமக்கென வுற்றவர்க் கும்ப தத்தினி லிச்சை வைத்தானலன். (௨௭)

*காலை-வாயுவை. †மாரி-நீரை. ‡கோபதி-நந்திதேவன். §படிவம்-நோன்பு

ஓது நம்மிடத் தேகசை வைத்தெமை யுருவ தெண்ணின னுட் கருத் தெம்முடன், போது விரெனிற் காட்டுகின் றேமெனப் போந்த வர்க்கெதிர் நந்தியின் கண்ணுறப், பாத தாமரை யிற்பணி நந்தியைப் பார்த்து னக்கெவை வேண்டும் பகரென, நீதி விப்பிர மாதி பதவியை நீங்கி லேனின் பதம்பெற வேண்டினேன். (௨௮)

வேண்டி னேனென்று நந்தியைப் பார்த்தெழில் வீறு முன்னுட லைப்பரி சிந்திடத், தாண்டு நல்விடை யாக்கொண் டனையினை யுன்னெ னக்குறட் காங்கண நாதனு, மீண்டி நம்பத்த் தன்புடன் மேவுதி யென்று நல்வர மீந்தன மாதலான், மாண்ட ருங்கணந் தன்னிற் சிறந்துளான் மான வன்னினை யாமென வெண்ணுதி. (௨௯)

(வேறு.)

என்று கடுக்கை யிளம்பிறை சென்னி
துன்றழ லேந்தி துணர்த்தொடை வேய்ந்து
மன்ற நறுங்குழன் மாதுமை யுள்ள
மொன்ற மொழிந்தன ஞோர்ந்தன னன்றே. (௩௰)

என்றய னோத விருஞ்சிறை யன்னம்
வென்றிகொ ணந்தியின் மேன்மை யுணர்ந்தே
னின்றென தின்ன லிசைத்திடர் தீரு
மென்றடி யேத்தி யியம்பிய தன்றே. (௩௧)

இவ்வகை யன்ன மிசைக்க விரிஞ்ச
னவ்வி மழுக்கர நந்திமு னெய்திச்
செவ்விதின் மாமலர் சேவடி யேத்தி
யவ்வெகி னத்திடர் யாவு மறைந்தான். (௩௨)

(வேறு.)

இவ்வணந் திசைமா முகத்தவ னிசைப்ப விணையிலா நந்தியு முரைப்பான், கௌவையங் கடல்சூழ் மாநிலத் துயரிக் கயிலையங் கிரியினை யனைய, செவ்விய காஞ்சிப் புரியென வுரைக்குஞ் சீருறு தலமுள ததினு, மவ்விய மறுக்கு மொருதல முளதா மதன்பெய ரறைகுவன் கேண்மோ. (௩௩)

(வேறு.)

விலாச காஞ்சி யென்று வான விபுத ரேத்து நகரதிற்
பலாச வின்னி றங்கொ ளம்மை யோடமர்ந்து பண்ணவ
ரெலாஞ் சமூக மாகிவந் திறைஞ்சி யேத்த வின்பமோ
டுலாச மாம யூர நாத னுற்றி ருப்ப னையரோ. (௩௪)

அந்த நற்ற வத்தி லண்மி யார்ம திச்ச டைப்பரன்
சிந்த ழற்க ணமனு ரஞ்செ குத்த தாள ருச்சனை
சிந்தை யன்பு கொண்டு னாற்றில் சிறக ரற்ற டைந்துள
சிந்தை நீங்கு மென்று ஞான விமல நந்தி யோதினான். (௩௫)

அந்த வார்த்தை கேட்டு நந்தி யடிப ணிந்து விடைகொளீக்
கந்த வாச மலரின் மேவு கடவு டன்ன னத்துயர்
சிந்தி யின்ப டைந்த தென்ன சிந்தை யார்வ மோடெழுந்
தெந்தை வாழ்வி லாச காஞ்சி யெகின மேந்தி யுற்றனன். (௩௬)

உற்ற மான்ம கன்ற *னுன்ன மோடு வாண ரேத்திடப்
பெற்ற தால மாந கர்ப்பி றங்கு கீர நதியினீ
ருற்று மூழ்கி விதிவ ழாது னாற்று பூசை யாற்றிவந்
†தற்ற நோக்கி யெம்பி ரான ருட்ப தத்தி றைஞ்சியே. (௩௭)

எழுந்தி ருந்து தன்கை பெட்டெ டுத்து முச்சி சேர்த்துளத்
தழுந்து மன்பி னுவி ரண்டு கண்க ணீர ரும்பவே
தொழுந்தொ ழுந்தொ ழுந்தொ ழுந்த னுடன டங்க வேசிவக்
கொழுந்தை யன்பி னோடு கைகு வித்து வாழ்த்தி னானரோ. (௩௮)

(வேறு.)

சிலைபத் திரியார் தவளநகைச் செல்வா யுமையோ டிடபமிசை
தொலைவற் றொளிருஞ் சுரர்முனிவர் தொகுதி சூழ வந்தனது
கலைமிக் குபருந் துதிகேட்டுக் களிவுற் றனத்தின் கவலொழித்தே
மலைவற் றிலகு மிப்பதியி லரனைப் பதிட்டை செய்யென்றான். (௩௯)

ஏற்றுக் கொடியோ னருண்மொழிகேட் டிதய மகிழ்ந்து மலரடி
யைப், போற்றி வணங்கிப் புறம்போந்து பொன்னார் தனிக்குத்
தென் றிசையிற், சாற்றுங் கடிகை யரையளவிற் சார்ந்து மறைநான்
கினுமெட்டா, தேற்றும் பரனைப் பரிவுடனே ரிலிங்க மெனவாங்
கமைத்தனனால். (௪௰)

அந்த வகண்டா காரமதா யனைத்து மளிக்கு மருவுருவாய்
முந்த விளங்கு மிறையைமறை மொழிந்த முறையாற் பூசித்தே
கந்த மலரோ னன்னமிசைக் கலைமா துடன்றன் னகரடைந்தா
னந்த வரனைப் படியின்மிசை யறைவர் விரிஞ்சே சுரனென்றே. (௪௧)

இந்தச் சரிதந் தனையன்பா யிதையங் களிக்கக் கேட்டவரு
மந்தக் கறைசேர் மிடற்றிறைவ னருளா ரடிபூ சித்தவருஞ்
சந்தத் தொலைவி லப்பதியிற் சார்பா யிருந்து வாழ்பவரும்
பந்தப் பெருநோ யகன்றுபெரும் பரம பதத்திற் றுன்னுவரால். (

* உன்னம் - அன்னம். † அற்றம் - சமையம்.

பிரமனருச்சனைச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௩௱௪௨.

உ

# திருமால்பூசனைச்சருக்கம்.

இன்ன வாறெடுத் தியம்பிய முனியடி யிறைஞ்சிப்
பன்ன ருந்தவ நைமிச ரெழுந்தரு ளுறைவோன்
றன்ன ருங்கதை சாற்றினை சக்கர பாணி
யின்ன ருங்கதை யிசையெனச் சூதனு மிசைப்பான். (௧)

(வேறு.)

கருணை பொழியு மரீசிதரும் கலைதேர் முனிவன் காசிபனுர்
பொருவிற் பொலிதே வியர்விநதை புகழ்கத் துருவை யெனுமடவா
ரரிய மகவைப் பெற்றிடுமோ றன்பாய் தவத்தை யிழைத்திடலுஞ்
சுரிமென் குழலார் முனங்கணவன் றோன்றி நின்றான் றுயர்தீர. (௨)

மடவா ரோடி யடிதொழுதார் வருமா முனிவ னருள்சுரந்து
பிடிபோ னடையீர் வேண்டுவன பேசி லளித்து மெனப்புகல
சடையார் முடிமா தவவிரண்டு தனையர் தடுத்தற் கருமாற்ற
லுடையா ராக வளித்திடென்று ளுயர்மா விநதை யெனுந்தக்காள்.

கரும்புங் கனியுங் கைக்குமொழிக் கருமென் குழல்கத் துருவை யென்பா, டிரங்கொண் டிடுமோர் நூற்றைந்து சிறுவர் பெற வேண் டினனென்றாள், விரும்பு மிருவ ருள்ளத்தில் வேண்டும் வண் ணங் கருவளித்து, வரங்கொ டவத்தின் சூழலிடை வதிந்தா னருமா மறையோனே. (௩)

பலநாட் கருவைச் சுமந்தெழில்கொள் பனிமென் மொழியா ரிரு வோரு, நிலமேற் சிறுவ ருதித்தலின்றி நிகழுங் காலை யோர் நாளி, னலியா தொருத்தி நூற்றைந்து நவில்மற் றொருத்தி யோ ரிரண்டு, மிலகா ரண்டங் களையீன்று ரிருமா நிலத்திற் றவமிக்கார்.()

பயந்த வண்டந் தமைக்காத்துப் பயிலுங் காலை யோர்பகலி
னயந்த மொழிகத் துருவைதரு நற்சூலண்ட முகையவிழ்ந்து
வயந்தாங் காதி சேடனெழின் மருவுந் தக்க கன்மூந்தலா
வியைந்த நூற்று நால்வருமோ ரிணையின் மகவு முதித்தனரால். (௫)

மைந்தர் கலைகள் பயின்றுலகில் வருமா ரணங்கண் முழுதோர்ந்து
சிந்தை மகிழ்ந்து சிறந்திடுநாட் டெரிவை விநதை பொறுத்திலளாய்
நைந்த வுளத்தோ டினிவருந னுடா தண்டந் தனைப்பிதிர்த்தாள்
சந்தச் சிதைவிற் றிருமேனி தாங்கு முடவ னுதித்தனனால். (எ)

தன்னாய் மதிநேர் முகநோக்கிச் சரீர முழுது முற்றுமுன்
சொன்னா ரண்டந் தனையென்னோ குலைத்தா யதனான் முடமாக
வின்னா ளுதித்தே னாதலினுன் னிளையாட் கேவ லியற்றிடுதி
யென்னா வின்று டனைச்சபித்தா னிருதா ளின்றி யெழுந்தோனே. ()

மெய்வேர்த் துடல நடுநடுங்கி மிக்கநாணந் தனையலைப்ப
பெய்மே கலையாள் படுதுயரின் பெற்றியறிந்தே யருள்சுரந்து
பையா ரல்கு லுனக்கிளையாள் பணியை யாற்றி யினியெய்தும்
வையார் துண்டக் காளையினிவ் வலிய சாபங் கடத்தியென்றான். (௯)

அந்த மொழியைக் கேட்டொன்று மறையா தச்சத் துடனிருப்ப
நந்துமுட லா லருணனென நாட்டுங் குமரன் றினக ரற்குச்
சந்தத் திகிரிப் பரிதூண்டத் தகுஞ்சா ரதியா யடைந்த தற்பி
னைந்து விடையா ளண்டமதை நாளும் புரந்தே யிருந்தனளால். (௰)

(வேறு.)

உற்ற நாடனி லொருபகல் விநதைகத் துருவை
பற்றை சேடிய ரொடுதிரைக் கருங்கடன் மருங்கி
னுற்று நோக்குறு மேல்வையி னுச்சவச் சிரவங்
குற்ற மொன்றிலா மெய்யுடன் குலவிநின் றனவால். (௧௧)

அருண னைப்பயந் தவளிது வெண்பரி யென்ன
வரிநெ டுங்கணாண் மற்றவள் வாற்புறங் கறுப்புண்
டரிவை நீயறி யென்றன டோற்றவ ளடிமை
புரித லாகுமென் றுரைத்தன ளதற்குளம் பொருந்தி. (௧௨)

கிட்டி நோக்குவோம் வாவெனக் கெடுதிநே ரிடுமென்
றிட்ட மாயர வினைப்பயந் திட்டவேந் திழையுஞ்
சட்ட மாயிதை நாளைகாண் குவமெனச் சாற்ற
வட்ட மாமுலை விதிவழி மதிமயங் கினளால். (௧௩)

நீண்டு மாளிகை வந்தனள் கத்துருப் பெயராண்
*மாண்ட மைந்தரை யழைத்துறு செயலெலாம் வகுத்துப்
பூண்ட யங்குறும் விந்தைதோற் றிடப்புகழ் பரிவா
லீண்டி மையுறத் திடுமென்ப் புதல்வரு மிசைப்பார். (௧௪)

---

*மாண்ட-மாட்சிமைப்பட்ட.

என்ன கூறினை யிதற்கியா மிசைகிலே மென்ன
வன்னை கேட்டக னொந்துவெஞ் சினத்துட னகில
மன்ன னுஞ்செண மேசெயன் மகத்திடை மாள்க
வென்ன மைந்தரைச் சபித்தன ளியைகில ரென்றே. (௧௫)

அன்னை யோதிய சாபத்திற் கஞ்சியோர் நாகந்
தன்னை யீன்றவள் சேவடி தாழ்ந்தெழுந் தடியேன்
சொன்ன வாறுசெய் குவனெனச் சுவர்க்கமின் றிழிந்த
பன்ன ரும்பரி வாற்புறம் பற்றினின் றனவால். (௧௬)

பிற்றை நாடனி லருக்கனைப் பயந்தபெய் வளையைக்
கற்றை யாயுள தோகையிற் கறுப்பினைக் காட்டிப்
புற்றி னுட்பயி லரவினைப் பயந்தபொற் றொடியுஞ்
சொற்ற சொற்படி தாதியாந் தொழில்செயக் கொண்டாள். (௧௭)

நறும ணக்குழல் விநதையிப் பணிசெயு நாளி
னூறுமொ ரண்டமு முடைந்ததிற் கலுழன்வந் துதிக்க
மறுமை யின்பய னின்றடைந் தெனமன மகிழ்ந்தாள்
பெறுத லாவதோர் பேறெனன் மக்கடம் பேறே. (௧௮)

இன்ன வாறுமைந் தனைப்பெறும் விநதையை யெழிலார்
பின்னை கண்டுளம் புழுங்கிநீ பெற்றவிச் சிறுவன்
மன்னு மென்மகார் பணியினை மகிழ்வுட னியற்றப்
பன்னு வாயெனப் பணியினைப் பயந்தவள் பகர்ந்தாள். (௧௯)

நீதி யாகுநன் னெறிவழா விநதைதன் சேயைக்
*காதை மேவுகா கோதரக் காதலர்க் கடிமை
பேதி யாதுநீ செய்யெனப் பெற்றதாய் மொழியை
யாதி வேதமென் றுணர்ந்தவ னவர்பணி புரிந்தான். (௨௰)

நாட்கள் பற்பல கழிந்தபி னம்பியு மீன்று
டாட்க ளிற்பணிந் தன்னையே நாமிவர் தங்கட்
காட்ப டுஞ்செய லதனையெற் கறைகுவை யென்றான்
வாட்க ணாண்முன நடந்தவை வகுத்திட வுணர்ந்தான். (௨௧)

ஒன்றோர் நாளவர்ச் சுமந்துட னும்பரூர் தாவி
†யென்று வாழ்தரு பதிபுக ‡விரும்பைக ளியாவுந்
தின்று வெம்மையாற் றுடித்துயிர் சோர்ந்துடல் வெதும்பி
யொன்று வேதனை யுறுதல்கண் டம்மனை புலம்பி. (௨௨)

---

* காதை-கொலை. † என்று-சூரியன். ‡ இரும்பை-பாம்பு.

சிந்து வார்திரைச் செம்மலின் செய்யசீ றடியைச்
சிந்தை யிற்கொடு செபஞ்செய மகிழ்ந்துதண் மாரி
சிந்தி னுன்மெலி வற்றனர் தெரிந்தில ளாகி
யந்த வித்தகக் கலுழனை யடிமைகொண் டிருந்தாள். (உ௩)

பின்னை யோர்தினம் பிரியமாய் கத்துரு மைந்தர்
தன்னை நோக்கியக் கலுழனோர் விரகுரை சாற்று
மென்னை வேண்டினு மிமைப்பினி லளிக்குதுந் தாதி
யென்னு மேவல்செய் தாயிடர் தவிர்த்திடி னென்றான். (உ௪)

கத்து ருப்பெயர் மாதுதன் காதலர் களித்தே
சுத்த முற்றபுத் தமுதினைத் துய்த்திட வளித்தா
லித்தி னம்மும தேவலை யகற்றுது மெனலும்
வித்த கன்மன மிசைந்தனன் வினதைபால் வந்தான். (உ௫)

எந்தை யெங்குளா னியப்புதி யிமையவர்க் கிறையா
மிந்தி ரன்பதிக் கெய்திநல் லமுதெடுத் திந்து
முந்து மின்குறை முடிப்பனென் றுரைத்தலு முருகார்
கந்த யாமலர்க் குழலினுள் கருணைபூத் தனளே. (உ௬)

கந்த மாதன விலங்கலி னுந்தையார் கசிவான்
முந்து நற்றவ மாற்றினன் மொழிந்துள வமுதை
யிந்த மாநிலத் தெடுத்துநீ யெய்திடு மளவுந்
தொந்தி யிற்சுடும் பசிக்கிரை சொல்லுவன் கேட்டி. (உ௭)

இந்து வார்சடை யெம்பிரா னடிதொழு துளத்திற்
பந்த நீங்கிய தவர்பயி லிமயமால் வரையிற்
பந்த வேடரெண் ணிறந்தவர் பயிலுவர் பருகி
யந்த நல்லமு தேந்திவா வெனவிடை யளித்தாள். (உ௮)

கேட்ட பன்னக வைரியுங் கேழ்கிள ரனைதன்
றாட்டு ணைக்கணே விழ்ந்தனன் சாற்றின ளாசி
சேட்டை யூதையாற் செறிதரு வரைகளுஞ் சிதற
வாட்டிக் கந்தமா தனவ்வரை யடைந்தனன் வலியோன். (உ௯)

(வேறு.)

ஆங்கவ னணுகியே யந்த மால்வரைப்
பாங்கெலா முணர்ந்தபின் பயந்த தந்தையார்
தாங்கிய பெருந்தவச் சாலை யெய்தியே
பூங்கழல் பணிந்தனன் பொருவின் மைந்தனே. (௩௰)

வருகையின் முன்னரே மைந்தன் றன்வலி
பெருகிடு மாறெலாம் பெயர்ந்த ழிந்தவ
னிருகையாற் றழுவியாங் கினிய வாசிசொற்
றுருகினான் சிந்தையு முடலு மாமுனி. (௩௧)

வந்தவா றனைத்துமம் மாமு னிக்கிவன்
சிந்தையார்ந் திடும்படிச் செப்பி நிற்றலு
மந்தணன் வாழ்த்திநல் லமுது வவ்வியே
யுந்திமீண் டிடவர முதவி னானரோ. (௩௨)

மைந்தநீ போதியென் றுரைப்ப மற்றவன்
கந்தமா தனகிரி கடந்தி மைப்பினிற்
சிந்தையி லன்பிலாச் சிதடர் வாழ்தரு
மந்தநல் லிமவரை யடைந்து ளானரோ. (௩௩)

(வேறு.)

ஆறலை கள்வ ரருந்தவர் தங்கட்
கூறுசெய் துட்ட ருவர்த்துழி வாயாற்
கூறிடு வஞ்சர் கொடும்பழி பாவ
மேறிய மெய்ய ரிருந்தனர் கண்டான். (௩௪)

கண்டிடு புள்ளர சுங்கனி வாய்நல்
லுண்டி கிடைத்தென வுள்ள மகிழ்ந்தக்
கண்டக ரைச்சிறு காலி னெடுத்தே
யுண்டனன் வெம்பசி யோய்ந்திட வன்றே. (௩௫)

ஆங்கொரு வனையயில் கால்கள னழலத்
தாங்கிய துயரொடு தரைமிசை யுமிழப்
பாங்கரின் மறையவ னெனவொரு படிவந்
தாங்கி *யரிப்பகை தன்னெதிர் நின்றான். (௩௬)

பூசுர னாகிய புனிதனு மவனை
யாசறு தார்க்கிய னடியிணை தாழா
தேசுறு வானவர் தேய மடைந்தே
வாசவன் மன்றில் வதிந்தனன் மன்னோ. (௩௭)

பொன்னவி ருஞ்சடை புங்கவர் சூதன்
றன்னிரு சேவடி தாழ்ந்து வணங்கி
யென்னிவ னந்தண னாகிய தெங்கட்
கன்னதை யோதென வந்தவ னோதும். (௩௮)

* அரிப்பகை—கருடன்.

(வேறு.)

கராங்குல வியபைர் தடமும் வண்காவுங் கனகவான் மாடமுஞ்
அல்வுங், கிராடமா நகர்வா ழந்தணர் குலத்தோன் கிளர்மறை யாக
மஞ் சிறந்த, புராணமுற் றுணர்ந்தோ னீதியா சாரம் பொறைநிறை
யறிவுடை யவனித், தராதலம் புகழுங் கீர்த்தியை வகித்தோன்
சுந்தர னெனப்பெயர் தரித்தோன். (௩௯)

*பாம்பழுங் கழுவ மகல்புற வடிகண் படிவமொண் டொடையினா
வரப்பை, காம்பெனுந் தோளி கற்பினிற் சாவி கல்வியிற் கலைமக
ளுணர்வி, லாம்பரி சுரைசெய் யமைச்செனத் தக்கா ளருந்தை
யினில்லன மனையாள், சாம்பவி யெனுமன் னுங்குல மனைவி தன்னொடு
மினிதுவாழ் காலை. (௪௰)

அன்னவர்க் களவின் றாகிய நிதியுண் டாயினு மருமக வில்லாப், பன்
னருந் துயராங் கடலினு ளழுந்திப் பருவர லுற்றிடு நாளி, லுன்ன
ரூர் தான தருமமெண் ணிலவா வுஞற்றிடு பருவமொன் றினிலே,
மின்னிடை வீங்கி முலைமுகங் கறுத்து மிளிர்வயா வுற்றன ளன்றே.

பாற்கடல் வருந்தி விடமதை யீன்ற பரிசெனச் சூதவின் கனியிற்,
றோற்றிடு கிருமி போலுமோர் மைந்தன் றோன்றவாங் கவர்கொளு
மகிழ்வி, னூற்றலை யென்னோ வுரைப்பதன் னவர்க ளருமையா யவன்
றனை வளர்க்கக், கூற்றென வளர்ந்தான் சுமித்திர னெனப்பேர் கூ
யழைத் தின்பினிற் குளித்தார். (௪௨)

களித்தினி திருக்குங் காலையி லீன்ற காளமுளைக் கைந்தெனும்
பருவத், தளித்தவ னிறந்தா னன்னவன் மனைவி யாற்றல ளாகிநீர்
விழிக, டுளித்திட வரற்றித் துயருழந் தாவி துறந்தன ளன்ன
வன் றன்னை, யளித்திடற் குரியா ராருமில் லவனு யருப்பெறற்
றுன்பினி லாழ்ந்தான். (௪௩)

நாள்சில கழியச் சுமித்திர னென்பா னனிபெருஞ் செல்வமே
மாப்பால், வாள்புரை கண்ணார் மயக்கினுட் பட்டு வருந்திமுன் றந்
தைசே கரித்த, நீள்பெருஞ் செல்வ மனைத்தையு மழித்து நேடிய
முற்பவ வினையாற், கோள்நிறை யுள்ளக் கொடியரைக் கலந்தே
குணமிறுஞ் சதியின னானான். (௪௪)

பாம்பு-சர்ப்பம், அழுங்கு-ஆமை, அழுவம்-கடல், அகல்-அல்குல்,
புறவடி-பாதம், கண்-நேத்திரம். பாம்பை ஒத்தது அல்குல்,
ஆமையை ஒத்தது பாதம். கடலை ஒத்தது நேத்திரம்.

தங்குல வொழுக்கந் தவறியா ருயிரைத் *தடிந்ததன் றடியினைப் பருகித், துங்கமா மறிவைக் கெடுத்திடு மதுவைச் சோர்வற நுகர்ந்துகா மத்தான், மங்கையர் மோக வலையினுட் சிக்கி வன்மன வேடரைச் சார்ந்து, பொங்கிய கானிற் புகுந்தரு ரிழைக்கும் புளிஞர்தங் குலத்தினுட் புக்கான். (சரு)

போந்தவன் †சவரர் தம்மொடு வனத்திற் போய்ப்பல விலங்கினை மாய்த்து, வாய்ந்தவிம் மித்தசு கோத்திர முனிவன் மகிமையாய்ந் தயிர்ந்திடா தனுகி, யார்ந்துதல் வேண்டு மதுவுட னிர்த மாமிசந் தனையெனவிழியிற், காந்திடு சினமீக் குறவொரு சாபங் கழறுவ னின்னண மாதோ. (சசு)

பிடுறு மறையோர் தங்குலத் துதித்தும் பேரறி வொழுக்கமா சாரங், கூடுத லின்றிக் குறவரோ டிணைந்து கொடும்பவத் தொழிலை மேற்கொண்டு, காடுறு தவினித் தசைமது நுகருங் ‡கவுண்டனு குவெனக் கலங்கி, மூடனு மடியேற் குறுபுலைத் தன்மை முடியுநா ளோதெனப் பணிந்தான். (சஎ)

பணிந்தவக் காலை யுளமகிழ் வோடு பகருவ னுட்சில கழியத், தணிந்திடாப் பசியால் விநதையின் மகனுஞ் சார்ந்துனை யுண்டிடுமென் றெடுத்துக், கணர்கனி லயிலக் கண்டமுற் றுருப்பங் கனன்றிட வுமிழ்வனவ் வேலை, யணைந்தவிச் சாப மகன்றுமே தியனு முடைகுவை விண்ணுல கென்றான். (சஅ)

அத்தவன் மொழியாற் புலமைவிட் டொழிந்தே யந்தண னுனிவிண் ணடைந்தான், இத்திற மவன்றன் செயலினை முனிவ ரின்பமுற் றெம்பவ மறுக்கும், வித்தக முனம்மீர் விளம்பிய காதை விரித்திடல் வேண்டுமென் றடியிற், பத்தியோ டிறைஞ்சு வேதநூற் பயின்ற பண்ணவன் றனையுனி யுரைப்பான். (சகூ)

(வேறு.)

கதக்கொடுஞ் சரத்தாற் கொல்லுங் கடுந்தொழி லியற்கை பூண்ட
மதக்கொடுங் கசடர் தம்மை வரையறப் புசித்து மிக்க
விதத்துறு தாதை யோடு விநதையை யினைந்து விண்ணோர்
பதத்திடை புகுவ துன்னிப் பறந்தனன் பறவை வேந்தன். (இ0)

---

*தடி-மாமிசம். †சவரர்-வேடர்.
‡கவுண்டன்-புலையன்.

வாயுவு முட்கப பானு வழிதிகைத் தஞ்ச வஞ்சாக்
காயமுற் சமனும் வென்றிக் கலைமதிக் திங்க டானு
மேய்கற் றலைவி றைஞ்ச விரும்புவி ளங்கத் திண்மைத்
தாயமென் சிறகர் வீசி யமரர்தம் பதியிற் புக்கான். (௫௧)

அக்கண மமுதைக் காக்கு மணிதிறற் காவ லாளர்
தொக்குழி யிருப்பத் தேவர் தொகுதியு மிமைபோற் காக்க
வக்கினித் திரளி னுய வரணிடை யமுதங் கண்டே
கைக்கொளப் புகுந்தா *னகர் கடுஞ்சமர் புரிந்தார் மாதோ. (௫௨)

(வேறு.)

மழுவி னற்சிலர் வண்கதை யாற்சில
ரெழுவி னற்சில ரீட்டியி னற்சிலர்
கொழுவி னற்சிலர் கூர்ங்கணை மாரிகள்
பொழிவி லாற்சிலர் போர்புரிந் தாரரோ. (௫௩)

தென்றி சைக்கணிற் றேவரு மேற்றிசை
யின்ற திக்கி னிருபருங் கீழ்ப்புறம்
வென்றி யெண்மர் வியாகர ராதியோர்
சென்று வீழச் சிறகசைத் தானரோ. (௫௪)

ஈது கண்டழன் றிந்திரன் கான்முனை
மோது வெஞ்சமர் மூண்டு சரங்கொடே
காதி வீசக் கடுஞ்சிறைக் காற்றினாற்
போத நொந்து புறங்கொடுத் தோடினன். (௫௫)

தவள மால்வரை தாட்கொடு போங்கென
கவள முண்ணுங் கடத்தயி ராவதம்
பவள வாய்விர தைத்தரு பாலன்மேற்
†சவளம் வீசிச் சமர்செய் திளைத்ததே. (௫௬)

ஒருவர் போன தொருவ ருணர்ந்திலார்
செருமலைந்தவர் சிந்திய பின்னரின்
மருவு நல்லமு தந்திக ழும்வயிற்
பொருவி றந்தவன் போய்ப்புகுந் தானரோ. (௫௭)

---

*நாகர்-தேவர்.

† சவளம் - ஈட்டி.

செந்த ழற்பிழம் பொன்று செறிதலு
மந்த வானதி நீர்கொ டவித்தமு
* தந்த ரத்தி னனுகலும் வாளரா
†தொந்தங் காப்பச் சுடர்க்கண் சிவந்தனன். (ருஅ)

வாள ராவிரண் டுந்தலை வாலுறத்
தாளி னுற்கிழித் தின்னுயிர் சாய்த்தபின்
மீளி மொய்ம்பன் விரும்பமு தந்தனைக்
கோளி லாக்கரங் கொண்டு களித்தனன். (ருகூ)

அகல்வி சும்பி னடலுட னேகலும்
நகம றுத்தவ னண்ணிச் சகித்திலன்
இகலு டன்வயி ரந்தனை யேவினன்
ககப திச்சிற கோர்மயிர் காய்ந்தரோ. (சு0)

அன்ன போதம ரக்கிறைக் கோதுவா
னுன்ன லாதெனை நீவந் தொறுத்தனை
முன்ன வன்பணி யும்முனி யங்கமு
முன்னி நெஞ்சி லுதவின னோர்மயிர். (சுக)

ஏவு நின்படை யேண்டனுக் கீந்திலன்
மேவி வைகுதி யென்று விருப்புடன்
றூவில் சீருடைத் தார்க்கியன் கூறலுந்
தேவர் கோனினைந் தான்றிரு மாலையே. (சுஉ)

(வேறு.)

நிறத்தபசுந் துகிலிகழப் ‡பதும மோங்க
நீண்டகரத் தைம்படையு நிலவு காட்ட
பொறுத்தசெழுந் துளவுவிரை கமழக் §கேள்வி
பொருந்துகுழை யிரண்டுமிரு சுடர்களேய்ப்ப
வெறித்தகவுத் துவமணிமார் பிலங்க வண்டத்
திமையவரு மிருடியரு மிறைஞ்சி யேத்த
நெறித்தகரு டனுக்கெதிர்வந் துதித்து நின்று
னிலமகோ ரடியளந்த நீல வண்ணன். (சுங)

* அர்தரம்-இடை. † தொந்தம்-இரண்டு.
‡ பதுமம்-முடி. § கேள்வி-காது.

யுடல்வயிரத் திண்டோள்தார்க் கியன்வ ணங்கி
யடிதொழுது நின்றிடலு மமரர் வேண்டக்
கடல்கடைந்தோ னீதுரைப்பான் கருணை யன்பாற்
கடைப்பிடித்த நெறிமுறையாற் கதியான் மிக்க
மிடலுடையோ யுனைநிகர்வா ரிலையென் றெண்ணி
மேவியுனைக் காணவந்தோ முனதா ளத்தி
னிடரொழிய நீவேண்டும் வரங்க ளெல்லா
மீண்டளிப்போ மெனமுனிசே யியம்பு கின்றான். (௬௪)

படியதனி னெறிமுறைமை படைத்து நின்றன்
பதமலரி லன்போங்கிப் பன்னாள் வாழக்
கடிகமழுந் துளவுடையோய் தருக வென்னக்
களிப்பொடளித் தவனுரைப்பான் கருட னேயென்
றடிதரிக்கு மூர்த்தியுமாய்க் கொடியு மாய்நீ
யாகுகநின் னிகரொருவ ராகா ரென்றான்
முடிமதன னுறழ்வனப்பான் மகிழ்ந்தவ் வாய்மை
முடிதரித்தா னிந்திரனு மொழிவ தானான். (௬௫)

முண்டகத்தா ரணிமார்ப வென்னை முன்ன
முன்னவனென் றறைந்தவித மொழிக வென்னத்
துண்டமதி வேணியரற் கன்பு பூண்ட
தூயதவக் காசிபர்க்குத் துணைவி யான
கண்டனைய மொழிவிநதை மைந்த னான
காரணத்தா லுனதனுச னேனென் று
கொண்டனிகர் மேனியனா ரருள்கொண் டோனுங்
கூறினன் போகமகிழ் கொண்டா னன்றே. (௬௬)

றனையளித்தா ளதிதியனை விநதை யீன்று
ளிருந்தாளை நமக்கொருவ னாக வெம்முன்
தனையனாகி வானவர்த முயிர்கொண் டிப்பாற்
றாழியொடு மழுவேந்திச் சார்த லன்றோ
வனமுடைமை யறிவுடையை நெறிவ ழாத
வளனுடையை யுனக்குரைக்கும் வழியொன் றுண்டோ
வினியவமு தெமக்கலது பிறர்பா லீந்தா
லிசையாமோ வெமக்கருளி யிசைகொ ளென்றான். (௬௭)

15

மகபதிசொற் செவிப்புகலு மகிழ்ந்தங் காந்தண்
மலர்க்கரங்கூய் வயவேந்தே வாய்ந்த வன்னை
யகமெலியுங் குறைதவிர்க்க வவள்பின் வந்தா
ளளித்தவராக் குழுவினருக் கமுத மீவா
னிகலுடன்வந் தனனென்சொற் றவருய்ப் பீழை
யெய்திடினு மெய்துகவிங் கென்னை யின்றாள்
சகமதனிற் பணியியற்றிச் சுகமி ழுந்து
சார்ந்திருத்த லபிமதமோ சாற்று யென்றான். (௬௮)

மலையனைய விருபுயத்தா னுரைத்த மாற்ற
மகபதிகேட் டோருறுதி வகுக்க லானு
னலையமுதை யவர்க்களித்து னன்னை யோடு
மடிமைதவிர்த் திட்டபின ரந்த வான
நிலையமுதை யான்கவர்வ னவர்க்கெய் தாம
னீளமரர்க் காயிதையிற் செறிசெய் யென்று
னலைதவிலா வுவணனதற் கிசைந்து நன்றென்
றருள்புரிந்தான் போகிமகிழ்ந் தறைவ தானுன். (௬௯)

அன்புடையா யெனக்கினிய கேண்மை வண்மை
யாருயிர்சல் லனுசனிவை யான தாலே
யின்புறநீ வேண்டும்வரம் யாவு மின்னே
யீவனிசைத் திடுதியெனக் கலுழன் கேட்டே
துன்பிழைத்த கருஞ்சுருண்மென் கூந்தற் செவ்வாய்த்
துவரிதழ்கத் துருவைதருஞ் சுதர்க ளெல்லாம்
பின்பெனக்கே யுணவாகிப் போகும் வண்ணம்
பேசுகவென் றடிதொழுதான் பிழையொன் றில்லான். (௭௰)

அந்தவிதம் வரமுதவி வாழ்த்தி வானோ
ரகமகிழ்ந்தா ரச்சுதன்மீண் டடைந்தான் போகி
தந்திரமா யருவாகி வரப்புள் வேந்து
தாரணியி லடைந்தமுதந் தன்னைக் காட்டிப்
பந்தமுறுந் தூயேவ லகற்றி யிப்பாற்
பசுந்தருப்பை மிசையமுதைப் பதிய வைத்து
முந்தமுழு கிச்சுசியா யருந்து மென்றே
மொழிந்தகன்று னன்னையுடன் மொய்ம்பின் மிக்கான். (௭௧)

அக்கணமே நீராட வனந்த னாதி
யரவமெலா மகலவரி யணைந்தான் குற்ற
த்தக்கசுதைத் தசும்பதனைக் கவர்ந்து வானிற்
சார்ந்தமரர் காப்பாக்கித் தருக்குற் றான்பின்
யக்கவர்மீண் டமுதிலதாற் புலம்பி யுற்ற
புல்லினையப் புயங்கமெலாம் பொருந்த நாவா
னக்கவிரண் டாயதமு தேர்த லாலே
நற்புனிதந் தருப்பையுநண் ணியது மாதோ. (எ௨)

*அனந்தரம்பன் னகவைரி யருள்சே ரன்னை
யடிதொழுது நிகழ்ந்துளவா றனைத்து மோதி
†வனந்தருபைந் துளவணிந்தோன் மலர்த்தாள் போற்றி
மறையவனை யயின்றவெப்ப வாதை நீக்கக்
னம்பெறுவை குந்தநகர் காண வேண்டுங்
கருணையுடன் விடையருளிக் காப்பா யென்றான்
மனந்தனின்மா மகிழ்வெய்தி வருத்த நீக்கி
வருவாயென் றன்னைவிடை வழங்கி னாளால். (எ௩)

அவ்வுரைகேட் டகமகிழ்ந்தே யகல மெல்லா
மலைந்திடப்பொற் சிறகசைத்தா காய மேகி
கொவ்வையிதழ்ப் பனிமொழியங் குவவுக் கொங்கைக்
கோற்றொடிமா மலர்த்திருவைக் கூடி நாளுந்
தெவ்வருயிர் செகுத்திடுமால் சிறந்து வாழுந்
திவ்வொளிகால் வைகுந்தஞ் சேர்ந்து வாச
மவ்வனகை விநதைதரு மைந்தன் சீர்சான்
மாயவனைப் பணிந்துதிகளை வகுக்க லானான். (எ௪)

உலகனைத்து மீன்றவனை யீன்ற வுந்தி
யுடையவனே யும்பரிடர் தவிர்ப்பான் வாரி
யுலையநெடு மந்தரமிட் டுரகத் தாம்பா
லுயரமுதங் கடைந்தளித்த வரவோய் வேத
நிலையுணரு மறையவனை யயின்ற அலென்
நெஞ்சினிடைப் புழுக்கமிக நிறைந்த வந்நோய்
பலகலையு நான்மறையும் பழிச்சும் பாத
பங்கயத்தோ யகற்றிடெனப் பணிந்து நின்றான். (எ௫)

---

*அனந்தரம்-பின்பு. †வனம்-அழகு.

(வேறு.)

விரைகமழ் துளவத் தாமம் வேய்ந்தவ னதனைக் கேட்டுத்
தரையினிற் றீமை யெல்லாஞ் சார்ந்திட விருந்தா ரேனுந்
திரைகட லுலகில் யார்க்குஞ் சிறந்தவர் மறையோர் மற்று
முரைதரு மாதி சைவ வுத்தமன் மிசைந்தா யன்றோ. (௭௬)

உரமுறு முனது கண்ட முருப்பமிக் கடைந்து துன்ப
மருவிய வன்னோய் தீர மனையில் மாலுங் கண்ணித்
திரிபுரை கேள்வன் பாங்கர் சேர்தும்நீ வருக வென்று
கரிசறு கலுழ னோடு கரியவன் கயிலை சார்ந்தான். (௭௭)

நெடியவன் கயிலை காக்கு நீண்முடி நந்தி யெம்மா
னடியினில் வணங்கி யுற்ற வனைத்தையு மொழியக் கேட்டுப்
படியினி லன்றி யிந்தப் பவமொழி யாது கன்றா
லடிபட விளவெ றிந்தோ யறைகுவன் கேட்டி யென்றான். (௭௮)

வசுந்தரை யதனின் மிக்க வளங்கெழு தலங்க டம்மி
னிசைந்தரன் வீற்றி ருக்கு மிருந்தல மொன்றுண் டந்த
விசும்பள வுயர்ந்த கீர்த்தி விலாசகாஞ் சியின லாது
பசுந்துள வணிந்தோ யிந்தப் படரக லாது கேண்மோ. (௭௯)

அப்பதி யடைந்து நீ*யே ரம்மையோ டினிது வாழு
மொப்பிலா மாயூ ரேச னுயரடி யருச்சிப் பாயேற்
செப்பருங் கலுழன் கண்டத் தீயொழிந் தகலு மின்னே
யிப்பரி சியற்று கென்றா னிமையவர் வணங்குந் தாளான். (௮௰)

நந்தியிவ் வாறு கூற நான்முகன் றன்னை யீன்ற
பைந்துழாய் மார்ப னுள்ளம் பரிவுடன் விடைகொண் டேத்திச்
சிந்துசூழ் புவியி னந்தி செப்பிய விடத்தே நீத்தோன்
மைந்தனுங் கலுழ னோடு மகிழ்வுட னடைந்தா னன்றே. (௮௧)

†பாடலி நுகர்ந்தே யாறு பதங்களாற் சுருதி கூட்டு
நீடிய பசுமென் றோகை நிலவெறி சுகமும் பூவை
யோடிளங் குயிலும் பண்ணு மொலிகெழு கீத மேகமுந்
தோடவிழ் வாசப் பூவின் றுணர்கெழு சோலை சேர்ந்தான். (௮௨)

---

*ஏரம்மை-அழகம்மை.
†பாடலி-தேன்.

கோங்கரும் புதன மாடக் கொடியிடை துவண்டு வொல்கத்
தேன்றுளி வெயர்வு சிந்தச் சிலீமுக மிசைகள் கூட்டப்
பூங்குயில் கழையிற் பாடப் புயனிறத் தவன்மு னின்று
மாந்தளிர்க் கரத்தை நீட்டி வனமக ளாடி னாளால். (௮௩)

இந்நகர் திகிரி யேந்து மிறையவ னடைத லாலெத்
தொன்னக ரெல்லாம் போற்றச் சுகப்பய னடைந்தே னென்னி
னன்னல முறுவோர் யாவர் நானிலத் தெனப்பூ மாது
பொன்னிகர் பொரியைச் சிந்தல் போன்றன சோலைப் பூக்கள். ( )

நிலமகட் கேள்வற் கண்பாய் நிறைத்தகா வணம்போற் செவ்வி
நலமிகு மலர்ந்த சோலை கண்ணுநோக் கினனவ் வேலை
சலமொழி தவத்தோர் பன்ன சாலையு மகமுந் தூய
பொலனுல கத்தோர் தங்கும் பொலிவுங்கண் டதிச யித்தான். ( )

(வேறு.)

அவ்வயின் வாழ்தரு மந்தணர் வானோ
ரெவ்வமின் மாதவர் வந்தடி யேத்த
நவ்வி விழித்திரு நாதன் மகிழ்ந்தே
நவ்வி கரத்தனை நாடினன் போனான். (௮௬)

வெற்றிகொள் வானவர் வேந்தும் வணங்கப்
பற்றறை விலக்கிய பண்ணவ ரோடுன்
கற்றை மயிர்ச்சடை கண்ணுதன் மூர்த்தி
குற்றமி லாதமர் கோயி லெதிர்ந்தான். (௮௭)

அளந்திடு தற்கரி தாய்மறை நான்குந்
தளர்ந்து மெலிந்த தனிச்சுட ராகி
வளர்ந்து நிமிர்ந்துயர் வானிறை நின்ற
களங்கமில் சோதியை யன்பொடு கண்டான். (௮௮)

வுந்திடும் யோகியர் மாதவ ருவனை
னிந்திர னாதிய ரியாரும் வியந்தே
மந்திர வித்தை வணங்கி வழுத்த
விந்திர நாயக னின்ன துதிப்பான். (௮௯)

(வேறு.)

ஆதியே யண்ட மனைத்து நிறைந்தொளிருஞ்
சோதியே வானோர் தொழுதேத்து மாதுமையின்
பாதியே யன்பருளப் பங்கயத்தில் வீற்றிருக்கு
நீதியே யுன்பெருமை யாரே புகழ்ந்துரைப்பார். (௯௰)

சேலொத்த கண்ணு டிகைக்கத் திரையிலெழு
மாலத்தை நேரி லமுதா யருந்தியும்ப
ரோலத்தை நீக்கியரு ளுன்பெருமை யோதஞ்சூழ்
ஞாலத்துள் யாரே நவில வலனுடையார். (௯௧)

எண்ணரிய பல்லுயிரி லெங்கு நிறைந்துமறைக்
கண்ணரிய தன்மை யனுவாய்த் திரிபுரத்து
நண்ணாலரைக் காய்ந்த வுன்ற னகைத்திறமிம்
மண்ணுலகில் யாரே மதிக்குந் திறமுடையார். (௯௨)

என்றே பலவா யியம்பித் துதித்திடலு
நன்றே யிவனுளத்தி னாட்டியவன் பெண்ணவரன்
குன்றே பயந்தருள்பொற் கொம்பனையா டன்னுடனுன்
முன்றோன் றினமால் மொழிதுதியைக் காணனலும். ()

மாண்டகுசீர் முத்த மணியேய் முறுவலுமை
காண்டரலு முள்ளக் களிவோ டதிசயித்தென்
றாண்டவனை யின்னே டருள்செய் திடுகெல்வன்
வேண்டியவா றென்று விளம்பித் தொழுதிடவும். (௯௪)

(வேறு.)

மறியும் வாண்மழு வுங்கரம் வயங்குற மதியும்
வெறிகொள் வார்சடை மீதினில் விளங்குறப் படத்திற்
பொறிநெ ருங்கிய பணியணி பூண்டுமை யோடு
மிறைவன் வானவ ரேத்திட விடையினில் வந்தான் ()

அரிய ரன்றிரு வடியினி லன்பொடு வணங்கிப்
பரவி நின்றனன் பரமனும் பரிவுடன் மகிழ்ந்து
விரவு பங்கயக் கைகளான் மெய்யெலாந் தடவி
வரைவின் மாமணித் தவிசிருத் தின்னணம் வகுப்பான். ()

பகரும் வேதமா மொழிகளாற் பழுதிலா வன்பி
னிகரி லாதெனைத் துதித்தலி னின்னையார் நிகர்ப்பார்
புகரில் மொய்ம்பரீ புந்தியி லோர்ந்திடும் பொருளைப்
பகர்தி யென்றலு மீதெடுத் துரைத்தனன் பரிந்தே. ()

சகந்த னின்மிகு மொய்ம்பினிற் சமமிலா விந்த
குந்த ராசன்மென் மிடற்றுறுந் தணிவிலாப் புழுக்க
மிகந்தி டும்படிக் கருள்செய வேண்டுமென் றிரக்க
நகந்த ருங்கொடி நாயக னன்பொடு நயந்தே. (௧௮)

புரிமு றுக்கவிழ்த் தின்னிசை புரிந்துதா தளைந்து
வரிம துக்கொளுந் தாமரை மாலையன் மிடற்றி
னெரிய வித்தன னின்றுதொட் டாயிடைத் தவள
வரியி னயர்ந்திடு மவன்றனை வாகன மாக்கி. (௧௯)

உரைசெ யும்பரு ராத்துவா னுலவிய வுசிதப்
புரிசை சூழுமித் தாலமா புரியிலெஞ் ஞான்றும்
விரைசெ யங்கருங் குழலிலக் குமியுடன் மேவி
சரச மோடிருந் திடுகவென் றிறையவன் சாற்றி. (௨௰)

நாட ரும்பர மாகிவின் னவர்தின நயக்கும்
விட லில்லருஞ் சோதிலிங் கத்தினுண் மேவிச்
சேட னாதிய வறிஞருந் துதித்திடத் தேவ
ரேட விழ்ந்தபூ மழைபொழிந் திடவினி திருந்தான். (௨௰௧)

இமிலு டைச்சின விடையவன் மொழியினுக் கியைந்து
சமமி கந்தவத் தற்பர னடியினிற் றாழ்ந்து
நிமல மாந்திருத் துளவணி *நிறமுடைத் திருமா
லிமிரு மாமணிப் புரிசையின் வாயிலை நீங்கி. (௨௰௨)

வருண னுசையின் வாளிமுன் றேடிய தாரத்
தருண மாமுடி யச்சுத னமரர்கள் பரவத்
தருண மாமலர்த் தையலோ டணிபெறச் சார்ந்து
கருணை கூர்ந்தெழிற் ககபதி யுடனமர்ந் திருந்தான். (௨௰௩)

* நிறம்-மார்பு.

அவனை லக்குமி நாரண னென்னவே யலைசூழ்
புவியி லுள்ளவர் புகலுவர் பொன்னடி மலரைக்
கவினு றத்திரு மஞ்சன மாட்டினோர் யாரும்
புவன போகமோட் சங்களைத் தந்தவர்ப் புரப்பான். (௱௪)

இந்த மாக்கதை யிசைத்தவர் கேட்டவ ரெவரு
மைந்தர் மாநிதி மனைமுதல் வளமெலாந் துய்த்துப்
பைந்து ழாய்திருத் தாமமார் பண்ணவன் வாழ்வை
குந்த மேவியா னந்தவா ரிதியினிற் குளிப்பார். (௱௫).

## திருமால்பூசனைச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௭௧௪.

# தக்கன்பழி தீர்த்த சருக்கம்.

தாதலர் கோதை யிலக்குமி நாயகன் சரித மெனுஞ்சுவையார்
தீதறு தெள்ளமு தைச்செவி வாயில் தெவிட்டுற மாந்தியிரும்
பூதை யடைந்தன மேல்சிறு விதிகதை புகலென நைமிசம்வாழ்
மாதவர் வேண்ட வரம்பெறு சூதன் வகுத்திவை யோதுவனால். (௧)

முன்னொரு நாடன தாரி லதீதர் முனிக்கண மும்பரவக்
கந்த மலர்ப்பிர மன்றவ சேறி கனம்பெற வைகினனா
லந்த பதத்தி லவன்றரு மைந்தரி னைவரி றக்கனவண்
வந்தர விந்த பதந்தனை நெஞ்சில் வழுத்தி வினாவினனே. (௨)

முன்னவ னயம ரிக்கிறை யாய்த்திரி மூர்த்திக ளுள்ளுயர்வாய்ப்
பன்னரு மெவ்வுயி ருக்குயி ராயமர் பண்ணவன் யாவனென
வன்னிற மேனிகொ ளத்தனும் யானு மருஞ்சம ராற்றுழியோர்
வன்னி சிலோச்சய மாகி வளர்ந்தவன் *வானுற வாழிறைவன். (௩)

என்றய னோதவொர் கன்ம மிழைப்பவ னிருதொழி லாற்றுமுமக், கென்றுமில் வன்மை யடைந்தமை யென்கொ லெனச்சுதனேயிதுகே, ளொன்றிய பல்லுயி ரோடமை வானவர் தொகுதியை யீற்றிலழித், தென்று மிருப்பவ னன்றியு மெம்மு ளிருந்திருதொழில்புரிவான். (௪)

எம்மொடு மொருவ னெனப்பெயர் தாங்கி யியற்றுவ னோர்தொழிலைப், பொம்ம லுறும்முயிர் தோறு மரும்பில் பொருந்தியவாசமென, வெம்மரு ளாத னிருப்பன வன்மறை யாவு மெமக்கருளச், செம்மைய தாயினி தோர்ந்தன மஃதில் சிறந்தவ னெம்மிலரோ. (௫)

ஆதலி லன்னவ னேயிறை யாகு மருந்தனை சூழனுநாங்
காதலி லுன்னை யருள்பெறு மடியவர் கருதிய தெய்துவராற்
சூதினை யன்ன முலைச்சியி லந்தரு தோகை யிடத்திலுறுங்
கோதி லரன்றனை யடைகுதி யென்றனன் குளிர்மலர் வாழ்குரிசில். ()

---

* வானுற-மேன்மைபொருந்த.

நாட்டமொ ரெட்டுடை நாயக னன்பி னவிற்றுதல் செவிபுகலும்
பாட்டளி துதைமது *மதலை யணிந்திடு பரனிறை யெனவோர்ந்து
வாட்டமின் மானத வாவி யடைந்ததில் வருடமொ ராயிரமாய்
நாட்டமொர் மூன்றுடை யானை யருந்தவ நாடி யியற்றினனால். (எ)

இன்புறு மாதுமை யோடிட பத்தி லிவர்ந்தரு ளெம்மிறைவந்
தென்பெற வேண்டினை யோதுதி யென்ன வெழிற்பத மலரடிவீழ்ந்
துன்பணி தேவர்க ளென்பணி செய்யவு முமைமக ளாகவுநீ
யென்†மரு காகவு மருள்செய வேண்டு மெனத்தொழு தோதினனால்.

அறுகறல் தும்பை யணிந்தவ னன்ன தளித்து மறைந்தபினர்
நறைகெழு மாமல ரோன்புரி தக்க நகர்க்கர சாய்‡முல்லைக்
கிறையவ ளாகு $மறைக்கொடி வேட்டொ ரிரண்டு சகத்திரமாங்
கறையறு காளைய ரீன்றிரு பானெழு கன்னிய ரீன்றனனால். (௯)

அந்தமு வொன்ப தணங்கினை §ராம னகங்களி தூங்கவளித்
திந்துவை நோக்கி யியம்புவ னோர்குறை யின்றி சமத்துவமாய்
சந்ததம் வாழுதி யென்றரு ளோடுரை சாற்றி விடுத்தபினர்
நிந்தையி லாதவ ரோடு கலந்து /நிகழ்த்தின னூழ்வலியால். (௰)

ஆர லதற்கிளை யாளுவர் மேன்மிக வாதரம் வைத்தவர்முத்
தார மணிந்த குயந்தழு விச்சுக வம்பர மூழ்கினனற்
பீரலர் கொங்கைய ரேனைய மாதர் பிதாமு னடைந்திதனைச்
சீருற வோதி வருந்திமெய் வாடி திகைத்தழு தேங்கினரால். (௧௧)

அங்கு சினந்தமு தாகர னுக்கழ கார்கலை தேய்ந்தொழியப்
பங்கமில் சூணிலை தந்தனை னங்கொரு பதுகலை போயபினர்
தங்கிய வோர்கலை யோடுமை பாகனை சார்ந்து துதித்திடவக்
கங்கை தரித்தவ னும்முடி வைத்தினி கலைபெற வென்றனனே. ()

அவ்வர மேற்ற லவன்கலை முற்று மடைந்துபின் வானெழலுந்
தெவ்வடு தக்க னெனுந்திற லோனிவை தேர்ந்து தனதுரையை
நவ்வி கரத்த னகற்றின னென்றுள நைந்தர னைக்கறுவி
யெவ்வமில் புலக முனிச்சொலி னுற்சின மின்றி யிருந்தனனே. ()

---

மதலை-கொன்றை. † மருகு-மருமகன்.
முல்லை-கற்பு. $ மறைக்கொடி-வேதவல்லி.
§ ராமன்-சந்திரன். / நிகழ்த்தல்-நடத்தல்.

(வேறு.)

ஈது நிற்க விருணிறப் பூதமேற்
பாதம் வைத்த பரனரு கேயுமென்
சீத வாண்முகத் தேவியைத் தக்கனன்
மாதெ னப்பெறு மாதவ மோதுவாம். (௧௪)

ஆலத் தோங்கு மருங்கயி லாயத்திற்
சீலத் தோங்கிய சிங்க வணைமிசை
யாலத் தார்கள னார்ந்துறை போதுமை
சாலத் தாழ்ந்திவை சாற்றுதன் மேயினாள். (௧௫)

தேவ ரியாருந் திகைத்தழ நேமியின்
மேவி வந்த விடமயில் நாதனை
ஓவ லின்றி யொளிருநின் மெய்வடி
வாவ தோதென வைம்முக னோதுவான். (௧௬)

நாம ரூபக் கிரியை நணுகிலம்
நேம வெப்பொரு ளாயு நிகழுவம்
வாம மாருரு வாயரு வாய்ப்பல
வேம நல்லுரு வாயு மியைகுவம். (௧௭)

என்று ரைத்த விறையடி தாழ்ந்துமை
யொன்று நம்முரு வொன்றிலை யென்றநீ
இன்று பல்லுரு வுண்டெனச் சொற்றது
நன்று நன்றென நம்ப னவிலுவான். (௧௮)

மாதெ னாதரு ளின்வடி வாமவை
பேத மில்லை யறிவெனப் பேசலு
மாத லாலிங் கதுவென் வடிவமென்
றாத ரத்தொ டாற்கெதி ரோதினாள். (௧௯)

உன்னை நம்மெதி ராவியர் தோதினாய்
கின்னு ளும்புவி நேரு முயிருள
மன்னி யாங்கு மருவி யியற்றுவ
மன்னு தில்லெனி லாஞ்சடம் யாவுமே. (௨௰)

காணு மாறுள தாயி னீ காண்டியென்
றாணும் பெண்ணு மலியு மென் றாகிய
தாணு மூன்முதற் றானவர் தங்களுட்
டோணு நல்லுணர் வீதல் துறந்தனன். (௨௧)

ஒப்பி லாவிறை யோர்கண மித்தகை
செப்ப மோடுறத் தேவர்க்கும் யாவர்க்கும்
பற்ப லாண்டெனப் பட்டவர் தங்கடன்
றப்பி யேசட மாயிருந் தாரரோ. (௨௨)

ஆய போதஞ் சனக்க ணரிதிறக்
காய மாமலர்க் கார்தரு மென்குழல்
வேயை வென்று வெருட்டிய தோளுமை
நேய மோடு நிகழ்த்துதன் மேயினள். (௨௩)

பொன்ன வாஞ்சடைப் புண்ணிய வென்பிழை
யுன்ன லாதுளத் தோங்குயிர் யாவையு
மின்னல் தீர வெழுப்பென் றடிதொழு
தன்னை வேண்ட வரனருள் கூர்ந்தரோ. (௨௪)

ஊறில் பன்னோ ருருத்திரர் தங்களை
யீறி லீச னெழுப்ப வுவர்விரை
நாறு பூஞ்சடை நம்பரன் *றன்னைத்தான்
மாறில் பூசைசெய் மாநகர் வந்தரோ. (௨௫)

ஆர ணத்தின் முடிவி லமர்ந்திடும்
பூர ணப்பொரு ளைப்புனி தத்துடன்
வார ணப்புவி வாழ வருச்சனை
கார ணப்படி செய்திடக் கண்ணுதல். (௨௬)

ஈடி லாருயிர் யாவு மெழுப்பநற்
சேட னுதியர் சிந்தை தெளிந்துவா
னீடு மாமுடி நீள்கயி லாயமேற்
கூடி யீசற் பணிந்திவை கூறுவார். (௨௭)

(வேறு.)

அளவி றந்தநா ளறிவெலா மொருவியே சடமா
யாற்ற வேண்டிய கடனிகந் தெண்ணிறீ திசைந்தேங்
களைக ணையவை யொழிந்திடக் கருணைகூ ரென்னக்
கருது மப்பவ மலமக ளிடத்தினு தாகு
முளமெ லிந்திடே னும்பதத் தடைதிர் நீரென்ன
வுரைத்து முப்புர மெரித்தவ னுமையைநற் றங்கீ
னுளம கிழ்ந்திடு மகளென வாழுதி புவனமுந்
றுன்னை மாமணஞ் செய்குது மெனவுமை வணங்கி. (௨௮)

---

* தன்னைத்தான்பூசித்த்தலம்-திருவிடைமருதூர்.

புரிமு றுக்கவிழ்த் தின்னிசை யளியின முரன்று
　　பூந்து கட் குடைந் தரியவின் மதுவுணு மிக்க
விரைக மழ்ந்த*வார்க் குவதமஞ் சரிபுனை தட்ந்தோள்
　　விமல நாதனை யகன்றுமா மணிபுரித் திலமுங்
கரைக ளிற்றிரைக் கரங்கொடு வீசுகா ளிந்தி
　　கமல மேல்வலம் புரிவடி வாய்ப்பல நாளுங்
கரிய மெய்ப்பரன் றிருப்பெய ருச்சரித் தமர்ந்த
　　ளலகி லாவுயிர் களுக்குயி ராகுமெம் மன்னை.　(உகூ)

அந்த வேலையி லரும்புகழ் மாசிமா மகத்தி
　　லலைகொ ளந்நதி நீர்குடைந் தாடவேற் றக்கன்
கந்த வார்குழ லாரணக் கொடியுடன் ணுங்க்
　　கருவொ ழிக்குமப் புனிதநீர்ப் படிந்துமீள் பொழுதி
லந்த மில்லவ னிடம்பிரிந் தவளொரு பாங்க
　　ரலரின் மேல்வலம் புரியதா யிருத்தல்கண் டெடுக்கச்
சந்த மாரிளங் குழவியா யினைமகிழ்ந் துமையே
　　சார்ந்த னள்ளென மறைக்கொடி தளிர்க்கரத் தளித்தான்

பின்ன †ஞமிகப் பெருகுகன் மணிநெடுங் கொடிகள்
　　பெரிய மாகமீ தாடுமா டங்களாற் பிறங்குந்
தன்ன தூர்புகுந் திருந்தன னருந்திறற் றக்கன்
　　சீரு மாவல்மீக் கொளக்கௌ ரியையுசி தமதாய்ப்
பூன்றும் வேதவல் லியும்வளர்த் தெடுத்தனள் பரிவாய்ப்
　　பகரு மையையைந் தாண்டவ ணிருந்தபின் பரம
னன்னர் மாமணஞ் செய்திடத் தவஞ்செய்வ லென்று
　　நாரி கூறிடத் தந்தைதா யுளந்தனி னயந்தே.　(ஙக)

பொன்னு லாமணி மாடமப் புரிக்கய லியற்றிப்
　　பொன்னை யன்னசே டியரொடு மதில்விடப் பொருந்திப்
பின்ன ராண்டுசென் றிடத்தவம் பிரியமோ டியற்றப்
　　பேசு மாறிரண் டாண்டுவந் தடையவம் பிகைசேர்ந்
தின்ன தம்பெறு தக்கமா புரியினி லுயர்வெண்
　　‡ணுபய ராசியை யூர்ந்தருள் பரன்மறை யவனு
யுன்னமன்னவள் வாழ்தலத் தடைதலு மரிய
　　வன்ப ரென்றெதி ரெழுந்துபோய் வணங்கின ளமலே.　()

---

* ஆர்க்குவதம்-கொன்றை.　　† ஞமிழ்-ஒளி.

‡ உபயராசி-இடபம்.

சென்னை-20.

உமைமு கந்தனை யுருத்திர னேக்கியோர் பொருள்வேட்
டுன்னி டத்துவந் தேனஃ திலையே லுரைக்க
வமைவ னென்னலை யரிசிதர் மழைமதர் நெடுங்க
ணம்மை நீவிரும் பியதுரை யஃதெனக் கிசைந்தா
லிமையி னிற்றரு வேனதை நவிறி நீ யென்ன
விசைய வுன்னைநான் மணந்திடு மிச்சையா லிங்கு
வமைதி யோடுவந் தனமதை யகற்றிடே லென்ன
வார ஞர்க்கட லழுந்திமெய் வியர்த்தெம தன்னே. (௩௩)

அமல மாகிய வள்ளமீ தருமணங் கமழு
மலர்ந்த காந்தள்வுந் தனைந்தெனத் துணைச்செவி கரத்தா
னிமலை மூடிபு குமுதவாய் திறந்தர வணியு
மிருத்தன் யாமணஞ் செய்திடத் தவஞ்செயு மென்பா
லமைவு றுமொழி புகன்றனை யாதலா லிவண்விட்
டகன்று போவெனக் கடிதுவை தொருபுற மகல
வுமைம ணுளன்மெய் வடிவினை யொருவரு முணரா
துமையு ணர்ந்திடக் காட்டநீர் விழியுகத் தொழுதாள். ()

ஆங்கு சேடிய ரனைவருங் கண்டுள மகிழ்ந்தே
யரிய வேதியன் மாயமிக் கறிபவன் கொல்லோ
யிங்கு நம்மிறை யவளெமை நோக்கிலா ளென்னே
யெனப்பு கன்றுசிற் சிலதிய ரவண்விரைந் தோடி
தேங்கொ ளித்திரண் மணிமுடிச் சிறுவிதி முன்னஞ்
செய்தி யாவையு மியம்பிடச் சிந்தையி லரனென
றோங்கு தன்னறி வாலறிந் தகமகிழ்ந் தரன்மு
னுற்றடைந்தரு மறைகளாற் பழிச்சியீ துரைப்பான். ()

அலைகொள் வாரிதி சுலவுபே ரவனியி லுயிருக்
கரிய தந்தையா மண்ணலே யெனதுழா நகருக்
கில்க நீரெழுந் தருளுமென் றிசைத்துடன் படுத்தி
யிமய மாமயி லுடன்கொடு வந்தரி யணைமீ
துலக நாதனை யிருந்திடச் செய்தபி னுமையை
வுளக்க ளிப்பொடு மறைக்கொடி புல்லிநீ ராட்டி
யிலகு பன்மணிக் கலன்களிட் டெவ்வகை யுயிர்க்கு
மிறைவன் பாங்கரவ் விளங்கொடி தனைவிடுத் தனளால். ()

சுரும்ப ரற்றுபூங் குழலுமை சோதியின் பாங்கர்த்
துலங்க வீற்றிருந் தருள்பொழு திமையவ ரயன்மால்
கரும்பை வென்றசொற் கௌரியின் மாமணங் காண்பான்
கடிது வந்தனைந் திறைஞ்சியே கடிமதுக் கொன்றை
யரும்ப ணிந்தசெஞ் சடையவன் பாங்கர்வந் தடைந்தா
ரடல்மி குத்துள தக்கனு மப்பொழு தெழுந்தே
யிரும்பு னற்றளிர்க் கரங்கொடு மறைக்கொடி விடுக்க
வீச னார்கம லக்கழல் விளக்கியேத் தினனால். (௩௰௭)

அன்பி னோடருச் சனைபுரிந் தரன்கரத் துமையி
னங்கை வைத்தென தரியமா தவத்தினின் வந்தென்
கன்னி யாய்கலி தீர்த்திடுங் கௌரியைக் கடலின்
கடுவடக்கிய கடவுணிற் களித்தன னென்று
சொன்ன மாமுனிக் கரகநீர் விடுப்பவங் குறையுஞ்
சுரர்வி ருப்பினிற் புகழ்ந்தனர் மகிழ்ந்தனர் துளிக்கு
மின்மதுப்பொழி கொன்றையான் மறைந்தன னிப்பா
லிமய வல்லியங் கெய்திய துயரியம் பரிதால். (௩௰௮)

கமல நான்முக னார்திரு மகளிவை காணு
கணமெல னச்சினந் தெழுந்திரு கரம்புடைத் தார்த்திங்
கெமைம தித்திலன் மறைந்திழி பளித்தன னென்று
வெம்பிரான்றனை வசைமொழி புகன்றன னிப்பால்
விமலை பண்டுபோன் மிகவெயில் விரியரண் மனையை
வேயை வென்றதோண் மாதரோ டடைந்துள மெலிந்து
வமல மார்தவ மியற்றின ளியற்றலு மகிழ்ந்தெம்
மன்னை முன்னருள் விடையின்மீ தரனடைந் தனனால். ()

அரிய மற்கரி யான்விடை மேற்கொடம் பிகையை
யடைந்த வன்கள தபுதமா கிரியினை யப்பா
லரிவை மாரிது தெரிந்தயன் மகன்புடை யடைந்திவ்
வரிய செய்கையை யுரைத்தலு மரன்றனை யிகழ்ந்து
பொருவி றக்கனந் நான்முகன் மதித்தில னிருப்பப்
புனித வானவ ரவையறிந் தறைகுவர் புரத்தை
யெரிப டுத்திய கடவுளை யெண்ணலன் றக்க
னிறத்தல் சத்திய மவைநமக் குறுமென வெண்ணு. (௪௰)

(வேறு.)

பாகெ னும்மொழி யுமையையும் பரமனுர் தனையும்
யூக மோடிகழ்ந் தாருயி ரோடெவ ருய்ந்தார்
சோக நீங்குதி யித்துணைச் சொல்லுவஞ் சூழ்ச்சி
யேக னோடுமை தன்னைநீ சென்றழை யென்றார். (சக)

என்ற விண்ணவர் தங்களை யவனுற விருத்திக்
குன்ற வில்லிவா ழிரசிதக் குன்றினைக் குறுக
வென்றி சேர்கண நாதரெம் மிறையினை வெறுத்த
வொன்று புன்மையோ யிறைமுனம் போகவென் றுரைத்தார்

சமழ்ப்பு டன்சிறு விதிதன திடத்தினைச் சார்ந்து
விமைப்பி லாதவிண் ணவர்களுக் கிச்செயல் விளம்பி
யுமைக்கி டந்தரு சிவனைநீ ருன்னலீர் தொழலீ
ரமைப்ப ரம்பொரு ளென்னவே தொழுதிரு மென்றான். ( )

என்னசொல்லுமீக னீசனை யிகழ்ந்தெவ ருய்ந்தா
ரன்ன செய்தியை யிமையவர் கண்டவ ரலரோ
பன்னு தக்கனுர் சொல்வழி தாமுடன் பட்டார்
முன்னை யூழ்தனை யாவரால் வென்றிட முடியும். (சச)

அந்த மாமொழிக் கியைந்துவிண் ணவரெலா மகன்றார்
கந்த மாமலர்ப் பிரமனோர் மகஞ்செயக் கருதி
மைந்தர் தம்மை மான் முதற் சுரர் தமைக் கொடு வருக
வுந்தி வெம்மைகொ டக்கன்முன் னுரைத்ததை யுன்னு. (சரு)

இறுதி யாருயிர்க் கெய்தினு மெய்துக வென்னு
வுறுதி கொண்டரன் வாழிர சிதக்கிரி யுற்றுக்
கறையி லாதொளிர் நந்திமுன் விடுத்திடக் களத்திற்
கறைபி ருத்திய கடவுளைத் தொழுதுளங் கசிந்தே. (சசா)

எந்தை கேளொரு மகமியற் றுவணவ ணைய்தி
நந்த லில்லருள் செய்கென மகிழ்ந்துயர் நந்தி
வந்தி டச்செய்வோம் போகென நான்முகன் வணங்கி
வந்து சத்திய வுலகினின் மகிழ்வுடன் வதிந்தான். (சஎ)

மிக்க மாமக மவன்செயத் தொடங்கலும் விண்ணோர்
தக்கனோடவ ணடைந்தனர் வேள்வியின் சாலை
செக்கர் வேணிய னேவலாற் சாரதர் செறிய
வக்க ணந்தனி னந்திவந் தடைந்தன னப்பால். (சஅ)

காண ரும்புகழ் நந்தியின் வரவினைக் கண்டு
வாணி கேள்வனங் கெழுந்துகை குவித்துடன் வணங்கி
மாணு லாந்தவி சிருத்தினன் மனங்கொதித் தயன்செய்
நாண மீக்கொளத் தனைமறந் தின்னண நவில்வான். (௪௯)

அலகை வன்முன மணுகியிங் கிவனையா ரழைத்தார்
நிலவு லாமதி தவழ்கயி லாயம்வாழ் நிமலன்
கலக மேசெய வுந்திய நந்தியைக் கருதி
பலசி றப்பியற் றுவதழ கோவெனப் பகர்ந்தான். (௫௰)

அந்த வாசகங் கேட்டய னன்புட னளித்த
சுந்த ரம்பெறு மைந்தனுக் கான்றிறஞ் சொல்லக்
கொந்து லாமலர்க் கோதைசேர் திருப்புயங் கொண்ட
கந்த வேளனை யான்சிறு விதியிவை கழறும் (௫௧)

எள்ளு நீர்மைகொள் பித்தனா யிருந்திடு மீசன்
விள்ள ரும்மகத் தவிபெறற் குரியனோ வேண்டாங்
கள்ளு லாந்திருத் துளவணி கமலநா யகனுக்
குள்ளு வந்ததை யீதலே யுறுதியீ தல்லால். (௫௨)

மாறு செய்திடி லுன்னையங் கேரமே மடிப்பன்
வேறு செய்கலை யென்னலும் நந்தியும் வெகுண்டு
ஏறு யர்த்தவன் றனையலா தெழின்மக முடிப்போர்
வீறு சேர்முடி போகவென் றுரையது விளம்பி. (௫௩)

வந்த சாரதக் குழுவுட னந்தியெம் வள்ளல்
சந்த மார்பொழில் சூழ்தரு கயிலையஞ் சயிலத்
திந்து சேகரன் றடொழு தனைத்தையு மியம்பி
யந்த மார்திருக் கோபுர வாயிலை யடைந்தான். (௫௪)

வேதன் யாகமுங் குலைந்தது விண்ணுளோ ரெவரு
மீதை யஞ்சியே மகஞ்செயா திருந்தன ரிப்பாற்
போதன் மாமகன் வேள்விசெய் வதற்குளம் பொருந்தி
நீதி லாவிறற் கம்பியற் கூயிவை செப்பும். (௫௫)

யாக சாலையொன் றியற்றுதி யெனவதற் கியைந்து
நாகர் கம்மிய னமைத்தனன் கண்டுள நயந்து
வேக மாகிய வொற்றரை விளித்தடல் தக்க
*னேக னல்லது வேறுள தேவரை யெல்லாம் (௫௬)

---

* ஏகன்-சிவன்.

மன்னு மிவ்விடைக் கொணர்கென வணங்கின ரேகி
சொன்ன போதரி யாதிய வானவர் துன்னி
யன்ன வேள்வியை யடைந்தனர் மாலைவென் றடல்சேர்
மின்னி ருஞ்சடை ததீசிமா முனிவன்மே வினனால். (௫௭)

என்ன காரண மெங்களை யழைத்திசொல் லென்ன
முன்ன மேயெனக் கரும்பகை முக்கணெய் மூர்த்தி
தன்னை நீக்கியே யருமகஞ் செய்திடச் சமைத்தே
னன்ன தற்குமை யழைத்தன னெனமுனி யறைவான். (௫௮)

முக்க ணுயகன் பெருமையை முனிவனு மொழிந்து
செக்க ரஞ்சடைத் தேவனெத் தேவர்க்குந் தேவன்
தக்க வன்னவன் பகைகொடு மகஞ்செயச் சார்த
லொக்கு மோவுனக் கென்னநு மவர்க்கெதி ருரைப்பான். (௫௯)

கோல ஞாலமோ டயிரினைக் கொல்லுமோ கும்பித்
தோலொ டாமையி னேட்டினைச் சுமக்குமோ சூலஞ்
சால வேந்துமோ பலிகொளச் சாருமோ சாதஞ்
சீல மேவிய படையெனத் திரியுமோ தேவன். (௬௰)

நஞ்செ யிற்றட ஞகம தணியுமோ நவையிற்
குஞ்சி மீதுவெண் டலையினைத் தரிக்குமோ குழையில்
விஞ்சு ருதசங் கணியுமோ விடமென வெறுக்கா
தஞ்சு மாலம தருந்துமோ வாதியா மணனல் (௬௧)

ஈம மாடவு மொருத்தியைத் தலைமிசை யிருத்தி
வாம பாகத்தி லொருத்தியை வைக்கவு மகிழ்ந்து
காம மோடுசந் ததியினை யினவுங் கருத்தி
னேம மாகவு நினைக்குமோ யாவுமா நிமலன். (௬௨)

என்று பற்பல வசைசொலக் கேட்டவவ் விருடி
வென்றி யாயதற் குரியகா ரணங்களை விளம்ப
நன்றி கொன்றவத் தக்கனுட் சினங்கொடு நகைத்துக்
கொன்றை யானுக்கிங் கவிகொடேன் போவெனக் கொதித்து. ()

இந்து லாஞ்சடை யெம்பிரான் றனையலா தியற்று
மிந்த மாமக மொல்லையி னழிகவென் றியம்பி
நந்து ளான்றனை வெந்நிடக் கண்டமா நலத்தோ
னெந்தை யாரடி யாருட னேகினு னிருக்கை. (௬௪)

(வேறு.)

மாசி லாத பெரும்பு கழ்த்தவ மன்னு மாமுனி சென்றபி
ஞசி லாவமு தாடை யாடக மார மற்றுள யாவையு
நேச மோடவ ராசை தீர்ந்திட நீதி மாமறை யாளர்பால்
வீசி வேத னளித்தி டுஞ்சிறு விதியு மம்மக மாற்றினான். (௬௫)

அன்ன வாறு தெரிந்து மாடக யாழி சைத்திடு நாரத
னென்னு மாமுனி வெள்ளி யங்கிரி யெய்தி கங்கை யணிந்தவெம்
முன்ன வன்றிரு முன்னர் வந்தடி முடிபு னைந்தவ னிற்றலு
மென்னை யாளுடை யீச னோக்கி யிருங்க டற்புவி தன்னிலே. (௬௬)

இந்த நாணிகழ் கின்ற தென்னென வீச வானவர் தம்மொடுங்
கந்த மாமலர் மீது றைந்திடு கடவு டந்திடு புதல்வனோர்
சிந்து சூழ்புவி தன்னி லிட்டி செயத்தொ டங்கின னென்னவே
யுந்து கண்ணுமை யாளை மூந்தர னுபய பாதம் வணங்கியே. (௬௭)

இறைவ யான்மக மாற்றல் கண்டிவ ணெய்து வேன்விடையருளென
நிறையு மாதர வானு ரைத்திட நீள்க டற்கடு வுண்டமைக்
கறைமி டற்றரன் விடைகொ டுத்திட கனக *மானம தூர்ந்துபின்
நறைம லர்க்குழன் மாதர் சூழ்தர நாரி †யத்தனை நண்ணினாள். (௬௮)

கூற்றி னவிது வாகு மென்றசொல் குருதி தோய்கொடு வாளுடை
மாற்ற ருந்திறன் மான்ம கன்மகன் மகளை யோர்ந்திழி வாயசொல்
லாற்ற மோடுரை செய்து வெள்விடை யூர்தி யானையு நிந்தையா
மாற்ற மோதிநீ போதி யென்று வகுத்து ரைத்தன னுமரோ. (௬௯)

ஆங்க ரன்றனை நிந்தை கூறிட வம்மை யுட்சின மீக்கொடே
நீங்க கன்றொளிர் வெள்ளி யங்கிரி சேர்ந்து முக்க ணருட்கடம்
பாங்க டைந்தவர் பாத மீது பணிந்து னைப்பொரு ளாயுளந்
தாங்கிடாவடல் தக்கன்வேள்வி தவிர்த்தல்செய்யென வேண்டினாள்.

அம்மை கூறிய வாறு செய்திட வாறு கொன்றை யணிந்திடு
மெம்மை யாளுடை யான்ம னத்தினி லெண்ண லுந் திரு வார்ந்துள
செம்மை சேர் நுதல் விழியி னின்றொரு சென்னி யாயிர மோடுவந்
திம்மெ னப்பரன் முன்னு தித்தன னெழில்மி குத்துள பத்திரன். ()

---

*மானம்-விமானம். † அத்தன்-தந்தை.

அந்த வேளையி லுலகை யீன்றரு ளம்மை கொண்ட சினத்தினு
லைந்து நான்குநூ றுங்க ரத்தொடு மாயி ரம்வத னத்தொடும்
வந்து தோன்றின டொய்யில் வெம்முலை வாகை சேர்தரு காளிபின்
சந்த மார்தரு வீர னுரயல் சார்ந்தி ருந்தன டாரமாய். (எஉ)

அன்ன காலையி லந்த காரியை யமல மார்தரு மமலையைப்
பன்ன ருந்திறல் வீர னுங்கு பணிந்தெ ழுந்தினி பணியெனக்
கென்னை யென்னலு மீச னெம்மை யிகந்தி டுஞ்சிறு விதிமகன்
தன்னை யுற்றவி தந்தி டென்றுநீ தக்க வாறுரை சாற்றுவாய். (எங)

அளித்தி டானெனி லந்த வேள்வி யழித்த வன்றலை வீழ்த்திமே
களித்தி ருந்தபண் ணவர்களாவி கழித்து மீளுதி யெனமரன்
சுளித்து ரைத்தவை கேட்டு வந்து சுடர்த்தொ டித்தவ ரின்னித
ழிளைத்த நுண்ணிடை காளி யோடு மிருங்கு றட்குழு வோடுமே. ()

தக்கன் யாக மடைந்து வாயலில் சரர தத்திறல் வீரரை
நிற்க வைத்தத னுட்பு குந்தட னீடு தக்க னியற்றுசீர்
மிக்க யாக முறுத்து நோக்கி வெகுண்டு வா னுறு மேறெனக்
கொக்க ரித்தன னமர ரோடினா குணமி லானிவை யோர்ந்தனன்.

(வேறு.)

வீரன்முக நோக்கிமலர் வேதனரு டையோன்
யாரையிவ ணுற்றசெயல் யாதுரைநீ யென்னத்
*தாரைவிழி கொள்ளுமைத னுதிறை விடுத்த
தீரனவி வாங்கவி தினத்திவ ணடைந்தேன். (எசு)

தாவிலவி யீதியென சாற்றவு மழன்று
மூவுலகி லுள்ளவர் மொழிந்திடி னுமந்த
கோவிடைய னுக்கவி கொடுப்பதிலை யென்று
ஞவிதரு வான்பரம னுர்க்கவித ராதே. (எஎ)

தக்கவறி வற்றவடல் தக்கனிவை சாற்ற
மிக்கவுணர் வுற்றதிறல் வீரனம ரர்ப்பார்த்
தொக்கசெய லோவிது வுமக்கென வுரைப்பச்
சொக்கலொ டிருந்துரைசொ லாமலவ ணுற்றார். (எஅ)

உக்கிர னழன்றுதன தொப்புயர்வி லாத
கைக்கமல மேவிய கடுங்கதையி னுன்மா
றிக்குமுக னுமிவர் திகைத்தவனி வீழ
வக்கண மெழிந்தன னறிந்தமர ரஞ்சி. (எகூ)

---

* தாரை-நேசோடல்.

திகந்தமதி லோடினர் சினம்பரவு தக்க
னகந்தளர்வு றத்தனிமை யாயவ ணிருந்தான்
சகந்தனி லிருந்தவர் தவஞ்செய்தடை வெள்ளி
நகந்தனி லிருந்துவரு நாதனிவை செய்வான். (அ0)

அக்கமணி மாலைபுனை யண்ணலை யிகழ்ந்த
தக்கனுயர் சென்னியை தடிந்தனலி லிட்டான்
றெக்கவினை யோர்பல தீதித்திட விரங்கிப்
பக்கமுறு *மைத்தலை பதித்துயி ரளித்தான. (அக)

தறிதலை தனக்கமரர் தாவிமிக வேண்ட
மறிதலை யளித்தவுடன் மாணடி பணிந்தே
வறிதலை தராதெனது வன்பழி யொழிக்கப்
பெறுதலை யறிந்துவழி பேசென விரந்தான். (அஉ)

மன்னுக மன்னபுய வாகைபெறு வீரன்
முன்னுக நிற்றதிறன் மொய்ம்பன் முகநோக்கி
சொன்னுக மீதுதுவ சங்களசை யும†வெண்
கைந்நாக னூரனைய கச்சிவட மேற்கின். (அங)

தோடுறுசெவ் வாம்பலிதழ் துன்னுமர விந்தக்
காடுறு தடத்தினிற் கயற்குல முலாவக்
கோடுறுவெண் கோடுகுமி றும்பணைகொ ளம்பொன்
நாடுறுமி லேகர்மிக நாடுமவள முற்றே. (அச)

திருப்பனசை யென்றொரு செழுந்தலம துண்டாங்
கிருப்பன்று மாமலர்கொ டேத்தினவர் தம்மைக்
கருப்பயிலல் தீக்கிசுரர் காணரிய வின்பத்
திருப்பவமை விக்குமெம தீசன்மயூ ரேசன். (அரு)

அன்னவிறை வற்கய லயிந்திர திசைக்கண்
டென்னனுறு மோர்கடிகை தூரமதி லன்ப
ரின்னறவிர் தாந்தோன்றி யீசனெனு நாம
மன்னுசிவ னுண்டுபணி வார்பழி யகற்ற. (அசு)

ஞானமரு வும்பெரிய நாயகி யுடன் சீர்
வானவர் தினம்பரவ வைகின னவண்போ
யூனமி லருச்சனை யுளுற்றிறுதி செய்யென்
றுனையுரி போர்த்தவ னளித்தவ னிசைத்தான். (அஎ)

---

*மை-ஆடு. †வெண்கைநாகம்-வெள்ளையானை.

பின்னர்சிறு விதிதனது பிழையை யகற்றக்
கன்னல்வயல் சூழுமெழில் காஞ்சியை யடைந்து
பன்னதிக ளுங்குலவு பாலிநதி யாடி
நன்னக மகட்கிறையை நாடின னடைந்தான். (அஅ)

சோதிமுடி வானவர் துதித்தடி வணங்க
வேதமனு வாதிபல வேதிய ரியம்ப
மாதுமை தனக்கிட மகிழ்ந்தினி தளித்த
வாதிபயில் கின்றுழி யடைந்தனன் விரைந்தே. (அகூ)

அளந்திடவ தற்கரிய தாகி யயன்மாலுந்
தளர்ந்துடல் சலித்தவழு முணுமென வோங்கி
வளர்ந்துயர நீடியகல் வானினிறை கின்ற
களங்கமறு சோதியெதிர் கண்டன னுவந்தே. (கூ0)

கதிபெற வடைந்தமரர் கண்டுபணி யும்வா
னதிமதி மிலைந்தசடை நாதன்மகிழ் வெய்த
விதிமுறையி னற்*சபரி மிகவினி தியற்றி
விதியவ னளித்தசிறு விதியிவை துதிப்பான். (கூக)

(வேறு.)

மாசார்ந் தறிவழிக்கும் வன்கருவச் சேற்றினிடைக்
கூசாமல் மூழ்கிக் குறைதலைய னைதன்றி
†தாசார்ந்து கெட்டேன் றலைவனுந் தாந்தோன்றி
யீசா கடைக்கணித்திவ் வேழைக் கிரங்காயோ. (கூஉ)

காயமா காயமெனக் காணு துனைக்காய்ந்து
பேயனே னென்னோ பிழைக்குடன்பட் டேனிந்தச்
சேயனேன் குற்றமெலாந் தீர்க்கவருள் சேர்பெரிய
நாயகியை வாமமுறு நாதா விரங்காயோ (கூ௩)

மாதா பிதாகுரவன் மற்றுமனை மக்களுநீ
யேதா னெனவுளத்தி லெண்ணு திடருழந்தேன்
வேதாவுந் தண்டுளப விண்டுவுங்கா ணுச்சுயம்பு
நாதா கருணைசெய்திந் நாயேற் கிரங்காயோ. (கூ௪)

---

* சபரி-பூசை. † தா-கேடு.

(வேறு.)

இவ்வணந் தக்க னிருகணீ ரரும்ப வெழிலுடல் வேர்க்கமெய் நடுங்கச், செவ்வணத் தாலந் தழும்பிசொற் றளரச் சீருளங் கசிந்து நின் றேத்த, மைவணக் குழலா டன்னுட னிறைவன் மால்விடை மீதிவர்ந் தனுகி, யுய்வணமின்றன் குறைதவிர்த் தனமென் றுறு சிவ லிங்கமு ளுறைந்தான். (கூ௫)

கன்னலி ரிரடோ டக்கனும் வியந்து கருணையங் கடலெனு மரனை, மின்னெனு மிடையா டன்னொடும் பூசை விளங்குமா கமப்படி முடித்துப், பின்னரட் டாங்க மாகவே பணிந்து பின்னுகன் றனை விடை யேற்று, வுன்னருந் தக்க மாநகர் புகுந்தங் குளமகிழ்ந் தினி துறைந் தனனால். (கூ௬)

தெரியலர் மகுடத் திரட்படு கழற்காற் றேனுகர் விரைகமழ் நறும்பூந், தெரியல்வேய் தடந்தோட் சிறுவிதி பூசை செய்தவவ் விறையவன் றன்னை, வுரைதரு மொழியாற் பழிச்சுனர் பூசை யுஞற்றுன ரருச்சனை புரிந்தோர், புரைதவிர் போக மிம்மையிற் றுய்த்துப் பொருந்துவர் பரகதி மன்னோ. (கூ௭)

உனைப்பணி வார்க ளெனைப்பணி தரவென் றோர்பெறு வரம்பெறு தக்கன், மனச்செருக் கதனாற் சிவபெரு மானை மதித்திடா தவமதித் ததனாற், றனக்குறு தலைபோய்த் தகுதலை யெனும்பேர் தான்பெறி னுலகுளா ரெவரே, யுனற்கரும் பரனைப் பழித்திடி னுய்வா ருண்டெனி னுரையவ முறுமால். (கூ௮)

## தக்கன்பழிதீர்த்தசருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௮௧௨.

# இராகவன்பாவமொழித்தசருக்கம்.

என்றுரை முனியை யிருடியர் வணங்கி யிருவினைக் குறும்பெறி தவத்தோய், நன்றறி வில்லாத் தக்கன்மாக் கதையை நாங்கள்கேட் டகமகிழ்ந் தனஞ்சி, ரொன்றிய தாச ரதியவ னடைந்தே யோது மெம் பரசிவன் றன்னை, யன்றவன் பூசை புரிந்தமாக் கதையை யறைகென முனிவனு மறைவான். (க)

ஆதவன் குலத்தி னுதித்தவ னணிசே ரயோத்தியம் பதியினுக் கரையன், நீதறு நாமந் தயரத னென்னச் சிறந்தவ னவன்றரு புதல்வன், றுதவிழ் நறுந்தார்த் தசரதாத் மசனுந் தாய்மொழி மதித்தடை யலர்காய், நீதிசே ரிளவ லொடுமெனை யோடு நெடிபகா னகத்தினிற் பயினுள். (உ)

தலைகளோ யிரண்டோ டைந்துநான் கென்னுந் தடம்புய மலையுள வரக்கன், றொலைவிலா வடவி ராவணன் சோரத் தொழிலினுற் சீதையைக் கொடுபோ, யலைகடல் நாப்ப ணிலங்கைசே ருதலு மரிவையைத் தேடின ராகி, புலைவிலா மனத்தோ டியர்தரு வனம்புக் கொருங்குறத் தேடியுங் காணுர். (ஙு)

அடல்கொள்சுக் ரீவன் றனையடுத் தரிய வாருயிர்த் தோழனென் றுக்கி, யிடல்கெழு வாலி யின்னுயிர் விய மீளிவெங் கணையினை விடுத்துக், கடல்புரை தருவா னரப்படை யுடனுர் கவியடைத் திலங்கையை யடைந்து, குடல்தலை சரியச் சென்னியீ ரைந்து கொண்டவ னுருயிர் போக்கி. (ச)

சீதையார் திருவைக் கொண்டவண் மீண்டு சிறந்துள வயோத்தி யைச்சேர்ந்து, கோதிலாத் தனது தம்பிய ரோடு குலவிவாழ்ந் திடும்பொழு தோர்நாள், தாதுலா மலர்மா லிகையணி தடந்தோட் டசரத ராமனுர் சபையின், மேதையா யறிவின் மிகுத்துள வமைச்சர் மென்முக மெதிர்ந்திவை விளம்பும். (ரு)

பக்குவா பக்கு வங்களை யறிந்திப் படியென வுரைத்திடு மமைச்சீர், தக்கவிந் நாட்டி லுறைதரு சனங்க டம்மிலிப் பொழுதுதா னிருக்கு, மக்கதை யுரைமி னென்றுவாள் சங்கோ டாழிவிற் கதையிவை யொழிந்து, மொய்க்குமா புகழோ டயோத்திவீற் றிருபகோன் மொழிந்திட வவரிவை மொழிவார். (சு)

வங்கெறி கடலை மலைகளா லடைத்து மதிளிலங் காபுரி யழித்து வெந்திற லரக்கர் குலத்தையே யறுத்து விண்ணவர் கோன்றலை யெடுப்பு, இந்திர சித்தைக் கொன்றிரா வணனை யிரைந்து தலையறுத் தருட்டேஞ், சுந்தர வில்லிக் கெதிரிலை யென்று சொல்லுவார் தொல்லுல குள்ளோர். (எ)

ஆங்கவ ரிவ்வா றுரைத்திடக் கேட்ட வரசர்கோ னவர்களை நோக்கி, நாங்களிந் நகரி னுட்டினிற் பிறந்து நன்மையுந் தீமையுங் கேட்டுத், திங்கவை யகற்றச் சிந்தனை செய்துஞ் செப்புமிவ் விரண்டு நீர் கேட்ட, நீங்க ளொன் றுக்குங் கூசலீ ரென்ன நின்மல கேட்டியென் றுரைப்பார். (அ)

மன்னவ னிராமன் மானபங் கத்தை மனத்தினை வைத்திலன் வானோர்க், கின்னல்செய் தொழுகு மிராவணன் கொடுபோந் திடைவிடா தீரறு திங்கள், தன்னெடு நகரி தனிற்சிறை வைத்த தையலைத் தாரமாய்க் கொண்டு, பின்னையும் வாழ்கை பேரிழுக் கென்று பேசுவார் பெருநிலத் துள்ளோர். (கூ)

புத்தியிற் சிறந்தோ ருரைத்திடும் வெஞ்சொற் புகுதலு மிறத்தினி லொளிவே, றைத்தது போல வுளைந்துதன் சிந்தை தளர்ந்துபின் மானபங் கத்தன், வித்தக விலக்கு மணன்றனைக் கூயிம் மெல்லியற் சனகியைச் சான்றோர், முத்திலைய விரும்பித் தவஞ்செயுஞ் சாலை முன்விடுத் திவண்வரு கென்றான். (ய)

தசரத ராம னுரைத்திடுஞ் சொல்லைத் தடுத்திட மனமிலா தவனும், திசையெலா மொளிகாற் றேரினிற் றமையன் றேவியை யிருத்தி மாதவர்க, ளிசைவுடன் றவஞ்செய் கானகம் புகுந்தங் கிணையில்வான் மீகியாச் சிரமத், தசைவிலாக் கற்பிற் சிறந்தவை தேகி யரிவையை விடுத்தடைந் தனனால். (கக)

*அனந்தரந் தமைய னடியிணை வணங்கி யருணிறை சனகியை யரிய வனந்தனில் விடுத்த வகையினை யிளவல் வகுத்திடக் கேட்டவவ் வள்ளன், மனந்தனி லடைந்த துயரினைச் சொல்லும் வரம்பின தாகுமோ நகர்வாழ், சனந்தெரிந் திதையந் தாங்கருந் துன்பஞ் சாந்தவ னொருவில ரின்பம். (கஉ)

இவ்வண மிருக்கு மெல்லையி னொருநா ளெழிறவ வசிட்டனங் கணுகக், கைவணச் சிலையா லரக்கரைக் காய்ந்தோன் கடிதெழுந் தடியிணை வணங்கி, யுய்வணம் வந்தீர் வருகென வழைத்தங் கொளிர் மணி யாதனத் திருத்திப், பைவணப் பாந்தள் வாயின்மண் ணேகம் பட்டதோத் தடியனேற் கென்றே. (கங)

எம்பயி லெனது சிந்தைநொந் தறிவு கலங்கிவெந் துயர்பல் செறிந்தங், கெம்பியர் தடந்தோ ளுறழ்வலி குன்றி யென்மன வூக்கமுந் திரிந்தே, யும்பருக் கிணையா வோங்கிட வென்றனுயர்பதி வளமெலாங்குன்றி, யிம்பரி லுறைவ தென்னதை யடியேற் கியம்பென வருந்தவ னிசைப்பான். (கச)

தரங்கவார் கடல்சூழ் தரணியி லுள்ளார் சாற்றிய புன்மொழி கேளா, யிரங்குவண் டினமா ரிணர்த்தொடை வேய்ந்தே யெழிலியைப் பழிக்குமென் கூந்தற், றிரங்கொண்முல் லையினிற் சிறந்தமை திலி யைச்செழித்தகான் விடுத்தவத் தீதா, லுரங்கிளர் வைர வேற்கர வள்ளா லுற்றனை யடைந்தவிக் கொடுமை. (கரு)

எனத்தவ முனிவ னிசைத்திடக் கேட்ட விராகவ னெழுந்தவ னடியைக், கனைத்துவண் டிமிருங் கடிமலர் தூவிக் கனிந்தமென் மொழியினற் பழிச்சி, மனத்தினன் வாக்கான் மதித்திடற் கரிய மாதவ வெனைத்தொடர் விழுமந், தனைத்தவிர்த் தாளென் றிரந் திடக்கேட்ட தவத்துயர் வசிட்டனீ திசைப்பான். (கசா)

ஒலிதிரைக் கடல்சூழு லகினிற் பஞ்சா யுதமொழித் துதித்திடு மரசே, வலிகெழு முனைச்சூழ் பவமொழிந் தகலும் வகையுள தெவையெனி லுரைப்பன், பலவினைத் தொடக்கறப் படருழந் தோரும் பவமகன் றிடுவதற் குரிய, நலமலி புகழ்சேர் தலமுள முந்நீர் ஞாலமே லந்நெடுந் தலத்தில். (கஎ)

---

* அனந்தரம்-பின்பு.

(வேறு.)

உலக மளித்த வுமைமயிலி னுருவா யிருந்து பூசித்தா
ளலகில் புகழ்சேர் கந்திவரி யங்கமாய்நின் றருச்சித்தான்
சுலவு விழிவேற் கோகனகைத் துணைவன் பரிவாற் கைதொழுதா
னிலக்கு கமலத் தயன்பலநா ளிருந்தே யெகினத் திடமொழித்தான்.

சுந்தமலர்க்கந் பகவேந்தன் சுருதும்பயன்பெற் றினிதுவந்தான்
சந்தம்நறைதே ரோர்பனவன் றனதுகவல்தீர்ந் தருள்பெற்றான்
விந்தையிலங்கும் புயங்கொண்ட விறல்சேர்தக்கன் பவமொழிந்தான்
சிந்தைமகிழ்ந்தே யளவிறந்தோர் சேர்ந்தங்கரிய செயல்பெற்றார். ()

பாரின்மாதுத் தரியம்போற் பரந்துவருமப் பாலாற்றின்
றீரத்திருக்குந் தூலநகர் சேர்ந்துசிவனைத் தெரிசித்தார்
சேரும்பவங்கள் கடைக்காலிற் செறியும்பூளை மலராகும்
வீரவதற்கு நிகர்தலங்கள் வேறுபுவியில் யான்காணேன். (உ௰)

(வேறு.)

அதினுறு பெருமை முற்று மறைந்திட வூழிசெல்லு
மதியுறு மிராம வாங்கு வைகியப் பரனைப் போற்றி
யெதிருறு பவத்தை நீக்கி யேகுதல் கரும மாகுங்
கதிர்மணி வண்ண னென்றான் கருவினைக் கடலை வென்றான். (உக)

*வீம்புசேர் முனிவன் கூற மெலிவொழிந் தடலி ராமன்
பூம்பொறை விமான மூர்ந்து போந்தவ ணிறங்கி யந்தக்
காம்புறழ் தோளி பங்கன் கழலிணைப் பூசை செய்தே
யாம்பலம் போது வாயா லன்புறத் துதித்தான் மாதோ. (உஉ)

அன்புடன் றுதித்துப் போற்ற வரன்மிகக் கருணை யங்கி
மின்பிறழ் மேனி யோடும் விளங்குமான் மழுவி னோடு
மென்பெறு மாலை யோடு மென்னையா ளுடைய வையன்
முன்புற நின்றான் கண்டான் மூரிவிற் றடக்கை வள்ளல். (உ௩)

---

*வீம்பு-மேன்மை.

கண்டிடு மைய னுள்ளக் களிப்பினாற் றுதிசெய் தேத்த
வொண்டொடிப் பாக னன்பா லுரைத்தன னிராம நீமுன்
வண்டுவீழ் மலர்ப்பூங் கோதை மலர்த்திரு வனைய மாதைக்
கொண்டுபோய்க் கானில் விட்ட கொடும்பழி யொழித்தோ மிப்பால்

வளம்பெறு மூன்றன் மாட மணிநகர் போதி யென்ன
வளர்திடற் கரிய வாற்ற லரக்கர்தங் குலத்தைக் காய்ந்தோ
னுளம்பெறு மகிழ்ச்சி பொங்க வொளிர்விமா னத்தி னேறித்
தளம்பல சூழ வையன் சார்ந்தன னயோத்தி மாதோ. (உரு)

## இராகவன்பாவமொழித்தசருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—அ௩௪.

# மதனனருச்சவனைச்சருக்கம்.

தன்னே ரில்லாச் சூதனிரு தாளைப பணிந்து நைமிசர்க
ளன்னை யனையாய் கோதண்ட ராமன் கதைகேட் டகமகிழ்ந்தே
மின்னேய் வேணி யான்றனைவேள் மிகுந்த மகிழ்வா லருச்சித்துத்
தின்றே தகவு தீர்ந்தசெயல் சாற்றுகென்னச் சாற்றுவனால். (௧)

தீரஞ்சுமந்த புயமுடைய திறல்சேர் சூர னிழைத்தகொடுங்
கோரஞ் சுமந்த வானுலகக் கோமா னிடருற் றுற்றுழைய்
நூரஞ் சுமந்த மலர்பபொய்கை நாட்டிற் றனது மனைவியொடும்
வாரஞ் சுமந்த வானவர்தம வருக்கத தொடும்வந் தடைந்தனனால்.

நீரார் புயல்தோய் விண்ணளவு நீண்டமேரு மலையதனைத், தாரார்
புய்விண் ணவரிறைவன் சார்ந்தெம்மிறைவன் றனைக்குறித்துச், சீரார்
தவஞ்செய் திடுமமையங் தெளிந்தமுனிவர்க் கருள்செய்யுங், காரார்
மிடற்றுக் கண்ணுதல்செங் கண்ணு யிரத்தோ னெதிர்வந்தான். (௩)

வந்தார் தமைக்கண் டவரடியை வணங்கி வெஞ்சூர் தடிந்தெனது,
சிந்தா குலந்தீர்த் தருள்செயெனச் செப்பக் கேட்ட திகம்பரனும்,
நந்தா விளக்கீ மகனொருவ னுடியவுணக் குலமழித்துப், பைந்தார்த்
திணிதோட் பார்த்திவனின பயந்தீர்த் திடுவ னெனமறைந்தான். (௪)

ஆங்குப் புனிதூ னகன்றிட லுமமரர் கோமா னுளத்தார்வந்
தாங்கிக் கமல நிதிப்பொ குட்டிற் றங்கும் பிரமன் பாலடைந்து
தீங்கு பெறுசூர் புரிதுயருந் திகழ்செஞ் சடையான் செப்பியதுந்
தாங்கு வயிர வாட்கரத்தோன் றாளிற்பணிந்து சாற்றினனால். (௫)

போத னரிவிண் ணவரோடும் பொறிநா யகன்பா லடுத்திதனை
யோத வரிநான் முகன்றனைப்பார்த் தொப்பில் பரமன் மாதவர்க்கு
வேத முடிவின் பொருட்குறியால் விரித்துக் காட்ட யோகுற்றான்
நாத னதனைத் தவிர்ந்திமவான் நங்கை தனைமா மணஞ்செய்தே. (௬)

அடலார் மகனைத் தருவனதற் கனங்கன்றனைக்கூ யனுப்புமென
மடலார் பதுமத் தயனமரர் மருவ வொருபா லிருந்தலைகொள்
கடலார் முரசக் காமன்வரக் கணித்தா னந்தக் கணத்தின்மகட்
கடலார் படையோ னிளந்தென்றற் *கவரி யூர்ந்து வந்தனனால். (௭)

---

* கவரி-தேர்.

வந்த மதனை நோக்கியரன் மருவும் யோக நீங்கிமலை
தந்த மகளை வேட்ப நின்கைச் சாபத் தலர்மென் பூவாளி
சிந்தி வருக வெனக்கரத்தாற் செவியைப் பொத்தி சிவசிவவென்
றந்த மொழியை மறுக்கமல ரயன்சூ ளறைவே னெனவணங்குன். ()

இந்த வசையைச் சுமத்தலினன் றீச னுற்சே ரிடரென்னுப்
புந்தி யினிற்றேர்ந் திரதியொடும் புகழார் கும்ப முனிவரையின்
சந்த மளவி வருந்தென்றற் சயந்த மிசையூர்ந் தரன்வாழு
மந்த மிகுவெண் கைலைமலை யடைந்து வணங்கித் துதித்தனனால். ()

ஆங்கு மதவேள் கரும்பைவளைத் தலரம் பேவ விரதனந்தி
தாங்கு வெகுளி கொடுசீறத் ததையு மலர்வா ளிகள்வானிற்
றேங்க மதனன் வணங்க வுன்றன் சீரார் வரவே தென்ன நிகழ்ந்
தாங்கு மொழியக் கேட்டவிடை யண்ண லுவந்தீ தறைதுவனால். ()

பாதி மதியைத் தரித்தருளெம் பரமன் யோகத் திருத்தலினவ்
வாதி யெதிரிற் செல்லற்க வணியார் மேலை வாயின்வழி
போதி யெனப்போந் தங்கரன்மேல் பூமென் வாளி தனைச்சிந்த
வேத முதல்வன் விழிதிறக்க வீய்ந்தா னிரதி தேய்ந்தானே. (கக)

(வேறு.)

அந்த வேலை யிரதி காந்த னாகம் வெந்த வாறறிந்
திந்து வன்ன முகமு லர்ந்தி ருங்க ணீர்த தும்பவே
கந்து கத்த னத்தி ரண்டு கையி னால றைந்துபின்
வந்து முக்க ணெந்தை பாத மலரில் வீழ்ந்த ரற்றினாள். (கஉ)

பண்ணி சைந்த குதலை யின்சொல் பசிய கிள்ளை யொன்றுமிழ்ந்
துண்மெ லிந்து பதைப தைத்து ழன்று தேயு மாறுபோற்
பெண்ண ருங்க லம்ப தைத்து பெரிது நொந்து பொருமியே
துன்னெ னவெ ழுந்தவ் வெந்தை தூய தாளி றைஞ்சியே. (கங)

வேத மாகி முனிவர் காண வேத மோதும் விமலமா
மாதி யூய னாதி யாகி யப்பு றத்து மொப்பிலாச்
சோதி யாய்ச்சு யம்ப்ர காச தோற்ற மாகி யிருவகைப்
பேத மாகி நின்ற ஞான பிரண வத்தி னுருவமே. (கச)

அறிவி லாத சிறியர் தீமை யார்பொ றுப்பர் நீயலான்
மறியு லாவு பாணி கோப மாற்றி யுன்ற னருளினால்
வெறியு லாவு மதனி யற்றும் வினைபொ றுத்தென் கந்தரஞ்
செறிப சும்பொன் மங்க லஞ்செ ழிக்க நல்கெ னக்கெனா. (கரு)

தானை யேற்றி ரக்க லூர்ந்து முற்கண் மேரு வில்லினன்
ஞான யோக நீங்கி யுண்ணை யந்து நாம வேறகனாய்
வான மேவு மிமய மாதை மாம ணம்பு ரிந்துபின்
வேணி லானை யீது மென்ன விமைய வெற்பின் மேவினன். (கசு)

இன்ன வாறு ரைத்து பின்னர் யோக மாச ரித்துவா
ழென்ன மாத வர்க்கி யம்பி யிமய வெற்பி னுற்றிடங்
கன்னி முன்னர் கடுவ டக்கு கண்டன் மூத்த வந்தண
னென்ன வேக வம்மை நோக்கி யிருக ரங்கள் கூப்பியே. (கஎ)

தொழுது நிற்ப வாத னத்தில் தோன்றல் மேவி நீதவம்
பழுது றுது புரிதல் யாது பகர்தி யென்ன வென்னையும்
விழுது நேர்ச டைப்பி ரானை வேட்டல் வேண்டி னேனெனக்
கழுது கூளி யொடுந டஞ்செய் கடவு ளென்றி கழ்ந்தரோ. (கஅ)

இன்று னைக்க லக்கும் வேள்வி யெண்ணி யான டைந்ததிங்
கென்று ரைக்க வெம்பி ராட்டி யெரியெ முச்சி னங்கெதிர்
நின்றி டாது போதி போதி நீதி யற்ற வேதியா
வென்றி சைக்க விடையின் மீதி லிறைவ னாக நின்றனன். (கசு)

காத லாகு மெம்பி ரானைக் கண்டு கைகள் கூப்பியே
பேதை தேர்ந்தி டாது ரைத்த பிழைபொ றுக்க வேண்டுமென்
நாத வென்ன விச னந்த நவையெ லாந்து திக்கவா
மாது கொண்ட னந்த வத்தை மாற்று நாளை வேட்டுதும். (உ0)

எனவி யம்பி வெள்ளி வெற்பை யெய்தி யோகர் வாயிலா
னினிய சைல வேந்த னுள்ள மிசைவு கண்டு பணிவரை
புனித னெய்த மேனை பாத பங்க யங்கள் பூசியா
நனிக லன்றி ருத்தி மாதை நாத னோடி ருத்தினள். (உக)

மாசில் பூத ரத்த னிரை வள்ள லத்தம் விட்டரற்
காசி லாத வெனது மாத ளித்த னென்ற னன்பொனின்
றாச ணிந்த மாய னாகி சுரர்க ளார்த்து வாழ்த்தினர்
பேசு நார தாதி யோர்பி றங்கு கீத மேத்தினர். (உஉ)

(வேறு.)

மறைமுடிக் கடவு ளுரைப்படிப் பிரமன் மங்கலச் சடங்குக டொடங்கக், குறைவற நிறைந்த மங்கல நாணைக் கோதிலாப் பரன் கரங் கொண்டே, பறையறை முழங்கப் பார்ப்பதி மிடற்றிற் படரொளி விரித்திடத் தரித்து, நிறைவலஞ் சூழ்கொ ளழல்வலங் கொண்டு நிகரிலா வரியணை யிருந்தான், (உரு)

பின்னரெம் பிரானைப் பிராட்டியோ டயன்மால் பிறருளோர் யாவரும் பணிந்தார், மன்னிய விரதி வணங்கிவே டன்னை வள்ளலே யளித்தரு ளென்ன, வுன்னினன் மதனன் றோன்றவெம் பரய் ஞொளிரதிக் குருவனாய் மற்றோர்க், குன்னரு மருவ னாகுகவென்றே யோதிமா திரதிபால் விடுத்தான். (உச)

அந்தமா மதன னழல்விழிப் பரம னடியிணை வணங்கினின் றேத்தி, யெந்தையே நின்ற னெழிறிரு மேனி யிளைத்திடச் சரந்தொடுந் தலினால், வந்தவெம் பவந்தீர் வழியெனக் கருளி மனக்கவ லொழித் தியென்றுரைக்க, விந்துமா முடியோ னிரதிகா தலனுக் கின்னணா மெடுத்தினி தியம்பும். (உரு)

கொவ்வைவா யுமையுங் கோவிறை யவனுங் கொண்டபா வந்தனை யொழித்த, கவ்வையங் கடல்சூழ் மாநிலத் துயர்ந்த கயிலையங் கிரியினை யனைய, செவ்விய தால புரியெனப் புவியிற் சீருறு தலமுள ததினீ, நவ்வி நோக் கிரதி யுட னடை குதியே னும்பழி யகற்றுது மென்றே. (உசா)

வேதநான் முகவ னெகினமா யளற்றின் விளங்குசெந் தாமரை மலரின், மாதுநா யகனூ கரமதாய் முடியு மலர்ப்பதந் தேடியுங் காணா, நாதனார் விடைதந் துமையொடு கயிலை நண்ணினா னிங் கணைக் கிழவன், றாதுலா மலர்மென் கோதையா ளிரதித் தையலோ டளவளாய் மகிழ்ந்தே. (உஎ)

தென்றலந் தேருந் திகழ்மதிக் குடையுஞ் சிறந்திடு மகரகே தனமும், வென்றிகொள் வேழ வியனெடுஞ் சிலையும் விரைமலர்ப் பகழி யுங் கொண்டு, மன்றலங் குழலா ளிரதியோ டிரவி மண்டல முறு மதில் புடைசூழ், குன்றலிற் செல்வத் தாலயம் பதியாங் கோநக ரெல்லைவந் தடைந்தான். (உஅ)

ஆங்குபன் னதிக்கு மரசென விளங்கு பூலைகொள்பா லாற்றினிற் குடைந்து, வீங்கணி புயத்தில் விரைகமழ் நறுந்தார் விளங்கிய விறல் செறி யனங்கன், றாங்கெழி றனது மெய்யெலாந் திகழச் சாந்த வெண் ணீற்றினைப் பூசிப், பாங்குறுஞ் சிகரக் கோயிலுட் புகுந்து பராபர மூர்த்தியைக் கண்டான். (உகூ)

சூழ்ந்தனன் றுதித்தான் றொழுதனன் பலகாற் றூயதண் புனல லர் கொண்டு, வாழ்ந்திடு மானைப் பூசனை புரிந்தான் வழுத்தினன் முதுமலர்த் தாண்மேற், றாழ்ந்தன னுருகித் தடங்களு ணந்தத் தண் புனல் சொரிந்திட நின்று, ஞாழ்ந்தனன் பவத்தினையகாத் துன்றனரு ட்கரை சேர்த்தரு ளென்றான். (௩௰)

உருகியிவ் வண்ண மனங்களுந் துதிப்ப வுளமகிழ்ந் தெம்பிரான் கருணை, பெருகிடச் செய்ய பவளவாய் மலர்ந்து பெட்புறு மனங் கவா வென்றன், கருகினி லழைத்தே யன்பனீ புரிந்த வருச்சனைக் குகந்தன முன்பாற், பொருவறு பவமுந் தீர்ந்ததென் றுரைத்துப் புராரிபின் னையுமிது புகன்றான். (௩௧)

அரியவித் தலத்தி னமதருங் குறியொன் றமைத்தன தணிகிளர் நீகரம், பரிவுட னகல்கென் றிணையிலி யாய பரம்பர னுரைத்தன னதுகேட், டெரியிடு மிழுதா யுளங்கசிந் துருகி யிறையவற் பணிந்து கீழ்த் திசையீ, னிருகணை விதூரத்தினி னல்ல விடமது தேர்ந்தக மகிழ்ந்தே. (௩௨)

அந்தநல் லிடத்தி லமரர்வான் பதிபோ லணிநக ரொன்றெடுத் தளிசூழ், கந்தமென் கமலப் பொய்கையுண் டாக்கிக் கறைமிடற் றையனைத் துதித்துத், தொந்தம்விட் டகைத் தண்புன லுரய்ந்து தூயவெண் ணீற்றினைத் தரித்துச், சிந்தையிற் பஞ்சாக் கரத்தையே நினைந்து சிவலிங்க வுருவமொன் றியற்றி. (௩௩)

சயிலமா துமையைத் திரிபுரை யெனப்பேர் சாற்றியப் பாணிடத் தமைத்துத், தயிலமா னிடத்தைந் தையமு திழுது தண்சுவைப் பா றயிர் செழுந்தேன், வயலிலார்ந் தெழுசெங் கரும்பினல் லிரதம் வ… பூழம் பிழிந்தமென் சாறு, புயலன வியதேங் காய்ப்புனல் ச… புகலருந் தபனீ ரிவற்றால்.

மறைமுறை பிறழா தொன்றன்பி னொன்றாய் மஞ… …சை கமழு, நறைமல ரயன்மு… டியுங் காணு… யாட்டி, நறியமென் வாசத் தேய்வையு மணிந்த் திரு… தரித்துக், கறையிலா தொளிருங் காழகக் … நேய… ளாற் புனைந்து. (௩௪)

…ரம்பைமா வருக்கை யதிரச…
யனமும், வரம்பறப் படை…
வோரெலாந் துதிக்கத், திர…
ந்துப சாரமு மியற்றி,
…மோ டருச்சனை புரிந்…

தேளர்க டேவே சின்மயப் பொருளே சிற்சுகக் கருணையங்
கடலே, பூவரு மயன்மால் புங்கவர் யாரும் புகலருந் துரியமெய்
ச்சுடரே, மூவருக் கரசாய் மூனைத்தவின் மலனே மூதறி வுடையவர்க்
களனே, யேவரும் பணியு மிறைவனே யுலகி லிணையிலா நந்தனே
போற்றி. (௩௭)

எனப்பல விதமா யிருகணீ ரரும்ப விணைக்கரஞ் சென்னிசேர்த்
திதயம், பணிப்பொடு துதித்துப் பாதபங் கயத்திற் பணிந்திடப்
பரமனார் மகிழ்ந்து, வனப்புறு மேனி யுமையொரு புறமு மதியணி
சடையுமுக் கண்ணுந், தனிக்கையின் மானு மழுவுமவ் வண்ணங் கடுக்
கைத் தாருமே றூர்தியு மானான். (௩௮)

மணிவிடை மீதின் மறைபுகழ் பெருமான் வந்தெழின் மதனன்
முன் றோன்றித், துணிவொடு நீசெய் பூசனைக் குகந்தோந் தொலை
விலா நின்னகர்க் கினிநீ, யணிகிள ரிரதியோ டடைந தானு வார்வமோ
டடைதியென் றறைந்தே, துணிவுறு மிலிங்க மதனிடை மறைந்தான்
சம்பரா ரியுநக ரடைந்தான். (௩௯)

நலங்கிளர் மதனன் செய்நக ரதனை நல்லமா நகரமென் றுரைப்
பார், புலங்கொளு முள்ளத் தன்னவன் பூசை புரிதலான் மதனநா
யகனென், றிலங்குறு புவியோ ரியாவரும் புகல்வ ரிறைவனைப்
பூசனை யியற்றின், மலங்கெடுத் தொழியாப் பவந்தொலைத் துயர்ந்த
வாழ்வுபெற் றோங்குவ ரென்றான். (௪௰)

மதனனருச்சனைச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௮௱௭.

உ

# இயமனருச்சனைச்சருக்கம்.

களங்கமிலா வுள்ளத்தோ னிவ்வாறு கழறுதலும்
வளங்கொணைமி சாரணிய மாதவரு மகிழ்வோங்கி
விளங்குமத னன்கதைகேட் டனமியமன் வினைதீர்ந்தே
யுளங்களிகூர்த் தவையுரைத்தி யெனச்சூத னுரைக்கின்றான். (௧)

வற்கலையாய் மாருங்குடுத்த வண்டவமார் மிருகண்டன்
முற்கலமா முனிசெய்தவ முதிர்ச்சியினால் வந்துதித்த
பொற்கலைமா மணிப்பணிகள் பூண்டறலை நிகர்குழலா
*லற்கலைசெய் மருத்துவதி யணங்கினைவேட் டினிதிருந்தான். (௨)

இருந்தபொழு தெச்சமிலா வின்னலினான் மனைவியுட
னருந்தவன்கா சியையடைந்தே யணிகிளர்கங் கையிற்குடைந்து
திருந்தியசெஞ் சடைப்பரனைச் சிந்தனைசெய் தரியதவம்
வருந்தியிருந் தருமதலை வரம்பெறவேண் டினன்மன்னோ. (௩)

அருந்தவமோ ரியாண்டியற்ற வழற்கரத்தோன் வரந்தரவவ்
விருந்தவன்முன் றோன்றியுன தெண்ணமொழிந் திடுகெனலும்
பொருந்தியவோர் மகவையருள் புரிகவெனப் புரமெரித்தோன்
முருந்துறழ்புன் னகைபுரிந்தே மொழிந்திடுதன் மேயினனால். (௪)

தீயகுண மகம்பாவஞ் செறிதலுட னறிவின்மை
யேயுமுடம் வெதிரமுகை யிருவிழிநோக் கிலனாகி
யாயவய தொருநூறு மரும்பிணியி லுழப்போனாய்
சேயமுட னொருபுதல்வ னீகுதுமோ நெடுந்தவத்தோய். (௫)

கோலவனப் பிற்சிறந்து குறைதலிலா வடிவமுட
னேலுறுவன் பிணிகளின்றி யெம்மிடத்தி லன்புளனாய்
காலமுமெண் ணிரண்டுபெற்றுக் கலைகள்பல பயின்றுவல்ல
பாலகனைத் தருதுமோவின் னெண்ணமெவை பகர்தியென்றான். (௬)

இருமைதரு தவத்துயர்ந்த விருபிறப்போ னிவையுன்னி
†புரமுயிர்வா ழாண்டுகுறைந் திருந்தாலும் புலமைமிகுத்
தொருகுறைவி லாக்கையனா யுமதிடத்தி லன்புநிறை
தருமகவை வேண்டினன்யான் சசிதரவெற் கருளென்றான். (௭)

---

அல்-இருள். †புரம்-உடல்.

இன்னவகை மனத்துணிவா னிசைத்திடலு மரனுனக்கு
நன்றிபெறு காதலனை நல்கினமென் றருள்புரிய
நின்றதவ முனிபோற்றி நேயமுடன் காசிநக
ரொன்றியசுற் றத்தவரோ டுறைந்திருந்தா னுறைநாளில். (௮)

கடனிலத்திற் றுயர்நீங்கக் கருதருட்புண் ணியமோங்க
வடன்மிகுமா தவருய்ய வருட்சைவந் தழைக்கவுமை
யிடமுடையோன் கிருபையினா லேமனழிந் திடவன்னான்
றுடியிடைகா தலியுதரத் தோர்கருப்பந் தோன்றியதால். (௯)

(வேறு.)

தப்பறு வலத்தில்பொறை தாங்கிசுவை நீங்கி
மெய்ப்புறு புளிக்கறியின் மேலுளம் விரும்பி
செப்புறு வயிற்றினிடை சேர்மதலை யேமன்
றப்புறுநல் வாயிடுவெ துண்டுவகை தோய்ந்தாள். (௰)

இத்தகை மருத்துவதி யெட்டெடனி ரண்டா
வைத்தமதி பின்செல வயாவுட னுளைந்தே
சுத்தநல வோரையில் சுபக்கிரக மெல்லா
மொத்தபொழு தோர்மக வுயிர்த்தினி துவந்தாள். (௧௧)

காரொலி யெனப் *பவன துந்துபி கலிப்பப்
பேரொலியி னாசிபல பேசின †ரதீதர்
நீரொலிசெய் மாகட னெடுந்தரையு ளோர்க
ளோரிலரில் வாறென வுவப்பினை யடைந்தார். (௧௨)

தண்டதர னுக்கிடது தார்புயமு நீற்றுத்
தொண்டரடி யார்வலது தோளுமினி தாடக்
கண்டவனை நோக்கிமிரு கண்டன்மகிழ் வாய்மார்க்
கண்டனென வேபெயர் கணித்தன னிலத்தே. (௧௩)

மாசிலொளிர் வான்மதியின் மைந்தன்வளர் போதிற்
பேசுமறை யின்படி பிறங்குவினை முற்றுந்
தேசுற நிரப்பிதெளி வாயகலை யெல்லா
மாசற வுணர்த்தவர னாதியென வோர்ந்தான். (௧௪)

---

* பவனம்-தேவலோகம். † அதீதர்-தேவர்.

(வேறு.)

கங்கைமதி சடைப்பரனை யிறைஞ்சி யன்னான்
காற்பதுமந் தொழுமடியார் காலிற் றாழ்ந்தே
யிங்கிதமார் குரவனைமுன் வணக்கஞ் செய்தங்
கேதமறு முனிவர்தமை யேத்தி யின்ற
மங்களமா கியமேலோர் மாசில் பாத
மலரிணைசென் னியிற்சூடி மறையின் மேலாய்த்
தங்குமந்த லாச்சிரம வொழுக்கந் தன்னிற்
சார்ந்தனனென் னரும்பிறவி தன்னை நீப்போன். (கரு)

இந்தவித மாகவவ னியலுங் காலை
யெண்ணிரண்டாண் டிசைந்திடலா லிணையி லாத
மைந்தனைநோக் கித்தமது வடிவு சோர்ந்து
மனமுருகி யெரியிலிடு மெழுகை யொத்துத்
தந்தையுமீன் றிடுமனையு முளம் வேறாகித்
தனித்தனியே விம்மிவிம்மித் திகைத்துச் சால
வெந்துயராம் பெருங்கடலி னிடையே மூழ்கி
விழிதுயிலா திரவுபக லுணைந்து நொந்தார். (கசு)

அங்கதனைத் திருமதலை கண்டாங் கின்றோ
ரடியிணையிற் பணிந்தவரை யணுகி நீவிர்
சங்கையதாய்ப் பருவரலுற் றேங்கு கின்ற
தன்மைதெரிந் திடவடியேற் குரையு மென்னப்
பொங்கமுட னம்மொழியுட் கொண்டு மைந்த
புகழ்பெறவே நீயிருக்க நம்பால் வேறே
பங்கமுறுந் துயர்குறுகி மெலிவ துண்டோ
பரன்பதுமத் தாடொழுவோய் பகரக் கேண்மோ. (கஎ)

இணர்கடுக்கைத் தாரணிவோ னுனக்கு மேனா
ளீரைந்தோ டாறுவய தீந்தா னன்னாட்
புணர்தலினா லுளத்தவலங் கொண்டோ மென்னப்
புகலவவர் முகநோக்கிப் புழுங்கல் வேண்டா
முணர்வுதரும் பரம்பரனைப் பூசித் தேத்தி
யுலம்பொருதோ ணமனாற்றல் கடந்து சீர்த்தி
கொணர்வனென வேதுக்கள் பலவுஞ் செப்பிக்
குளிர்குழலிற் றாழ்ந்துவிடை கொடுமி னென்றான். (கஅ)

கருவொழிக்குங் கான்முனையை யணைத்துப் புல்லிக்
கருதருமுற் றயர்நீங்கிக் களித்துப் பெற்ற
யிருகுரவர்விடையளிக்க வீச னென்று
மிணையிலியி னருளுமன்புந் துணையாய்ச் செல்லப்
பொருவறுமுள் ளத்தின்மிக மகிழ்ச்சி பொங்கப்
பொள்ளெனவவ் விடைவிட்டுப் பெயர்ந்துபோகித்
திருமணிகள் றிகைபெனும்பேர் செப்பா நின்ற
செம்பொனு லயம்புக்கான் றிறலின் மிக்கான். (௧௯)

அனன்மெழுகாய் மனமுருக விழியானந்த
வருவிதர வரன்கோயில் வலஞ்செய் தீசன்
முனமணைந்து பதமலரை முடியிற்சூடி
முனிபுதல்வன் றென்புலத்தி னெருசா ரெய்தித்
துணிவகல வானுருவங் கண்டு பன்று
டோடவிழு நறுமலராற் றாயபாத
நனிமகிழ்வி னருச்சித்துத் தொழுதி ருக்கால்
நாவாரத் துதித்திருக்கு நாளினோர்நாள். (௨௰)

ஈசனுமவ் வழியெய்தி யெமைநீ யன்பா
யேத்திடுபூ சனைக்குவந்தே மினியோய் நீயும்
பேசுகவேண் டியபெறுதற் கென்னத் தேவன்
பிரசமல ரடிபோற்றிப் பிதாம கன்மான்
மாசில்பெரும் புகழுடைய தேவர்க்கெல்லா
மாதேவ னுகியநின் மலனே காலன்
பாசமதி லடியனேன் சிக்கா துய்யும்
படிநேர்வ துதவென்னப் பரிந்தி ரந்தான். (௨௧)

அஞ்சலையஞ் சலைநீயம் ககனுக் கென்று
வடிமுடியிற் சேர்க்கவுமிக் கார்வம் பொங்கி
யுஞ்சனநா னினியென்ன வோத வோத
முறுவிடமுண் டோன்மறைந்தா னந்த வேலை
பிஞ்ஞகனீந் திட்டவய தெண்ணி ரண்டும்
பின்செல்ல வானிடைமா விசைகொண் டோல்லை
மஞ்செனவோர் யமதூதன் றேன்றி மைந்தன்
மாபூசை கண்டனுகா தகன்றுபோனுன். (௨௨)

அந்தவிறற் றாதன்விரைந் தியமன்பாத
மடைந்தமரர் புகழ்தருமெம் மிறைவ கேட்டி
யுந்தனுரைப் படிசென்றேன் காசி தன்னி
லுமாபதியை மார்க்கண்ட னருச்சிக் கின்றா
னெந்தவிதத் தினுமவன்பா லெய்த வொண்ணா
தேக்கமுட னனல்கண்ட புலிபோ லஞ்சிச்
சிந்தைதளர்ந் திங்குனைவந் தடைந்தேனென்னச்
செப்பவதைக் கேட்டழல்போற் சினமீக் கொண்டான்.()

கற்படிதோ ணமன்றனது பாங்கர் மேவுங்
காலனெனு மமைச்சனொடுங் கரிய நீல
வெற்படிகொண் டெனவிளங்கு மேதி மீதில்
வேழமென வெரிந்புகுந்து வீரர் சூழ
விற்படுபொற் கவிகைமுடி மேனி முற்ற
விளங்குகரத் தினிற்பாச தண்ட மேந்தி
பொற்படியுள் ளவர்நடுங்கக் காசி மூதூர்
போந்தரனைப் பூசைசெயும் புதல்வற் கண்டான். (௨௪)

மைந்தவுளத் தென்னினைந்தாய் யாது செய்தாய்
மறுக்கமுடி யாதூழின் முறையு மீசன்
றந்தசொலு மிதையறியா தீசன்பாத
தாள்பூசை பவம்போக்கு மன்றிப் பாச
முந்தவிலக் கவும்வலதோ படைத்துக் காத்து
முடித்திடுமுத் தேவருனைக் காத்திட் டாலு
முந்தனுயிர் கொண்டன்றி மீளேன் றிண்ண
மொல்லையென்பின் வருகவென வுரைத்தான்மன்னோ. ()

காதலனுங் கதுகேட்டு மறலி கேளாய்
கடவுளடி யார்க்கிறுதி யில்லை யோர்சார்
சாதலடை கினுமின்பாற் சாரார் வெள்ளிச்
சயிலமடை குவரவர்தந் தன்மை கேட்டி
தாதவிழு மலர்ப்பிரமன் றுளவத் தாமன்
றருமிழ்வி னுறைமகவான் சுரர்க ளும்மை
யாதாத்தி னெடுமதியார் வினையினீங்கி
யருளின்ப வீடிம்மை யணுகு வாரால். (௨௬)

அவர்பெருமை யறியாம லன்னத தார்போ
லகத்தினினைத் தனையாங்கவ் வடியார்ச் சார்ந்து
சிவபூசை செயுமென்ற னுயிர்க்குந் தீங்கு
செயநினைந்தா யிவையெல்லா முன்னு விக்குத்
தவருறுமிங் ககன்றிடுதி யென்னக் கேட்ட
தண்டதர னிருவிழிதீ யெழுச்சி னங்கே
யிவனிலைமை யறியாது பாசம் வீசி
யீர்த்திடலுற் றனதுபோ தினையசெய்வான். (௨௭)

இவையுணர்ந்த மைந்தனர னடியை யேத்தி
யிணையடிநீ மூலப்பிரியா திருந்தான் வானோர்
தவமுனிவன் மகனிறந்தா னெனவை யுற்றூர்
தருமனிழுத் திடுபாசங் கழுத்திற் சார்ந்து
மவலமிலா மார்க்கண்டன் முன்ன ரீச
னடைந்துநின்பால் வருதுன்பந் தீர்க்கின் றோம்நீ
கவலையுறே லெனமொழிந்து சினந்து வாமக்
காலினுதைத் தானவன் கார்போல் வீழ்ந்தான். (௨௮)

வீழ்ந்திடுபோ தயனாதி விண்ணோர் வாழ்வு
வீடுற்ற தெனமருண்டார் வேலைஞாலம்
போழ்ந்தனதா னையுமுரும் பகடு மேங்கிப்
பொள்ளெனவீழ்ந் திறவுற்ற புனிதன் பாதந்
தாழ்ந்ததுபோ துயிர்காப்பா னரனுண் டேமன்
சார்ந்தெமைபென் செய்வனெனச் சந்தப் பாவி
னாழ்ந்தபொருட் டுதிபலசெய் மைந்தற் காணூஉ
வரியயனுங் காணுதான் மகிழ்ந்து ரைப்பான். (௨௯)

மைந்தவெமை நீமுந்து வழுத்தல் செய்த
மாசறுபூ சைக்குளத்தின் மகிழ்ந்தோ மத்தா
லந்தமிலா வாயுளினைக் களித்தோ மென்று
வறைந்திலிங்கத் திடை யடைந்தா னனைய காலை
புந்தியினி லரனுருவை யுன்னி நீங்கிப்
புணரியினீர் விழியுகுக்கப் புலம்பி வந்த
தந்தையனை தாடொழுது தாழ்ந்தா னன்னோர்
தழுவியணைத் துளமகிழ்வு சார்ந்தார் மன்னோ. (௩௰)

(வேறு.)

இங்கித குணங்கண் மேய விரவிசேய் நிகரி ராம
லிங்கபூ பனைய டைந்த விரவலர் வறுமை யெல்லாம்
பங்கம தடையு மாபோற் பார்புகழ் மறையோன் சைய
மங்கைபா கன்றா ளேத்த மாய்ந்தது விதியு மாதோ. (௩௧)

அன்னவன் றனக்கு மிக்க வஞ்செயு மியம னாவிப்
பின்னம தடைந்த லாலிப் பெருங்குவ லயத்தின் மீது
மன்னுடல் லுயிர்க ளோங்கி மாய்விலாப் பான்மை யாலே
பன்னரும் படியின் மங்கை பரம்பொறா தயர்ந்து சோர்ந்தாள். ( )

பின்னருங் கயிலை மேவிப் பிஞ்ஞக னடியிற் றாழ்ந்தே
யென்னிடர் தவிர்க்க வாவி யிறுக்குமந் தகன்செய் தீமை
யுன்னலை பொறுத்தன் னேனுக் குயிரளித் தருடி யீசிங்
கென்னுரை மறுத்தி டேலென் றிணையடி வணங்கி வேண்ட. (௩௩)

அந்தக வெழுக வென்னா வமலநா யகன்செவ் வாயான்
முந்தருள் புரித லோடு முடிந்தகூற் றுவனெ ழுந்து
வந்தனன் கமல பாதம் வணங்கின னினது செந்தா
ளெந்தனன் மேனி தீண்ட விடரகன் றுய்ந்தே னென்னா. (௩௪)

போற்றின னவனை மூன்று புரமெரித் தவனு நோக்கிச்
சாற்றுவ னீறு கண்டி தரித்தெமை நினையு மன்பர்
தோற்றிடிற் பணிந்த வர்க்குத் துயர்செயா தின்சொற் கூறி
கூற்றுவ நீங்கு கென்னாக் குழகன்வாய் மலர்ந்தா னன்றே. (௩௫)

என்றிறை மொழிய வேம னிணையடி தொழுதுன் பாத
மொன்றிய மனத்தி னான்மே லோர்ந்திடா தெறிந்த பாசஞ்
சென்றுநின் மேனி மீதுஞ் செறிந்தன வதனா லுற்ற
வன்றிறற் பவத்தை நீக்கு வாயெனப் பரமன் கூறும். (௩௬)

தோடுறு கமலத் தோடு துளிமதுக் குவளை யாம்பற்
காடுறு கமல வாவிக் கயலினங் குதித்தங் காடக்
கோடுறு தவளக்கோடு குமிறுந்தண் பணைசூழ்ந் தம்பொன்
னாடுறு மமரர் தாமு நாடுந்துண் டீர நாடு. (௩௭)

நிறம்பயின் முந்நூல் பெற்றோர் நீதிமா மறைநூல் கற்றோர்
திறம்பயி லரசர் வாசச் *சீரகத் தாமர் †கொங்கைப்
பறம்பயி னெடுங்கட் செவ்வாய்ப் பார்மகள் புதல்வர் முன்னா
வறம்பயில் குடிக ளென்று மந்தனாட் டகத்தி னாப்பண். (௩௮)

---

*சீரகத்தாமர்-வணிகர். †கொங்கைப்பறம்பு-தனம்-மலை.

புன்றலைக் கரிய செங்கட் புரிமருப் பெருமை வாயாண்
மன்றலைக் கமழும் வாவி மலர்பல மேய்ந்து வாவித்
துன்றலைப் புனல தார்ந்து சுரந்துறச் சொரியுந் தீம்பால்
கன்றலைத் துண்ண வூட்டிக் காஞ்சிமா நிழலிற் றுஞ்சும். (௩௯)

அரும்புறு கமலச் சூழி யகனினின் றெழுந்து வாளை
சுரும்புறு மலர்த்தண் சோலைச் சூதநற் கனிகள் சிந்துங்
கரும்புறு வேலி சூழ்ந்த கழனியிற் கதிர்ச்செஞ் சாலி
தரும்*பொறி முத்தந் தங்குந் தாலமா நகரொன் றுண்டால். (௪௰)

அத்திருத் தலத்தின் மேனா ளனங்கனை லருச்சித் தேத்தும்
வித்தகக் குறியைப் பூசை விதிப்படி புரியி னுங்குன்
சித்தசஞ் சலத்தை நாமே தீர்க்குது மென்னத் தாவும்
பெற்றமீ திவரு மீசன் பிரியமோ டுரைத்தான் மன்னே. (௪௧)

ஆங்கது கேட்ட கால னார்வமோ டெழுந்தே யந்தத்
தீங்கறு தலத்தை நாடித் தெரிந்தடைந் தனங்கன் பூசை
பாங்குற வியற்று மெங்கள் பரமனைக் கண்டா னந்தந்
தேங்குறப் பூசித் தேத்தி சித்தமொத் தினைய கூறும். (௪௨)

ஆலமா மரத்தி னீழ லருமறை முதனூ லெல்லாஞ்
சீலமா முனிவ ரானோர் தேறவே யருளிச் செய்த
வாலமா மதியைத் தாங்கும் வளர்சடை முதலே கோட்டுப்
பாலமா னேந்துஞ் செங்கைப் பாலலோ சனனே போற்றி. (௪௩)

(வேறு.)

என்றுபல துதிகள்புகன் றிட்டெருமை யேறே றியமன் மீட்டு, மன்றினடித் திடுபாத மலரடியைத் தொழுதிடலு மலைமா னோர்பாற், றுன்றமழு மான்கரமுந் தொடுகடனஞ் சயில்களமுந் துலங்கு மார்பி, னின்றசைவெண் புரிநூலுந் துலங்கமழ விடைமீது நிமலன் வந்தான். (௪௪)

கந்தமலர்த் தார்புனையுங் காலன்மிசை யழலேந்தி கருணை கூர்ந்து முந்தவுன்கைப் பாசமென்மே லெறிந்ததனுல் வரும்பாவ முழுது மின்னே, நைந்தகலச் செய்தனனென் றுதரத்தோ னுரைத்துமலை நங்கை பாகன், சுந்தரமாஞ் சிவலிங்கக் குறிகரந்தான் சுரர்மலர்க டூவி னுரால். (௪௫)

* பொறி-பொலிவு.

அந்தவிறை யவனைமுன மனங்கனும்பின் னியமனுமா யருச்சித்
தேத்த, வந்தபெயர் மதனுந்த கேசனென வார்கடல்சூழ் வையத்
துள்ளோர், சந்தமுறப் புகல்வரந்தத் தற்பரனைப் பணிந்துபின்பு
*தண்ட மேந்தி, நந்தலின்மேற் றிசைவழிகொண் டரிரண்†டே
விசைதூர நடக்கு மேல்வை. (௪௬)

விண்ணகடு கிழித்தோங்கி விளங்குநெடுங் கொடிமதிலும் விமல
மாய, தண்ணிழலிபொன் மணிகுயிற்றுஞ் சந்தமிகுங் கோபுரமுஞ்
‡சயம்பு வாழும், பண்ணரிய தூபியுமென் பதுமமலர்த் தடமுமுடை
ப்பனிவர் போற்றுங், கண்ணுதல்மா பூரேச நாதர்சினை கரங்கண்டு
களித்தா னன்றே. (௪௭)

கொங்கலர்மா மதுப்பிலிற்றுங் கோதையர்குங் குமநீரைக் குழைத்
துச் சிந்து, மங்கலமா மறுகேகி வளர்நெடுங்கோ புரக்கோயில்
வதிந்து வானோர், தங்கடலை வணைச்சூழ்ந்து தாழ்ந்துபல துதிமறை
யாற் சாத்திப் போந்து, குங்குமமார் தனஞானப் பூங்கோதை நாய
கன்வாழ் கோயில் புக்கான். (௪௮)

துங்கமறை யவன்முன்னங் தொழுதேத்துங் காளத்திச் சுடர்க்
கொழுந்தைப், பங்கயனே முதலாய பண்ணவருக் கருமருந்தைப்
பனிமென் சீதக், கங்கைபொலன் வேணியின்மேற் கவின்காட்டுங்
கண்ணுதலைக் கண்டு தாழ்ந்து, மங்கலமாந் துதிபுகன்று விடை
யேற்றுத் தம்பதியின் மன்னி னானல். (௪௯)

---

தண்டமேந்தி-இயமன். † ௳-அம்பு.

‡ சயம்பு-பிரமன்.

## இயமனருச்சனைச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௯௨௫.

# வீரபத்திரச்சருக்கம்.

சூதன் புகன்ற வாசகமாஞ் சுவைசே ரமுதைச் செவிவாயாற்
போத வயின்று வியப்பெய்திப் புனித முனிவர் சூதனிரு
பாதந் தொழுது நமன்காதை பகரக்கேட்டோ மினிவீரன்
றீதில் காதை தெரிமினெனச் சிந்தை மகிழ்ந்து செப்புவனால், (௧).

(வேறு.)

பொன்னி னாய பொருப்பின் மரகத
மென்னு நீள்கொடி மேவிய போலெம
தன்னை யோடு மறிவரி யானென்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை. (௨)

தேவன் வாழ்தரு சீருடைத் தாதலின்
மேவு நான்மறை யும்விரி ஞாலமுந்
தாவின் மாதவஞ் செய்திடத் தங்கிய
மாவ றந்திரண் டுள்ளதை மானது. (௩)

ஓங்கு மாகயி லாயத்தி னுச்சிமேற்
றேங்கு சோதிச் செழுமணி யொன்பதாற்
பாங்கு றச்செய்த பண்பியன் மண்டபந்
தாங்கு சந்திர காந்தத் தளவிசை (௪)

மீதி லங்கதிர் கோடி விளங்கல்போற்
சோதி வீசித் துளும்பி வளங்கொள்சிங்
காத னத்தி லரனுமை யாளுடன்
வேத வோசை மிகவுந் திருந்தனன். (௫)

(வேறு.)

அந்த வமையத் தம்புயக்க ணரியு மலர்மீ துறைவோனுங்
கந்த மலர்மென் கண்ணிபுனை ககனத் திறையு மெண்டிசையிற்
சந்த முறவா ழெண்மருநற் றகைசேர் பதினொ ருருத்திரரு
நந்த விலாப்பன் னிருசுடரு நவசித் தருமெண் வசுக்களொடு. ()

போத முறுமோ ரெழுவருஞ்சீர் பொலியுஞ் சனக னுதியரா
மேத மறுநான் முனிவருரு மிணையில் கருட கின்னரருங்
கீத மறைகிம் புருடருமோர் கிளருஞ் சீர்சா னுரகருநற்
*சாத மருவு விஞ்சையருஞ் சார்ந்தே யரனைத் துதித்தனரால். (௭)

---

* சாதம்-உண்மை.

ஆங்கோர் திருநா யகன்மீதி லயன் சார்ங்கம் புயன்மேற்கை
பாங்கா யமைத்துப் புரந்தரன்செம் பதுமப் பாதம் வருடவொளி
தீங்கா இலங்கா தித்தன்மதி நீள்சா மரைவீ சத்தானவன்
தேங்கா நந்தத் தோட்டப்பை சிறப்பா யிடவங் கமர்காலே. (அ)

இசைநா ரதனத் தன்சபையி னிடஞ்செல் லமையந் தெரிந்துணுழைந்
தசையா மனத்தி னன்பினிணைத் தடிதாழ்ந் தெழுந்து கரஞ்சென்னி
மிசைசேர்த் தவனி யுறுநீதி விளம்ப மனத்தி னினையுமுணர்ந்
திசை*யா சிடையான் றெரிந்துவந்த செய்தியதனைச் செப்பென்றான்.

விண்ணே முதலா முலகனைத்தும் விதித்தோன் பீதாம் பரனெற்றிக்
கண்ணார் கடவு ளுனதாணைக் கடவா திருந்து முத்தொழிலும்
பண்ணா விருப்ப ரெனினறியாப் †பதமு முளதோ பாரினிடைப்
பெண்ணா யாணு யலியாயிப் பேதங் கடந்த பெரியோனே. (ய)

என்றுத் துதித்து மண்ணுலகி னெழில்சேர் விலாச காஞ்சிக்கோர்
மன்று வச்சி ராங்கதப்பேர் மருவப் பெற்றோன் ‡காகோளி
தின்னீ ழலின்முக் குடைநிழற்றத் தங்கு மருகன் றனைத்தேவென்
றுன்று வருக மதத்துறைவோ னொருவ னுளனங் கவன்றன்னால். ()

(வேறு.)

இனிய வேத வொழுக்கமு மாகமத் தேய்ந்த நீதியுங் குன்றிய தாற்சடை, புனித நீரைத் தரித்திடு மண்ணலே புவனி மேனின் பெரும்புகழ் பொன்றியுன், னினிய பத்தியு மஞ்செழுத் தோசையு மெய்யி னீறு மிலங்கிய கண்டியு, மனிதர் பாலின்றி யற்பச் சமணறி மல்கிச் சைவ முகிமை மறைந்ததால். (கஉ)

விடத்தை யொத்த வசுரர் விபுதரை வெருட்டல் போலச் சமணர் மிகையினும், குடத்தி லிட்ட விளக்கென நின்புகழ் கூறு மன்பர் குவலயத் துண்மறைந், தடக்க மாகி யிருக்கச் சமணரே யரிய குன்றின் விளக்கது போலவே, திடத்த ராகியத் தென்றிசைச் செம்மினர் செப்பும் வேத சிவாகமச் செய்திபோய். (கா)

அந்த கார மடைந்துன் னடியவ ரஞ்செ ழுத்தை யறையவு மஞ்சியே, யெந்த நாளிற் றுயர மொழிவமென் றிரங்கு கின்றன ரேழுல காளிநீ, யந்த மண்ணி லணைந்தச் சமணரை யாழ்த்தி மூவித மானநின் பத்தியே, வந்தி டும்படி செய்துன் மகிமையே மல்கி யன்பர் வளர வருளென. (கச)

* ஆசிடை-விஸ்திரம். † பதம்-பொருள்.
‡ காகோளி-அசோகம்.

அறந்த வாத முனிவர்க் கிறையவ னருகு நாரத மாமுனி வேண்டி
னற், பிறந்த வாத நிருமலன் புன்னகை செய்து வீரன் றிருமுக
நோக்கியே, *மறந்த வாதநின் பண்ணியோ டேகியாழ் மைக்க ருங்
கடற் பாரகஞ் சேர்ந்தெழி, னிறந்த வாதவெண் பூதி விழிமணி
நியம மோடணி யச்செய் வதற்குமுன். (௧௫)

(வேறு.)

வச்சி ராங்கத மன்னனைத் திருத்தியுன் வயமாக்
கிச்சி வச்சம யத்திற மிதுவெனத் தேற்றிப்
பொச்ச மிக்கரு கச்சம யத்துறு பொய்ம்மி
லிச்சை வைத்துழ லேவிட ருறுமென வியம்பி. (௧௬)

அனைய வன்றனோ டந்நக ருறைதரு மாக்க
டனையுஞ் சைவர்க ளாக்கியூர் தமையும் புதுக்கி
நனைகொள் கூந்தனின் னாகியே யாடிவ ணடைதி
யெனவி ளம்பிய விடைகொடுத் திருந்தன னெம்மான். (௧௭)

அவ்வுரை செவிப்ப டாமு னடிபணிந் தணிசி ரத்திற்
றிவ்விய முடியுந் தோளிற் சிறந்தவொண் டொடியுங் கையிற்
றெவ்வரை வாட்டும வாளுஞ் சிங்கத்தி னுரியின் கச்சுஞ்
செவ்விய மலர்ப்ப தத்திற் றிறங்கொளிக் கழலும் பூண்டு. (௧௮)

கஞ்செனக் கருநி றத்த நாலிரு பூத முத்தின்
விஞ்சிய குடைக விக்க வீரர்கள் கவரி வீச
வஞ்சியர் நடிக்கக் காளம் வாயில்வைத் தூதப் பேய்கள்
கஞ்சுகி மாக்கள் வீரங் கழறவந் திரத மூர்ந்தான். (௧௯)

அண்டரு மறுக வாய்விட் டதிர்ந்திடு பம்பை வேயின்
விண்டிடு நாதஞ் சங்கம் வீணைதப் பட்டை பேரி
மண்டொலி தவண்டை கண்டா மணியொடு சின்ன மார்ப்ப
வெண்டிசை போர்ப்பத் தூளி யெழுந்தன பூத வெள்ளம். (௨௰)

மழைதவழ் குடுமி வேய்ந்த மலைகளு மணம்பொ திந்த
தழைவிரி வனமுந் தூய தடம்பல கடந்து மன்னன்
பிழைதவிர்த் தின்ப வீட்டைப் பெரிதுவந் தளிக்கச் சீர்சா
லழகிய தாலை மூதூ ரடைந்தன னடல்சேர் வீரன். (௨௧)

அடைந்தவ ரார்வா ரவதிர்ச்சியை யருகர் கேட்டு
மிடைந்தன ரெதிர்ந்து நீவிர் வெல்லீ ரேனும் பணிந்தோ ரன்பு
தொடர்ந்துளீ ராகை யாலித் தொன்னக ருறநீ ரென்று
மடங்கலை யனந்த மேதி மறித்தபோன் மறுத்தா ரன்றே. (௨௨)

---

* மறம்-வீரம்.

ஒழித்தவ ராக்க நூறி மாயையிற் பொருந்தி பங்கி
பழித்தவர் தடைக்கு நாமுட் படுவதோ வென்வுள் ளுன்னிச்
செறுத்தவர்ப் பழித்தீ சன்வாழ் சினகரம் புகுந்தார் கண்டங்
கறுத்தவ னளித்தாற் கெண்ணுங் கருமங்கை கூடா துண்டோ. ()

ஈதிவ ணிருக்க முன்ன ரெதிர்ந்தடல் குறைந்த கோளர்
பூதிசா தனங்க ணீக்கிப் பொய்ச்சம யத்து ளாழ்ந்து
மேதினி காக்கும் வைவேல் வேந்தன தடியி றைஞ்சித்
தீதற நடந்த யாவுந் தெரித்தனர் விரித்து மன்னோ. (௨௪)

படிற்றொழுக் குடைய வஞ்சப் பாதக ருரையைக் கேளாக்
கடற்புவி புரக்கும் வேந்தன் கதுமெனச் சினந்து தீய
வடற்படை மருங்கு சூழ வமணமா சகன்றான் போன்று
மிடற்றினில் விடத்தை வைத்தோன் மிளிருமா லயத்துட் புக்கான்.

ஆயபோ தமைத்த சிங்கா தனத்தினி லடியர் சூழக்
காயமா தவன்போன் மேவுங் கனைகழல் வீரன் றன்னைப்
பாயுடைப் பாசிப் பல்வாய்ப் பாதக னெதிர்ந்து நோக்கிக்
காய்சின வுரைகள் புண்ணிற் கடவுவேல் போற்பு கன்றான். (௨௬)

சாம்பலை நுதலிற் பூசுஞ் சழக்கநின் னூரும் பேரும்
பாம்புரிப் புரிசை சூழிப் பதிவரு செயலுந் தேற
மேம்பட வுரைமி னென்றான் மிக்கபத் திரைக்குக் கேள்வன்
கோம்பிய வுளத்தி னோடு கொற்றவற் குரைப்ப தானான். (௨௭)

சீவரப் போர்வை தாங்குந் திறலுடை நிருப நம்மூர்
யாவரும் புகழுங் கைலை யாம்புறச் சமயந் தன்னின்
மேவிய வீரர் தம்மை வெருத்திடும் வீர னென்பேர்
தேவியைப் பாகம் வைத்தோன் றிறமுனக் கறைய வந்தேன். (௨௮)

என்னவுக் கிரன்சொல் கேட்ட வினையில்பூ பதிகொ தித்துப்
புன்னகை புரிந்தே யாரும் பொருந்திடா வென்புந் தோலும
பன்னக முங்கொக் கிறக்கும் பன்றியின் கோடு மாமை
வெண்ணிலா வோடுந் தீண்டா வெண்டலை முதலா வின்னும். (௨௯)

அசுத்தமாம் பொருளை நல்ல வணியெனக் கொள்ளும் பித்தன்
வசத்தனு மியனீ யென்முன் வந்தவ னியம மாகும்
நிசத்தினை யுரைப்பே னென்ன னேரிழை சுகத்தை மத்தன்
நசித்தலி லோர்ஞா னிக்கு நவிற்றுவ தேப்பக்கு மென்றே. (௩௰)

காய்சினத் தறுகண் வேழக் காவல னுரைத்த மாற்றம்
வேயினைப் பழித்த மென்றோள் வீரிதன் கொழுநன் கேளாத்
தீயினு மிகக் கொதித்துச் சிந்தைகொந் தளித்து விம்மிக்
காயழ னெற்றிக் கண்ணைக் காட்டினன் சிறிது மாதோ. (௩௧)

அதுபொழு தழலிற் பட்ட வந்தனி றென்ன வாடக்
கதுமெனப் புரத்தில் வெப்பங் கதுவவா ருயிர்விட் டேகும்
விதமென வயர்ந்தா னங்கு வீரர்மந் திரிமுன் னானோர்
மதிமிக மாழ்கி யந்த மன்னனை யுபச ரித்தார். (௩௨)

பின்புயிர்த் தரிய தேகப் பெருந்தழ லாற்றா னவ்வெள்
ளென்பர வாரம் பூண்ட விணையில்வீ ரன்பூந் தாளுக்
கன்புடை யவன்போ லண்மி யச்சமுற் றுநந் தத்தோ
டின்புட னடிய ரேத்து மெழிலிணை யடியிற் றாழ்ந்தே. (௩௩)

தொடுகடற் புவியை யாண்டு துயர்தரு நரகத் தாழப்
படுமென தறிவுக் கேற்ற படியிணை யில்லா நின்னைச்
சுடுமொழி பலவாச் சொல்லித் துன்புறச் செய்தே னந்தோ
கெடுவதன் முன்னர் புத்தி கெட்டிட வியற்கை யாமால். (௩௪)

அறிவிலா தடியேன் செய்தீங் கனைத்தையும் பொறுத்து நாயேன்
குறைதவிர்த் தின்ப மோட்சங் கொடுத்திடுஞ் சைவ மல்லாற்
பிறிதொரு நெறியிற் செல்லாப் பேரருள் வளித்து யர்ந்த
மறைவழி யொழுகும் நீதி வகுத்திடென் றடியிற் றாழ்ந்தான். (௩௫)

அடிபணிந் தரசன் வேண்ட வகமலர்ந் தருளி யன்னோன்
முடிமுதற் பரிச மெல்லா முளரிமா மலர்க்க ரத்தாற்
றடவியவ் வெப்ப நீங்கத் தணித்தய முகத்தைத் தக்கன்
முடியணி முகமா வைத்தோன் முதல்வனுக் குரைப்ப தானான். ()

(வேறு.)

மாவிர தம்பசு பதங்களா முகமுயர் வாம
மேவுசை வம்வை ரவமிதற் கியைந்தவெம் வேதந்
தாவு பஞ்சராத் திரம்பட் டாசாரியஞ் சமண
மோவு புத்தமீ மாஞ்சைலோ காயித மௌவ்வா. (௩௭)

ஆன விங்கிவற் றுட்புறச் சமயத்தி லடைந்தே
யீன மாங்கொலை செய்சொன தேவென விகழ்வை
வான நாடண் டரச்செயி னுமமும் வசையோ
டூன முந்திடத் தொன்றிட லெமக்குமொவ் வார்தால். (௩௮)

நீவி ரக்கொலை செய்திட லின்றுகொ ளிலையென்
றேவி னாப்புழு மலநிறை பாண்டமா மூடல
மேவு மாருயி ரலைதரப் பிணியினுன் மெலியி
னேவ கல்விரோ சனமதைத் நுங்கிடு காலை. (௩௯)

உங்க டங்குட ரையுமுனே கிழித்தகி னுழன்று
தங்கி வாழ்புழுக் களையெலாம் வேறுபா சனத்தி
னுங்கி யேயிருந் திடவுண வளித்துபின் னுகரும்
பொங்கு சம்பிர தாயமுண் டாமெனிற் புகல்வாய். (௪௰)

புன்ம யிர்த்தொகை கருப்பையி லேய்தரப் பொருந்தும்
பின்ன ரும்பெரு மங்கதிற் புழுவெனும் பேனுண்
டன்ன தற்கெனப் பங்கியைப் பிடுங்கிடி லவைக
ளென்ன வுண்டுசீ வித்திடு மெனவதை யெடுத்தீர். (௪௧)

பொருந்து நின்குர வர்களெழு மூவரும் புவியில்
வருந்தி றந்தம தன்னையர் வயிற்றினை வகிர்ந்து
குருந்து மைந்தரா யுறுவரங் கவர்களைக் குருவாய்
திருந்த வைத்துநீர் செப்புவ தத்திறாத் தியரோ. (௪௨)

அளவி லான்மகோ டியையெலாம் புரப்பதற் கமையப்
பளகு பல்லுயி ராகுவ னெனினுங்கள் பரமன்
பிளவு கூரிய வாய்நுரண் டமதெனப் பிறந்த
வுளப சிக்கவ னுண்பது புற்கொலோ வுரையாய். (௪௩)

யோனி வாய்வழி வருவது தீதென வுணர்ந்தே
யீன் மாருடல் வகிர்ந்துது வாரெனி னீன்ற
மானெ டுங்களு ளுயிர்கெடும் பழியினால் வருந்த
மான தீநர குறுவரோ கடவுள ராவார். (௪௪)

வானி னூடெழு மதியுடல் தைவர வளர்ந்த
தேனு லாங்கனி படுசினை யரசின்கீழ் செறிந்தோ
னீன மொன்றிலா நிர்ச்சிந்த னெனினும திறைவன்
ஞான மோடுறும் பிடகநூ லெவ்வணம் நவின்றான். (௪௫)

ஆரிய நான்குபூ தமும்புணர் பேதமே யல்லா
லாருவி னுங்குயிர் வேறிலை யென்றநீ ருரைப்பீர்
இரவி னிற்றுயி லும்பொழு தன்முகத் தேறு
மரவைப் பூதத்தின் பேதமு மறிந்ததோ வறையாய். (௪௬)

உருவ மும்முயி ருப்பிறி தில்லையென் றுரைப்பி
ருருவ மிங்கிருக் திடும்பொழு துயிர்நுழைந் துளதான்
மருவு மிங்கிதன் பிறத்தினை யோர்ந்திடின் மன்னு
வுருவ மும்முயி ரும்பிறி தேயென வுணர்வாய். (௪௭)

(வேறு.)

இவையெலாங் கேட்ட மன்ன னெண்ணமே யால நீழற்
றவமுறு முனிவர் முன்னே சங்கரன் கூறி யிட்டைக்
கெவைமுதற் கார ணந்தா னீசர்க்கு மேலு மீச
னவனுளன் போலுந் தேவர்க் காதியன் னவனு கானே. (௪௮)

என்றுரை மாற்றங் கேட்ட சிம்புளா மிறைவ னக்கு
நன்றறி வென்ப தில்லா நவையுறுஞ் சுமட கேண்மோ
வொன்றுநோய்க் காம ருந்தை யொருவயித தியன்கை வைத்தல்
தன்பிணி தனக்கா வோவித் தாரணி தனிலு ளார்க்கோ. (௪௯)

சூட்டுவா னுடிக் காட்டல் போலுமென் றறியாய் நன்னூ
லூட்டுவா னேதல் போலுமென் றுணருவை யொழிவி லீனங்
காட்டிய *பிடக வேத மெனும்பெயா கணிப்பை யாயின்
†மாட்டிய குறைகொள் வேத மாமென மருவு மன்னு. (௫௰)

என்றெம தையன் கூறக் கேந்தல்வாய் திறவா னாகி
யொன்றுறு மூமர் போலு முற்றவ னுறைதல் கண்டு
பின்றையே சைவ மென்னப் பேசுமெம் மார்க்க மின்ன
தென்றுரைத் திடுவ கேட்டி யெனவுரை செய்யு மெந்தை (௫௧)

பூசுவ திருவெண் ணீறு புனைதல்கோ மணியா மீச
னுசிலைந் தெழுத்தை யோதல் வன்டி யாரைப் போற்ற
லேசிலாப் படிகம பான மெனுமிவை கம்பூ சித்தல்
மாசிலாச் சிவசும் பந்தம் மருவுதல் சைவ மாமால். (௫௨)

வியர்த்தல்கண் ணீர்த்த தும்பல் வியந்துட லங்கம் பித்தல
நயத்துமெய் சிலிர்த்தல் வாய்ந்த நாதழு தழுத்தல் கண்ட
மயிர்த்திடப் பருத்தல் சிந்தை யுரன்செய லெண்ணி யெண்ணி
வுயிர்த்திட லாங்கு ணங்க ளுடையவ ரடியா ராவார். (௫௩)

சிவனடி யவர்க ளில்லாத் தெய்வம தனுநாா மிக்க
நவவடி விலிங்க பூசை நாடிடா துணைவு கொள்ளார்
தவவடி வுடைய வன்பர் தம்மைவிட் டகலா ராட்டும்
பவமறுத் தாளு மெங்கள் பரனடி யவர்க டாமே. (௫௪)

---

* பிடகம்-பிச்சை-அதாகுறைவு. ‡ மாட்டிய-பொருந்திய.

அமமெனவ லறக் கேட்டோ ராருயிர் கொன்ற ருந்தார்
சமமெனச் சிவனே டெண்ணி வேறொரு தெய்வஞ் சார
நிமலிடைத் தருமத் தெய்வ மெனவெணிப் பூசை செய்வார்
நமசிவ யச்சோ கம்பா வனையினி னுட்க ழிப்பார். (ருரு)

திருமறை நான்கும் பாதஞ் செழுஞ்சடை ரம்பு விக்கண்
மருவிய வுடலாக தேவர் மூழிக்கும்வா லேநதெ ழுந்தாம்
வெருவுறு கொம்பி ரண்டும் விதியரி சாணந் தானு
மருவுறு வில்லா வீச னும்பசுத் தன்சொ ரூபம். (ருசு)

அடியரா யுள்ளார் காலை யருங்கடன் முடித்த பின்னர்
கடிகொண்ணீர் கொண்டு நான்கு கால்கள்வால் முகங்க ழீஇக்கின்
வடியினன் மலர்க ளேவி யருச்சனைத் தூப தீப
மொடிவிலா தியற்று வார்க ளுறுதியைப் பயப்ப தோர்ந்தே. (ருஎ)

இவ்வகை யியற்றல் சைவ மிதனினுஞ் சிறந்த வீர
சைவமென் றெவரும் போற்றுஞ் சமயமுண் டதனிற் றீதற்
றொவ்வைவாய்க் கயனெ டுங்கண் கோற்றொடி யுண்மையாள் பங்க
னவ்விய மகன்ற வுள்ளத் ததிவிருப் புடைய னுமால். (ருஅ)

எனவயினி னதிகம் வீர சைவம தென்னப் யாயி
னனையறு சிவனும் யாமும் வேறெனா நாட்டங் கொளலுந்
துவிதபா வனையி லாதத் துவிதமார்க் கத்திற் சேர்த்துப்
புவியினி லங்க லிங்கப் புணர்ச்சியைப் பொருந்து மாதோ. (ருகூ)

(வேறு.)

விலங்கு பக்கி யென்பி லாக்கை விரிமகா ரமகம்புளென்
றிலங்கு பன்ம யற்கி டஞ்செ யிழியுடம்பெ டாமலே
வலங்கொள் மானி டப்பி றப்பில் வந்து தீப்ப ருயின்வண்
டலங்க டோறு முன்செய் நற்ற வத்தி னுற்ற லாகுமால். (சும)

மானி டத்து தித்தும் நல்ல வண்மை தங்கு மரபினிற்
றூனு தித்த லரிது மஃது சாரி னல்லொ ழுக்கமார்
ஞானி யாவ தரிது மிக்க ஞானம் வந்த பிப்பினு
மீன மூள்ள சமய நீத்தி லிங்கி யாவ தரிதரோ. (சுக)

ஆவி, னுக்க மேத்தகோ யகற்று தற்க தன்கணே
மேவு பாற்க றந்த ருத்தி மிக்க னங்கொ ழித்தல்போ
லாவி யுள்ளி ருக்கு மெங்க ளமல நாத னங்கையி
லோவு மாற ளித்து பின்னு முள்ளி ருத்து மாரியன். (சுஉ)

ஓது கின்ற காக நோக்கி ரண்டி னுள்ளு மோர்மணிப்
பேத மின்றி யுழலு கின்ற பெற்றி போலு மங்கையி
னாத னுட்பு றம்பெ னச்சொ லனைவயி லீரி டத்தினு
மேத மின்றி யேபொ ருந்து மென்று ளங்கொ ளேந்தலே. (௬௩)

உணர்வெ னச்சொல் செச்சை யொன்றி லோது பத்தி யாந்தொடர்
புணர்த ரச்செய் தேவை ராக புனித வததி ரத்தினிற்
றுணரு டுக்கை யோனை வைக்குந் தூய்த மைந்த நெஞ்சினோ
னுணர்வு தங்கும வீர சைவ முற்ற பத்த னாகுமால். (௬௪)

அருளொ டுங்க வந்த மாட்டி யார்ந்த சாந்த மாம்வரை
மருவு சாந்த னிந்தி யங்கு மாசி லிந்தி யங்களாம்
விரையெ டார்பு னைந்து மிக்க *மேதை யாகு மழுதினைப்
பரம னுக்க ளிப்போ †னையர் பரவு வீர சைவனால். (௬௫)

அன்ன வீர சைவ ருக்க ருத்தி மிச்சி லுண்டவர்
கன்ன டிப்ப ணிந்த கன்னோர்க டங்க ளோவ லாற்றுவோர்
பன்னு தேவர் முனிவ ராதி யோர்க டம்ப ணிந்திட
மன்னி வாழ்வ ரென்று நான்கு மறைக ளோது மாலரோ. (௬௬)

அரனை யங்கை மார்பி லைத்த கத்து வேறு தேவரைப்
பரமெ னப்ப ணிந்தொ ழிந்து பாத கத்த ராவரால்
சரண ருக்கொர் சாதி பேத முண்டெ னுஞ்ச முக்கர்தன்
மரண மேவ தனைக்கு ளாகி மாய்வர் திண்ண மீதரோ. (௬௭)

இன்ன வீர சைவ மார்க்க மென்று வீர னோதலும்
மன்ன னீது கேட்டு மினம னத்தி னாவ மிக்கெழுந்
தென்னை மாத வங்கண் முன்ன மேழை யேனி யற்றினே
னென்ன மாம லர்ப்ப தத்தி றைஞ்சி யிது ரைபப னால். (௬௮)

நார சிங்க மங்க சியபுள் நாம முற்று ளாய்சரண்
கோர நாங்கி யுயபுர் காத்த ‡கோக்க ணாத னேசரண்
சார தங்க ளெண்ணில் கோடி தங்கி யேவல் செய்திடுந்
தீர வங்க லிங்க சைவ தீக்கை செய்ய வேண்டுமால். (௬௯)

(வேறு.)

என்று பணிந்திடு மன்ன வனைக்கணி னேய்தரு தீக்கையொடு
பின்றலி லாச்சிவ தீக்கை கள்செய்த பின்பெரு மான்புகலுங்
குன்றுறழ் தோளுடை மன்னவ னின்னகர் கூடிய மாக்களெலா
மொன்றிய பூதி பணிந்துயர் சைவ வொழுங்கி லிருந்தனையால். ()

* மேதை-அறிவு. † ஐயர்-வானோர்.
‡ கோக்கணாதன்-பசுபதி.

மன்னனு மன்னக ருள்ளவர் தங்களை வழ்மி னெனக்கூவித்
தொன்னிலை பெறுசிவ தீக்கை தொடங்குதல் அணிபெற வோதா
துழும், முன்னவ னாரரு ளைப்பெற முதியரு முரிமில் வேர்தனை,
தன்னை யிகழ்ந்தில ரைதனி னும்மொழி தட்டில மென்றனரால். (௭௧)

அன்னவ ரோட ரதனைமுடி வேந்த னடைந்தெம தடிகளடி
முன்ன ரிறைஞ்சி யிவர்க்கருள் தீக்கை முடித்திட லேதுணிபா
மென்னலும் வீர னிசைந்தவர் பீடை யிரிந்தக லும்படிசெய்
துன்னரும் வீரசை வப்படி தீக்கை யுஞற்றி விடுத்தனனால். (௭௨)

அந்தகர் வாழ்தரு வோர்க்குப தேச மறைந்தவி னுக்கிரனும்
மன்னவ் சேனன திண்னக ரின்கண் மழுங்கின தேவருறை
நன்னய வாலய மன்னதை சிற்ப நவின்ற திறத்தினரா
லுன்னத மாக வியற்றுதி யென்ன வுரைத்திது மோதுவனால். (௭௩)

நித்திய மோடுநை மித்திய மாதிய நிகரறு பூசையுட
னுத்தம மாமறை வித்தக சாற்பிர மோச்சவ முந்தனறு
இத்தரை யேர்புக ழச்செய் தரும்பய னெய்தியிலா துயவத்
தெர்த்துயினத்துவிதப்பொருளோடினிதொன் றுவையென்றனனால்.

அவ்வுரை கேட்டக னைந்தடி காளும தடியிணை யொருவிலத்
தெவ்வண முய்குவ னென்றடி தாழு மிறைக்கருள் செய்திடலோ
டிவ்வுல காளு மிருந்திற லோயெம தின்னுரு வங்கண்டே
யெவ்வமில்பூசைசெய்யென்றெழில் கைலையையெய்தினன்வீரனரோ.

கன்னவி ரோனுடை மன்னவ னெஞ்சு களிப்பொ டெழுந்திமயப்
பொன்னவி ருந்தித லைப்புணர் பூண்முலை பூவை மனோகரனும்
பன்னரு மெய்மயூ ரேசனை யொல்லையில் பரிசன ருடனணுகி
முன்ன மனைத்தெறு தாளிணை சென்னி முடித்து வழுத்துவனால். ()

(வேறு.)

படிமுழு தாளும் போற்றி பசுங்கொடி பாகா போற்றி
துடிமழுக் கரத்தாய் போற்றி துவளும்வார் சடையாய் போற்றி
சடிலவெண் பிறையாய் போற்றி தவளவெண் ணீற்றாய் போற்றி
யடிநடு முடிவு மில்லா வத்தனே போற்றி போற்றி. (௭௭)

பைம்பொன்மால் வரையை வில்லாப் படைத்தருள் பரனே போற்றி
வம்புலா மலர்க்கணை மாலை வாளியென் றெடுத்தாய் போற்றி
திம்புளாய் நார சிங்கச் செருக்கொழித் தவனே போற்றி
கம்பமால் களிற்றுரைக் காய்ந்த கடவுளே போற்றி போற்றி. (௭௮)

போதமாய்ப் போதங் காட்டும் பொய்யிரு ளில்லா விந்து
நாதமாய் நாதங் காட்டு ஞானநற் பொருளாய் நான்கு
வேதமாய் வேதத் துள்ள விரிபொரு ளாகி யைந்து
பூதமாய்ப் புவன மாக்கும் புனிதனை போற்றி போற்றி. (௭௯)

(வேறு.)

என்றுத் துதித்தேத்தி யேந்தல்மனே வேகமுந்தம்
பின்றுக்குந் தூதர்தமை விட்டே பெருஞ்சிற்ப
நன்னூ லுணர்ந்தவரை நாடியழைத் தேநகரும்
பொன்னு லயமும் புரிகென்று ரைக்கவரும். (௮௰)

நாடினர்கீர நதியதன்றென் பாலகழி
பீடுசோ நாஞ்சிற் பெருமதிலும் யானமும்ப
கோபுரமு*ம் மேலோ நிலையும்†செய் யோங்கவொளி யார்சிகரி
யாடுசீ லக்கொடிசே ராடரங்கு பீடிகையும். (௮௧)

முன்னருகு காண்மாட மூரிப் பெருந்தெருவுஞ்
சன்னலணை மாடமன்ன சத்திரங்க ளுஞ்சதுக்கஞ்
சொன்னலணி யாவிழுத்த சோபானக் கூவல்களு
மன்னமுறை நீடுதடமு மரியுளர்சோ லையுமமைத்தார். (௮௨)

தவமுனிவர் முன்னுக நாற்றுங் கடைவீதி
பவமகற்றும் வேத பட்டார கர்வீதி
தவமிபற்றும நீடதோர் தமனியப்புக் கில்லரையர்
குவடனைய தோள்வணிகர் கோமா ளிகையியற்றி. (௮௩)

நான்காங் குடியினர்க ளவ்வீதி வான்றோயு
மான்பூண்ட தேர்யானை மாத்தங் கிடுநிலயம்
கான்றோய் மலர்மாலை காலாட் படைவீரர்
மீன்போன்ற கண்மாதர் மேவுமனை யுஞ்சமைத்து. (௮௪)

என்னு யகன்மே விடமாங் கருவீடு
மன்னிக்குஞ் சோதியந்த ராளமாத்த மண்டபமுந்
தனனை ரெழிலமமை சார்தனியு மேரிடப
நன்னு யகர்க்கணிசேர் நன்னிலய மூஞ்சமைத்தார். (௮௫)

ஏரம்பன் கந்த னெழில்தெய்வ யானைவள்ளி
வாரம் பணைத்திருத்தோள் வலவைவடு கன்றண்டி
சூரன் மதிவிரிஞ்சன் சொல்லரும்மான் பான்கிரகம்
வீரஞ்சே ரின்னோர் விளக்கா லயமெடுத்தார். (௮௬)

---

* ஆலோன்-சந்திரன். † செய்யோங்கல்-புட்டுமலை.

கண்ணப்ப னுக்கருள்செய் காளத்தி நாதருக்கும்
வண்ணமலர்ப் பூங்கோதை வாய்ந்துள்ள வம்மையர்க்கும்
விண்ணவர்போற் றும்வீர பத்திரருக்கு மாவுடையு
கண்ணனுக்குங் கதிர்மதிதோய் கனகால யங்கண்டார். (அஎ)

வானுயர்கோ புரந்தூபி வாரெயில்பொன் கொடித்தம்ப
மீனமிலாப் பலிபீட மீசனுமை யேரம்பன
கானுலவுந் தாரணியுங் காங்கேயன தண்டியிவர்
தானிவருந திருத்தேரிச் சகங்களிக்கச் செய்தனரால். (அஅ)

கண்டான் விழுந்தான் கரமுகிழ்த்தா னுச்சியின்மே
லெண்டோளற் கேற்றதென வெண்ணி மனமுருகிப
பண்டா விடுத்துதிகள் பண்ணித்தன மெய்மறதி
கொண்டான் பினுமுணர்வு கூடுதலு மெனசெய்வான. (அகூ)

(வேறு.)

அருமறை தெரிந்த வந்த ணாளராற் சுபதி னத்தி
லிருமையும் பயக்கு மீசற கெடுத்தவா லயத்தி னோடு
திருவுறை நகர்க்குஞ் சாந்தி செய்துகற் குடிக ளேற்றி
யருவுரு வில்லா வீச னுமுதற் றேவர்க் கெல்லாம். (கூ0)

ஆகம விதியிற் கும்ப மமைத்தபி டேகஞ் செய்தே
யாகைசோ திததிய ஸ்நபித் தியமொடு வழுவில் பூசை
யேகநா யகன்மு னுய விறைவருக் கியற்றி மாதோர்
பாகனுக் கணிவி ழாவும் பண்ணின னிமையி லாதான். (கூக)

குற்றமில் வச்சி ராங்கக் குரிசினு மூலக மாண்டு
கற்றையஞ் சடைதோய் வீரக் கழலுடை வீரன் பாதம்
பெற்றனன் கடல டக்கும் பெருந்தவ முடையோ யென்று
மற்றடம் புயத்துச செவ்வேள் மகிழ்வுட னிசைத்தும் பின்னர். ()

அற்றைநாண் முதலா யநத வுணங்க ளதனின் மேவு
கற்றைவார் சடையிற் றிங்கட் கண்ணிவெய் திருப்ப தீசன்
நற்றவப் பலத்தா லண்டி நயமுடன் போற்று வாரதங்
குற்றம தொழித்து முத்தி கொடுத்தினி திருப்பன் மாதோ. (கூங)

ஆதலி னவன்வாழ் தேய மாந்திரு மதிக மென்னும்
பாதலத் துறைப்பு நாகர் பண்ணவர் முனிவர் சித்த
ராதர வாகப் போற்று மதிருப் பதிக்கு நாம
மோதுவர் தச்ச தீர்க்க விரைப்பன்பி யெய்னிக் கேண்மோ. (கூச)

(வேறு.)

நந்த னில்மயூ ரப்புரி புலிப்புரி நகரான்
குந்த வேலுடை வச்சிராங் கதப்புரி குலவுஞ்
சந்த மார்தரு விலாசகாஞ் சிப்பெயர் சார
வந்த தாலயம் பதிபனைப் புரியினும் வகுப்பன். (௬௫)

போதில் வாழ்விதி புரமயிந் திரபுரம் புகழ்கொள்
நீதி யில்சிறு விதியெனும் பெயர்நிலை நிற்க
வோது தக்கமா புரிகலி யாணமா முறையுள்
சோதி லிங்கமா புரமதின் விரிவையுஞ் சொல்வாம். (௬௬)

(வேறு.)

கார்தரு கருண்மென் கூந்தற் கணைபுரை மதரிக்கண்
தார்தரு குவவுக் கொங்கைச் சங்கரி யயிர்க லாப
மார்தரு மயிலாய்ப் பூசை யாற்றின னரனை யன்ன
சீர்தரு செயலின் மாயூ ரப்புரி யென்றே செப்பும். (௬௭)

தத்துவங் கடந்து நின்ற சாம்பவ மூர்த்தி தன்னோ
டொத்தவெண் ணிடப தேவ னுழுவையி னுருவாய்ப் பூசித்
தத்தன தருளைப் பெற்று றுதலாற் புலியூ ரென்றே
யுற்றனை பாச மைந்து மொழித்துமேற் கதியைச் சார்வோய். (௬௮)

மெச்சுமா மகுடம் பூண்ட மேதினி பாசர்க் கெல்லா
முச்சித மான மான்றே ரூர்ந்தல களிக்குங் கொற்ற
வச்சிராங் கதப்பேர் மன்னன் வருத்தமி னன்ன கர்க்கு
வச்சிராங் கதவைப் பென்றே வழங்குவ தணிகொ ளும்பம். (௬௯)

பூஞ்சடைப் பரமன் கண்ணைப் பொத்திய பாவந் தீர
வாஞ்சையி னுமைபூ சித்து வரம்பெறு சிறப்பி னோங்குங்
காஞ்சிமா நகரைச் சார்ந்து கவின்பெறு தலின்வி லாச
காஞ்சியென் றொருபே ரியாருங் கழறுவ ரன்ன கர்க்கே. (௭௰)

வேலையம் புவியி னோங்கல் வியாகு ரதனிற் றெங்கு
கோலமிக் குப்புற் றுளிப் பனையிலை கூடி யொன்றாய்ச்
சாலவே நீடித் தோங்குந் தன்மையி னுரைப்ப சான்றோர்
தாலமா நகர மென்றுந் தனிப்பனைப் பாகை யென்றும். (௭௧)

வட்டவாய்க் கமலப் புத்தேள் வடிவுடைப் புரியா மன்னன்
கெட்டவான் சிறகு ற்றுக் கிளர்தரக் கௌந்த ரேசன்
மட்டவிழ் பாதம் போற்றி வதிந்திருந் தனனவ் வூர்க்
கெ. னர் வாணி கேள்வ னிருக்கையென் றிருபெ ருரைத்தோர். (௭௨)

அந்தர வரம்பை மாத ரருகிருந் தேவல் செய்யச்
சுந்தரி யுடனே வந்து சுரர்பதி காதல் கூர்தன்
மைந்தனுக் காகச் சின்னாள் வசித்தவி னுமை தேய
மிந்திர புரியென் பார்க ளிருந்தவக் கிழமை யோனே. (௱௩)

திக்குகள் புகழுஞ் சீர்த்திச் சிறுவிதி துயரந் தீர
முக்கணன் மழுமான் செங்கை மூர்த்தியைப் பூசித் தேத்தித்
தக்கவான் சிறப்பி னோடு சார்தலாற் றுறவோ யின்னுந்
தக்கபுரி புரியென் றந்தத் தலத்தினுக் கமைந்த தன்றே. (௱௪)

வெயினிழைக் கருங்கா ரைம்பால் வெண்ணகைத் துவர்வா யையை
மயிலுரு வகன்று நல்ல வடிவடைந் துற்ற ஞான்று
சயிலவில் லுடைய ஞான சங்கரன் மணந்த வாற்று
லெயில்கவி யாண மாவூ ரென்றனர் கவிவ லோரே. (௱௫)

ஆதியிற் சுயம்பாய்த் தோன்றி யடியவர் பிறவி நீக்கு
மாதவன் குரவ னாதி வானவர் பணிம யூர
நாதனார் வடிவின் காந்தி நானிலம் போர்ப்பக் கண்டு
சோதிலிங் கப்பேர் சாரச் சொற்றன ரப்ப திக்கே. (௱௬)

இத்தகைத் திருநா மத்தோ டிரிரு கூற்று வானோர்
சித்தர்சா ரணர்க ளேத்துஞ் சிறப்பொடு திரிலோ கத்தும்
வித்தக முடைய தாகி விளங்கிடு மருணி றைந்த
முத்தர்கள் பரவுஞ் சீர்சான் முனிவரீ யறிதி யென்றே. (௱௭)

குருதியைப் புரைசெஞ் சூட்டுக் குக்குடம் வலனு யர்த்த
பரிதியை நிகர்த்த வைவேற் பாணியங் கருணை மூர்த்தி
யுரைசெயக் கும்ப யோனி யுளமகிழ் வோடு திவ்ய
திருமரை யிகக்குஞ் செய்ய சீறடி பணிந்து நின்று. (௱௮)

ஐம்புல னையுமொன் றுக்கி யகத்தழுக் ககற்றி யன்பு
பம்பிய சிந்தை யாரப் பாவனை செய்து வாயால்
நம்பன்மந் திரத்தை யோதி நாண்மலர் கரத்தாற் றாவி
வம்பவிழ் கடம்பற் கேரண வகைவழி பாடி யற்றி. (௱௯)

இருணிறக் கருமென் கூந்த லேவிழிக் கனிவாய் முல்லைத்
திருநகை யிடைக்குத் துன்பஞ் சேர்தரப் புளக முற்றுத்
தரளவெண் கோவை யார்ந்த தனத்தியர் வடிவேற் கந்த
னிருமருங் கமருந் தெய்வ யானைவள் ளியையும் வாழ்த்தி. (௧௧௦)

திறமிகு சூர னாதித் திருந்தலர் செகுத்து விண்மீ
துறுபவ ரிடுக்க ணீக்கு முத்தமக் குருவே போற்றி
யறவர்கொண் டாடுந் தாலே யம்பதி மான்மி யங்கேட்
டுறுபிற விப்பே றுற்றே னுன்னடித் தொழும்ப னேனே. (௧௧௩)

விம்பிதம் பலவாய்த் தோன்றி விளங்குமப் பதியைச் சார
வெம்மையாண் டடிமை கொள்ளு மெந்தையே விடைதா வென்ன
மும்மையுந் தேர் முனியு லோபா முத்திரை யோடு தாழ
வும்பிகைப் பயந்த செவ்வே ளருளின னகம கிழ்ந்தே. (௧௧௪)

வீரபத்திரச்சருக்க முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௦௱௮.

# அகத்தியன்பூசனைச்சருக்கம்.

சூதனிப் பரிசு சொற்ற போதுதூய் வனத்திற் றுன்னு
மாதவர் மகிழ்ந்து கேட்டு மலரடி வணங்கி வீரன்
காதையைப் புகன்றீ ரார்க்குங் கடல்நகர்த் தவன்செய் பூசை
யோதுதி யைய வென்றார் மற்றவ னுரைப்ப தானான். (௧)

(வேறு.)

அந்தரத் துயர்திருத் தணிகை யார்ந்தநங்
கந்தனைப் பிரிந்தொரு கணமும் வாழ்கலாச்
சிந்தனை யுடையவன் றிருப்பு லீசனை
வந்தனை செய்தடி வணங்க வெண்ணியே. (௨)

அருந்தவன் குறிநெடி லணைந்த தாமென
சுரிகுழற் கனிமொழித் துணைவி பின்வர
விரிதரு பாலபா தவம்வி ளங்கிய
சுரநனீ ரோடையுந் தொலையச் சென்றனோ. (௩)

பாலைநீர் வேட்டவர் பான்மை யாமெனத்
தால்மா நகரினைச் சார்ந்து தான்களி
கூலவார் கடலினுட் குளித்து நேர்வளஞ்
சீலமார்ந் திலகுதன் றேவிக் கோதுவான். (௪)

செறிமலர்ச் சோலையைச் சேரு மில்லென
சிறையவெண் குருகினஞ் செய்யி னுள்ளமீன்
குறிவரக் கவர்ந்துதாங் கொண்டு போவதை
மறிநிகர் விழிமட மாது நோக்குவாய். (௫)

பரியெரி கதிர்மணிப் பசும்பொற் கிண்ணநீர்
பருகுதல் போன்றசூற் பணில மாரமார்
தருவய னெற்கதிர் தாழ்ந்து தாமரை
விரிதரு வாயிடை விளங்குந் தோற்றமே. (௬)

முழங்குவண் டினமிசை முரன்று தேனுண
வழங்குதீண் கடிமலர் வகித்து விண்ணவர்
பழங்கவர் விரும்புதண் பாத வங்களே
தழங்கொலிச் சிறடித் தியல் கண்டிடாய். (௭)

வான்முக டுரிஞ்சிட வளர்ந்த தண்டலைத்
தேன்மரங் கிளைக்கொடி சேர்ந்து சுற்றின
கூன்படு முதியவர் கொண்ட மெய்யின்மேற்
றோன்றிடு நரம்பெனச் சொலற்க மைந்ததால். (௮)

கிள்ளையுங் குயில்களுங் கீத சாலமும்
விள்ளரு மலர்த்துகண் மேய்ந்த தென்றலுங்
கள்ளவிர் சினைதொறுங் காண மேவலா
லெள்ளவில் மாரன்பா சறையை யேய்க்குமால். (௯)

வித்தகர் மகிழ்ந்துளம் வியக்குஞ் சோலைவாழ்
தத்தையும் பூவையுந் தாவி லாப்பர
முத்தியை யடியவர்க் கருளு மூர்த்தியின்
சுத்தபஞ் சாக்கரஞ் சொல்லல் கேட்டிடாய். (௰)

தொன்மரம் பாசிலை யுதிர்ந்து தோன்றிய
மென்றளி ரோடிவண் விளங்கு நீர்மைசீர்
துன்றிய பசும்படா மொருவித் தூசிலா
வென்றிகொள் செம்படாம் விரித்தல் போலுமே. (௧௧)

கழையையுங் கந்தையு முறிக்குங் கார்நிறப்
புழைநெடுங் கரத்துயர் போத கத்துவார்
கழலுடைக் காவல ரயர்வு நீக்குமிப்
பொழிலினார் மண்டபப் பொலிவு நோக்கிடாய். (௧௨)

வானவர்க் கருள்செயு மமயம் வந்ததா
லூனமி லடியரை யோடி வாவெனத்
தானழைத் திடுவபோற் றயங்கு நுண்கொடி
மேனிமிர் கோபுர மிளிரல் கண்டிடாய். (௧௩)

குழவிவெண் மதிவடங் கிடந்த குங்குமத்
தெழில்வரை யனையதோ ளிளைஞ ரொள்ளொளிக்
குழைபொரு சேல்விழிக் குவவுக் கொங்கையர்
விழைவொடு பயின்றிடும் வீதி நோக்கிடாய். (௧௪)

(வேறு.)

என்று கூறிதன் மனைவியை மகிழ்வுசெய் தின்ப
மன்றல் வீதியைக் கடந்துபோய் விழியினான் மதனைக்
கொன்ற வெம்மையாள் பரனுறுங் கோயிலைக் குறுகிக்
குன்றி னைக்குறு கென்றவு ளாற்றொழக் குவித்தே. (௧௫)

தன்னின் மூழ்குநர் பவவினை தனித்தெழுங் கரற்றி
மின்னும் வாணிடை யெழுந்துபோம விதமெண விரைந்து
*தென்னி றப்பிர மாமது வுண்டுளந் தெளிட்டி
யின்னி சைப்†பயின் றேகலர் தீர்த்தம தெதிர்ந்தே. (கசு)

தாம மென்குழற் பைந்தொடித் துவரிதழ்த் துணையோ
டேம மாய்விதி முறைபடிந் திருகர முகிழ்த்து
வாம மார்சிரம் வைத்தனி சினகரம் வலமாய்
நேம மோடுவந் தரனிடம் வதிந்தன னீத்தோன். (கஎ)

இற்சு கோதய மறுபவ நிற்குணத் தெளிவாந்
தத்து வந்துரி யஞ்சயம் பாகிய சத்து
சித்தொ டின்பமு லஞ்சுக மாமெனச் சிறந்து
கர்த்த னெழுஞ் சோதியை முன்னுறக் கண்டான். (கஅ)

கண்டு வீழ்ந்தெழுந் திருவிழி நீர்த்துளி கால
விண்டு சொன்மொழி தழுதழுத் திடவுடல் விதிர்ப்பக்
கொண்ட வன்புரு வாய்க்குறு முனிமகிழ் குளித்து
வண்டர் நாயகர்க் கருச்சனை செய்திடத் தறைவான். (ககூ)

(வேறு.)

தோகையிள மயிலுருவங் கொண்ட வையை சுந்தரியா யிருந்திடச்செய் தவனே போற்றி, வாகைமிகு புலிவடிவ நீக்கி நந்தி வள்ளலென வாழவரந் தந்தாய்போற்றி, பாகெனுஞ்சொ லயிராணி யீன்றமைந்தன் படுந்துயர்தீர்த் தின்னருள்பா லித்தாய் போற்றி, கோகனகக் குரிசிலுள மகிழ வன்னக் குறைதவிர்த்தோர் வடிவமுறக் கொடுத்தாய் போற்றி. (உ௰)

மணிமிறவண் ணப்பெருமான் பணிந்து வாழ்த்த மையறுதார்க் கின்றுயர மாய்த்தாய் போற்றி, பணிபணியெம் பெருமவனைச் சிற்றத் தோடு பழித்தவிபல் தக்கனிடர் தொலைத்தாய் போற்றி, குணிகொளிரா கவனருச்சித் தேத்த வன்றேன் குறையனைத்துங் கெடுத்தகுணக் குன்றே போற்றி, பிணியவிழுந் தாரளக விரதிகேள்வன் பெரும்பூசை கொண்டுபிழை பொறுத்தாய் போற்றி. ()

கரும்பகலி ரியமனன்ற துதிகேட் டாளுக் கவலையெலா மொழித்தருட் கடலே போற்றி, அரும்பவிழ்தா ரணிவச்சி ராங்க தன்செய் யரும்பணி கொண் டகமகிழா னந்த போற்றி, சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் கூரிய கூந்தற் சுந்தரியை யிடத்திருத்துந் தூய போற்றி, யிரும்புவியி லுளவுயிர்க ளெல்லா மோங்க வெழுந்தபெருஞ் சோதிமய விறையே போற்றி. (உஉ)

---

* தென்-சருமை, † பயின்றுவரு அளனப்பிரிக்க.

# விவாகச்சருக்கம்.

நைதலிலாச் சூதனையுண் ணாடிமுனி வரரேத்தி
மைதவழ்நீண் மலயமதில் மாமுனிசேர்ந் தமையறிந்தோம்
மெய்தவனே யெழிற்பரமன் விமலசவுந் தரியைமணஞ்
செய்ததிறத் தினையெமக்குச் செப்புகென வவனுரைப்பான். (௧)

மாதேவ னாணையினான் மஞ்ஞைவடி வானவுமை
தீதேது மில்லாமற் றிறங்கியதண் கங்கையினாற்
போதாலே யானவனைப் பூசைபுரிந் தத்துவித
காதாவெ னச்சொலிமெய்ஞ் ஞானமது பெற்றமர்ந்தாள். (௨)

ஆகாதகோ டிந்தவித மம்பிகையாள் பூசைசெயச்
சீதகதி மதிவளையுஞ் செஞ்சடையோன சிந்தைமகிழ்ந்
தேதமறு மந்திறத் தெழிலோங்க வெள்ளேற்றின்
மீதமரர் யோகியாமென் மேற்றுதிப்ப முன்னடைந்தான். (௩)

ஆசையுடன் பூசித்த வங்கயற்க ணம்மைமுனம்
நேசமுட னினறிடவந் நேரிழையுட் களிகூர்ந்து
*மாசைநிறச் சேவடியா மாமலரைத் தொழுதேத்த
வீசனிநங் கருணையினா லியம்பினனோர் மாற்றமரோ. (௪)

முன்பெனது மொழிகொண்ட முரணொழிந்த தினியுன்னை
மன்புலவர் ஞானியரிம மாநகரிற் காணடரவே
யின்பமாமென் பனிமொழியா யிருமணஞ்செய் குவனென்ன
வன்பருளத் தறைபரம னறைந்தனன்மா துளமகிழ. (௫)

அம்மென்மர கதநிறத்தாட் கிவையுரைத்து வருகிருந்த
கொம்மைமுலைத் திருநாதன் கோதறுசீர் முகநோக்கி
யிம்மலைமா மகடன்னை யிண்டெழிலார் யேடமதி
தம்மில்வரு நன்மகத்திற் றிருமணஞ்செய் திடுவோமால். (௬)

பரிந்ததற்காங் காரியம்நீ பாரெனவெம் பிறையியம்ப
விரிந்தகுல்லைத் தாரணியும் விண்டுசிவ கணங்களைக்கூ
யரிந்தகிர மாலையர்க்கு மம்பிகைக்கு மணஞ்செயுரை
புரிந்தரிய தேவரிவண் புகவழைமி னெனவிடுத்தான். (௭)

திசைக்கதிபர் வானவர்விஞ் சையருரகர் தினகரன்மு
னிசைக்கிரகங் காந்தருவ ரியக்கர்மல ரவன்முதலோர்
நசைப்புகழ்சேர் வைகுந்த நகரினுளார் கயிலாயு
மிசைப்பயில்வோ ரியாவர்களும் விரைந்துவந்தங் குற்றனரால். (௮)

---

* மாசை-பொன்.

பாணலங்கண் வெரிநழ்மென் பனிமதிவாண் முகநரந்தப்
பூநிறையுங் கருங்கூந்தற் பொற்றொடிப்பாற கவிகளபத்
தூனமிலாக் கொங்கைமுக டெரிஞ்சுநிறக் காயாம்பூ
மேனியன்சொற் படியாங்கு விண்ணவர்கம் மியனினைந்தே. (௯)

விலைவரம்பு கண்டறியா மிக்கொளிசேர் மணியான்விண்
டலையிலெழு மொருகோடி திரணிநகரை யுற்றனபோற்
*றொலையிலணி மண்டபமுஞ் சுந்தரத்தண் ணரித்திலத்தாற்
பொலிவுடைய காவணமும் புகழ்பெறவே நிருமித்தான். (௰)

(வேறு.)

இலகும்பல வளமோங்கிய வெழிலார்தரு நகரு
மலகின்றுயர் நிறைவீதியு மழகேய்தர வருணைய
குலவும்நவ மணிமாலைகள் கோத்தெங்கணு மிடுவார்
நிலவும்மதி காந்தங்களி னீண்மேடைகள் வனைவார். (௧௧)

வாழைக்கழை பூகத்தரு வானம்பொர நடுவார்
தாழைப்பன சதநீங்கனி சரமாயவ ணிடுவார்
கூழைப்பட விதித்தலை குளிர்சந்த மிறைப்பார்
மாழைப்பது மைகமேடரினில் மன்னும்படி வைப்பார். (௧௨)

வாசப்பனி நீராற்றரை மணமாமெழு கிடுவா
ரேசற்றகல் யாணபொடி யாற்கோலம திடுவார்
வீசப்புது மணமாமலர் தொடைஞான்றிட விடுவார்
தூசுக்கொடி சோதிப்பரி தூகணிக்கிட நடுவார். (௧௩)

அங்கிக்கதி ராந்தீபம தணியாக நிரைப்பார்
வங்கத்தொளி வாட்டும்முளை வண்பாலிகை வைப்பார்
துங்கக்கமலஞ்சேர்தரு தூயதார் நிறை கும்பந்
தங்கத்தினி னன்மவேதிகை தன்மீதமர் விப்பார். (௧௪)

தேமென்குழ லார்தத்தம வருணத்தொடு சேர்வார்
பூமன்றுதி நதிபாலியில் போயாடுவர் குழுமி
யேமந்திகழ் தருவூசலி லேறிக்களி கூர்வார்
வாமந்தழை பூவம்மனை மகிழ்வோடினி தெறிவார். (௧௫)

மின்பாய்மணி யாரப்பணி மிளிர்மாமுலை யணிவா
ரன்பார்மனை வோரும்விளை யாடல்வினை புரிவார்
பொன்பூரத மின்னாரிறும் பூதெங்கணு நாடித்
தென்பாலுறு வேதண்டமி தென்பார்தனி யென்பார். (௧௬)

---

* தொலை-உவமை

(வேறு.)

வேலைசூ ழுலகரும் விண்ணி னாடருஞ்
சிலபா தலத்தருஞ் சிவனம ணத்தினுக்
கேலவே மனமகிழ்ந் தீண்டி வைகிய
தாலமா நகர்வளஞ் சாற்றற் பாலதோ. (கஎ)

வந்தது மேடநன் மதியின் மாமக
மெந்தையே மணத்தினுக் கெழுக வென்றுமுன்
தந்தியைப புரந்தவன் சாற்றச சங்கரன்
*மந்திரி யானன மகிழ்ந்து நோக்கினான். (கஅ)

நோக்கலு முனமயன் மாலு நோக்கொணா
யாக்கையின் மணிப்பணி யகற்றி வாரிசப்
பூக்கையின் மணிப்பணி புனைந்து மண்டபச்
சேக்கையி னமர்தரச் செய்திட் டானரோ. (ககூ)

எழின்மணக் கோலமோ டிறைவ னீடிலா
விழைமணி மண்டப மேவி வைகிட
நிழல்முடிக் கதிரிரு ணீக்கிச் சோதியம்
பிழம்பெழ வெயில்மிகப் பெருகிற் றாலரோ. (உ0)

அண்டர்கள் தருவரோ டருக்க ரம்புலி
பண்டரு விஞ்சையர் பரவு தாபதர்
விண்டொடு பனிமலை வேந்த னாதியோர்
மண்டப நிறைந்திட வந்து மொய்த்தனர். (உக)

நாரண னேவலி னளின மங்கையு
மாரணன் றுணைவியு மடைந்து மால்வரைக்
காரண மாதுமை கரங்கொண் டாடகப்
பூரணப் பீடிகை பொருந்தி னாரரோ. (உஉ)

வாசனை யெண்ணெயால் வசந்த மாட்டியோ
ரோசனை கமழ்பொடி யுடம்பிற் பூசியே
யாசறு கங்கையே யாதி †புட்கரத்
தாரைசையோ டம்பிகைக் கமைய வாட்டினார். (உங)

தரையெலா மதித்தொரு தந்துக் கோதினும்
புரையிலாக் கோசிகப் புனித வாடையைப்
பிரையரை யழகுறப் பார்த்து டுத்திமேன்
விரைகுழற் ககிற்புகை விளங்க வூட்டினார். (உச)

---

* மந்திரி-குபேரன். † புட்கரம்-நீர்.

(வேறு.)

கடிகமழ் புழுகு நானங் கலந்துமைக் குழற்கு நீவி
முடிவனைந் திசைகள் வண்டு முரன்றிடு மொலியல் சூடி
சுடிகையோ டிலங்கு திங்கட் சுடர்ப்பிறை கவினச் சாத்தி
படிக ரறுங்*கர்ப் பூரப் பட்டநன் னுதலி லார்த்து. (உரு)

மகரமென் செவியிற் றோடும் வாளியும் பிறவும் பூட்டிப்
புகரறு தாளத் தொங்கல் பொருந்துமூக் கணிபு னைந்து
நிகரறு மரைக்க ரத்தி னிறைமணிக் கடகத் தோடு
பகரெழிற் சூடகப்பொற் பணியினை யிலைந்து யாதோ. (உசு)

முழுமதி நிலவு காலு முத்துசெம் மணிமா நீலங்
கழிபெருங் கிரணத் துப்பு கலந்தவங் கியைக்கைப் பூட்டிப்
புழுகவிர் சாந்த நானம் பூதரத் தனத்திற் பூசிச்
செழுமையாய்த் தொய்யி றீட்டிச் சிறந்தகச் சுதன்மேல் வீக்கி. ()

மாணழகன் வடமுஞ் சோதி மணியணி வடமு மாக்
கேழுறு வடமுங் கொங்கை கிளர்தரப் புனைந்து மஞ்சுங்
காழொளி மணியிற் செய்மே கலையணி யிடைம ருங்கிற்
றூழுற வணிந்து சீர்சால் சரோருகத் திருச்செந் தாட்கே. (உஅ)

தண்டையோ டிலகு வார்க்குஞ் சதங்கைபா டகமு மார்த்துத்
தண்டுறழ் மென்றோண் மேன்முந் தானைபின் போக்கிச் செஞ்சேற்
கெண்டைநேர் விழிக்கு மையைக் கிளர்தரத் தரித்து மேலாந்
துண்டவெண் பிறைநு தற்குத் தூயசிந் தூரமுந் தீட்டி. (உகூ)

செப்பரும் பரமா னந்தச் சிவன்மன மகிழ வெங்கு
மொப்பனை யில்லா வெங்க ளுமைசவுந் தரிக்கிப் பாரி
னொப்பனை யியற்றி மிக்க வொளிகிள ராடி காட்டிக்
கப்புர தீப மேற்றிக் கண்மிச்சி லொழித்தா ரன்றே. (௩௰)

(வேறு.)

இப்பரி செழிற்கொடி யிடைக்கணு ரிழைக்கும்
பொற்கிரி யெனுந்தரள பொம்மன்முலை மாணூர்
செப்பரிய பாரதி செழுந்திரு மடந்தை
கைப்பரிசு காட்டியுள் களித்தனர் களிப்பால். (௩க)

அந்தரர்க டம்மெழி லருங்கொடி யினர்கள்
சிந்துரமி லங்குநுதல் சித்தர்மட வார்கள்
கந்தருவர் பன்னியர்கள் காமரு மியக்கர்
தந்திருவ னார்களிரு தாடொழுது சூழ. (௩உ)

---

* கர்ப்பூரம்-பொன்.

தாய*சி குரத்திரதி தாழ்விலயி ராணி
சாமரை யிரட்ட†சவி சாலிகுடை தாங்கப்
பூமகளு நாயகளும் பொற்கைமல ரேந்த
மாமணி பொன் மண்டப மருங்குகொடு வந்தார். (௩௩)

வெங்கனல் கொழுந்துபடர் வேள்வியிடை யிட்ட
துங்கமுறு பேடெரி சுடாவகை புரிந்தோன்
மங்கல மிலங்குதொடை மாலையணி வோனெஞ்
சங்கரன் வலத்திலுமை தன்னையமர் வித்தார். (௩௪)

(வேறு.)

இணைபறுமக் காட்சியையங் கிருந்தவர்கண் டகமகிழ்ந்துள் ளிறு
ப்பூதெய்தி, கணையலராங் கசனவடிவங் கரியாகக் கனல்விழியிற்
கடிந்த நாதன், துணைவனெனப் பெறவிநதச் கரிகுழலங் கயற்கண்
ணித் தவர்வாய்ப் பூமென், பிணையனையாள் செய்ததவப் பேறெ
னைத்தோ வெனவெடுத்துப் பேசாநின்றார். (௩௫)

எறும்புமுத லெறும்பிவரை யாயவுயிர்க் குயிராகு மிறைவனார்
வந், தறமபலவு மியற்றுமெழிற் சில்லைநிச சவுந்தரியா மமுதன்
னானைத், திறமபெறமா மணமுடித்தற் குரியனவாய்த திகழ்தலினாற்
றிருவாரிந்தப், ‡புறமபெறுமிந் நகரியற்றும் புனிததவப யனெ
ன்னே புகறி யென்பார். (௩௬)

கற்றவர்த முளக்கோயிற் களிவொடினி தமர்ந்துலகைக் காக்க
வெண்ணிக், §கற்றவரா றபுரமபொடித்த கண்ணுதலின் கடியையிரு
கண்ணிற்காணப், பெற்றபெருஞ் சிறப்பதனைப் பெரும்புவியி னமை
பபோலப பேரா னந்த, நற்றவஞ்செய் தவரினியநரர்சுரரி லுண்டு
கொலோ நவில்வீ ரென்றார். (௩௭)

விடைத்தரும மூர்த்தியிம விண்டுவினிற் சுரர்முனிவர் வியந்து
காண, நடத்தியவப் பெருங்கடியை நரர்மகிழ்ந்து கண்டுவகை நயப்ப
தாகப, படத்தரவின் சுமையாமிப பாரிலியற் றிடக்கருணை பாலித்
தானென், முடித்தலையி லிணையடியை முடித்தனுரைத துடைத்தரு
ளிம் முதலவனென்பார். (௩௮)

அந்தவமை யத்தளிக ளருந்திபுவட் டெடுக்குமது வமைந்த வா
னைச், செந்தருவுஞ் சுரபிமணி செழித்தவிரு நிதியுமவுண் செறிநதெ
னையன், சிந்தைமகிழ் மணத்தினுக்கார் திறமுதவ மாதவர்கள் சிற
ந்த வேத, மந்திரமா னதையியம்ப மறைக்கிழவன சடங்கனைத்து
மகிழ்வாய்ச் செய்தான். (௩௯)

* சிகுரம்-கூந்தல். † சவி-அழகு. ‡ புறம்-மதில். § கல்தவர்-மலைவில்.

சோதிடத்தின் றுறைதெருஞ் சுரர்குருநன் மணவோரை துன்னிற் றென்னப், *போதகநே ரியையவரைப புண்ணியன்கேட் டினிதெழுந்து புகழ்சேர் தோளி, லாதவன்போ லுத்தரிய மரையசைத்தும் மடம்பிலை யாளாற் கூவிக், கோதறுமென் படியிருத்திக் குவிததிருக் குஞ் செங்கெலின்மேற் கொண்டிவைகி. (௪௰)

பிறக்கிளரம் புயமீது கேர்காந்த ளலர்க்கதென விருத்த லுமெம், †பிறங்கலுறு மான்கரமேற் பூரிமய வல்லி‡சயம் பேண வைத்துப், பிறங்கலென வளரிளமென் முலைத்துவா வாய் மேனைதரும §பசிதம் விட்டான், கறங்கூவுயர் விலத்தோர்துங் துடிமுழக்கிக் கற்பகப்பூக் கவிழ்த்து நின்றார். (௪௧)

(வேறு.)

வாசமுறு மாமலர் வதிந்துறை விரிஞ்சன்
நேசமுட னாகம நெறிப்படி ¶நேயம
மாசிலெழு தாலுவி னுமாந்திட விடுப்பத்
தேசுற வகித்துட னெழுந்தன செழுந்தீ. (௪௨)

ஆடின ரம்பையர்க ளாரமுத கீதம்
பாடினர் பரிந்திருவர் பண்ணவர்க ளார்வங்
கூடின ராரென குதித்தனர்கை சென்னி
சூடினர் மணச்சுவைக பெய்த்தனர் களித்தார். (௪௩)

ஆதிமறை நான்குட னருங்கருவி யோதை
மாதிர முறும்படி வலத்தறிஞ ரார்ப்ப
சோதிதரு மங்கல வடந்தனை தொடுத்தான்
பாதிமதி சூடிய பரன்மன மகிழ்ந்தே. (௪௪)

பின்றனது பன்னியொடு போயுட னடிப்போன்
கன்றுதலில் வெண்பொரி கரங்கொடொளி யார்வந்
துன்றிய செழுஞ்சுடர் சுவைத்திட வளித்து
வென்றிமறை யோர்கொள வெறுக்கைபல வீந்து. (௪௫)

காக்குழல் சவுந்தரிதன் கைம்மலர் பிடித்துத்
தீர்த்தனவ னாரழல் சிறந்திட வலஞ்செய்
தார்த்திபுட னம்மைபத மம்மியி லமைத்துச்
சீர்த்திகொ ளருந்ததி செழும்படிவு காட்டி (௪௬)

பணைச்சுமை கொள் பாரினிவை பண்பினொடு கற்கே
மணத்தினியல் யாவையு மறைப்படி முடித்தா
னிணர்க்குழல் க[illegible]யாளிரதி யேற்பக்
கணத்தில்மத னைத்தரு கட்கருணை வள்ளல். (௪௭)

---

* போதகம்-யானை. † பிறங்கல்-பெருமை. ‡ சயம்-கை.
§ பசிதம்-நீறு. ¶ நேயம்-நெய்.

(வேறு.)

பூரண கருணை நாட்டப் புண்ணியன் றனக்கு மிந்தத்
தாரணி யாவு மீன்ற தாய்சவுந் தரிக்கு மீடில்
வாரணி முலையார் தேவ மடந்தையர் தொடிமென் கையா
லாரண மொழியா லேத்தி யாலம தெடுத்தார் மன்றே. (௪௮)

காண்டரற் கரிய தோன்றாட் கடவுட்கு னடைந்த கோல
மீண்டடைந் தனமென் றேமா *இறைசுர ருரக ரானோர்
வேண்டிய வணம்பூ சித்தார் விளங்கிழை யுமையா ளீன்ற
மாண்டகு மிருவர் செந்தா மரைமல ரடியிற் றாழ்ந்தாள். (௪௯)

மன்றலுக் கடைந்தோ ரெல்லா மகிழ்வுறச் சுரபி நின்று
சொன்றியு மறுவ கைத்தீஞ் சுவையமு தளிக்கத் தாரு
கன்றலில் வரிசை நல்கக் கரியவ னினிமை கூறக்
கொன்றையஞ் சடையோ னும்பூங் கோதையு மகிழ்ந்தா ரன்றே. ()

இவ்வகைத் திறத்தான் மன்ற லெழில்பெற முடித்த பின்னர்
தெவ்வர்தம் புரம்பொ டித்த தேவனுஞ் சுகந்த நாறு
மவ்வலங் கூந்தல் வாட்கண் மரகத வல்லி யுஞ்சீர்
கவ்விய நகரிற் கோலங் காட்டிடக் கருணை கொண்டார். (௫௧)

இமையவர் பரவு மூக்க ணெம்பிரா னிமில்க ருங்கோ
டமையுபவெள் விடைமீ தேறி யமர்ந்தன னிளமென் கொங்கை
யமையுறழ் திணிதோண் மென்சொ லையரி மழைம தர்க்க
ணுமைசெழுஞ் சூட்ட னத்தி னூற்றனண் மகளிர் சூழ. (௫௨)

தேவதுந் துமியொ லிப்பல் லியத்திரள் திரையி னார்ப்ப
வேவருந் துதிசெய் நார தாதியர் கீதம் பாட
மாவெழி லதனின் மிக்கூர் வசிஷ்டலோத் தமையா ரோடு
கோவையங் கனிவாய் மாதர் குழுவெலாம் நடனஞ் செய்ய. (௫௩)

கின்னர ரியக்கர் நாகர் கிளரெழின் மகளிர் கூடி
நன்னய விசைகள் பாட நாகர்கோன் பிரம்பு கொண்டு
சன்னதி விலக்கச் சீர்சால் †தனஞ்சய னிருளை யோட்ட
நன்னிலைச் சனகனாதி ஞானிய ரோத்தி யம்ப. (௫௪)

சுடர்மணி மோலி வேய்ந்த சுரர்பல நெருங்கிச் சூழத்
தொடர்கரி கலினப் பாய்மாத் துன்னுமப் பனைசை மூதூ
ரிடர்தரு பிறவி நோய்விட் டிரிதரத் தொழுந்தொழும்பர்
படர்கெடுத் தருளு முக்கட் பண்ணவன் வலம்வந் தானால். (௫௫)

---

* இறை-பிரமன். † தனஞ்சயன்-அக்கினி.

*துல்லிய மறுமிக் கோலத் தூய்மையை வானு ளோரும்
நல்லிய லுறுமெய்ஞ் ஞான நாகரும் புவியு ளோரும்
வல்லியம் பூசித் தேத்தவ் வளமிகு பதியோ ருங்கண்
†டல்லகண் டங்க ளெல்லா மகற்றிநின் றார்வ முற்றார். (௫௬)

தூய்மணி மாட வீதி சூழ்வந் தகன்று வானத்
தேய்த்தருஞ் சிகரி வாயி னெய்திடக் குழைத டாவிப்
பாயரி மதர்நெ டுங்கட் பாவையர் பலருங் கூடி
யோய்தலில் மணவாழ்த் தோத வுமைநா ளுவகை கூர்ந்தே. (௫௭)

துகளறு மணியி னாற்செய் சொன்னமண் டபத்தி னொப்ப
னிகரில்சிங் காத னத்தி னிமலையோ டமர்ந்தாங் குற்ற
ககபதி விரிஞ்ச னாதிக் கடவுள ரவர வர்க்குத்
தகவிடை யளித்தா னந்தஞ் சார்ந்தினி திருந்தா னன்றே. (௫௮)

சூலபா ணியனார் வைகிச் சுகமணை முடித்தற் காமத்
தாலமா நகரின் மேன்மைச் சரிதையை யெண்ணில் கோடி
காலமா யுரைத்திட் டாலுங் கடைபெற லருமை யாமிஞ்
ஞாலமே லதற்கொப் பான நகர்பிறி திலையென் றோர்வீர். (௫௯)

ஆகையா லதனின் மேவி யமர்ந்தவெங் கருணை மூர்த்தி
யோகையாம் புராண காதை யுரைத்தவர் கேட்டோர் முத்திப்
போகமாம் பொருளைத் துய்த்துப் புனிதராய் வாழ்வர் நீரவ்
வேகமாந் தலத்தி னெய்தி யிறைவனைத் தொழுதி ரென்றான். (௬௰)

(வேறு.)

அன்னையின்மெய்த் தவம்வளர்க்கு மருட்சூத
னறைந்தமொழி யமுத மாந்தித்
தன்னிகரில் லாதொளிர்நை மிசத்தறிஞ
ரெம்முளமாந் தகளி யொன்றப்
பின்னமிலா விச்சரிதை யெனுஞ்சுடரைப்
பிறங்கவைத்துப் பிறவி மாய்த்தீ
ரென்னவுரைத் திணையடியி லிறைஞ்சிடவு
முனிவனுந்த னிருக்கை புக்கான். (௬௧)

சீலமுனி யகன்றதற்பின் றிருவளர்நை
மிசவனத்துச் சிறந்தோ ரியாருந்
தாலவனத் தினிலடைந்து தண்ணமுத
நதியாடிச் சனக னாதிக்

---

* துல்லியம்-உவமை. † அல்லகண்டம்-துன்பம்.

காலவிருக் கத்தடியி லமர்ந்தருள்பா
வித்தவெம மையன் பாதக்
கோலமலர் முடிதரித்துக் குறைவறுநன்
முத்தியினிற் கூடி னரால். (கூஉ)

(வேறு.)

வேதநூற் றுறைகள் வாழி விளங்குநற் றவங்கள் வாழி
நீதியா மகங்கள் வாழி நீதிநூல் வல்லோர் வாழி
போதவின் னுலகு வாழி புணரிசூ ழுலக மெங்கு
மாதமும் மாரி பெய்து வண்மையோ டினிது வாழி. (கூங)

வேதிய ரொழுக்கம் வாழி வெற்றிகொள் மன்னர் வாழி
நீதிசேர் செங்கோல் வாழி நீணகர்ப் பனசை வாழி
யாதியி னருளி னலங் கமர்ந்துறை மாக்கள் வாழி
யோதிய புராணம் வாழி யுன்னரு மடியார் வாழி. (கூச)

பூதிருக் கிராக்கம்வாழி பூண்பவ ரென்றும் வாழி
கோதிலாச் சைவம் வாழி குருவரு ணிறைந்து வாழி
தீதிலைந் தெழுத்தும் வாழி சிறந்தஞா னியர்கள் வாழி
ஆதியின் சரிதங் கேட்கு மன்பினர் வாழி வாழி. (கூரு)

(வேறு.)

இதமுறு சகாத்த மூவறு சதத்தோ டையையுமை யைந்தினிற்
றிகழுந், துதிபெறு சோப கிருதெனு மாண்டுத் துலாமதி யதனி
லிப் பனசைப், பதிபுரா ணக்கா தையைவிட மயின்று பண்ணவர்
துயர்தவிர்த் தாண்ட, நதிமதி புனைந்த நம்பன் மாயூர நாதனர்
கருணைகொண் டுரைத்தேம். (கூசா)

## விவாகச்சருக்க முற்றிற்று.

பாயிரமுட்படச் சருக்கம் ககூ-க்குத் திருவிருத்தம்-ககஙஎ.

## திருப்பனைசைப்புராண முற்றிற்று.

உ

கணபதி துணை.

# திருப்பனசைப்புராணவசனம்.

## நைமிசாரணியச்சருக்கம்.

ஒருகாலத்தில் நான்முகத்தெய்வமாகிய நாயகனிடத்துச் சிலமுனிக்கணங்களடைந்து அவர் பொன்னடிகளைப்பணிந்து புகலுவாராயினர். ஐயனே! இதுகாறும் நாங்கள் பற்பல சிவதருமங்களைச் செய்துவந்தோம், இனியரிய சைவதவங்களைச்செய்து அனேக வேள்விகளை விதியினோம்பி யாங்கள் வாழத்தகுந்த ஒரு வனம் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். இதனைக்கேட்ட பிரமன் சிவத்தியானஞ்செய்து ஒரு தருப்பையினை யெடுத்து நேமியாகவளைத்துப் பூமியிலுருட்டி இஃதோடிநின்ற வனமே நீங்கள் வாழத்தகுந்த தபோவனமாகுமென்றனர். முனிவர்கள் அந்நேமியின் பின்றொடர்ந்து விரைவாகச் சென்று அது தங்கியவிடமே நைமிசாரணியமெனக்கருதி அவ்விடத்திலேயே சிலநாள் தவஞ்செய்து அநேக முனிக்குழாங்கள்சூழ ஒரு சத்திரயாகஞ் செய்து முடித்து மகா சந்தோஷித்தாராய் வதிந்திருந்தனர். பின்பு அவ்விடத்திலொருநாளையதினம் வேதவியாசர் மாணாக்கராகிய சூதமாமுனிவர் விபூதி ருத்திராட்சவலங்கிருதராய்ப் பஞ்சாட்சரநாவினராய் எழுந்தருளிவந்தனர். உடனே முனிபுங்கவர்கள் தரிசித்தெழுந்து ஓடோடியும் எதிர்கொண்டு வணங்கி யழைத்துவந்து பல வுபசாரமியற்றி யொரு ஆசனத்தின்மீதி லெழுந்தருளச்செய்து சமீபத்திலிருந்து கைகுவித்துக் கேட்பாராயினர். சிவபுராணமனைத்துந் தேர்ந்த முனிபுங்கவரே! சிலவாண்டுகட்கு முந்தித் தேவரீர் வாரணாசியென்னுங் காசிப்பதியில் புராணகதைகளை எங்களுக்குச் சொல்லியபோது கயிலாயத்துக்குச் சமானமானது இந்தக்காசியும் காஞ்சியுமென்றருளிச்செய்தீர். அந்தக்காஞ்சிக்கு ஐந்துகுரோசதூரத்தில் விலாசகாஞ்சியென்றொரு தலமுண்டென்றுரைத்தீர். அத்தலத்தின் திவ்விய சரித்திரத்தை யின்று கேட்க மிகுந்த வாசையுள்ளோம். கிருபைபுரிந்தருளவேண்டுமென்றவுடனே சூதமுனிவர் தனது பரமாசாரியராகிய வியாசமுனிவரைத் தியானித்து ஆசையு மன்புமீக்கொண்டு சொல்லுவாராயினர். கேளுங்கள் நைமிசாரணியவாசிகளே! நீவிர்கேட்ட விலாசகாஞ்சியின் மான்மியம் வியாசமுனிவராற் சொல்லப்பட்ட பதினெண் புராணங்களுள் சிவபிரானைப் புகழ்ந்துரைக்கும் புராணம் பத்து, அதனுள் முதன்மையாகிய பிரமாண்ட புராணத்துள் உத்தரகாண்டங் கைலாயசங்கிதையிலுள்ளது அதை யெடுத்துச் சொல்லுவேன். பூர்வத்தில் அந்த விலாசகாஞ்சியின் மான்மியத்தைத் தணிகையின்கண் சண்முகக்கடவுள் அகத்தியமுனிவருக் குரைத்தனர். அவ்வகத்தியமுனிவர் வியாசமுனிவருக்கோதினர். அவரும் அன்புடன் எனக்குரைத்தனர். அதை யாம் உங்களுக்குச் சொல்லுகிறேனென்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினர். சிவபிரான் இப்பூதலத்தின்கண் ணெழுந்தருளும் சிவதலம் அறுபத்தெட்டாகும் அதினும் மேன்மைபொருந்தியதலம் பதி

ருகும். அதிலுஞ் சிறந்ததலம் ஐந்து அதாவது காசி காஞ்சி காளத்தி சிதம்பரம் மதுரை. இவ்வைந்திலுஞ் சிறந்தது காஞ்சி. அந்தக் காஞ்சிக்குச் சமானமானது நீங்கள் வினவிய விலாசகாஞ்சியாகும். அந்த விலாசகாஞ்சியில் பாலிமாநதியென்று ஒரு ஆறுண்டு. அதன் மகிமையை எம்மால் உரைக்குந்தரமன்று. மேன்மைதங்கிய தேவர் முனிவர் சித்தர் அரசராகப்பிறந்து வாழ்ந்தாலும் பலனில்லை. அந்த விலாசகாஞ்சியில் ஈ சிதல் புல் பூண்டு கிருமியாகிய இழிந்த பிறப்பாகச் செனித்தாலும் முத்தியின்பத்தையடையும். புலியும் மயிலும் பூசித்த சோதிலிங்கப்பெருமானை வழிபடுவோர் இகபரசுகத்தைப் பெறுவார்கள். அந்தச் சிவலிங்கப்பெருமானை உமாதேவியார் நந்திதேவர் மறையவன் இந்திரன் பிரமன் விட்டுணு தக்கன் இராகவன் மன்மதன் இயமன் வீரபத்திரன் அகத்தியன் முதலானோர் பூசித்துத் தங்கள் தங்கள் இட்டசித்திகளையடைந்தார்கள். அத்தலத்தின் மகிமையை முன்னம் அகத்தியனுக்கு முருகக்கடவுள் சொல்லியிருக்கிறாரென்று திருவாய்மலர்ந்தருளிய சூதமுனிவரை முனிவர்கள் வணங்கி சுவாமி! முருகக்கடவுள் அகத்தியருக்குச் சொல்லவேண்டிய காரணம் யாதோ அதைத் தெரிவிக்கவேண்டுமென்றுகேட்க சூதமுனிவர் சொல்லத்தொடங்கினார். சாம்பவமூர்த்தியினது அருள்விழி நோக்காலுண்டான நைமிசாரணியத்தை அகத்தியமுனிவனடைந்து அங்குள்ள விம்மிதங்களைப் பார்த்து நிற்குந்தருணத்தில், அவ்வனத்தில் தவஞ்செய்யும் பாரத்துவாச முனிவர்கண்டு அகத்தியமுனிவனே! நீ நினைத்துவந்த காரியங்களை யிவ்விடத்தில் தடையற விண்ணப்பஞ் செய்துகொள்ளலாமென்று சொல்லவே அகத்தியர் முனிநாதரே! இயலவருக்கு இனிமையான தமிழிலக்கண முணருமாறு வந்தேன் அதை அருள்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கவே, ஓ முனிவனே! நீ கருதிய விலக்கணம் கயிலாசவாசராகிய கடவுளல்லது உலகத்திற்சொல்ல வல்லவரொருவருமில்லை. ஆதலின் நீர் கைலைக் கெழுந்தருளல் வேண்டுமென்று கட்டளையிட்டருளினார். அது கேட்ட முனிவன் வணங்கி விடைபெற்றுத் தனது மனைவியாகிய உலோபாமுத்திரையுடன் சீடவருக்கஞ் சன்சூழப் புறப்பட்டுக் கைலைக்குச் செல்லத்துணிந்தனர்.

நைமிசாரணியச்சருக்கமுற்றிற்று.

உ

## திருக்கைலாயச்சருக்கம்.

ஸ்ரீ மகா கயிலாயத்தினுச்சியில் கோடிசூரியப்பிரகாசமா யொளிவீசும் நவரத்தினமயமான மண்டபத்தில் பக்தானுக்கிரககாரணமாக அரிப்பிரமாதி தேவர்களும், முனிவர் இயக்கர் கந்தருவர் கின்னரர் கிம்புருடர் முதலானவரும், ஒவ்வொரு பக்கங்களினின்று அரகர சிவசங்கர மகாதேவரென்று துதித்து நமஸ்கரிக்கவும், வேதங்கள் கோஷிக்கவும், ஸ்ரீ உமாதேவியாரோடு சாம்பவமூர்த்தியானவர் இரத்தின சிங்காதனத்தில், வீற்றிருக்குஞ்சமயத்தில் அகத்தியமுனிவர் உலோபாமுத்திரையோடு சன்னிதியிற்சென்று சாஷ்

டாங்கமாக நமஸ்காரஞ்செய்தெழுந்திருந்து அஞ்சலியஸ்தராய்நின்று பின் அனேகதோத்திரங்களை வீணையில்வைத்துக் கானம்பண்ணிக் கண்களிலானந்த பாஷ்பம்பெருக மனமுருகித் ததேகத்தியானியாய் நிற்குந்தருணத்தில் பரமசிவன் கடாக்ஷித்தருளி, அகத்தியமுனிவனே! நீ வேண்டியதை விளம்புவாயென்ன, அகத்தியமுனிவர்பத்தியோடுபணிந்து சுவாமி! தமிழிலக்கண முணரவும் இக்கயிலையிலிருந்து உமாதேவியாரோடு வீற்றிருக்கும் நின்றிருவோலகத்தை சதா தெரிசிக்கவும், எண்ணினேன். அவ்வாறருள்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துநிற்க, அச்சொற்கிரங்கி அவ்வாறே தமிழிலக்கணங்களைப் போதித்தருளி இவ்விலக்கணத்தைப் பக்குவமடைந்த மாணவருக்கு உபதேசித்து விர்த்திசெய்ய பூலோகத்திற்குச் செல்லுவாயென்று பரமசிவன் திருவாய்மலர்ந்து பின்னுஞ் சொல்லுவார். மாதவனே! விந்தகிரியானது மேருவுடன் பகைத்திறுமாந்து அண்டமுகட்டையளாவி சூரியன் சந்திரன் முதலாகிய கோள்கள் தங்கள் தங்கள் கதிகளில் செல்லவொட்டாமல் இடையூறியற்றி நிற்கின்றது. அதன் மன அகங்காரத்தையடக்கி அதற்குத் தென்றிசையில் செழித்தோங்கிய தண்டகாரணியத்தில் முனிவர்களுக்கிடுக்கண்புரியும் துஷ்டர்களாகிய வில்வலன் வாதாவியைக்கொன்று பின்பு தென்தேசத்திற் சிறந்தோங்கிய பொதியமலையைச் சேர்ந்து தவத்தைச் செய்திருப்பாயென்று கட்டளையிட அகஸ்தியர் மீளவும் வாழ்த்தி கர்த்தனே! தேவரீர் உமாதேவியாரோடு வீற்றிருக்குந் திருக்கோலத்தை இடைவிடாமற்றரிசிக்கும் வைபவத்தைவிட்டுப் பூவுலகத்திற்கு நான் எவ்வாறு செல்லுவேனென்று விண்ணப்பஞ்செய்தார். அப்போது பரமன் முனிவரை யருகழைத்து அருட்பார்வையளித்து மாதவனே நீ இப்போது தரிசிக்க விரும்பிய நமது சொரூபம் சகளவடிவமாகும். உண்மைச்சொரூபம் நிஷ்களவடிவமாகும். ஆதலின், அந்நிஷ்களவடிவை யுணரவேண்டின் மண்ணுலகத்தைச்சார்ந்து சித்தசுத்தியடைந்து யோகாப்பியாசம் பயின்று ஞானத்தைப் பெறுதல்வேண்டும். ஆதலின், நீ பூவுலகத்திற்சென்று தேவர்கள் போற்றுஞ் சிவதலம் பலவற்றினுஞ் சிறந்ததாயும், நாம் மனத்திலுவகையென்மேலுமுண்டாக வதிந்தருளுந் தலமாயும் உள்ள விலாசகாஞ்சியில் ஓரிலிங்கந் தாபித்துப் பூசித்தேத்திப் பின்பு பொதியமலையிற்றங்கி ஞானத்தால் நமதுண்மையுருவை யுடையக்கடவாய் என்று கட்டளையிட்டருளினர். அதுகேட்ட முனிவர் வணங்கி வாய்புதைத்துநின்று தேவரீர் திருவருட் பெருக்கினாற் பணித்த ஏவலை அத்திருவருள்கொண்டு முடிப்பேன் எனமீட்டும் வணங்கி கருணையங்கடலே! கடல்சூழ்ந்த பூவுலகத்தில் சிறந்தோங்கிய அவ்விலாசகாஞ்சியின் மான்மியத்தை திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்ன, அதுகேட்ட சிவபிரான் முனிவனே! நீ வினவிய தலத்தின் மகிமையை தணிகைமலையிலெழுந்தருளிய உமது பரமாசாரியனாகிய சுப்பிரமணியக்கடவுளினிடத் துணர்வாயென்று ஆக்ஞாபித்தனர். அதுகேட்ட அகத்தியன் உலோபாமுத்திரையுடன் பரமனை வணங்கி விடைபெற்று சிஷ்டவருக்கங்கள்சூழ கைலையைவிட்டு நீங்கிப்பூவுலகத்தை யடைந்தனர்.

திருக்கைலாயச்சருக்க முற்றிற்று.

உ

# அகத்தியன்யாத்திரைச்சருக்கம்.

இவ்வுலகத்தையடைந்த அகத்தியமுனிவர் உலோபாமுத்திரையோடும் கூர்மவரை திருக்கேதாரம் விருபாக்ஷம் மானதக்ஷேத்திரம் துவாரகை காளிந்தி முதலிய தலங்களைத் தரிசனஞ் செய்துகொண்டுவரும் வழியிலே காசிப் பதியைக்கண்டு கங்கையில் ஸ்நானஞ்செய்து வீதியை வலம்வந்து விசுவேசப் பெருமான் ஆலயத்தையடைந்து கண்களிலே நீராறொழுகப் பிரதக்ஷணஞ் செய்து துதித்துத் துண்டிவிநாயகன் விசாலாக்ஷியம்மை முதலிய மூர்த்திகளைத் தரிசித்து விசுவேசர் சந்நிதியையடைந்து திருமஞ்சனமாட்டி மலர்கொண்டருச்சித்தேத்திச் சிலநாள் கழித்துப் பரமசிவனை வணங்கி விந்தமலையையடைந்து அதன் நிலைமைகளை மதித்து வானத்தை யளாவிநிற்கும் ஓ விந்தமே! கேட்பாயாக. பரமனருளின்படிக்குப் பொதியவரையைச் சேர்ந்திருக்க வந்தனம். ஆதலால் உன் னெல்லையைக்கடக்க நீ சிறிது வழிகாட்டுகவென்று கூவிச் சொல்லுவதை விந்தகிரிகேட்டு நகைத்து சூரிய சந்திரர் முதலியோருக்குஞ் செல்ல வழிகொடாத யான் உனக்கஞ்சி வழிகொடுப்பேனோ! வந்த மார்க்கத்தைத் தேடியோடிப் போவாயென்று சொல்லியவோசை செவியிற் கேட்டமாத்திரத்தில் கோபஞ்சொலித்து நகைத்துப் பஞ்சாக்ஷரத்தை மனதில் தியானித்து, தனது குறிய கரத்தை அம்மலையின் உச்சியில் வைத்துப் பாதலத்தைச் சேரும்படிக்கழுத்திப் பின்பு தனது மனைவியோடும் முனிக்குழாங்கள்சூழ தண்டகாரணியத்தை யடைந்தனர். அந்த வனத்தின்கண்ணுள்ள மலைச்சாரலில் ரிஷிகளை இம்சை செய்துகொண்டிருக்குங் கொடியவராகிய வில்வலன் வாதாவி யிருவரும் அகத்தியர் வரவைக்கண்டு இந்த முனிவன் ஆதியிற் கடல்நீரையுண்டு தேவேந்திரனால் நம்குலத்தவரைக் கொல்லுவித்த பாதகனாகும். இவனை மடக்கி விருந்திட்டு இன்று இவன் பிராணனை யொழித்துப் பழியையுந் தீர்த்துக்கொள்ளலாமென்று யோசித்தவர்களாய்த் தம்பியாகிய வாதாவியை ஆட்டினுருவாக்கி, மூத்தவனாகிய வில்வலன் தபோதனர் வடிவுகொண்டு கும்பமுனிக்கெதிர்சென்று வணங்கி எளியேனாகிய தொண்டன்வசிக்கும் பன்னசாலை யிதோவிருக்கின்றது. அது பவித்திரமாகக் கிருபையுற்றெழுந்தருள்கவென்று மீட்டும் பணிந்துவேண்ட, அகத்தியமுனிவர் பாதகன்கொண்ட சூதையறியாமல் அவன்செய்யும் உபசாரத்திற் கிரங்கி அவன் பன்னசாலைக்கெழுந்தருள, உடனே பாதகன் தருப்பாசனத்தை விரித்து வீற்றிருக்கச்செய்து அருக்கியபாத்திய ஆசமனங்கொடுத்து கரங்களைக் கூப்பி அடியேன் கிருதார்த்தனாகும்படிப் போசனஞ்செய்து சேஷப்பிரசாதந்தந்து போவீரென்று கேட்டுக்கொள்ள அதற்கிரங்கி கும்பமுனிவர் சம்மதித்தனர். தட்சணம் பாதகனாகிய வில்வலன் அகமுக மலர்ந்தவனாக தடாகத்தில்மூழ்கி மடைப்பள்ளியை மெழுக்கிட்டு சன்னசம்பா அரிசியினாற் சாதஞ்சமைத்து அறுவகை ருசிபதார்த்தங்களமைத்துத் தம்பியாகிய ஆட்டைத் துரத்திப்பிடித்துக் குறுமுனிவனெதிரில் இருகூறாக வாளினாற் கண்டித்துத் தோலைப்போக்கி உறுப்புகளை வெவ்வேறாக்கி மாமிசங்களை அரிந்து

சேர்த்துச் சம்பாரங்கூட்டி பொரியல் குழம்பு வறல் சுண்டல் விதங்களாகச் சமைத்துப் பின்பு அகத்தியமுனிவரை யழைத்துப்போய் பீடத்திலேற்றி வாழையிலையைப்பரப்பி அன்னம்படைத்து முறைசொல்லிய சுறிவகைகளை இலைமுற்றிலும் நிரப்பி அமுதுசெய்தருள்கவென்று வேண்ட அகத்திய முனிவர் மனங்களித்துப் பூர்த்தியாகவுண்டு கைகால் சுத்திசெய்து ஒரிடத்தி லிருக்குந்தருணத்தில், இதுதான் சமயமென்றெண்ணிச் சண்டாளனாகிய வில்வலன் முன்னம் பிரமதேவன் அனுக்கிரகஞ்செய்த மந்திரத்தை யுச்சரித்து அப்பா தம்பி வாதாவி! சீக்கிரத்தில் வெளிவருவாயென்றழைத்த சத்தத்தைக் கேட்டு முனிவன் வயிற்றில் ஆட்டினுருவம்பெற்று, அண்ணா! இதோ வந்து விட்டேனென்று சொல்வதை அகத்தியமுனிவர்கேட்டு, இது கொடிய இராக்ஷதர் வஞ்சகமென்றறிந்து திருநீற்றைக் கரத்திலள்ளி வாதாவி சீரணமி யாகக் கடவையென்று பரமனை நினைந்து வயிற்றைத் தடவியபோது உதராக் கினிகொளுத்த அப்பாதகன் மலமாயவிட்டான். இக்காரணங்களை வில்வலன் தெரிந்துகோபித்துப் பழயவடிவுகொண்டு தண்டமொன்றெடுத்து முனிவரை மோதிக் கொல்லவருவதை அகத்தியர்கண்டு தருப்பையைக்கிள்ளிப் பாசுபத மந்திரத்தை யுச்சரித்துப் பிரயோகித்தமாத்திரத்தில் தம்பியைப்போலவே வில்வலனுஞ் சாம்பலாய் விழுந்தான். பின்பு அகத்தியர் கோபந்தெளிந்து அவ்வனத்தைவிட்டு உலோபாமுத்திரையோடும் முனிவர் கூட்டத்தோடும் ஸ்ரீசைலம் திருவேங்கடம் திருக்காளத்தி திருவாலங்காடு முதலிய தலங்க ளைத் தரிசனஞ்செய்துகொண்டுவரும் வழியிலே சீபூரணக்கிரியாகிய தணிகை மலை எதிர்ப்பட ஆராமையால் நமஸ்கரித்துச் சரவணப் பொய்கையில் ஸ்நா னஞ்செய்து பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்து அழகிய திருநீறுதரித்து பசுவைக் கண்டு பாய்ந்தோடுங் கன்றுபோல சுப்பிரமணியக்கடவுள் சந்நிதியை விரைந் தடைந்து, வீரவாகுதேவரால் முருகக்கடவுள் வீற்றிருக்குஞ் சமயத்தையுணர் ந்து கரங்கேயினையடுத்து, நெஞ்சநெக்குருக, கண்களி லானந்தபாஷ்பஞ்சொ ரிய, அட்டாங்க பஞ்சாங்கத்துடன் வணங்கிப் பலவாறாகத்துதித்து, அஞ்சலி யஸ்தராய் நிற்கும் முனிவரை சுப்பிரமணியக்கடவுள் கடாக்ஷித்தருளி யரு களைந்து, அகத்தியமுனிவனே, நீ நினைத்துவந்த காரியத்தைத் தடையற விண்ணப்பஞ் செய்துகொள்ளலாமென்று சொல்லவே, அகத்தியர், சுவாமி! உம்முடைய திருவருளினால் சகல புருஷார்த்தங்களையும் பெற்றிருக்கின்றே னாயினும், தமது சன்னிதானத்தில் விண்ணப்பஞ் செய்துகொள்வதாவது, சிவதலம் பலவற்றினுஞ் சிறந்தோங்கிய விலாசகாஞ்சியின் மான்மியத்தை ஸ்ரீ கைலாசவாசராகிய சிவபிரான் உமதிடத்திற் சென்றுணரும்படிக்கு ஆக்ஞா பித்தனர். அதை அடியேனுக் கனுக்கிரகஞ்செய்து திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமென்றுகேட்க சுப்பிரமணியக்கடவுள் அப்பதியின் மான்மியத்தைச் செவிக்கமுதாகத் திருவாய்மலர்ந்தருளினரென்று நைமிசாரணிய முனிவர்க ளுக்குச் சூதபுராணிகர் கூறினர்.

அகத்தியன்யாத்திரைச்சருக்கமுற்றிற்று.

உ

# சீமாயூரச்சருக்கம்.

சிவஞான தபோதனராகிய நைமிசாரணிய முனிவர்கள் பொன்போன்ற சடையையுடைய சூதபுராணிகர் திருவடிகளில் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து சுவாமி தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய கதைகளைச் சிரவணானந்தமாகக்கேட்டு மனக்களிப்படைந்தோம். அதினும் உமாதேவியார் மயிலுருவாகி அந்தத் தலத்தையடைந்து தனது சுயவடிவை யடைந்தாளென்றுரைத்தருளினீர். அதை விரித்துச் சொல்லவேண்டுமென்று முனிவர்கள்கேட்க சூத முனிவர் சொல்லுவதாயினார். கேளுங்கள் முனிவர்களே! நூறு கற்பத்திற்கு முன் திருக்கயிலாயமாகிய வெஃளியங்கிரியில் இரத்நசிங்காதனத்தில் உமாதேவியாரோடு பரமசிவன் எழுந்தருளியிருந்தார். அப்போது அவரது சேவையைக்காண அரிப்பிரமாதி தேவர்களும் முனிவர் சித்தர் கருடர் காந்தருவர் முதலானவரும்வந்து அவரது திருவோலக்கத்தைக்கண்டு ஒவ்வொருபக்கங்களினின்று அரகரசிவசிவ கங்காதர சங்கர மகாதேவவென்று துதித்து நமஸ்கரிக்க தும்புருநாரதர் யாழிசைக்க வாணசூரன் குடமுழாவாசிக்க யானுகம்பன் சங்கொலிமுழக்க சிலர் ஆனந்தக்கூத்தாட சிலர் பரமன் புகழைப்பாட இருக்குந்தருணத்தில், உமாதேவியாரோடு பரமசிவன் உற்சாகமாக வுத்தியான வனத்திற்குச்செல்ல உத்தேசித்து அம்மலையினருகில் எக்காலத்தும் தேவர் மனிதர் முதலிய எவருங்கண்டு களித்துத் தம் போகங்களை யிகழ்ந்து வெறுக்கச்செய்யும் அழகியமலர்கள் பொலிந்து விளங்கும் அனேகவிருட்சங்களும் அல்லி தாமரை முதலிய புட்பங்களில் நிறைந்துள்ள தடாகங்களும் பலவித மிருகங்களும் நானாவிதபட்சி சாலங்களும் ஐம்புலன்களையுமொடுக்கி உணவொழித்து காற்றையேபுசிக்குங் கடுவிரதங்கொண்ட முனிவர்களுமுடைய உத்தியானவனத்திற்குத்தனது சேவைகாணவந்த தேவர் முனிவர்கள் சூழ நந்திதேவர் முன்செல்ல அனேக வைபவத்துடன் உமாதேவியாரோடு வெள்விடையின்மீதேறிவந்து அங்குண்டாகிய விநோத வைபவங்களையெல்லாம் உமாதேவிக்குக் காண்பித்து அவ்விடத்தில் பிரமனாலும் புகழ்ந்து சொல்லுதற்கரிய இரத்தினமயமான ஒப்பற்ற ஒரு மண்டபத்தைச்சார்ந்து அதன் மத்தியிலமைத்துள்ள கேளிதற்பத்தின்மீது இலக்குமியும் சரச்சுவதியும் உபசாரஞ்செய்ய உமையம்மையோடு பரமசிவன் மகிழ்கூர்ந்து வீற்றிருந்தனர். அப்பொழுது பார்வதியார் பரமேசனை வணங்கி சுவாமி எவ்விடத்திலுங் கண்டறியாத மலர்களும் மிருகங்களும் பட்சிக்கூட்டங்களும் தடாகங்களும் இந்த வனத்தில் கண்டவர்களுடைய கண்ணையும் மனத்தையும் இரசிக்கத்தக்கதாய் விளங்குகின்றது யாதோவென்றுள்ளத்தில் ஐயுற்றேன், அது ஒழிய அடியாளுக்குத் திருவாய்மலர்ந்தருள விரும்பினேன் என விண்ணப்பஞ் செய்து கொண்டனள். கயிலாசவாசராகிய கடவுள் அவ்வினாவிற்கு விடைதராது தநேகத்தியானியாய் யோகஞ் சாதித்திருந்தனர். அஃதறிந்த உமாதேவியார் மீட்டும் விடையின்மீதேறி அவ்வனச்சிறப்பைக் காணச் சென்றனள். அவ்விடத்தில் மலர்கள் நிறைந்து மிக்க உன்னதமாய்விளங்கும் தடாகக்கரை

ழில், இந்திரன்முன்னர் அரம்பையர் நடிப்பதுபோல அழகிய மயிலானது சிறகைவிரித்தாடும் நடனத்தைச் சந்தோஷமாகப் பல நாழிகை செல்லப் பார்த்திருந்தனள். அதன் மருங்கில் பொன்போலும் வரிகளையுடைய ஓர் புலி விளையாடல் செய்துகொண்டிருப்பதை விடையானது மனக்களிப்புடன் கண்டு சந்தோஷித்திருந்தது. அப்போது கயிலையாளி யோகம்நீங்கி, அருகிருந்த கிரிராசபுத்திரியையும் வெள்விடையையுங் காணாமையால் நிகழ்ந்ததை யுணர்ந்து கோபங்கொண்டு தேவர்களோடு கைலையையடைந்து சிம்மாசனத்தில் வீற்றிருந்தனர். பின்பு தேவதேவன் நீங்கியதால் அவ்வனம் காமத்தால் தவத்தையிழந்த முனிவரைப்போலும் மங்கலநாணிழந்த மங்கையரைப்போலும் பொலிவிழந்திருந்தது. அதைக்கண்ட இருவரும் சங்கைகொண்டு பரமசிவன் எழுந்தருளிய விடத்தைச்சார்ந்து அவர் அங்கில்லாமையைக்கண்டு பயந்து கைலையையடைந்து சிவபிரானைப்பணிந்து துதித்துநிற்க அவ்விருவரையும் நோக்கி, நீவிர் என்னைவிட்டுநீங்கி வனத்திற்சென்று மயிலினது நடனத்தையும் புலியினது விளையாட்டையும்நோக்கியிருந்தீராதலால், பூலோகத்தில் மயிலாகவும் புலியாகவுஞ்சென்று அப்பாவத்தைத் தீர்த்துக்கொள்ளுவீர்களென்று கட்டளையிடுதலும், இருவரும் மிகவும் பயந்து நடுங்கி திருவடிகளில்வீழ்ந்து பணிந்து கிருபாசமுத்திரமே! நாயிற்கடையேம் அறிவிலாது செய்த பிழையைப் பொறுத்தருளி இந்தச்சாபம் நீங்கத் திருவருள்புரிவீராக என்று பிரார்த்திக்க பெருமான் திருவுளமிரங்கி நீவிர் சென்று பூவுலகத்தில் பிரளயகாலத்தினுமழியாத காஞ்சிமாநகரத்திற்கு வாயுதிக்கில் ஐந்துகுரோசதூரத்தில் கைலையினும் மேலாகிவிளங்குந் தலமொன்றுண்டு. அதற்கு மேற்குத்திசையில் பஞ்சேச்சுரனெழுந்தருளியிருக்கும் காவிரிப்பாகை, வடக்குத்திசையில் புன்னாகேச்சுரனெழுந்தருளியிருக்கும் நென்மலி, கிழக்குத் திசையில் மணிகண்டேச்சுரனெழுந்தருளியிருக்கும் திருமாற்பேறு, தென்கீழ்த்திசையில் வராகேச்சுரனெழுந்தருளியிருக்கும் தாமல் ஆகிய இந்தத் தலங்களின் மத்தியில் ஒரு திவ்விய திருநகரமுள்ளது. அது தேவர் முனிவர் புகழத்தக்கது. அந்தத் தலத்தில் என்னைப் பூசித்தால் சிலநாளைக்குள் இப்பாவம் நீங்கும் என்று திருவாய்மலர்ந்தருளினார். பின்பு உமாதேவியார் மயிலுருவடைந்து பூர்வ உணர்ச்சியின்றிப் பூமியில்வசிக்கும் பறவையைப்போல தேன்றுளிக்கும் மலர்கணிறைந்த சோலைகள்சூழும் அழகிய அந்த நகரைச்சேர்ந்து அங்குள்ள ஆறு மலை வனம் விருக்ஷம் மதில் கோபுரம் மண்டபம் கொடி முதலிய இடங்களிற் சஞ்சரித்து வயல்களிலுள்ள நெல் புல் முதலியவையுண்டு அழகிய மாளிகையின்மீது தங்கி பறவைகளுடன் ஆகாயத்திற்பறந்து வீதிகளில் உலாவி சிலநாள்கழித்துப் பின்பு ஒருநாள் செந்தாமரை நிறைந்த சிவகங்கையையடைந்து அதிலுள்ள சலத்தையுண்டது. உடனே பூர்வ உணர்ச்சிவந்தது. மயில் சிவபிரான்தந்த சாபத்தை நினைந்து சிவலிங்கமிருக்குந் தானத்தைத்தேடிக் கண்டு மனத்திலன்புகொண்டு திருமஞ்சனமாட்டி அருச்சித்தேத்தி திருவடியில்வணங்கி நிற்கும்போது பரமசிவனருளால் மயிலுருவம் நீங்கி மிக்க சவுந்தரமுடைய பெண்வடிவம் வந்தது. உடனே நெஞ்சிலன்பு

பெருக விழிகளில் நீர்சொரிய கரங்களைச் சிரமேற்குவித்து சோதிலிங்கப் பெருமானைப் பலமுறை பணிந்தெழுந்து ஐந்தெழுத்தையும் அகலாதுச்சரித்துப் பலபலவிதமாய் துதித்து அன்புமயமாய்நிற்க, சிவபெருமான் அத்துதியைத் திருச்செவியிலேற்றருளி மிகவுமகிழ்ந்து மான்மழு திரிநேத்திரம் காளகண்டத்துடன் இடபவாகனத்திலெழுந்தருளிவந்து உமையம்மைகளிக்கத் திருவருள்பாலித்தது மலைமகளே! உன் துதியைகேட்டு உள்ளங்களித்தேன். இனி நீ வேண்டும்வரம் யாது என வினவியவழி, எளியாளது மயிலுருவை யொழித்ததுபோல் இத்தலத்தில் உன்னை யருச்சிக்கும் அடியாரது ஆணவப் பிணியை யகற்றவும், இத்தலம் காஞ்சியை யடுத்திருத்தலின் விலாசகாஞ்சி யெனப் பெயருண்டாகவும் விரும்பினேன் என வேண்டிக்கொள்ள, பெருமான் நீ நினைத்தவண்ணம் அருள்செய்தேன். அன்றியும், மயிலுருவகன்றநின் வடிவம் மிகக வனப்புடன் இருத்தலால், உனக்கு சவுந்தரி என்று பெயரையுமளித்தோமென்றுரைத்து அம்மையார் நீக்கிய மயிலுருவத்தைக் கடைக்கண் சாத்தி சோதிலிங்கத்தில் மறைந்தருளினார். பின்பு அன்பரது துயரையகற்றும் அம்மையார் களிகூர்ந்து அச்சிவலிங்கத்தின் இடப்பக்கத்தில் வதிந்திருந்தனள். இப்பால் பரமசிவன் கிருபாவீட்சணியத்தால் உமையம்மையார் நீக்கிய மயிலின் உடலில் பாக்கு தெங்கு ஈந்து பனை தாளிப்பனை ஆகிய ஐந்து தருககள் உண்டாயின அந்தத் தருவின் நிழலில் சவுந்தரவல்லிநாயகியாரும மாயூரநாதேசசுரரும் வீற்றிருந்து பதிசெய்யும் அடியவருக் கனுக்கிரகஞ் செயதிருந்தனா. உமாதேவி மயிலாகப்பூசித்த காரணத்தால் அச்சிவபிரானை மாயூரநாதனென்றும் பஞ்சதருக்களாகிய பனைகள்சூழ்ந்த காரணத்தால் அப்பதியைப் பனைசையம்பதியென்றும் உலகர் கூறுவரென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினர்.

சீமாயூரச்சருக்கமுற்றிற்று.

உ

## திருப்புலிச்சருக்கம்.

சைவாசாரநல்லியர்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் சூதபுராணிகரை மீட்டும் வணங்கி உமையம்மை மயிலுருவாகப்பூசித்த கதையைகேட்டு மனங் களிகூர்ந்தோம். இப்பால் இடபாக்தி புலிவடிவாகிப்பூசித்த கதையையும் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்த முனிவர்களுக்குச் சூதமுனிவர் சொல்லுவதாயினர். கேளுங்கள் முனிவர்களே! திருக்கைலையிலே சிவபெருமான் இடபாநதிக்குத் தந்தருளிய சாபத்தினால் புலிவடிவாகிப் பூதலத்தையடைந்து காடு மலை பாலை நெய்தல் மருதம் முதலிய விடங்களிற் சஞ்சரித்து ஆங்காங்குள்ள மிருகம் பட்சி மனிதர் முதலியயரவரையுங்கொன்று அதம்செய்தழித்துப் பலநாள் திரிந்துகொண்டிருக்கும்போது பரமசிவனருளிய சாபம் நீங்குங்காலம் சமீபித்ததால், மாதேவியார் பூசித்த சோதிலிங்கப்பெருமானெழுந்தருளிய வாசனைவீசும்.மலர்கணிறைநத

பொழிலாற்சூழப்பட்ட விலாசகாஞ்சியை யோர்தினமடைந்தது. அடைந்தவுடனே பரிசவேதியிற்பட்ட இரும்பானது அவ்வுருவமாறிப் பொன்னுவது போல, முன்னுண்டாயிருந்த துற்குணங்கள்மாறி கல்வி அறிவு ஒழுக்கம் பொறை சாந்தம் கருணை அன்பு முதலிய நற்குணங்களைப் பொருந்தியது. பின்பு அந்தப் புலி இந்தவிடத்திலுள்ள விம்மிதம் யாதோவென்று தேடிப் பார்க்கும்போது ஓரிடத்தில் குரங்குகள் கூழாங்கல்லை யிலிங்கமாகவைத்துப் பூசைசெய்வதையும், ஓரிடத்தில் தடாகத்திலுள்ள நீரை யாளிகள் தங்கள் துதிக்கையால் உறிந்து யானைகளுக்கு ஊட்டுவதையும், ஓரிடத்தில் பெரிய புலிகள் தங்கள்முலைப்பாலை மான்களுக்கருத்தி பசிபோக்குவதையும், ஓரிடத்தில் பச்சை ஒணான் பசிக்கு மயில் இரை தேடிக்கொடுப்பதையும், அந்த மயிலுக்கு பாம்பு தன்படத்தால் நிழல்செய்வதையும், அந்தப்பாம்பை கீரிப்பிள்ளை பாதுகாப்பதையும், ஓரிடத்தில் கிள்ளையின்குஞ்சுகள் சூரியகிரணத்தால் மெலிவதை ராசாளிகண்டு தன்சிறகைவிரித்து நிழல்செய்வதையும், அந்தராசாளியின் சிறகிற்கு சங்கில்நீரைமொண்டு பூனை வாயினுற் றெளிப்பதையுங்கண்டு உள்ளத்தில் அதிகவியப்படைந்து இவ்விடத்தில் இன்னும் என்ன அதிசயமிருக்கிறது பார்ப்போமென்று குறித்துப்பார்க்குங்கால், பனைவிருட்சத்தினடியிலே சொல்லுதற்கரிய சோதிலிங்கப்பெருமான் இருக்கப் புலி கண்டது. கண்டவுடனே அடியற்றபனைபோல் பூமியில்விழுந்தெழுந்து, ஆனந்த வெள்ளத்தில் மூழ்கி, கண்களில் ஆனந்தவெள்ளஞ்சொரிய சரீரம்புளகாங்கிதமாய், தேவதேவனைத் திருமஞ்சனமாட்டநினைந்து, சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து, அந்நீரைக்கொண்டு அபிடேகஞ்செய்து வாசனைமிகுந்த மலர்களால் அருச்சித்து, மதுரமிகுந்த கனிவர்க்கங்களைப் பறித்து, சுவாமி திருமுன்னர்வைத்து நிவேதித்தது. பின்பு அரும்பானது வண்டுகள்காலாற்கிண்ட அப்பெயர்மாறி மலரெனும் பெயர்வந்ததுபோல பரமசிவன் அருளுணைக்கால் புலியுருவகன்று இடபவுருவம்வந்தது. உடனே ஆநந்தங்கொண்டு பரவசமடைந்து நின்றது. அதுகண்டசிவபிரான் நந்தியின்மீது கருணைகூர்ந்து மான் மழு திரிநேத்திரம் காளகண்டம் சதுர்ப்புஜத்தோடு சிவலிங்கத்தினின்றுந்தோன்றி உமாதேவியார் இடப்பாகத்தில்விளங்க, பரமசிவன் பிரத்தியட்சமாகி, நந்தியே! நீ வேண்டும் வரமியாதென்றவுடனே நந்தியெழுந்து சாஷ்டாங்கமாகவிழுந்து நமஸ்கரித்துத் தற்பரனைப் பலவாறுகத்துதித்து, ஐயனே! யெனது சாபப்பிணியின்றொழிந்தது. தேவரீரருளால் ஒருகுறைவுமில்லை; ஆயினும் உனது திருவடியைவிட்டு நீங்காதிருக்கும் வர மெனக்கீதல்வேண்டுமென்று விண்ணப்பிக்க, தேவாதிதேவனுகிய சோதிலிங்கப்பெருமான் அகமகிழ்ந்து அங்ஙனமேயாருகவென்றருளிச்செய்து, பின்னுஞ்சொல்லுவார். இந்தத்தலத்தைச் சார்ந்தவர்கள் இட்டசித்திகளை எளிதிற்பெறுவதால் இதை சிவதலமென்று தேவர்கள் சொல்லுவார்கள். அதல்லாமலும், அம்பிகை மயிலுருவாய் என்னைப் பூசித்ததால், உலகத்தவர் மாயூரேசனென்றுரைப்பார்கள். நீ புலியாயிருந்து பூசித்ததால் இன்றுமுதல் எனக்கு திருப்புலீசனென்று பெயர்வழங்குமென்று திருவாய்மலர்ந்து சிவலிங்கத்தில் மறைந்தருளினுரென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினுர்.

திருப்புலிச்சருக்கமுற்றிற்று.

உ

# திருக்காளத்திச்சருக்கம்.

---

சிவஞானச செல்வர்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் சூதபுராணிகரை மீட்டும் வணங்கி இடபதேவன் புலியுருவாகிப் பூசித்தகதையைக்கேட்டு மனம் குதுகலமடைந்தோம். இப்பால் காளத்திநாதன் சரித்திரத்தையும் தேவரீர் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பிரார்த்தித்த முனிவர்களுக்கு சூத முனிவர் சொல்லுவதாயினார். கேளுங்கள் முனிவர்களே! பாண்டி நாட்டிலே இராமேச்சுரமென்றொரு நகரமுண்டு, அதுதன்னை அடுத்தவருடைய பாவப பெருக்கை தீப்பட்ட பஞ்சுபோலச்சிதைக்கும் சிரேட்டமுள்ளது என்று சூதமுனிவர் திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட முனிவர்கள் மனத்தில் ஆசங்கைகொண்டவராகிப் பலதரம் அஷ்டாங்க சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தெழுந்து நின்று, 'ஐயனே! நீர் சொல்லிய நகரத்திற்கு இராமன்பெயரும் ஈசன்பெயரும் கலந்துவரவேண்டிய காரணம்என்ன? அதை அடியேங்கட்குத் தெரிவிக்கவேண்டுமென்று அஞ்சலித்து நின்றசமயத்தில் சுசீலமுடைய சூத முனிவர் சொல்லத்தொடங்கினார். அயோத்திமாநகரை யரசாட்சிசெய்யும் தசரதகுமாரனாகிய ஸ்ரீராமன் தனது சிறியதாயார்சொல்லை வேதவாக்கியமாக மதித்துத் தம்மனைவியோடும் தன்தம்பியுடனும் காட்டிற்சென்று சஞ்சரிக்கும் நாட்களில், அரக்கனாகிய இராவணன் கள்ளத்தனமாய் சீதையைக்கொண்டு போய் இலங்கையில் அடைதலும், இராமலட்சுமணர் சீதையைத்தேடி அலைன்று மனதுடன்வருந்திக் காடெங்கணுந்தேடிக் காணாதவர்களாய் சுக்கிரீவனைச் சிநேகங்கொண்டு அவன் தமையனாகிய வாலியோடு யுத்தஞ்செய்து வெற்றியடைய வன்மையில்லாது ஒளித்திருந்து ஒருகணை அவன்மேற் படும்படியெய்து அவ்வாலியைக்கொன்ற வானரசேனைகளால் கடலில்அணைகட்டி, இலங்கைக்குப்போய் இராவணனையுங்கொன்று சீதையைஅழைத்துக்கொண்டு அயோத்தியாபுரிக்குச் செல்கின்றபோது, அந்தரமார்க்கத்திற்செல்லும் தனது விமானம் செல்லாது நின்றுவிட்டது. அப்போது இராகவன் மனக்கவலை கொண்டு தனது குலாசாரியாராகிய வசிட்டமுனிவரது உபயதிருவடிகளைச் சிந்திக்க சடைமுடி முப்புரிநூல் தண்டுகமண்டலந்தாங்கி அரசனுக்கெதிரே வந்தார். அந்த ஆசிரியனைக்கண்ட இராமன், அவர் திருவடியில் வணங்கி ஐயனே! எனது விமானம் செல்லாதிருக்குங் காரணத்தை அடியேனுக்குத் தெரிவித்து மேல்நடப்பதற்கு ஓர் சூட்சியையும் சொல்லவேண்டுமென்று வேண்ட, திரிகாலக்ஞானியாகிய வசிட்டமுனிவர் சொல்லுவார். இராமனே! வெகுசாதுரந்தரனாகிய இராவணனைக்கொன்றதனால் உனக்கு பிரமகத்தி பாவம்வந்தது. அது சிவலிங்கப்பிரதிட்டை செய்தாலல்லது ஒழியாது; ஆகையால், இவ்விடத்தில் நீ ஒரு சிவலிங்கப்பிரதிட்டைசெய்து வழிபட்டு, பிறகு உனது நகரத்திற்குப் போவாயென்று கட்டளையிட இராமமூர்த்தி விமானத்தோடு பூமியிலிறங்கி அவ்விடத்து மனமகிட்சியுடன் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டைசெய்து பூசித்து சித்தசஞ்சலத்தை யொழித்தனன். அந்தக் கா

ளத்திஞல் இராமேச்சுரமென்று விளங்கியது. என்றுகூறிய சூதபுராணிகளை மீட்டும்பணிந்து, ஐயனே! நீர்கூறியதுகேட்டு ஐயந்தெளிந்தோம்; மேல் நடக்குங் கதையைக்கேட்க விரும்புகிறோமென்ற முனிவரைப்பார்த்து சூதர் சொல்லுகின்றார், கேளும் முனிசிரேட்டரே! அந்த நகரத்திலே ஆதிசைவப் பிராமணகுலத்திலவதரித்து நான்குவேதம் ஆறுசாத்திரம் முதலிய கலைகளைப் பயின்று சந்திரசேகரக்கடவுளை சதா அருச்சிக்கும் நியமம்பூண்டு அறிவு அருள் அடக்கம் சிவபத்தி முதலியவைகளே ஒருவடிவெடுத்தாற்போன்ற சொரூபாகரனென்னும் வேதியன் ஒருவனிருந்தான். அவன் கல்வி அறிவு ஒழுக்கத்தோடு நற்குண நற்செய்கையமைந்த சுசீலையென்னும் மனைவியுடன் கூடி இல்லறதருமங்குறையாது செய்துவாழ்ந்திருக்குநாளில், நமக்குமுத்திவழியைக்காட்டுதற்குப் புத்திரனில்லையேயென்று வருந்தித் துயரடைந்த மனமுடையவர்களாய் அளவிறந்ததிரவியம் ஆடை ஆபரணமுதலிய பொருள்களிருந்தும் என்னத்திற்கென்று தங்களுள்ளத்தில் வெறுப்புடையவர்களாகிப் பரமசிவனைச் சிந்தித்திருந்தனர். அந்தச் சமயத்தில் மிக்க தரித்திரமுடைய ஒருவனுக்கெதிரில் பணப்புதையல் கிடைத்ததுபோல குற்றமற்ற அகண்டானந்தனென்னும் ஓர் முனிவர் அவன்வீட்டிற் கெழுந்தருளினர். அடியவர் பத்தியிற்சிறந்த சுதிபதிகளிருவரும் அவரையெதிர்ப்பட்டுப் பலமுறை பணிந்தெழுந்து ஆதனத்திலிருத்தி ஐயனே! அடியேங்களது சிறுகுடிலுக்கு நீர் எழுந்தருள நாங்கள் என்ன தவஞ்செய்தோமோ என்று உபசாரஞ்செய்து தங்கள்குறையை விண்ணப்பஞ் செய்துகொண்டனர். அகண்டானந்தர் அன்பனே! சிவஸ்தலங்களிற் சிறந்தோங்கிய தென்கயிலாயத்தி லெழுந்தருளிய காளத்திநாதனை அன்போடு அருச்சித்தவர்களுக்கு இஷ்டகாமியங்களெல்லாம் எளிதிலடையக்கூடும். அத்தலத்திலே சித்திபெற்றோர் பிரமதேவர் சிலந்தி யானை பாம்பு கன்னியரிருவர் நக்கீரதேவர் சிவகோசரியார் வசிட்டமுனிவர் அகத்தியமுனிவர் கண்ணப்ப நாயஞர் முதலாக அளவிறந்தோருண்டு ஆதலால் நீவிர் வருடந்தோறும் அத்தலத்தையடைந்து மாசிமாதம் வரும் சிவராத்திரி தினத்தில் நாகலிங்கப்பெருமானைப் பூசைசெய்வீராயின் உங்கள் மனோபீஷ்டம் நிறைவேறுமென் றுரைத்தருளினர். அதுகேட்ட மறையவன், மனக்களிப்போடு அந்தவார்த்தையை வேதவாக்கியமாகக்கொண்டு வருடந்தோறுந் தவருது தானும், தன் பத்தினியுமாகத் தென்கயிலையையடைந்து சிவராத்திரியில் நாகலிங்கப்பெருமானை அருச்சித்துவர, சிலநாளைக்குப்பின் பரமபதியாகிய சிவபெருமான் கருணையினுல் தன்பத்தினி கருப்பமடைந்து பத்துமாதமும் பூரணமானபோது சிவராத்திரிதினம் சமீபித்தது. உடனே சொரூபாகரன் தன்மனைவியோடு தென்கயிலைக்குச்செல்லப் பிரயாணப்பட்டு, குற்றாலம் நெல்வேலி திரிசிரபுரம் ஆவடுதுறை கடவூர் ஆரூர் மறைக்காடு சீர்காழி விருத்தகிரி சிதம்பரம் ஒத்தூர்காஞ்சி முதலிய தலங்களை வணங்கி தாமல் என்னுந் தலத்தையடைந்து அங்கெழுந்தருளிய வராகேசனைத்தரிசித்துப்பரவி, புறத்தேவந்து வீதியிலுள்ளவரைக்கண்டுபெருங்கருணை வள்ளலாகிய சிவபெருமானமர்ந்தருளுந் தலம் எங்கே உள்ளதென்று வினவ; அவர் சொல்லுவாராயினர். பிராமணோத்தமனே! மூன்றுகடிகை தூரத்தில்

திருப்பனைசைப்பதியென்றொரு தலமுண்டு. அதில்வழிமார்க்கந் தவறியாவது ஒருவனடைந்தால், அஷ்டமாசித்தியையும் அடைவானென்று சுருதிகூறுகின்றது, அவ்விடம்சென்று உன்கருத்தை முடித்துக்கொள்ளக் கடவையென்றனர். கேட்ட வேதியன் அவரிடம் விடைபெற்றுப் பனைசையம்பதியை யடைந்து பஞ்சதாலவிருட்சத்தின் நீழலில் அம்பிகை மயிலுருவாய்ப் பூசித்த மாயூரநாதனைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தெழுந்து அபிடேகம்அருச்சனை ஆராதனை முதலியவை முடித்து அவ்வாலயத்தைவிட்டு வெளியேவந்து வடக்குத்திசையில் ஒரு அம்புவிசை தூரத்தில் தங்கியிருந்தனர். அப்போதுசூரியன் அஸ்தமனமாயினான்; எங்கும் இருள்நிறைந்தது. அவ்விரவில்சசிலையென்னும் மாதானவள் கருப்பவேதனை மேலிட்டு அகிலலோகநாயகனாகிய சிவபெருமானருளினால் ஓர் ஆண்மகவைப்பெற்று சந்தோஷித்தனள். பின்பு சூரியனுதையமாயினான். அதைக்கண்டவேதியன் மனங்கலிகொள்ளாது நமதுவிரதத்திற்குப் பங்கம்வந்ததே யென்று சிந்தித்து மெய்மறந்து நிற்கும்போது சீகாளத்தியென்று பெயர்பெற்று விளங்கும் திவ்வியதலத்திலே திருவருளையே திருமேனியாகக்கொண்டு வீற்றிருக்கும் சிவபெருமான் அவ்வந்தணனது சிவபுண்ணிய முதிர்ச்சியைநோக்கி ஆட்கொண்டருளத் திருவுளங்கொண்டு சிகழிகை திரிபுண்டரம் எக்ஞோபவீதம் உருத்திராக்ஷகண்டிகை முதலிய சின்னங்கள்விளங்க வேதியர் திருவுருவந்தாங்கி எதிரிலெழுந்தருளினார். அவரைக்கண்ட சொருபாகரன் அடிபணிந்து ஆதனத்திலிருத்தி தனது மனக்குறையைச்சொல்லித் துக்கிக்க வேதமூர்த்தி திருவுளமிரங்கி அன்பனே நீ கவலைகொள்ளற்க மனக்காரணமேயன்றி இடங்காரணமல்ல ஆபத்திற்குப் பாவமில்லையென்று அறிஞர்கூறக் கேட்டறியாயாவென்று முன்னம்நடத்திய அடியார்களின் சரிதங்களைக்கூறி இந்த க்ஷேத்திரம் காஞ்சியென்னும் வாக்கியத்தில் எழுத்து விசேடத்தால் விலாசகாஞ்சி யென்னும் சிறப்பினையடைந்தது. ஆகையால் இவ்விடத்தில் ஒரு சிவலிங்கப் பிரதிட்டைசெய்து இந்தச் சிவராத்திரி தினத்தில் விதிப்படி பூசைசெய்வாயாகில் சிவபெருமான் கிருபைகூர்ந்து காட்சிகொடுத்தருளுவார் இது காளத்திநாதன் கட்டளையெயென உணரக்கடவாயென்றுசொல்லி மறைந்தருளினார். வேதியர் திசைகளைநோக்கிப் பெருமானைக்காணாமையால் பெண்ணே! இங்கே மறையவராய் வந்தவர் இறையவராகு மென்றுசொல்லி, இத்தலத்திலே நம்மை யாட்கொள்ளும் காளத்தி நாதரே வேதியராய் நணுகியது சாலநன்று நன்று என வியந்தும், அந்தோ முதல்வன் அணுகப்பெற்றும் முத்தியின்பம் பெறாமல் மணிபெற்றிழந்த வறிஞனையும் அமுதம்பெற்றிழந்த அறிவிலாதவனையும் நிகர்த்தோமேயென்று என்று துன்புற்றும் மயங்கிநின்று, பின்பு இத்தலம்மிக்கசிறப்பினையுடையதென்று அருட்பெருமானே விளக்கி யருளப்பெற்றோம் நமக்கு என்ன குறையெனத் தெளிந்து பாலி நதிக்கரையில், கிழக்கு முகமாகச் சிவலிங்கப் பெருமானையும், தெற்குமுகமாக ஞானப் பூங்கோதையையும் சிவபெருமானுரைத்தபடி பிரதிட்டைசெய்தனன் உடனே சூரியனும் அஸ்தமயமாயினான் அதன்பின்னர் பாலிநதியிலே ஸ்நானஞ் செய்து திருவெண்ணீறணிந்து உருத்திராக்கவடமணிந்து பஞ்சாக்ஷரங்களை யுச்சரித்துச்

சந்நிதியையடைந்து நமஸ்கரித்து திரு எண்ணெய்க்காப்பும் திருநெல்லிக் காப்பும் திருமஞ்சன்காப்புமிட்டுப் பஞ்சகவ்வியத்தாலும் பஞ்சாமிர்தத்தாலும் பாலாலும் தயிராலும் தேனாலும் இளநீராலும் கரும்பினி ரதத்தாலும் அபிஷேகம்செய்து பீதாம்பரமுடுத்திப் பூமாலைசாத்தித் தூபதீபங்காட்டி திருவமுது நிவேதித்துப் பலமுறை பிரதக்ஷணஞ்செய்து அளவிடப்படாத வன்பினாலே துதித்துப்பரவசப்பட்டிருக்க, அச்சிவசந்நிதியில்காளத்திநாதன் மான் மழு சதுர்ப்புஜ காளகண்டராய்த் திரிநேத்திரதாரியாய் இடபவாகனரூடராய் ஞானப்பூங்கோதை சமேதராய் விநாயகமூர்த்தி முருகக்கடவுள் திருமால் பிரமன் முதலிய தேவர்கள்சூழ எழுந்தருளி, திருவருள்சுரந்த அந்தணனே நீசெய்த பூசையனைத்தும் அங்கீகரித்தனம். உனக்கு வேண்டிய வரம்யாது விண்ணப்பிப்பையேல் தந்தருளுவேம் என வினவ, வேதியன் பத்தியிற்பணிந்து அத்தனே! உம்மை யான் சதா பூசைசெய்யவும் தேவரீர் இந்த தலத்தில் வீற்றிருக்கவும் உம்மை அன்புடன் அருச்சித்த அடியவர் இஷ்டகாமியங்களையடையவும் உமது திருவடியில் என்னைச் சேர்த்துக்கொள்ளவும் விரும்பினேன். அவ்வாறருள்கவென வேண்டிக்கொண்டனன் முதல்வனார் மறையவனே நீ விரும்பியவண்ணமளித்தனம். இவ்விடத்தில் நாமிருப்பதற்குத் தக்கபடி ஓராலயமியற்றி சிலநாள் சுகபோகங்களை யனுபவித்தபின்னர் நமது திருவடியை யளிப்போமென்றுரைத்து இலிங்கத்தில் மறைந்தருளினார். அவ்வாறே அந்தணன் ஆலயமியற்றித் திருக்காளத்தியப்பரைச் சிலநாள் பூசித்துத் தன் பத்தினியோடும் புத்திரனோடும் தனது நகரையடைந்து வாழ்ந்திருந்தனன். ஞானம்பிகை சமேதராகிய திருக்காளத்தியப்பரும் தன்னை அருச்சித்தேத்திய அடியார்களுக்குப் போகமோக்ஷங்களை அனுக்கிரகித்து அத்தலத்தில் வீற்றிருந்தனரென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினார்.

திருக்காளத்திச்சருக்கமுற்றிற்று.

உ

## இந்திரன்பூசனைச்சருக்கம்.

சிவாநுபூதிமான்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரைச் சேவித்துக்காளத்திநாதன் கதையைக்கேட்டு, களித்தனம். இப்பால்இந்திரன் சரிதத்தையும் அடியேங்கட்குத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று வினவிய முனிவருக்குச் சூதமுனிவர் சொல்லுவதாயினார். கேளுங்கள் முனிவர்களே! அயோத்திமாநகரையரசாக்ஷிசெய்யும் தசரதமகாராஜாஎன்பவர் ஒருவர் இருந்தார். அவர் நெடுநாளாய் புத்திரரில்லையேயென்கிற மனக்கவலையுடையராய் கலைக்கோட்டு முனிவரை வருவித்து அவரால் புத்திரகாமேட்டி யாகஞ் செய்வித்தார். அந்த யாகத்தில் ஒரு பூதம் தங்கத்தட்டில் பிண்டத்தைத் தலையிற்றாங்கிவந்து கொடுத்துவிட்டு அந்த யாகத்தில் மறைந்துவிட்டது. பின்னர்கலைக்கோட்டு முனிவர் ஆஞ்ஞையின்படி அவ்வமுதினை அரசன்

தன் மனைவியர் மூவருக்குமளித்து களித்திருக்குநாளிலே அப்பிரசாதபலத்தினால் மூவருங் கருப்பமுடையவராகி கோசலை ஸ்ரீராமனையும், கைகேசி பரதனையும், சுமித்திரை இலக்ஷுமணனையும் சத்துருக்கனையும்பெற்றுச்சந்தோஷசாகரத்திலே மூழ்கியிருக்கும்போது, விஸ்வாமித்திரமுனிவர் வேண்டுகோளால் இராமமூர்த்தி இலக்ஷ்மணனுடன்சென்று தாடகையைச் சம்மரித்து முனிவர் யாகத்தை முடிப்பித்து கல்லாயிருந்த அகலிகையைப் பெண்ணாகச் செய்து மிதிலையையடைந்து வில்லைமுறித்துச்சீதாபிராட்டியைத்திருமணஞ் செய்து தன் பத்தினியோடு அயோத்திமாநகரை யடைந்தனன். அவர் வரவைக்கண்ட சக்கரவர்த்தி அன்புமிக்கொண்டு இராகவனுக்கு இளவரசபட்டங் கட்ட உத்தேசித்திருந்தனன். அந்தச்செய்தியைக் கைகேசியறிந்து வஞ்சகங்கொண்டு இராகவனைக் காட்டுக்குப்போக்க நினைத்துத் தன் கருத்தைத்தெரிவித்தனள். அவ்வார்த்தையைக்கேட்ட இராமமூர்த்தியானவர் சிறியதாயார் வாக்கியத்தைப் பரிபாலனஞ்செய்யக்கருதி மனைவியும் இலக்ஷுமணனும் உடன்வரச்சென்று சித்திரகூடபர்வதத்தையடைந்து ஓர் பன்னசாலையில் வீற்றிருந்தனர். அவ்விடத்திலே இந்திரகுமாரனாகிய சயந்தனென்பவன் பிராட்டியாரது வடிவழகைக்கண்டு மயங்கி காமவசத்தனாய் காக்கைவடிவங்கொண்டு அம்மையாரது அழகிய தனத்தைத் தன் கால்நகத்தினாற் கீறினன். அதைக்கண்ட இராமமூர்த்தி கனல்பெருகக் கண்கள் சிவந்து சினமிக்குற்று ஒரு தருப்பையை மந்திரித்துப் பிரயோகஞ்செய்ய, அது பிரம்மாஸ்திரமாகி அக்காகஞ் செல்லுமிடங்களெல்லாம் விடாது பின்பற்றித்துரத்த யாவரும் அஞ்சலென்று அபயஸ்தந்தராமையால் காகஞ் சோர்வடைந்து ஸ்ரீராமபிரான் திருவடியிற் றஞ்சமென்றடைந்தது. அதைக்கண்ட இராகவன் இந்த அஸ்திரத்திற்கோர்கண்ணைக் கொடுத்துவிட்டு அசுரனாகி இவ்வனத்தில் சஞ்சரிக்கக்கடவையென்று சபிக்கப்பட்டு அசுரனாகி வனத்தில் உழன்று இறந்தனன். இந்தச் செய்தியெல்லாம் இந்திரனறிந்து தனது பத்தினியுடன் கைலையையடைந்து நந்திதேவர் பாதத்தைவணங்கி புத்திரனடைந்த துன்பத்தை விண்ணப்பித்தனன் நந்திதேவர்திருவருள் சுரந்து, இந்திரனே! நீபூவுலகில்தாலமாபுரியையடைந்து மயிலும் புலியும் பூசைசெய்த சிவபெருமானை வழிபட்டுத் திருவருளைப் பெறுவையேல் இத்துன்பம் நிவர்த்தியாகப் பெருவதன்றி முத்தியையும்பெறுவாயென்றுரைக்க, இந்திரன் அதை அங்கீகரித்துத்தன்மனைவி புத்திரனுடன் தாலவனமடைந்து சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து சோதிலிங்கப்பெருமானைக்கண்டு அபிஷேகஞ்செய்து பீதாம்பரமுடுத்தி கற்பகமலர் மாலைசாத்தி தூபதீபங்காட்டித் திருவமுது நிவேதித்து பலமுறை பிரதக்ஷணஞ்செய்து வணங்கி வாழ்த்தித் தோத்தரித்துநிற்கையில், இந்திரன்மேல் கருணைகூர்ந்து பெருங்கருணை வள்ளலாகிய சிவபெருமான் பார்வதிசமேதராய் இடபவாகனத்தின்மீது வந்து காட்சிகொடுத்தனர் இந்திரன் ஆனந்தபரவசமாகி அடியற்ற பனைபோலக்கீழே பலமுறை விழுந்தெழுந்து அடியேன் உய்ந்தேன் உய்ந்தேன் என் புத்திரனுக்குண்டாகிய குறையினைத் தீர்த்தருளவேண்டுமென ஆடியாடி ஆராமையுடன் வணங்கிநிற்கக்கண்ட அகிலலோகநாயகன், இந்திரனே! நினது அன்பினைக்கண்டு மகிழ்ந்தோம் உனது புத்திர

னுக்கு இராகவனால்கிடைத்த சாபத்தை ஒழித்தருளினோம். இனி உன் பத்தினியோடும் புத்திரனோடும் சென்று உனது நகரத்தை யடையக்கடவாயெனத் திருவாய்மலர்ந்தருளி மறைந்தருளினர். பரமபதியாகிய சிவபெருமான ப்ரீத்தியக்ஷமானதினால் ஆனந்தபூரிதனாய் தான் பூசித்த சிவபெருமான் திருக்கோயிலுக்குத் தென்மேற்குத்திசையில் மூன்று அம்பு வீசைதூரத்தில் ஒரு சிவலிங்கப்பெருமானைத் தாபித்துப் பூசித்துத் தனக்கு முன் அருணவொளியாகவந்து காட்சிதந்தமையால் அருணாசலேஸ்வரனெனத் திருநாமஞ்சாத்தித் தன் பதியையடைந்து சுகமாக வாழ்ந்தனன். அச்சிவலிங்கப்பெருமானை வழிபடுவோர் இந்திரனுலகடைவரென நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினர்.

இந்திரன்பூசனைச்சருக்கமுற்றிற்று.

உ

## பிரமனருச்சனைச்சருக்கம்.

சிவபத்த சிரோமணிகளாகிய நைமிசாரணிய முனிவர்கள் சூதபுராணிகரது உபயதிருவடியில் வணங்கி தேவேந்திரனது சரித்திரத்தைக்கேட்டு சந்தோஷித்தோம். இப்பால் பிரமதேவரது சரித்திரத்தையும் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்த முனிவர்களுக்குச் சூதபுராணிகர் சொல்லுவதாயினர். கேளுங்கள் முனிவர்களே பிரமதேவர் சத்தியலோகத்திலே ஒரு பகல் நாரதர் முதலிய முனிவர்களும், இந்திரன் முதலிய தேவர்களும் கைகட்டிநிற்கவும், கந்தருவர்கள் யாழிசைபரப்பவும், அரம்பையர்வெண்கவரிவீசவும், பொற்பிரம்பேந்திய கஞ்சுகிகள் முன்னேநின்று இவர் இன்னாரின்னாரென்று காட்டுங்கால் வணங்குபவர்கட்குத் தக்கவாறு அருள்பாலித்துக்கொண்டு ஆயிரமிதழ்த் தாமரை யாசனத்திலே அரசிருந்தனர். அவ்வேளையிலே பாற்கடலமுதமும் பனிமதிக்கலைகளும் ஒருருக்கொண்டாலொத்த சரஸ்வதியும் தன்னாயகனோடினிதிருந்து சந்தோஷித்திருக்கும்போது, பிரமதேவர் வாகனமாகிய அன்னமானது மானதவாவியையடைந்து அங்குள்ள அன்னப்பறவைகளைச்சீறி தனது மூக்கினாலும் கால் நகத்தினாலுங் கொத்திப் பெரிய துன்புறச்செய்தது. அதுகண்ட கங்காதேவியானவள் சகியாதவளாகி தன்னுடைய அலையாகிய கரங்களால்மோதிச் சிறகினைஒடித்து வருத்தினமையால் அன்னம் பொலிவுகுன்றி மனத்தளர்வுடன் பிரமன் முன்னேவந்தடைந்தது. அதைநோக்கி அன்னமே! நீ இவ்வாறானதற்குக்காரணம் யாதெனவினவ, அன்னம்மிகவும்வருந்திவணங்கிநடந்ததைக்கூறக்கேட்டபிரமதேவர், அவ்வன்னத்தைக் கையிலேந்திக்கொண்டு இத்துன்பத்தை கௌரி சமேதராகிய சிவபெருமானிடஞ்சென்று நிவர்த்தித்துக்கொள்ள வேண்டுமெனத் துணிந்து கயிலாயத்தையடைந்து தன்கையிலிருக்கும் அன்னத்தைநோக்கி அன்னமே! அகிலலோகநாயகனை நாம்காண்பதற்கு இக்கயிலாயத்தைக்காவல் பூண்டிருக்

குமாரந்திதேவரது அனுஞ்ஞமுன்னம் வேண்டியதென்று அருளிச்செய்தனர். அதைக்கேட்ட அன்னம் அவரது திவ்விய திருவடியில்வணங்கி எமது தலைவனே அப்பெருமானது பிரபாவத்தை யானறியத்திருவருள் பாலிக்கவேண்டுமென்று வேண்டிய அன்னத்திற்குப் பிரமதேவர்சொல்லுவார், முன்னொரு தினத்தில் இவ்வெள்ளியங்கிரியில் சகலதேவரும் புடைசூழ்ந்து துதித்து, நமஸ்கரிக்கப் பரமசிவன் உமாதேவியாரோடு இரத்தின சிம்மாசனத்தில் வீற்றிருந்தனர். அப்போது நாரதமுனிவர் அச்சன்னிதானத்தையடைந்து வீணைபாடி நமஸ்கரிக்குந்தருணத்தில் பரமசிவன்கடாக்ஷித்தருளி நாரதமுனிவனே! நீ நினைத்துவந்ததை விண்ணப்பஞ்செய்து கொள்ளலாமென்று சொல்லவே, நாரதர், சுவாமி! தமது திருவருளால் சகல புருஷார்த்தங்களையும் பெற்றிருக்கின்றேன். ஆயினும் தமது சன்னிதானத்தில் விண்ணப்பஞ்செய்துகொள்வதாவது மோக்ஷவேதுவாய் விளங்குகின்ற பூலோகத்தில் தமது திருவாக்காலருள்செய்த வேதாகமங்களெல்லாமாறி தமது பாதபக்தியையும் தமது சின்னமாகிய விபூதி ருத்திராக்ஷங்களும் மாறியெங்குமொளிமழுங்கிச் சமணசமயமானது இருள்போலெங்கும் நிலைத்து வியாபித்திருக்கின்றது; எம்போலிகளான தமதடிமைச் சைவர்களெல்லாம் தமது பஞ்சாக்ஷர மந்திரத்தையுச்சரிக்கவு மஞ்சிமறைந்து இத்துயர் நீங்குவதெக்காலமோவென்று ஏக்கமடைந்திருக்கின்றனர். எவ்விதத்திலாவது அக்கொடியகுண்டரை நாசஞ்செய்தற்குத் தேவரீர் திருவுளத்தெண்ணினு லதுவே போதுமானதென்று பிரார்த்தித்து நிற்கவே, ஓ முனிவனே! யதார்த்தத்தைச் சொல்லினை. அவ்விடையூறு களையத்தக்கவன் இந்நந்தியே. இந்நந்திக்கும் எமக்கும் யாதொரு பேதமுமில்லை அந்நந்தியே பூலோகத்தில்வந் தச்சமணரை யழிப்பன் அதற்காக நீ சஞ்சலப்படவேண்டுவதில்லை. நமது சைவமும் விளங்குமென்றருள் செய்ய, அப்போது உமாதேவியார் பரமசிவத்தைநோக்கி நமது சிவகணங்களுக்குள்ளே இந்நந்தியைப்புகழ்ந்து சொன்னகாரணம்யாதோவென்றுகூற, கேட்பாய்பார்வதி! முற்காலத்தில் பருப்பதமென்னுஞ் சீசைலபர்வதத்தில் நிருதிதிக்கில் சிலாதரனென்னும் பெயருள ஒரு முனிவன் சிதேந்திரியனாய் மூன்றரைக் கோடிவருஷம் நீரையும் காற்றையுமுண்டுசேவித்து தவம்பண்ணினான் அப்போது அவனுக்கு நாம் பிரத்தியக்ஷமாய் நின்று நீ விரும்பின வற்றைக் கேளென்றுசொல்ல, அவனும் வணங்கி சுவாமி உம்மைப்போலொரு புத்திரன்மாத்திரம் வேண்டுமென்றிரங்கிநிற்க யாமுமவனிடத்தருளால் அவனது பத்தியைநோக்கி கேட்டபடி தருவோம் எனக்குச்சமானமான இரண்டாஞ்சம்புவென்று சொல்லப்படும் இந்நந்தியேயுனக்குப் புத்திரனாகவருவன் என்றருள்செய்து நந்திதேவனையுநோக்கி, நீயிந்தச்சிலாத ரிஷிகேட்டபடியின்னையாகவேண்டும் அல்லா விட்டால் நாமேபோய் பிறக்கவேண்டும் என்று சொல்லினோம். அப்போது நந்தியும் நமது குறிப்பின்படி அச்சிலாத ரிஷியினிடத்தில் அயோனிஜனாக வவதாரஞ் செய்தனன். இந்நந்தி அந்த ரிஷியினிடத்திற் பிறந்தபோதே நமது பாதத்திலன்பும் உடன்பிறந்து சிவபரத்துவமே முலைப்பாலாகவும் குருத்யானமே உண்ணத்தக்க எண்ணெயாகவும் வேதங்களே குதலைச்சொற்களாகவும் சிவாசாரமே தனது இளமைக் கோட்

பூடாகவும் கிருபையே தேகமாகவும் பிரணவமே ஆருயிராகவும் நமது பாதங்களிற் பக்தியுடன் குரூரமான தவங்களைச்செய்யவே, அப்போது அரிபிரமாதி தேவர்களெல்லாம் நடுக்கமடைந்து, இதென்ன வாச்சரியம்? இக்குழந்தைப் பருவத்தில் கொடியதவஞ் செய்தற்குக் காரணம்யாது? நமது பதவிகளை விரும்பினனோவென்று நினைத்து எம்மிடத்தில்வந்து நமஸ்கரித்து சுவாமி! நந்திதேவர் தவஞ்செய்யுங் காரணம் தமது திருவுளத்துக்குத் தெரியவருமே அதனை எமக்கருள் செய்யவேண்டுமென்று வருந்தி நின்றார்கள். நாம் அவர்களைநோக்கித் தேவர்களே! உங்களுடைய இழிவான பதவிகளை யெவ்வளவு மிச்சிக்கமாட்டான். உம்மையும் நோக்கமாட்டான். எம்மைக்குறித்தே அந்நந்தி தவஞ்செய்கின்றான். நீங்கள் நமதுபின்னேவாருங்களென்றழைத்துக்கொண்டு நந்தி தவஞ்செய்யுமிடத்துக்குப்போய் உனக்குவேண்டியவற்றைத்தருவோம். தவமொழிந்துகேட்பாயென்ன, அப்போது தவத்தைவிட்டெழுந்து நமஸ்கரித்து நின்று சுவாமி! பிரமவிட்டுணுக்களின் பதவியை நான் வேண்டிலேன். தேவரீரது பாதபக்தி நியமந்தவறாது நிற்குநிலையொன்றே யடியேன் விரும்பினது. அதைத் தந்தருள்வீரென்றிரந்துநிற்க, அப்போது அவனன்பிற்கு மகிழ்ந்து நமது கைகளாற்றழுவி நந்தியே! உன்னிடத்தன்பால் பரிசிக்க வேண்டி முன்னமே வாகனமாகக்கொண்டோம். என்று சொல்லிப் பூதகணங்களுக்குத் தலைமையும் சர்வஞ்ஞத்வமும் கொடுத்தோம். ஆதலால் இந்த நந்தி நமது கணங்களுக்குள் சிறந்தவனென்று உமாதேவிக்குத் திருவாய் மலர்ந்தருளியதை யான் கேட்டறிந்தனனென்று பிரமதேவர் சொல்லினர். அதைக்கேட்ட அன்னம் மிக்க ஆர்வமுற்று இந்த நந்திதேவரது மகிமைகளை யிப்போதுதான் தெரியலானேன். இனி என்னுடைய குறைகளைச்சொல்லி, இன்னலை யொழிக்கவேண்டுமென்று வேண்டிநிற்க, பிரமதேவன் நந்தி யெம்பெருமான் திருமுன்னரடைந்து திருவடியிற்பணிந்து அன்னத்தின் குறைபாடுகளைச் சொல்லவே நந்திதேவரும் மனமகிழ்ந்து கூறுகின்றார். கேட்பாய் பிரமனே! கடல்சூழ்ந்த பெரிய நிலவுலகின்கண் போய் விலாசகாஞ்சியை யடைந்து சந்திரசூடனாகிய சோதிலிங்கப்பெருமானை வணங்கி இனிதுடன் பூசைபுரிந்தால் அன்னத்தின் சிறகிழந்த நிந்தை நீங்கும் என்று திருவாய் மலர்ந்தனர். அதுகேட்ட பிரமன் அவரைப்பணிந்து விடைபெற்று மிக்க மகிழ்வோடு அன்னத்தையேந்தி விலாசகாஞ்சியையடைந்து விதிப்படி சிவபெருமானைப் பூசைசெய்து சிரமேற்கரங்குவித்து எட்டுக்கண்களினும் ஆனந்தவாரியொழுகத் தோத்திரஞ்செய்திருந்தனன். இவ்வாறு துதிசெய்த பிரமன் மீது கருணைபுரிந்து இடபவாகனத்தின்மீது பார்வதிசமேதராய்வந்து காட்சி கொடுத்து பிரமனே! உனது துதியைக்கேட்டுச் சந்தோஷித்து உன் அன்னத்தின் கவலையை யொழித்தருளினோம். இந்நகரத்தில் ஒரு சிவலிங்கபிரதிட்டை செய்வாயென்று மறைந்தருளினார். அதைக் கேட்ட பிரமதேவர் களிகூர்ந்து பணிந்து வெளிவந்து திருக்கோயிலுக்குத் தென்திசையில் அரைகடிகை தூரத்தில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டைசெய்து சிவாகமத்திற்கூறிய முறையாற் பூசைபுரிந்து தன் பத்தினியுடன் அன்னத்தின்மீதேறி தனது சத்தியவுலகத்தை யடைந்தனர். அப்பெருமானை விரிஞ்சேசனென்று உலகிலுள்ளவர் உரைக்கின்றனரென்று சூதபுராணிகர் கூறினார்.

பிரமனருச்சனைச்சருக்கமுற்றிற்று.

உ

# திருமால்பூசனைச்சருக்கம்.

சிவபஞ்சாக்கர நாவினர்களாகிய நைமிசாரணியமுனிவர்கள் சூதபுராணிகரை வணங்கி நமஸ்கரித்து சுவாமி! பிரமதேவர் சரித்திரத்தைச் சொல்லினீர் திருமால் சரித்திரத்தையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று வேண்ட சூதமுனிவர் சொல்லுவதாயினர். கேளுங்கள் முனிவர்களே! மரீசபுத்திரனாகிய காசிபமுனிவனுக்கு மனைவியரான விநதை கத்துருவை ஆகிய இருவரும் புத்திரப்பேறடையக் கருதி கணவனை நோக்கி அரிய தவஞ்செய்தனர். அப்போது காசிபமுனிவர் பிரத்தியக்ஷமாகி மனைவியரே! நீங்கள்வேண்டும்வரமியாதென்றவுடனே, அவர்களெழுந்து சாஷ்டாங்கமாகவிழுந்துநமஸ்கரித்து விநதை இரண்டு புத்திரரும் கத்துருவை நூற்றைந்து புத்திரரும் வேண்டுமென்று விண்ணப்பித்தனர். அதைக்கேட்ட காசிபர் அவ்வாறே கருப்பதானமளித்துத் தன் தவச்சாலையை யடைந்தனர். பின்பு அவ்விருவரும் அனேக நாளாய்க் கருவைச்சுமந்து விநதை இரண்டு முட்டைகளையும் கத்துருவை நூற்றைந்து முட்டைகளையும் பெற்றார்கள். இவைகளில் கத்துருவையீன்ற முட்டைகளில் ஆதிசேடன் தக்ஷகன் முதலிய நூற்றினாலு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தனர்கள். அதை விநதை கண்டு சகியாதவளாய் தானீன்ற முட்டை இரண்டில் ஒன்றை உடைத்தனள். அதில் எல்லா அவயவமுங்கூடி கால்மாத்திரங்கூடாமல் ஒருவன் தோன்றி தன் தாயைச் சினந்து எனது அவயவம் முற்றாமுன்னம் முட்டையை உடைத்து என்னை முடவனாக்கினை யாதலால் உன் தங்கையாகிய கத்துருவைக்குத் தாதியாகக்கடவதென்று சாபமிட்டனன். அந்தச் சாபத்தைப்பெற்ற தாயார் விலேசமுற்று வருந்தினள். அதைக்கண்ட புத்திரன் கிருபைகூர்ந்து ஓ அம்மணி! இதோவிருக்கிற முட்டையில் எனது சகோதரன் பிறப்பான். அவனாலே உன் சாபம் நீங்கும். இந்த முட்டையைப் பின்னஞ்செய்யாதிருக்கவேண்டுமென்று கட்டளையிட்டு தான் அருணனென்னும் பெயரைப்பெற்று, சூரியனுக்கு சாரதியாய் அமைந்தான். பின்பு ஒருநாள் விநதை கத்துருவை யிருவரும் தங்கள் தங்கள் சகிமாரோடு கடற்கரைக்குச் சென்று அங்குள்ள விநோதங்களைப் பார்த்திருக்கும்போது அவ்விடத்தில் உச்சை சிரவமென்கிற வெள்ளைக் குதிரையைக் கண்டார்கள். இவர்களில் விநதை தன் தங்கையைநோக்கி இதோவிருக்கிற குதிரை சுத்த வெண்மையாயிருக்கிறதென்று சொன்னாள். அதைக் கேட்ட கத்துருவை வாற்புறத்தில் கிஞ்சித்து கறுப்பிருக்கிறதென்றாள். ஏன் பொய்கூறுகிறாய் நன்றாய்ப்பாரென்று விநதைசொல்லினாள். அதைக்கேட்ட கத்துருவை சகோதரி நீ கூறியபடி இருந்தால் உனக்குப் பணிப்பெண்ணாயிருக்கிறேன் நானுரைத்தபடி இருந்தால் நீ யெனக்குப் பணிப்பெண்ணாயிருக்கிறாயாவென்றாள். விநதை ஒத்துக்கொண்டு அக்குதிரையை நெருங்கிப் பார்ப்போம் வாவென்றழைக்க கத்துருவை நாம் வந்து வெகு நேரமாயிற்று நாளையதினம் பார்ப்போம் வாவென விநதையும் ஒத்துக்கொண்டு இருவரும்

துமதிருப்பிடம்வந்து சேர்ந்தார்கள். பின்பு கத்துருவை தன் பிள்ளைகளை யழைத்து நடந்த சங்கதிகளைச்சொல்லி குதிரையின் வாற்புறத்திற் கிஞ்சித்து கறுப்புண்டாக்குவீர்களென்று கட்டளையிட்டனள். அதுகேட்ட புத்திரர்கள் தாயே அச்செய்கைக் குடன்படோமென்று மறுக்க, உடனே கத்துருவை கோபங்கொண்டு ஜனமேஜயமகாராஜன் செய்யப்போகிற யாகத்தில் நீங்களெல்லாம் மடியக்கடவதென்று சாபமிட்டாள். இதைக் கேட்ட புத்திரர்களிலொருவன் அச்சாபத்திற்குப் பயந்து அக்குதிரையின் வாற்புறத்திற் கிஞ்சித்து கறுப்பு தோன்ற ஒன்றியிருந்தான் மறுநாள் கத்துருவை விநதையை யழைத்துக்கொண்டு அக்குதிரை யிருக்கிற விடத்தில்வந்து ஓ சகோதரி! இதோபார் குதிரையின் வாற்புறத்தில் கறுப்பிருக்கிறதென்று காண்பிக்க விநதையும் சரிதான் என்று ஒப்புக்கொண்டு அவளுக்குப் பணிப்பெண்ணாகி அவளிட்ட வேலையைச் செய்துவந்தாள். சிலநாள் சென்றபின்பு விநதையுயிர்த்த மற்றொரு முட்டைக்குப் பருவகாலம்வந்து தானே விரிந்தது. அதில் மிக்க ஆற்றலையும் தேககாந்தியையுமுடைய கருடனுதித்தனன்.

அப்புத்திரனைக்கண்ட கத்துருவை மனம்பொறுதவளாய் சகோதரி! உன் புத்திரனை எனதுபுத்திரர்களுக்கு ஏவல்செய்யப் பணித்தியென்றாள். அதைக் கேட்டு விநதையும் அப்படியே கட்டளையிட கருடனும் அவர்கள் குற்றேவலைச் செய்துகொண்டிருக்கும் நாட்களில் ஒருநாள் ஆதிசேடன் முதலானோரைப் பார்த்து உங்களுக்கு வேண்டிய பொருளைக் கேளுங்கள். நானதைக்கொண்டு வந்து தருகிறேன். எங்களுடைய அடிமையை நீக்கிவிடவேண்டுமென்று விநயமாய்வினவ அவ்வார்த்தையைக்கேட்ட ஆதிசேடன் முதலானோர்கள் கலுழனே! நாங்கள் சுகப்பட தேவாமுதத்தைக் கொண்டுவந்து கொடுத்தால் உன் கருத்து நிறைவேறுமென கலுழன் அதற்குச் சம்மதித்து தன் தாயிடம் வந்து நடந்த சங்கதிகளைச்சொல்லி ஓ அம்மா நான் தேவாமுதத்தைக் கொண்டுவர ஆசீர்வாதஞ்செய்து என் தந்தையிருக்கிற இடத்தையுஞ் சொல்லவேண்டுமென்றுவினவ, விநதை கலுழனைப்பார்த்து மகனே! உன் தந்தையாகிய காசிபர் கந்தமாதனத்தில் தவஞ்செய்கின்றார். நீ அமுதங் கொண்டுவருமளவும் உனது பசிக்கிரைசொல்லுவன் கேட்பாயாக, இமயமலைச்சாரலில் மகா பாதகர்களாகிய அனேகம் வேடர்களிருக்கிறார்கள். அவர்களைப் புசித்து தேவாமுதங் கொண்டுவருவாயென்று ஆசீர்வாதஞ்செய்தாள். உடனே கலுழன் மகிழ்ந்து கேசரிமார்க்கமாயெழும்பி கந்தமாதன கிரியையடைந்து தன் தந்தை தவஞ்செய்யும் ஆசிரமத்தைச்சேர்ந்து அவரைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்தான். உடனே காசிபர் கருடனுக்குப் பல ஆசிகள் வழங்கி வாரித் தழுவி அப்பா மகனே! நீ வந்தகாரண மென்னவென்றுவினவ கலுழன் அடிமைத்தொழில்நீங்க அமுதங்கொண்டுவரத் தங்களிடத்தில் வாப்பிரசாதம்பெறவந்தேனெனக் காசிபர்கேட்டு மகிழ்வடைந்து நீ சிறந்த ஆற்றலைப் பெற்று அமுதங் கொண்டுவரக்கடவதென் றருளிச்செய்தார். அதைக்கேட்ட கலுழன் அவரிடத்தில் விடைபெற்று வஞ்சகராகிய வேடர்வாழும் இமயமலையையடைந்து அவர்களிருக்கக்கண்டு அவர்களைத் தன் பசிதீர ஒவ்வொரு

வராக அனேகரையெடுத்து விழுங்கிப் பின்பு ஒருவனை விழுங்கும்போது தன் கண்டத்தைச்சுட்டு வருத்த, உடனே கருடன் துயருற்று அவனைக் கீழே யுமிழ்ந்தனன். பின்பு அவன் வேதியர் வடிவந்தாங்கி யெதிரேநின்று கருடனுடைய திருவடிகளிற்பணிந்து தெய்வலோகஞ்சென்று தேவேந்திரனுடைய சபையிற் பொருந்தியிருந்தனனென்று சூதபுராணிகர்கூற, அதைக்கேட்ட முனிவர்கள், அவர் திருவடிகளில்வணங்கி சுவாமி! அவனுக்குவேதியர்வடிவம் வந்தது யாதோ? அதை அடியேங்கட்குத்தெரிவிக்கவேண்டுமென்றுகேட்கச் சூதபுராணிகர் சொல்லுவார்.

கிராடமாநகரத்திலே அந்தணர் குலத்திலே அறிவு பொறை ஓர்ப்பு கடைப்பிடியென்னுங் குணங்களமைந்த சனுதரனென்பவன் ஒருவன் இருந்தான். அவன் அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு என்னுங் குணங்களையுடைய கற்பிற்சிறந்த சாம்பவியென்னும் மனைவியுடன் வாழ்ந்திருந்தனன். பின்பு அநேக நாள் புத்திரனில்லாமல் அனேக தானதருமங்களைச்செய்து பாலசமுத்திரத்தில் விடம் பிறந்ததுபோலும் நல்ல கனியிற் புழு சனித்ததுபோலும் ஒரு புத்திரனைப்பெற்று சந்தோஷசாகரத்திலேமூழ்கி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்து, சுமித்திரனென்னும் நாமதேயமிட்டுக் களித்திருந்தனர். அப்புத்திரனுக்கு ஐந்தாவதாண்டில் தன் தந்தையாகிய சனுதரன் காலகதியாலிறந்தனன். அவன் மனைவிகண்டு சகியாதவளாகித் தானும் உயிர் துறந்தனள். பின்பு சுமித்திரன் தன்னைப் பாதுகாப்பவர் இல்லாமையால் சிலநாள் துன்பமடைந்து பின்பு செல்வச் செருக்கினால் காமாதுரனாய் தன் திரவியமெல்லாம் பரத்தையருக்குக் கொடுத்துத் தரித்திரனாகி துன்மார்க்கமடைந்து கொலை களவு செய்யும் வஞ்சகருடன்கூடி குலாசாரந்தவறி காட்டிற்சென்று மதுமாமிச பக்ஷணஞ்செய்து திரிந்துகொண்டிருக்கும்நாட்களில், ஒருநாள் அவ்வனத்தில் தவஞ்செய்திருக்கும் சுகோத்திரமுனிவரையடைந்து அவரது மகிமையை யறியாது என் கையிலிருக்கும் இந்த மதுவையும் மாமிசத்தையும் நீ புசிக்கவேண்டுமென்று சொல்லினன். அதைக்கேட்ட முனிவர் சினங்கொண்டு அடா துன்மார்க்கா! நீ வேதியர்குலத்திற் பிறந்தும் சூத்திர வொழுக்கமின்றி இவ்வாறுரைத்தாய். ஆகையால் நீ வேடனாகிப் புலைத்தன்மை யடையக்கடவாயென்று சாபமிட்டனர். அதற்குப் பயந்து அவரை வணங்கி சுவாமி! இச்சாபம் நீங்குங்காலம் அருளிச்செய்யவேண்டுமென்று வேண்டினன். உடனே முனிவர் கருணைகூர்ந்து பிள்ளாய்! நீ அஞ்சேல்: சிலநாள் கழிந்தபின்னர் விநதையின் புத்திரனாகிய கருடன் உன்னையெடுத்து விழுங்குவன், அப்போதவன் கண்டத்தில் வெப்பம் உண்டாகி உன்னை உமிழ்வான். உடனே இச்சாபம்நீங்கி வேதியவடிவந்தாங்கி விண்ணுலகடைவாயாக வென்று அனுக்கிரகித்தனர். அதனால் வேதியர் வடிவந்தாங்கி விண்ணுலகடைந்தனன் என்று சூதபுராணிகர்கூற நைமிசாரணிய முனிவர்கள்கேட்டுப் பேரானந்தமடைந்து தேவரீர் இவ்வற்புத சரித்திரங்களையெல்லாம் இசைத்தருளினீர். இனி முன்சொல்லிய சரித்திரத்தைப் பூர்த்திசெய்யவேண்டுமென்ற முனிவருக்குச் சூதபுராணிகர் சொல்லுவதாயினர்.

கேளுங்கள் முனிவர்களே! கலுழன் அக்கசடர்களை விழுங்கிப் பசிதீர்ந்து அமுதத்தைக்கொண்டுவர யத்தனித்து, தன் தாய்தந்தையரைத் தியானித்து உயரவெழும்பி வாயுதேவன் பயங்கொள்ளவும், சூரியசந்திரர் திகைத்து அஞ்சவும், பூமி நடுங்கவும், கோரமான காற்றை யிறகினால்வீசி மகா உக்கிரத்துடன் வந்து அமுதமிருக்கும் இடத்தை யடைந்தனன். அப்போது அந்த அமுதத்திற்குக் காவலாளராயிருக்கின்ற தேவகணங்களும் இந்திரகுமாரனாகிய சயந்தனும் ஐராவதமும் தேவேந்திரனும் தங்கள் தங்கள் கையிலுள்ள ஆயுதங்களைக் கலுழன்மீதெறிந்து எதிர்த்து அட்டகாசஞ்செய்து நின்றார்கள். கலுழன் கண்டு நகைத்து தனது சிறகினால் அப்படைகளையெல்லாம் சிதறவடித்து நகத்தினாலும் மூக்கினாலும் அவர்களை வாட்டிப் புறமுதுகிட்டோடும்படிச் செய்து அமுதகலசத்தை யெடுத்துக்கொண்டு மிகுந்த மகிட்சியுடன் கேசரிமார்க்கத்திற் சென்றான். இந்திரன்கண்டு இனி நம்மால் இக்கலுழனை வெல்லமுடியாதென்று ஆலோசித்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியைப் பலவாறு தோத்திரஞ்செய்து தியானித்தனன். அப்போது வைகுந்தத்தைவிட்டு கலுழன்முன் மகாவிஷ்ணுவானவர் பஞ்சாயுதபாணியாய்த் தோன்றினார். கலுழன் கண்டு உடனே சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து பலவாறாகத் துதிக்க திருமால் மகிழ்ந்து, கலுழனே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேளென ஐயனே! எந்நாளும் தங்களிடத் தன்புள்ளவனாயிருக்கக் கிருபைசெய்யவேண்டுமென்றுகூற அவ்வாறே வரங்கொடுத்தேன்; இனி நீ நமக்கு வாகனமாகவும் துவசமாகவும் இருக்கவேண்டுமென்றனர். கலுழன் மகிழ்ந்து அப்படியே ஆகிறேனென்றுசொல்ல அப்போது தேவேந்திரன் கலுழனைப்பார்த்து இந்த அமுதத்தைப் பூவுலகத்திற்குக் கொண்டுபோவது தருமமல்லவே யென்றுசொல்ல அதற்குக் கலுழன் தாய்பணியைத் தவிர்க்கக் கொண்டுபோகும் அமுதத்தைத் தடுப்பது உமக்கு ஞாயமோவென்றுகேட்க, அதைக்கேட்ட இந்திரன் இந்த அமுதத்தைக் கொண்டுபோய் உங்கள் அடிமையை நீக்கிக் கொள்ளுங்கள். பின்பு நான் ஒரு மாயஞ்செய்து அமுதத்தைக் கொண்டுபோகிறேனென, கலுழன் அதற்குச் சம்மதித்தனன். பின்பு திருமால் வைகுந்தத்திற்கெழுந்தருளினார். இந்திரன் அருவுருவாய்ப் பின்றொடர்ந்துவர, கலுழன் அமுதத்தைக் கொண்டுபோய் கத்துருவையிடத்திற்கொடுத்து தங்களடிமையை நீக்கிக்கொண்டு இதைச் சுசியாய்ப் புசியுங்களென்றுசொல்லித் தன் தாயிடம்போய் சேர்ந்தனன்.

கலுழன் கூறியபடி ஆதிசேடன் முதலானவர்கள் ஸ்நானஞ்செய்யச் சென்ற சமையத்தில் இந்திரன் அமுதகலசத்தை யெடுத்துக்கொண்டு தன்னுலகடைந்து சந்தோஷித்திருந்தனன். பின்பு கலுழன் தன் தாயைவணங்கி நிகழ்ந்ததையெல்லாந் தெரிவித்துத் தாயே என் கண்டத்தினிடத்துண்டாகிய வெப்பமானதை யொழிக்க நான் வைகுந்தஞ் செல்லவேண்டியிருப்பதால் நீ விடைதரல் வேண்டுமென்று வேண்டினன். அதைக் கேட்ட தாயானவள் சந்தோஷித்து விடைகொடுத்தருளினள். உடனே கலுழன் கேசரிமார்க்கமாகச் சென்று வைகுந்தத்தையடைந்து ஸ்ரீமந் நாராயணமூர்த்தியைக்கண்டு

வணங்கி தன் கண்டத்திலுண்டாகிய வெப்பவாதனையை நீக்கி யருளவேண்டு மென்று கேட்டனன். திருமால் கலுழனை நோக்கி கலுழனே! நிலவுலகத்தி லுண்டாகிய மனிதருக்குள் சிறந்தோர் மறையவர். அவரினும் சிறந்தோர் ஆதிசைவர். அந்த ஆதிசைவப் பிராமணனை நீ விழுங்கியதால் உனக்கு இத் துன்பமுண்டானது. இதனைப் பரமபதியாகிய பரமேசனால் ஒழிக்க வேண்டும் வாருமென்றழைத்துக் கயிலாயத்தை யடைந்து நந்தி யெம்பெருமானைக் கண்டு வணங்கித் தங்கள் குறையினை விஞ்ஞாபனம் செய்ய, நந்திதேவர் கேட்டுக் கிருபைகூர்ந்து முகுந்தனே! உலகத்தில் மிக்க சிறப்புவாய்ந்த விலாசகாஞ்சி யென்றொரு தலமுண்டு. அதில் கருணாநிதியாகிய கண்ணுதற் பெருமான் சுயம்பு மூர்த்தியாய் சிவலிங்க வுருவாய் சவுந்தர நாயகி சமேதரா யெழுந்தருளி இருக்கின்றார். அவ்விடம் சென்று அவரைப் பூசித்தால் கலுழன் கண்டத்திலுள்ள வெப்பநோய் நீங்கு மென்று கட்டளையிட்டனர். உடனே திருமாலானவர் விடைபெற்றுக் கலுழனை யழைத்துக்கொண்டு அவ் விடம் சென்று நந்திதேவர் உரைத்தபடி அவ்வருட் பெருமானைக் கண்டு வணங்கிப் பூசித்து வாழ்த்திப் பலவாறாகத் துதிசெய்ய, அப்போது சவுந்தர நாயகி சமேதரான ஸ்ரீ மாயூரேசர் மானும் மழுவும் கரத்திலிலங்க, இளம் பிறை முடிமிசை விளங்க, நாகாபரணம் மார்பில் துலங்க, உமாதேவியார் இடத்தினில் தோன்ற, வெள்ளிய இடபவாகன மேற்கொண்டு திருமாலுக் குத் தரிசனங்கொடுத்து அவனைப் பார்த்து முகுந்தனே! நீ செய்த பூசையா லும், தியான யோகத்தாலும், மூலமந்திர செபத்தாலும் நாம் மகிழ்ச்சி யெய்தி வந்தோம். இனி நீ உன் கருத்தை விண்ணப் பிப்பைபோல் தந் தருளுவோ மென வினவ, திருமால் அன்புடன் வணங்கி, அத்தனே பட்சி ராஜனாகிய கலுழனுடைய கண்டவெப்பத்தை ஒழித்தருள்கவென வேண்டிக் கொண்டனன். முதல்வனார் முகுந்தனே! கலுழன்கண்ட வெப்பத்தை யொழித் தனம். இன்றுமுதல் அக்கண்டத்தில் வெண்மைநிறம்தோன்றும். ஆகையால் இக்கலுழனை வாகனமாகக்கொண்டு தேவரும் கண்டு வியக்கும் இத்தாலமா புரியில் இலக்குமி சமேதனாய் எந்நாளும் வீற்றிருக்கக் கடவாயென் றுரைத்து சோதிலிங்கத்தில் மறைந்தருளினார். அவ்வாறே திருமாலும் அவ்வாலயத்திற்கு மேற்றிசையில் மூன்று அம்பு விசை தூரத்தில் தேவர்கள் போற்ற இலக்குமி யுடன் சேர்ந்து கலுழனோ டமர்ந்திருந்தனர். அத்திருமாலை இலக்குமி நாரா யணனென்று இவ்வுலகத்தவர் உரைக்கின்றனரென்று நைமிசாரணிய முனி வருக்குச் சூதபுராணிகர் கூறினார்.

திருமால்பூசனைச்சருக்கமுற்றிற்று.

உ

# தக்கன்பூசனைச்சருக்கம்.

---

சிவபூசா துரந்தரர்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் சூத புராணிகர் திருவடியில் வணங்கி, சுவாமி! ஸ்ரீ வைகுந்தவாசராகிய திருமால் சரித்திரங் கேட்டக மகிழ்ந்தனம். இனி தக்கன் சரித்திரத்தைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்கச் சூதமுனிவர் சொல்லுவதாயினர். கேளுங்கள் முனிவர்களே! சத்தியவுலகத்தில் தவத்தர் தேவர் வருக்கங்கள்சூழச் சபாமண்டபத்தில் இரத்தின மயமாயோங்கிய சிங்காதனத்தின் கண் பிரமன் வீற்றிருக்கும் போது, அவன் பிள்ளைகளி லொருவனான தக்கன் பிதாவை நோக்கி திரிமூர்த்திகளினுயர்ந்தவனாய், தேவாதி தேவனாய் பிறப் பிறப் பில்லாதவனாய்ச் சராசரங்களனைத்தினும் பொருந்தி நடிப்பிக்கவல்ல மூலகாரணக் கடவுளைத் தெளிவிக்கவேண்டுமென்றுவினவ, பிரமன் நகைத்து, குமாரனே! விண்டுவும் யானும் நாம் நாம் பிரமமென் றகந்தையுற்றுப் போர்புரியுங்காலத்தில் அக்கினி மலையாய் எமது மத்தியிற்றோன்றி பரத்துவ நிச்சயத்தைத் தெளிவித்து, இரட்சித்த பிதாவாகிய பரமசிவன்றான் மூலகாரண னென்று திருவாய்மலர்ந்தனன். அது கேட்ட தக்கன் பிதாவை வணங்கி விடைபெற்று மானத வாவியையடைந்து பரமசிவனைக் குறித்து ஆயிரவருடம் அரிய தவத்தைச் செய்தனன். பரமசிவன் திருவுளங்கொண்டு இடபவாகனத்தின் மீது உமையவள் சமேதனாய் காட்சிதந்து உன் தவத்தை மெச்சினோம். நீ வேண்டும் வரங்களைக் கேளென்றருள, தக்கன் திருவடியிற் பணிந்தெழுந்து சுவாமி! தேவரீரை வந்திப்பவர் அனைவரும் என்னைப் பணிந்து போற்றவும், உமையம்மை யெனக்கும் புத்திரியாகவும், நீர் மருமகனாகவும் வேண்டு மென்று விண்ணப்பஞ் செய்ய, தண்ணளியனாகிய பரமசிவன் உன் கருத்தின்படி தந்தோமென் றுரைத்து மறைந்தனர். பின்பு தக்கன் மகிழ்சிறந்தவனாய் தன் பிதாவினால் நிருமிக்கப்பட்ட தக்கமா புரியிற் பிரவேசித்து கற்பிற் சிறந்த வேதவல்லி யென்னுங் கன்னிகையை மணந்து இரண்டாயிரம் பிள்ளைகளைப் பெற்றுப் பின்பு இருபத்தேழு பெண்களைப் பெற்று அவர்கள் வனப்புக்குத் தகுதியாயிருக்குஞ் சந்திரனுக்கு வதுவைசெய்து மருமகனை நோக்கி உன் தேவியார் அனைவரையும் அபேதமாகத்தழுவிக் களித்திருப்பாயெனச் சொல்லி அனுப்ப அவ்வாறின்றி கார்த்திகை ரோகணி யாகிய இருவரையும் கூடிச் சுகித்திருப்பதைத் தக்கன் மற்றவரால் கேள்விப்பட்டுச் சந்திரன் மீது கோபங்கொண்டு தினமொருகலையாகக் குறைந்துபோகக் கடவதென்று சபித்தனன். அவ்வாறே சந்திரனது கலைகள் தினமொன்றாகத் தேய்ந்து ஒருகலை யிருக்கும் போது உமாபதியையடைந்து தன்குறையை விண்ணப்பித்துத் துதித்தனன். அச்சந்திரனுக்கிரங்கி அவ்வொருகலை யினையும் தனது திருமுடியில் தரித்து இனி உன் கலைகள்வளரக்கடவ தென்றருள் செய்தனர். பின்புசந்திரன் தனதிடஞ்சென்று தன் செய்கையினை நடத்தியிருந்தனன். இக்காரணத்தைத் தக்கனறிந்துகோபித்து நானிட்டசாபத்தைச் சிவனோ தடுக்கவல்லவனென்று

கறுவினன். உடனே புலகர் கூறியவார்த்தையைக் கேட்டுச் சினந்தவிர்ந்திருந்தனன். இது நிற்க இப்பால் உமாதேவியார் தக்கனுக்கு மகளாகத் திருவவதாரஞ் செய்த திறத்தினைக் கூறுதும், கேளுங்கள் முனிவர்களே யென்று சூதபுராணிகர் கூறுவதானார். கிருபாமூர்த்தியாகிய பரமசிவன் திருக்கயிலாயத்திலே சகலதேவரும் போற்ற ஆதனத்தில் வீற்றிருக்கும்போது பராசத்தியானவள் திருவடிகளிற் சேவித்து கர்த்தனே! உமது ஒப்பற்ற நிச்சயவடிவை உணர்த்தவேண்டுமென்று வினவ, பரமனருளிச்செய்வதாயினார். பெண்ணே! கேட்பாயாக, உருவங் குணஞ் செய்கை முதலியவைகள் ஒன்றுமில்லாமலும் எங்கும் நிரஞ்சனமாகியும் அமர்ந்திருப்போமென் றருளிச்செய்தனர். அதைக் கேட்ட சுந்தரியானவள், சுவாமி! தேவரீருக்கு ஒருருவமுமில்லையென் றருளினீர் பின்பு பற்பல உருவமும் உண்டென்றகாரணம் யாதென்று வினவ, பரமேசன் பெண்ணே! அவையாவும் நமது அருள் வடிவமாகு மென்றறிவித்தனர். அதைக்கேட்ட புவனேஸ்வரி ஆனால் அவையாவும் எனது வடிவமாகுமென்று மறுத்துக்கூறினாள். அதைக்கேட்ட சர்வலோக சரணியனாகிய கடவுள் பெண்ணே! உன்புகழை நமது சன்னிதானத்திற் பெருமையாகவியந்து கூறினாய். மாசற்ற வுயிர்கடோறும் உலவி அவைகள் தெளிவுபெறச் செய்வதை நீங்குவோமாயின் அசைவற்றுச் சடமாயிருக்கும். மேலும் உன்னிடத்தும் யாம் பொருந்தாத காலத்து உனதுயிரும் உணர்ச்சி பெறாது. அதனைக் காட்டுவோம் குறிப்பாயறிந்து கொள்வாயென்று திருமால் முதலிய உயிர்களினுள்ள உணர்வை ஒருகணம் நீக்கினார். தேவாதி தேவனான பரமசிவன் தமதருட்டிறத்தினை நடாத்தலின்மையால் ஆவிகளனைத்தும் அளவற்றயுகம் சடமாய் ஓவியம்போல் உணர்வற்று நின்றன. இச்செய்கையைப் பார்ப்பதியார் கண்டு நடுநடுங்கி யிரக்கமுற்றுப் பரமனைச்சேவித்து சர்வாந்தரியாமியாகத் தேவரீரிருப்பதை யறியாது பேசிய அடியாள் பிழையினைப்பொறுத்தருளிப் பழையபடியே ஆத்துமகோடிகளை அளிக்கவேண்டுமென்று அம்மையார் பலதரஞ்சேவித்துப் போற்றி நின்றனள். கர்த்தன் திருவுளமிரங்கி பதினோருருத்திரர்களுக்கு முந்தி உணர் வுண்டாக்க, அவர்கள் படைப்பு மல்குவதாகத் திருவிடை மருதூரிற் சென்று பரமசிவனை ஆகமவிதிப்படி பூசித்துத் துதித்தனர். கடவுள் அப்பூசையை விரும்பி சகல சீவராசிகளையும் எழுப்ப உடனே விண்ணவர் தபோதனர் நாகர் முதலிய யாவரும் வெள்ளியங் கிரிக்குப்போய் பரமனைச்சேவித்து தேவரீர் அனுக்கிரக மில்லாது அறிவழிந்து நெடுங்காலம் சடமாய்ப் பவத்தினாழ்ந்தோம். அதற்கு நிவாரணங் கட்டளையிட வேண்டுமெனப்போற்ற, சிவபிரானிரங்கி நீங்கள் உணர்வழிந்து வேதவொழுக்கமாறி இருந்ததினால் அடைந்தபாதகம் உமையவளைச் சேரும். இது முதல் உங்கள் நெறிகளில் வழுவின்றி நடந்துகொள்ளக் கடவீரென் றனுக்கிரகித்து விடை கொடுத்துப் பின்பு சகதீசன் உமையவளை நோக்கிப் பெண்ணே! சீவராசிகளெல்லாம் சடமாயிருந்தபாவம் உன்னைச்சார்ந்தது. ஆகையால் நீ தக்கன் மகளாகத் திருவவதாரஞ்செய்து வாழக்கடவை. பின்பு நாம் வந்து உன்னைத் திருமணஞ்செய்து இவ்விடம் அழைத்து வருவோமென்றருளச் சம்மதித்து விடைபெற்று சடலைப்போல் விளங்கும் காளிந்தி நதியிலுள்ள தாமரை மல

சின்மீது வலம்புரி வடிவுகொண்டு பஞ்சாக்கரத்தைச் செபித்து அனேக காலம் அம்மையார் தவஞ்செய்திருந்தனள். அப்படி இருக்குங் காலையில் ஒருநாள் மாசிமகத்தில் ஸ்நானஞ்செய்ய தக்கன் தன் பத்தினியுடன் காளிந்திநதியைச் சேர்ந்து அதில் மூழ்கி வரும்போது பராபரை தாமரைமலரில் சங்குருப் பெற்றிருப்பதைக்கண்டு களித்து கரத்திலேந்தியவுடன் மகா அழகுவாய்ந்த குழவியாய்த்தோற்ற தேகபரவசனாய் தன்தேவி கரங்களிற் கொடுக்க அவள் பரிந்துவாங்கி தேகம் பூரித்துத்தழுவி முத்தமிட்டு கொங்கைகளிற் சுரந்த பாலையூட்டி தன் மாளிகையை யடைந்து வேதவல்லியானவள் உலகமாதாவை வளர்த்து வந்தனள். இவ்வாறாக அம்மையார் வளர்ந்து ஐந்தாண்டு நிறை வெய்தியபின் தமக்கொருபாகமான. சிவனைச்சேரத் தவஞ்செய்யக் கருதி தாய் தந்தையருக்கறிவிக்க அவரும் அதற்கிசைந்து இரத்தின மயமாகிய ஒரு கன்னிகாமாடஞ் செய்வித்து, அம்மா! உன் கருத்தின்படிக்குத் தவஞ்செய்யப் போகலாமென்று அளவற்ற பாங்கியரைக் கூட்டியனுப்பினான். இப்பால் ஈஸ்வரி பரமசிவனைக்கருதி அரிய தவங்களைச்செய்து வருகின்றபோது சிவபிரான் பிரத்தியக்ஷமாகி பார்ப்பதியினுடைய தவவுறுதியைச் சோதித்து நல்ல சுபஔரையில் விஷ்ணு பிரமனாதிய சகலதேவர்களும் வாழ்த்த, திருமணமுடித்து சடுதியில் மின்னலை ஒத்து மறைந்தனர்.

அதைக்கண்ட வுமையவள் தன்பக்கடலினுள் மூழ்கி கலியாண மண்டபத்தை நீங்கி முன்போல அரிய தவங்களைச் செய்திருந்தனள். அப்போது பராபரன் மான்மழு திரிநேத்திரம் காளகண்டம் சதுர்ப்புஜம் முப்புரிநூல் விபூதி தூளிதராய் இடபவாகனத்தில் தோற்ற, லோகநாயகி தெரிசித்து மனக்கோட்டம் நீங்கி ஆனந்த வாரியில் திளைத்து பரமனைப் பலவாறு சேவித்துப் போற்றினள். பின்பு தேவியினிடத்துப்பரிவாய்த் தனது திருக்கரத்தை நீட்டியெடுத்து வெற்றிபெற்ற விடையின்மீது தமது வாமபாகத்தில் இருத்தி கணநாதர் சூழ்ந்து போற்ற திருக்கயிலாயத்தை யடைந்து எதாப்பிரகாரம் தமது ஆலயத்தில் உமாபரமேஸ்வரமூர்த்தமாய் வீற்றிருந்தனர். இக்காரணத்தைக்கண்ட தக்கனானவன் கோபித்து விழிகளில் அனற்பொறி சிதறப் பெருமூச்செறிந்து தன்னை வணங்குந் தேவர்களைப்பார்த்து விண்ணவரே! காளகண்டன் ஆதியில்வந்து நமது பெண்ணை விவாகஞ்செய்து மறைந்தனன். இத்தினம் கள்ளன்போல்வந்து என் புத்திரியை மயக்கிக்கொண்டு போய்விட்டான். இது எவர்களுக்காவது அடுக்குமா? ஆகையால் என்னை மதியாத பித்தனை இன்றுமுதல் நீங்கள் துதிக்கவும் சேவிக்கவும் வேண்டுவதில்லை யென்று கட்டளையிட்டுப் பின்பு ஒரு யாகஞ்செய்யக்கருதி மயனை அழைப்பித்து வேத விதிப்படி யாகசாலை நிருமிக்கக் கட்டளையிட, அவன் சேவித்துப்போய் அவ்வாறே யாகசாலை யமைத்தனன். அதைத் தக்கன் கண்டு மகிழ்ந்து தூதரையழைத்து சிவன் தவிர விஷ்ணு பிரமனாதியான தேவர்களையும் முனிவர்களையும் வேள்விக்கழைத்துவரக் கட்டளையிட்டனன். அவர்கள் வணங்கிச் சென்று அவ்வாறே தெரிவிக்க விஷ்ணு முதலிய தேவர்களும் முனிவர்களும் அந்த யாகசாலையை வந்தடைந்தனர். அப்போது ததீசி

முனிவர் தக்கனைப்பார்த்து, எங்களையழைத்த காரணம் யாதென்று வினவ, சிவனுக்கு அவியில்லாமல் ஒரு யாகத்தை முடிக்க யெத்தனித்து உங்களை வரவழைத்தேனென்று கூற, அதைக் கேட்ட ததீசிரிஷியானவர் பரமசிவத்தினது குணாதிசயங்களையும் பரத்துவ நிச்சயங்களிற் சிலவற்றையும் விவரித்துரைத்தவைகளைக்கேட்ட தக்கன் நகைத்து, நீ சொல்லிய மேலான பரம், பன்றிக்கொம்பு புலித்தோல் ஆமையோடு நாகம் வெண்டலை இவை முதலிய இழிவுள்ள வஸ்துக்களை யணியமோ? சுடலையிலாடுமோ? விஷத்தையுண்ணுமோ? பிட்சையேற்குமோ? தாமதகுணத்தைப் படைக்குமோ? என்று பற்பலவாக இகழ்ந்து கூறி அந்தச சிவனுக்கு இந்த யாகத்தில அவிர்ப்பாகம் தரமாட்டேன் போவென்று கூற அதைககேட்ட முனிவர் கொதித்து, பரமசிவத்தை யிகழ்ந்து செய்யும் உன் வேள்வி யழியக்கடவதென்று சபித்து அளவற்ற தவத்தர் இருமருங்கினும் சூழ்ந்துவர தமதாசிரமத்தைச் சேர்ந்தார் பின்பு தக்கன் அனுமதியில அவ்விடத்திலிருந்த வேதியர்களுக்கு ஆடையாபரணம் பொன் முதலான சோடசமகாதானங்களைக் கொடுத்து தக்கன் அந்த வேள்வியை நடத்தினான்.

அதை நாரதரறிந்து திருக்கயிலைக்குப் போய்க் கர்த்தனைத்தொழுது போற்றி சுவாமி! தேவரீரை யிகழ்ந்து புத்தியில்லாத தக்கன் வேள்வி நடத்துகின்றான் என்று விண்ணப்பஞ்செய்ய, அதைக்கேட்ட பராபரை மனம்பூரித்து அதனைக்கண்டுவர விருப்புற்றுப் பகவனை வணங்கி, என்பிதா செய்கின்ற யாகத்தைப் பார்த்துவர விடைதந்தருளுமென்று கேட்க, பரமன் பரிவாய் போய் வருகவென்று விடைகொடுத்தருளினார். கௌரி அதைப்பெற்று கனகவிமானத்தி லெழுந்தருளி தோழிப்பெண்களுடன் தக்கன் யாகசாலையை அடைந்தனள். அதைப்பாதகனானவன் கண்டு கோபித்து இக்காரியத்தைக் குறித்து உனக்குச் சொல்லியனுப்பின துண்டோ? நீ வரவேண்டிய தென்னை போவென்று வெறுத்துப்பேசி யீசனையும் பழியுரையாடினன். அதைக்கேட்ட பராபரை கோபங்கொண்டு பரமசிவனை விலக்கி யாகத்தை நடத்தும் உனக்குத் தகுதியாகிய தண்டம் விரைவிலுண்டாகக் கடவதென்று கொடிய சாபத்தை யிட்டு விமானத்திலாரோகணித்து சேடியர் போற்ற திருக்கயிலையையடைந்து கர்த்தனைச் சேவித்து, சுவாமி! தக்கன் அடியேனை வெறுத்த தல்லாமலும் தேவரீரைப்பலவாக நிந்தித்துப்பேசினான். ஆதலால் அவன் செய்யும் வேள்வியையழிக்கத் திருவுள்ளங்கொள்ள வேண்டுமென்று வேண்டினாள். அப்பொழுது எமது கர்த்தன் பரமேஸ்வரியின் அன்புக்கிரங்கி அவளெண்ணப்படியே முடிக்கத் திருவுள்ளங்கொண்ட மாத்திரத்தில் நுதல்விழியில் ஆயிரஞ் சிரங்களோடு வீரபத்திரதேவர் உதயமாய் பரமனைத்தொழுது நின்றார். அத்தருவாயில் உமையவளது கோபாக்கினியினால் ஆயிரஞ் சிரங்களோடு பத்திரகாளி வெளிவந்து வீரபத்திரர் மருங்கினின்றாள். அவ்விருவரும் கர்த்தனையும் பிராட்டியாரையும் வணங்கி சுவாமி! யேது காரியத்திற்காக அடியேங்களைப் படைத்தீர்! அதனைக்கட்டளையிட வேண்டுமென்று கேட்டார்கள். அப்போது பரமன் அவர்களை நோக்கி நம்மையன்றித் தக்கனென்பவன் வேள்வி நடாத்

திற் சாலையையடைந்து அவிர்ப்பாகத்தைக் கொடுத்தால் வாங்கி வருவீர். தடுப்பாருயின் அவன் சிரத்தைக் கண்டித்து யாகத்தையும் அழித்து மீளக் கட்வீரென்று அருளிச்செய்ய, உடனே வீரபத்திரர் காளியோடும் அனேக பூதகணங்களோடும் அதிக்கிரமாக வந்து தக்கன் யாகசாலையை யடைந்து பூதத்தலைவரை வாயில்களினிடத்தில் காவலாகவைத்து பத்திரகாளியுடன் உள்ளேபிரவேசித்து ஆர்ப்பரித்து நிற்க, தக்கன் வீரபத்திரரைப்பார்த்து நீ யாவன்? இவ்விடம் வரும்காரணம் யாதென்று வினவ, வீரன் நகைத்து யான் சங்கரன் குமாரனாகும். அவர் கட்டளையின் படிக்கு நீ செய்யும் வேள்வியில் அவிர்ப்பாகத்தை வாங்கிப்போக வந்தேன் தாமதஞ் செய்யாமல் தரக்கடவா யென்று கேட்க சிவனுக்கு இவ்விடத்தில் அவிர்ப்பாகங் கிடைக்கமாட்டா தென்று தக்கன் மறுத்தான். அப்போது வீரபத்திரதேவர் பக்கத்திலிருந்த தேவர்களைப்பார்த்து இவன் பரமனுக் கவிகொடாமல் இடக்குப் பேசுவது உங்களுக்குச் சம்மதமோ வென்று வினவ, அதைக்கேட்ட தேவர் ஒன்றுஞ் சொல்லாமல் ஊமைகளை ஒத்திருந்தனர். இதனைக்கண்டு வீரன் கோபித்து கண்களிலே தீயெழச்சீறிப் பற்களைக்கடித்துக் கரத்தி லிராநின்ற கதையை கிறுகிறென்று சுழற்றி கேசவன் பிரமன் இவர்கள் மார்பில்மோதி மூர்ச்சை யாகிவிழச் செய்தனன். அதைக்கண்ட தேவர் பயந்து திக்குகளி லோடினார் கள். அதைத் தக்கன் கண்டு வாடிப் பின்பு தயிரியம்விடாது கேடகமும் வாளை யுங் கரத்திற்பற்றிக் கொக்கரித்து. எதிரில் வந்தான், அதை வீரன் கண்டு கோபித்து வாளினால் அப்பாதகன் சிரத்தைக்கண்டித்து யாகத்திலிட்டனர்.

அப்போது தேவர்கள் கர்த்தனே! புத்தியில்லா திகழ்ந்த தக்கனை வரவழைத் திரக்ஷிக்கவேண்டுமென்று துதிக்க வீரபத்திரர் கிருபைகூர்ந்தவராய் அவிக் குக் கண்டித்திருந்த ஆட்டுத்தலையை யதிற்பொருத்தி யெழக்கடவா யென்று வுடன் பரமசிவத்தை யிகழ்ந்தவர் இப்படிக்காவரெனச் சகலருக்கும் உணர்த்து வதுபோலத் தக்கன் தலையை யசைத்துக்கொண் டெழுந்து வீரபத்திரர் பாதத்தில் வணங்கி சுவாமி! அடியேன் அறியாதுசெய்த இந்தப்பிழையை யொழிக்க அனுக்கிரகிக்க வேண்டுமென்று வேண்ட வீரபத்திரக் கடவுள் பிரசாபதியினை நோக்கித் தக்கனே! பூமியின் கண்ணே பனசையம்பதி யென்றொரு தலமுண்டு. அது காஞ்சிமா நகரத்தினுக்கு வடமேற்கே ஒருகாத தூரத்திலுள்ளது. அப்பதியில் தன்னிகரில்லாத சோதிலிங்க மூர்த்தியாகிய மாயூரேசர் திருவோலக்கங்கொண் டெழுந்தருளி யிருக்கின்றனர். அக்கடவு ளுக்குக் கீழ்த்திசையில் ஒருகடிகை தூரத்தில் சிவபிரான் பெரிய நாயகி சமேதராய் தான்தோன்றியீசரென்னுந் திருநாமங்கொண் டெழுந்தருளி அன்பர் வினைகளை அகற்றுங் கருணாநிதியா யிருக்கின்றனர். அக்கடவுளை அருச்சித்து வணங்கி நினதுபழியை யொழித்துக்கொள்ளக் கடவையென்று கட்டளையிட்டனர் அதைக் கேட்ட தக்கன் அனேக தோத்திரங்களுடன் சரணமடைந்து விடைபெற்றுத் தாலவனமடைந்து அவ்விடத்தில் எழுந் தருளியிருக்கும் பச்சிளங் கொடியாருடன் சுயம்புநாதேச்சரரைக் கண்டு பல தரம் அஷ்டாங்க சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தெழுந்து வேத விதிப்படிக்

கடவுளைப் பூசித்து சங்கரத்ரா சங்காளா கண்ணுதலோய் கயிலையாளி கறைமிடற்றோய் என்னைக்காப்பாற்றாயா வென்று தோத்திரஞ்செய்து அஞ்சலித்து நின்றசமையத்தில் கருணாநிதியாகிய கடவுள் பார்வதி சமேதராய் இடபாருடராய் தக்கன் முன்வந்து சிறுவிதியே! நினது தோத்திரங்கேட்டு மகிழ்ந்து உனது குறையை யொழித்தோமென்று திருவாய்மலர்ந்தருளி சுயம்பு லிங்கத்தில் அயிக்கியமாயினர். தக்கன் குறைதவிர்ந்து வியப்படைந்து அப்பரனைப் பலவிதமாய் பூசைசெய்து வணங்கி விடைபெற்றுத் தன் நகரஞ் சேர்ந்திருந்தனன். அப்பரமனைப் பூசித்து வழிபடும் அடியவர்கள் இகபர சாம்பிராச்சியத்தை எளிதிலடைவார்களென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூத புராணிகர் கூறினர்.

தக்கன்பூசனைச்சருக்கமுற்றிற்று.

௬

# இராகவன்பாவமொழித்தசருக்கம்.

சிவஞான சம்பன்னர்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் சூதபுராணிகரைவணங்கி நமஸ்கரித்து சுவாமி! தக்கன் சரித்திரத்தைக்கேட்டுச் சந்தோஷித்தோம். இனித் தாசரதியின் சரித்திரத்தையுங்கேட்க விரும்புகின்றோம். அதையும் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று வேண்ட சூதபுராணிகர் சொல்லுவதாயினர். கேளுங்கள் முனிவர்களே! சூரியகுலத்திற் றிருவவதாரஞ்செய்து அயோத்திமாநகரத்தையாளும் தசரதமகாராஜனுக்குப் புத்திரனாய் திருவவதாரஞ்செய்த இராமமூர்த்தியானவர் சிறியதாயார் வார்த்தையின்படி தம்மனைவியோடும் காட்டிற்சென்று சஞ்சரிக்குஞ் சமையத்தில், இராவணன் கள்ளத்தனமாய் சீதாபிராட்டியைக் கொண்டுபோய் இலங்கையிற் சேர்க்க அதையறிந்து இலங்கையையடைந்து இராவணனைக்கொன்று தன் மனைவியைமீட்டு அயோத்திமாநகரத்தையடைந்து அரசுசெய்துவரும் நாட்களில் ஓர்நாள் இராமபிரான் தம்பியர் மந்திரி பிரதானிகள்சூழக் கொலுவீற்றிருக்குஞ்சமையத்தில் மந்திரிகளைநோக்கி, அமைச்சர்காள்! நமதுநாட்டிலுள்ளவர்கள் நமது செங்கோலைப்பற்றி யாது புகல்கின்றனர். அதைச் சொல்லுவீர்களென்று வினவ, அதைக்கேட்ட மந்திரிமார்கள் அவர்பாதத்தை வணங்கி சுவாமி! தேவர்களுக்கிடுக்கண்செய்யும் இராவணனைச்செயித்த உமக்கு யாவரும் எதிரில்லையென்று பூவுலகத்தவர் புகழ்ந்து சொல்லுகின்றனரென்று கூற இராமபிரான் மீட்டும் மந்திரிகளைநோக்கி நமது நாடுநகரங்களிலுண்டாகும் நன்மை தீமைகளைக்கேட்டு தீங்கினையொழிக்கச் சிந்தையுள் நினைந்தேன். ஆகையால், நீங்கள் கேட்டவைகளைச் சிறிதும் அஞ்சாமல் சொல்லவேண்டியதென்று கட்டளையிட்டனர்.

பின்பு மந்திரிகள் வணங்கி சுவாமி! அரக்கனாகிய இராவணன் கொண்டுபோய்த் தன்னகரில் சிறைவைத்திருந்த தையலைத் தாரமாகக்கொண்டு தேவரீர் வாழ்க்கைபுரிவது பேரிழுக்கென்று பேசுகின்றார்களென்று கூறினார்கள். அந்தக்கேட்ட அரசர் குரிசில், அந்தவார்த்தை நியாயந்தானெனத் தெரிந்து தன்து சகோதரனாகிய இலக்குமணனையழைத்து தம்பி! சீதையைக்கொண்டுபோய் முனிவர் தவஞ்செய்யும் வனத்தில் விட்டு வாவென்று கட்டளையிட்டனர். உடனே இலக்குமணன் தமையன் சொல்லைக்கடக்க மனமில்லாதவனாய் சீதாபிராட்டியாரை இரதத்திலேற்றி மாதவர்கள் தவஞ்செய்யும் கானகமடைந்து வான்மீகமுனிவரது ஆச்சிரமத்தில்விடுத்து தனது அரமனையையடைந்து தமையன்றிருவடியில் வணங்கி மைதிலியைக் காட்டில்விட்டுவந்த சங்கதியைத் தெரிவித்தனன். அதுகேட்ட அரசர் பெருந்தகையும் அந்நகரத்திலுள்ளவர்களும் மிக்க துயரத்திலாழ்ந்திருந்தனர். அத்தருணத்திலே விபூதி ருத்திராக்ஷம் தண்டு கமண்டலத்துடன் முனிபுங்கவராகிய வசிட்ட முனிவர் அவ்விடத்திலெழுந்தருளினார். உடனே அவ்வரசர் பெருமானெழுந்து அவரையெதிர்ப்பட்டுப் பலமுறை பணிந்தெழுந்து ஆதனத்திலிருத்தி, ஐயனே! அடியேனது மனம் அரவின்வாயிற்பட்ட தேரையைப்போலக் கலங்கிவருந்துகின்றது. எனது சகோதரர் தோள்வலியுங்குன்றி இருக்கின்றன. எனது நகரத்தின் வளங்களும் குறைந்தன. இது காரணம் தெரிவித்தருளல் வேண்டுமெனப் பிரார்த்திக்க, திரிகாலஞ்ஞானியாகிய வசிட்டமுனிவர் திருவுளமிரங்கி கேளும் அரசனே! நீ பூவுலகத்தவர்கள்சொல்லிய வார்த்தையைக் கேட்டு கற்பிற்சிறந்த சீதாபிராட்டியைக் காட்டிற் கொண்டுபோய் விடுத்தனை. ஆதலால், உனக்கு இந்தக் கொடுமை வந்தடையலாயிற்றென முனிவர் கூற, உடனே பல்கால் வணங்கித் துதித்து பயபத்தியோடுநின்று சுவாமி! அடியேனுக்குற்ற இவ்விடர்தீரும் உபாயத்தை அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென வினயத்தோடு வினவினன். அது கேட்ட முனிவர் அன்பனே கடல்சூழ்ந்தவுலகின்கண் சிறப்புற்றோங்கிய சிவஸ்தலங்கள் பலவற்றினும் புகழ்வாய்ந்த பனசையம்பதி யென்றொரு திருநகரமுண்டு. அதில் பஞ்சதால விருட்சத்தின்கீழ கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான் சுயம்பு மூர்த்தியாய் சிவலிங்கவுருக்கொண்டெழுந்தருளி இருக்கின்றனர். அக்கடவுளை உமையம்மையார் நந்திதேவர் திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பூசித்தும் துதித்தும் வணங்கியும் தங்கள் தங்கள் குறைகளையொழித்துப் போகமோட்சங்களை அடைந்தனர். ஆதலின் அவ்விடஞ்சென்று அச்சோதிலிங்கப்பெருமானைப் பூசித்து நினது குறையை நீக்கிக்கொள்ளுவாயென்று கட்டளையிட்டனர். அதுகேட்ட இராமபிரான் களிகூர்ந்து அவரை வணங்கி விடைபெற்று புட்பவிமானத்தில் ஆரோகணித்து அத்தாலமாநகரினையடைந்து சிவபெருமானைக் கண்டு மிக்க ஆவலுடன் பூசித்துப் பலமுறை பிரதட்சணஞ் செய்து வணங்கி வாழ்த்தித் தோத்திரஞ் செய்ய, ஸ்ரீ மாயூர நாதர் கோடிசூரியப்பிரகாசமாய் மான்மழுகரத்தில் விளங்க இளம்பிறைமுடிமிசை துலங்க மார்பில் நாகமாகிய உபவீதத்துடன் சிராமலையசையத் தரிசனங்கொடுத்து அவனைப்பார்த்து இராகவனே! கற்பிற்சிறந்த உனது மனைவியை

நீ காட்டில்விடுத்த பாவத்தை நிவர்த்தித்தோம். இனி உனது நகரத்தையடைந்து வாழக்கடவா யென்று கட்டளையிட இராமபிரான் களிகூர்ந்து விடைபெற்று விமானத்தி லாரோகணித்து அயோத்திமா நகரத்தினை யடைந்து சுகமாக வாழ்ந்திருந்தன ரென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூத புராணிகர் கூறினர்.

இராகவன்பாவமொழித்தசருக்கமுற்றிற்று.

௨

## மதனனருச்சனைச்சருக்கம்.

சிவராஜயோகியர்களாகிய நைமிசாரணிய முனிவர்கள் ஒப்பற்ற சூத முனிவரது உபயதிருவடிகளிற்பணிந்து சுவாமி! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய இராகவன் சரிதத்தைக்கேட்டு ஆனந்தமடைந்தோம். இப்பால் மன்மதன் சரித்திரத்தையும் உரைத்தருளவேண்டுமென்று குறையிரக்கச் சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர்.

கேளுங்கள் முனிவர்களே! மிக்க புஜபலபராக்கிரம முடைய சூரபதுமன் கொடுங்கோல் செலுத்தித் தகாத பணிவிடைகளைக் காட்டிச் செய்யச் சொல்லும் உபத்திரவத்தினாற் பொன்னுலகத்தை விட்டுத் தேவருடனே இந்திரன் மகமேருச்சாரலை யடைந்து சிவபிரானை நோக்கிப் பலநாளரிய தவங்களைச் செய்துவரும்போது சனகாதிமுனிவருக்கு யோகாப்பியாசஞ் செய்யும் பிஞ்ஞகர் கிருபையுற்று இடபவாகனரூடராய் வந்து தரிசனந்தந்தனர். இந்திரன் சுவாமியைக்கண்டு மனமகிழ்ச்சியாய் சேவித்துப்போற்றி அடியாரிடரை யகற்றும் அனுதாரகரே! தேவரீருக்குத் தெரியாத தொன்றுமில்லை. ஆயினும் சூரபதுமன்செய்யுங் கொடுமைகளை ஒருவகையாகச் சொல்லிமுடியாது. ஆகையால் நீரமீது கிருபையுற்று அவனைக்கொன்று எங்கள் சிந்தாகுலந்தைத் தீர்த்தருளவேண்டுமென்று.போற்ற அவனைக் கையமர்த்தி தேவராஜனே நீ வருந்தவேண்டாம். இன்னும் சிலபோதில் நம்மிடத்தி லுதிக்கப்போகின்ற குமாரனால் உங்கள் துன்பங்களனைத்தும் நீங்கிச் சுகத்தி லிருப்பீர்களென்று சில தேறுதலைசொல்லிப் பூதநாயகன் மறைந்தருளினார். இந்திரனும் சந்திரசேகரன் வாக்கியத்தை நினைந்து நினைந்து களிப்படைந்து தேவர்களுடன் மனோவதிப் பட்டணத்திற்குப்போய் சபா மண்டபத்தில் வீற்றிருக்கும் பிரமதேவரைக்கண்டு வணங்கித் துதித்துச் சூரன் செலுத்துங் கொடுங்கோன் முறையினையும் முக்கண்ணன் மொழிந்த செய்தியையும் விரிவாகச் சொல்லி யினி நானும் தேவர்களும் பிழைக்கும் வழியைக் கட்டளையிட வேண்டுமென்று வணங்கி விண்ணப்பஞ் செய்தனன். அதைக்கேட்ட பிரமனிந்திரனை நோக்கி, இந்திரனே! நீ நினைத்தவண்ணம் முடிப்பதற்கு மகாவிஷ்ணுவுடன் கலந்து பேசி நடத்தவேண்டும். வாருமென்றழைத்து தேவர்களுடன் வைகுந்

மடைந்து திருமாலைக்கண்டு வணங்கி நடந்த செய்திகளை யுரைத்தனர். அப்போது திருமால் யோசித்துப் பிரமனே! பஞ்சபாணனாகிய மன்மதனை வேண்டிப் பரமசிவத்தினிடத்திற் கனுப்புவீராயின் அவன் முயற்சியினால் அரன் யோகத்தினைநீங்கிப் பார்வதியைக் கலந்து ஒரு குமாரனைத் தருவர். அவரால் உமது குறைகளனைத்தும் நீங்கி வாழலாம் என்று முகுந்தன் திருவாய்மலர, பிரமன் கேட்டுச் செலவுபெற்றுக்கொண்டு மனோவதிப் பட்டணத்திற்கு வந்து மன்மதனை வரவினைந்தனன்.

அதனை யுணர்ந்து தென்றற்றேரி லாரோகணித்துப் பரிவாரங்கள் சூழ்ந்து போற்ற மனோவதி நகரைச் சேர்ந்து பிரமனை வணங்கி தேவரீர் என்னை வரவழைத்தகாரண மென்ன வென்று கேட்க, பிரமன் மன்மதனை அருகிலழைத்து ஓ மன்மதனே! திருக்கைலைக்குப்போய் மோனத்திலிருக்கும் சிவபெருமான்மீது உன் பாணங்களைச்செலுத்தி விகாரமுண்டாக்கிப் பர்வதராஜபுத்திரியைக் கூடும் வண்ணம் செய்யவேண்டுமெனச் சொல்ல, அவ்வாக்கியத்தைக்கேட்ட லட்சுமி குமாரன் கைகளாற் செவிகளைப் பொத்தி உள்ள மெங்குந் திகிக்கப்பட்டு வருந்திக் கிலேசமடைந்து ஓ பிதா மகனே! நீரென்ன சொன்னாலும் பரமசிவத்தை மாறுகொண்டு பாணங்களைச் செலுத்தமாட்டேனென்று சொல்ல, நான்முகன் கோபித்துப் பார்த்து, அடாபயலே! கொடிய சாபங் கொடுப்போமென அதைக்கேட்ட வேனிலான் அதிக விசனப்பட்டுச் சற்றுநேரம் யோசித்து இந்தப்பிரமதேவனால் சாபமேற்றுத் துக்கசாகரத்தில் மூழ்கி யழிவதைப் பார்க்கிலும் தினதயாநிதியாகிய தாண்டவ மூர்த்தியினால் மாண்டு சாம்பலாய் விழுந்த போதினும் மீளப் பிழைக்கவும் ஏதுவுண்டு எனத் துணிந்து கிளிகள்பூண்ட தென்றற்றேரின்மீது இரதிதேவியுடன் ஆரோகணித்துப் பல ஆடம்பரங்களுடன் திருக்கைலையையடைந்து நந்திதேவரிடம் விடைபெற்று மேற்குவாயிலின் மூலமாகச்சென்று கருப்புவில்லை வளைத்து சுரும்புகளாகிய நாணேறிட்டுப் பஞ்சபாணங்களையும் பரமசிவத்தின் மீது பிரயோகித்தான். அப்பாணம் கர்த்தன் தேகத்தில் தாக்கியமாத்திரத்தில் நெற்றிக் கண்ணினைத்திறக்க மன்மதன் உடலங்கரிந்து சாம்பலாயினன்.

கணவன் முடிந்ததைக்கண்ட இரதிதேவியானவள் மனங்கலங்கி யறிவழிந்து பற்பலவாகப்பிரலாபித்து, ஈசனுடைய திருவடியிற்சேவித்துப்பதிபிட்சை தரவேண்டுமென முந்தானையையேந்தி யிரக்க ஒப்பற்ற பரமசிவன் யோக நீங்கி அவளிடத்தில் கிருபைகூர்ந்து பெண்ணே! நீ புலம்பவேண்டாம் இமய வரையில் கௌரியை நான் பாணிக்கிரகணம் செய்கின்றகாலையில் உனது மணவாளனாகிய மன்மதனை யெழுப்பித்தருவோமென்று கட்டளையிட அதைக் கேட்ட இரதியானவள் இமயமலையை யடைந்திருந்தனள். பின்பு சனகாதி நால்வரைப்பார்த்து முனிவர்களே! நாம் காட்டியவாறே மோனநிஷ்டையினைப் பெறுவீரெனத் திருவாய்மலர்ந்து விடைதந்தனுப்பிப் பின்னர் விருத்தவேதியர் வடிவந்தாங்கி இமயமலையில் தவஞ்செய்யும் பார்வதியின் முன்னமடைந்து தவநிலையின் உறுதியைச் சோதித்துணர்ந்து தனது திருவடியைக்காட்டி நின்

றனர். இவ்வாறு காட்சிதந்த தன் கணவனைக்கண்டு பராபரையானவள் பூமியில்விழுந்து சேவித்து எமதாண்டவனே! தேவரீருடைய திருவிளையாடல்களையறியாது அறிவீனளாகிய நாயினேன் சுலபமாகவெண்ணி யிகழ்ந்துபேசிய குறைபாடுகளைப் பொறுக்கவேண்டுமென்று வருந்திநிற்கப் பரமேசுரர் களித்தவராய் இமாசலபுத்திரியே! கேட்பாயாக நீ முன்னம் பேசியதையெல்லாம் தோத்திரமாகக்கொண்டனம். இனி நீ தவஞ்செய்யவேண்டியதில்லை உன்னைத் திருமணஞ்செய்ய நாளையதினம் வருவோம் என்று திருவாய்மலர்ந்து மறைந்து கயிலையையடைந்து சத்தரிஷிகள்மூலமாய் பர்வதராஜனைச் சம்மதப்படுத்தி தனது பரிவாரங்களுடன் அனேக வைபவத்துடன் ரிஷபத்தின் மீதேறிப் பர்வதராஜன் மனையில்வந்திறங்கினர். அப்போது பர்வதராஜன் பத்தினியாகிய மேனுதேவியானவள் பரமனைப் பாதபூசைசெய்து பார்வதியாரை ஆடையாபரணங்களாலலங்கரித்து அழைத்துவந்து லோகநாயகனிடப்புறத்திலிருக்கச்செய்தனள். அத்தருணத்தில் பர்வதராஜன் தனது புத்திரியாகிய பார்ப்பதியார் திருக்கரத்தினைப் பரமசிவத்தின் கரத்தில்வைத்து ஐயனே! அடியேன் அரிதிற்பெற்ற பெண்கொடியை தேவரீருக்குப் பாரியாளாகத் தந்தேனென்று தாராதத்தஞ்செய்துகொடுத்தனன். பின்பு பரமசிவன் ஆஞ்ஞைப்படி பிரமன் மங்கலசடங்கை ஆரம்பித்து திருமங்கிலியத்தைப் பரமன்கையிலளித்துப் பார்வதிதேவியின்கழுத்தில் தரிப்பித்து வேதவிதிப்படி பூரணாகுதி செய்தவுடன் அம்மையப்பன் அக்கினிவலம்வந்து விஷ்ணு முதலிய தேவர்கள்போற்ற சகல வைபவத்துடன் சகலருங்கண்டானந்தமடைய ஈஸ்வரியோடு சிம்மாசனத்தில் வீற்றிருந்தனர்.

அத்தருணத்தில் தன் கணவனைப் பறிகொடுத்து தவக்கோலங்கொண்டு துக்கசாகரத்தில் மூழ்கியிருந்த இரதிதேவியானவள் திருமுன்வந்து திருவடிகளில்வணங்கி கர்த்தனே! இங்குள்ளவரைப்போல அடியாளுங் களிக்கத்தக்கதாக மங்கிலியபிட்சை தந்தாளவேண்டுமென்று பிரார்த்திக்க அதைக்கேட்டு ஈசன் மன்மதன் வருவதாக திருவுளத்தில் நினைந்தனர். அக்கணமே மன்மதன் கருப்பு வில்லைக் கரத்திற்பற்றி அங்ஙனம் தோன்றினன். அவனைப்பார்த்து ஓ மன்மதனே! உன் மனைவிக்குமாத்திரம் உருவமாகவும் மற்றவர்களுக்கு அரூபமாகவும் இருந்து உன் பணிகளைச்செய்து வருவையென்று திருவுளம்பற்றி இரதிதேவியுடன் வாழக்கடவையென்று விடைதந்தபோது மன்மதன் உமாபரமேஸ்வரரை வணங்கிப் போற்றிக் கர்த்தனே! உமது அருமைத் திருமேனியின்மீது தாக்கும்படி அடியேன் சரந்தொடுத்தலினால் உண்டான பாவத்தைத் தீர்க்கும்வழி அனுக்கிரகிக்கவேண்டுமென்று வேண்ட தேவதேவன் திருவுளமிரங்கி அனங்கனே நீ அஞ்சேல் கௌரியின் சாபத்தையும் நந்தியின் சாபத்தையுமொழித்துப் புனிதமாக்கிய தாலமா நகரமென்றொரு தலமுண்டு, அத்தலத்தில் உன்மனைவியுடன் சென்று இந்தப் பாவத்தை யொழிக்கக்கடவதென்று ஆஞ்ஞாபிக்க, அவ்வனங்கன் அவ்வாறே அத்தாலமா நகரத்தின் எல்லையையடைந்து அங்குள்ள க்ஷீரநதியில் ஸ்நானஞ்செய்து திருநீறு தரித்துப் பக்கத்திலுள்ள சிகரங்களோடுகூடிய திருக்கோயிலுட்சென்று பரமனாகிய

மாயூரேசரைக்கண்டு பரவசங்கொண்டு வலம்வந்து துதித்து வணங்கி பரிசுத்தமாகிய குளிர்ந்த நீரையும் மலரையுங்கொண்டு அந்த சோதிலிங்கப்பெருமானைப் பூசித்து இரண்டு கண்களினின்றும் ஆனந்த பாஷ்பஞ்சொரிய நின்று ஐயனே! யான் பவக்கடலில் வீழ்ந்தேன், என்னை யிரக்ஷித்து உனது திருவருளென்னுங் கரையிற் சேர்க்கவேண்டுமென்று குறையிரந்தனன். அப்போது எமதிறைவராகிய மாயூரேசர் திருவுளமகிழ்ந்து ஓ மதனனே வருகவென்று தமதருகிலழைத்து அன்பனே! நீ செய்த வழிபாட்டிற்கு மனமகிழ்ந்தோம் உன்னிடத்துண்டாயின ஒப்பற்ற பாவங்களும் தொலைந்தனவென்றருளிச்செய்து பின்னும் திருவாய்மலர்ந்தருளுகின்றார்.

அருமையான இத்தாலமாபுரியில் ஓர் சிவலிங்க பிரதிட்டை செய்து உனது நகரத்திற்குச் செல்வாயென்று கட்டளையிட்டனர். அவ்வாறேயிறைவரைப்பணிந்து அன்புமிகுந்து அவ்வாலயத்திற்குக் கீழ்த்திசையில் நான்கு அம்புவிசை தூரத்தில் பரிசுத்தமாகிய நல்ல இடத்தைத்தேர்ந்து அவ்விடத்தில் அமராபதிக்குச் சமானமாய் அழகிய ஓர் நகரமியற்றி வண்டுகள் நிறைந்த தாமரை மலர்கள் நெருங்கிய தடாகம் ஒன்று உண்டாக்கி சிவபிரானைத்தோத்திரஞ்செய்து தனது அஞ்ஞானத்தொடக்கு விட்டொழிய அத்தடாகத்தில் நீராடி தூய்மையான திருவெண்ணீற்றை யொளிவிளங்கத் தரித்து இதயத்தில் வேறொன்றுங் கருதாமல் பஞ்சாக்கரத்தைத்தியானித்து சிவலிங்கப்பெருமான் திருவுருவம் ஒன்று செய்து பர்வத ராஜ புத்திரியை திரிபுரசுந்தரியெனத் திருநாமந்தரித்து அப்பரமசிவன் இடப்பாகத்தில் எழுந்தருளச்செய்து திருஎண்ணெய்க்காப்பும், பஞ்சகவ்வியம் பஞ்சாமிர்தம் நெய் பால் தயிர் தேன் கருப்பஞ்சாறு முப்பழச்சாறு இளநீர் சந்தனக்குழம்பு தபனநீர் முதலிய இவற்றாலும் ஆகம விதிப்படி அபிஷேகஞ்செய்து பீதாம்பரமணிந்து சந்தனந்தரித்து பூமாலைசாத்தி தூபதீபங்காட்டி திருவமுது நிவேதித்து பலமுறை பிரதட்சணஞ் செய்து வணங்கிப் பலவாறுகத் துதித்து நிற்க சிவபிரான், மன்மதன்மீது கிருபை கூர்ந்து பொன்போல் விளங்குந் திருமேனியினிடத்தில் உமாதேவி ஒருபாகமாகவும் இளம்பிறை வாழும் சடையுடனும் வாசனைகமழுங் கொன்றை மாலையுடனும் மான்மழு தரித்த திருக்கரங்களுடனும் வெள்ளிய இடபவாகனத்தின்மீது வெளிவந்து காட்சி கொடுத்து அன்பனே!- நீசெய்த வழிபாட்டிற்கு மனமுவந்தோம். அன்றியும் உனது தீவினைகளெல்லாம் விட்டொழிந்தன. இனிமேல் நீ உன் மனைவியுடன் சென்று உனது நகரத்தில் அமர்ந்திருக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்து சாந்தரூபமாகிய சிவலிங்கத்தில் கரந்தருளினார். மன்மதனுந் தனது பட்டணத்தைச் சார்ந்தான். மதனனாலேற்படுத்திய நகரத்தை நல்ல நகரென்றும், மதனன்பூசித்த காரணத்தால் மதனேச னென்றும் யாவருங் கூறுவார்கள். அச்சிவலிங்கப்பெருமானை யாரேனும் பூசித்தால் தீவினைகள் நீங்கி மேலான பேரின்பவாழ்வு பெற்றோங்குவரென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினர்.

மதனனருச்சனைச்சருக்கமுற்றிற்று.

உ

# இயமனருச்சனைச்சருக்கம்.

சிவத்தியானபராகிய நைமிசாரணிய முனிவர்கள் மனமகிழ்ச்சி யதிக ரித்து சூதபுராணிகரை வணங்கி சுவாமி! மதனன் சரித்திரத்தைக் கேட்டும் பரவசமடைந்தோம். இனி இயமன் சரிதையை உரைத்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினர். கேளுங்கள் முனிவர் களே! தவசிரேட்டராகிய மிருகண்டு மகாமுனிவரானவர் முற்கல முனிவர் புத்திரியாகிய மருத்துவதியென்னும் மாதினை மணந்து கிரகஸ்தாசிரமத்தை நடாத்திவரும்நாளில், புத்திரப்பேறில்லாமையைக் குறித்து வருந்தி காசிப் பட்டினத்தையடைந்து கங்காநதியில் ஸ்நானஞ்செய்து சிவபிரானைத் தியா னித்துப் புத்திரப்பேற்றை விரும்பி ஒருவருடந் தவஞ்செய்தனன். அவன் பத்திக்கிரங்கி புராதகனரான தேவதேவன் ரிஷபவாகனரூடரா யெதிர்வந்து. அவனை நோக்கி, தபோநிதியே! உன் மனோபீஷ்டத்தைச் சொல்லுவாயென் றருள, சகலஜீவ தயாபரமூர்த்தியே! புத்திரப்பேறறை யளித்தருளவேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய. பரமன் திருவுளம்பற்றுவார். முனிவனே! துற் குணமிகுத்துச் சற்றும் நல்லறிவின்றி ஊமை கூன் குருடு முடமுமாய் நூறு வயதைப்பெற்றுப் பிணிகளிலுழன்றலையும் பிள்ளை வேண்டுமோ? அல்லது ஒப் பனையற்ற வனப்பினையுற்றுப் பிணிகளின்றி நம்மிடத்துப் பத்தியுடைத்தாய் பதினாறு வயதுபெற்றுப் பல கலைகளையுங்கற்றுத் தவவலிமையிற் சிறந்திருக் கும் பாலனைப்பெற விருப்பமோ? யாதோ? உன் எண்ணத்தைக் குறியெனக் கேட்க, தவசிரேஷ்டரானவர் அதைச் சீர்தூக்கிப்பார்த்து, ஐயனே! வயது குறைந்தாலும் பேரறிவாளனாய்த் தேவரீரிடத்துப் பத்திவிளங்கும் குமாரனை யே அளிக்கவேண்டுமென்று கேட்க, பரமன் களித்து முனிவனே! நீ நினைத் தபடிக்கு ஒரு புத்திரனை யளித்தோமெனத் திருவாய்மலர மிருகண்டு மகிழ் வுடன் வாழும்நாளில் சிவபிரானனுக்கிரகத்தினால் தனது தேவி வயிற்றில் கருப்பமுண்டாகிப் பத்துமாதங்களும் நிறைவெய்தி நல்ல சுபகரமானகாலத் தில் அதிக சவுந்தரமுடைய ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

அதைக் கண்ட முனிவரானவர் மனமகிழ்ந்து அப்புத்திரனுக்கு மார்க் கண்டனென்னுந் திருநாமந் தரித்துப் பின்பு செய்ய வேண்டிய சடங்கு களையெல்லாம் குறைவறமுடித்து வித்தியாரம்பமுஞ் செய்து கலைகளனைத் தினையும் தெளிவெய்த வாசிப்பித்து முற்றிய காலையில், எவைக்கும் மூலகார ணன் சிவபிரானென்றறிந்து பெரியோர்களுக்குத் தொண்டுசெய்தும் அவர்க ளால் போதிக்கப் பட்ட நன்னெறிகளைச் சிரவணஞ் செய்தும் தாய் தந்தை யரைப் பாது காத்தும் பிரமசரிய ஆசார வொழுக்கங்களை யனுஷ்டித்தும் வருந் தருணத்தில் பதினாறும் வயது பிறந்தது. அப்போது தாய் தந்தையர் புத்திர சிகாமணியைக் கண்டு மனவருத்தங்கொண்டு தனித் தனிப் புலம்பிப் பிரலாபித்தனர். அதைப் புத்திரன் கண்டு பயபத்தியுடன் அவர் பாதங்களிற் சேவித்து நீங்கள் மிகவும் நடுக்குற்று அழுகின்றீர். இதற்கொரு ஏதுவையும்

கனேன். விசனத்தை யொழித்து உங்களுக் கடுத்த துயரத்தினை யருளிச் செய்வீரெனப் போற்றினன். தாய் தந்தையர் குமாரனை வாழ்த்தி எமது ஐயனே! யாங்கள் நெடுங்காலம் புத்திரனில்லாமையால் பரமனைக் குறித்துத் தவஞ்செய்தோம். அப்பொழுது சுவாமி வந்து உன்னை யனுக்கிர கித்துப் பதினாறு வயது சென்று முடிவிலிறப்பா யெனவுந் திருவுளம் பற்றிப் போயினர்.

அவ்வருஷம் இன்றையதினம் பிறந்த காரணத்தில் உன்னை யிழக்கப் போகின்றோ மென்னும் மனவருத்தத்தினால் துன்ப முற்றிருக்கின்றோ மென்று சொன்ன தந்தை முகத்தை நோக்கி, அத்தனே! இதற்காக இரங்க வேண்டாம் சர்வலோக சரண்ணியனாகிய கடவுளைப் பூசித்தேத்தி யமதண் டனையைக் கடந்து வருவே னெனத் தேற்றி அவர்களிடம் விடை பெற்றுத் திருமணி கன்றிகையென்னும் ஆலயத்துட் சென்று விஸ்வேசரைப்பணிந்து அவ்வாலயத்தில் தென்பாரிசத்தில் ஒரு சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூசித்து வருகையில் சிவபிரான் எழுந்தருளி அன்பனே! உனக்கு வேண்டிய வரங்களைத் தருவோம் கேளென்று திருவாய் மலர்ந்தனர். உடனே சிரத்திற் கரங்குவித்துத் தேவதேவனே! அடியேன் எமபாசத்தி லகப்படாமல் மரண காலத்தில் எழுந்தருளிக் காத்தருள வேண்டு மென்று பலவாறாகத் துதிக்க பிள்ளாய்! காலனுக்குச் சிறிதேனும் அஞ்சலை அஞ்சலை யென்று திருவாய் மலர்ந்து மறைந்தனர். அதன் பின்னும் பழையபடியே சிவலிங்கத்தைப் பூசனை வழிபாடு செய்து வரும்பொழுது பதினாறுவயது பூரணமாயிற்று.

உடனே காளமேகம்போன்ற ஒரு யமதூதன் அவ்விடத்தில் வந்து அவர் பூசனையைக் கண்டு இவருயிரைப்பற்ற நம்மாலாகா தென்று யோசித்து எமபுரம்போய் தமது தலைவனைக்கண்டு வணங்கி இறைவனே! அந்த மார்க் கண்டன் பரமசிவத்தினை இடை விடாது பரிமளமலர்களா லருச்சிக்கின்ற னன். அந்தப் பூஜாபல வலியினால் அவனிடம் நெருங்கவும் படாமல் அஞ்சி வந்தேனென்று விண்ணப்பஞ் செய்ய, அதைக் கேட்ட இயமன் கண்களில் அனற்பொறிசிதறக் கோபித்துப் படைவீரர்சூழ மந்திரியாகிய காலன் அரு கில்வரக் கறுத்த எருமைக் கடாவின் மீதாரோகணித்து கரத்தில் பாசதண் டந்தாங்கி காசிமாநகரத்தில் ரிஷிபுத்திரன் பரமனை வழிபட்டிருக்கும் இடத் தைச் சேர்ந்து மார்க்கண்டனைப் பார்த்து பிள்ளாய்! நீ யென்ன காரியம் செய்தாய். ஊழ்வினைச் சம்பவமும் சிவபிரான் கட்டளை நியதியும் ஒருவரால் அழிக்கப்படுவதோ? நீ செய்யும் பூசனையானது பாவத்தைப் போக்கும் எனது பாசத்தை விலக்குமோ? முத்தொழிலை நடத்தும் திரிமூர்த்திகளே உனக் குத் துணையானாலும் உன்னுயிரைக் கொண்டன்றி மீளேன். ஆதலால் பயங் கொள்ளாமல் என்னுடன் வருவாயென்று கூற, அது கேட்ட மார்க்கண்டன் ஓமறலியே! சிவனடியார்களுக்கு எக்காலத்தும் முடிவில்லை ஒருகால முண் டாயினும் வெள்ளியங் கிரியைச் சேருவதல்லது உன் பதவியை யணுகார்கள். அவ்வடியாருக்குப் பணிவிடை செய்திருக்கும் என் பிராணனுக்குத் தீங்கு செய்ய நினைத்து வந்தாய். இவை உன்பிராணனுக்கும் உன் அரசுரிமைக்கும்

கேடுகாலம் நேர்ந்தது. இச்சந்நிதானத்தை விட்டுப் புறம்பே போவென்று
சொல்ல அதைக்கேட்ட இயமன் அதிக கோபத்துடன் பாலன் சமீபத்திற்
போய் தன் கரத்திற் கொண்ட கால பாசத்தைச் சுழற்றி யெறிந்து அவன்
திருக்கண்டத்தில் மாட்டிச் சிவலிங்கத்துடன் வலிக்கத் தொடங்கினான். அத்
தருணத்தில் மார்க்கண்டர் சற்றும் மனமிளையாமற் சிவலிங்கத்தைத் தழுவித்
துதித்திருந்தனர். அப்பொழுது சிவபிரானெழுந்தருளி பத்தனே! நீ அஞ்
சலையெனத் திருவாய்மலர்ந்து திரிபுரதகனராகிய பரமன் கோபித்து வீர
கண்டையணிந்த இடது திருவடியைநீட்டி யுதைத்தனர். உடனே அடியற்ற
பனையைப்போல இயமன் பூமியில் விழுந்திறந்தனன். அதைக் கண்ட மார்க்
கண்டர் என்னுயிரைக் காத்திரட்சிக்கச் சிவநாதனிருக்கின்றார். உருத்து
வந்த கூற்றுவனென்னை யென்ன செய்யலாமென்றுசொல்லி வேதவாக்கியங்
களினால் பலவாறு கர்த்தனைப் பாடித் துதித்தனர். அப்போது பரமசிவன்
சிறுவன்மீது கிருபைகூர்ந்து குழந்தாய்! நீ நம்மைப்போற்றிச் சிறந்த பூசனை
நடாத்தியதால் என்றும் அழிவில்லாத ஆயுளை யுனக்களித்தோமென்றருளிச்
செய்து அவ்விலிங்கத்துள் மறைந் தருளினார். பின்பு மார்க்கண்டர் பேரானந்
தக் கடலின்மூழ்கி வெளிவந்து தன்னை நினைந்து ஏங்கியிருக்கும் தாய் தந்தை
யரைக் கண்டு வணங்கி அவர்கள் கொண்ட துயரத்தை மாற்றிச் சுகமாய்
வாழ்ந்திருந்தனர்.

இப்பால் மார்க்கண்டரைத் துன்பஞ்செய்த இயமனிறந்ததால் பிறந்
துள அசராசரங்களுக்கு நாசமில்லாமல் பெருகச் சுமை மிகுத்ததைப் பூமி
தேவி தாங்கப்படாமல்வாடி ஸ்ரீ காளகண்ட மூர்த்தி யெழுந்தருளிய திருக்
கயிலாயமடைந்து தேவதேவன் பாதாரவிந்தங்களில் வணங்கி சுவாமி! சீவ
ராசிகள் அழிவின்மையால் பாரஞ்சுமக்க என்னால் முடியவில்லை. அடியாள்
பொருட்டு இயமன்செய்த தீமையைப் பொறுத்தருளி அவனை யெழுப்பித்
தரவேண்டுமென்று வேண்ட சிவபிரானிரக்க மூற்று எமதருமனே! வாவென்
றழைக்க தூக்கத்தில்நின்றும் எழுந்தாற்போல மீளத்தோன்றி பரமன் பாதங்
களிற் பன்முறைவணங்கி உமது திவ்வியதிருவடி அடியேன்மீது தாக்கலால்
யான் உய்ந்தேன் உய்ந்தேன் என்று வணங்குந் தருமனைத் திரிபுரதகனர்
கருணைகூர்ந்து உனக்கின்னுங் கட்டளையிடுவ தென்ன வென்றால், பரிசுத்த
மாகிய விபூதி ருத்திராட்ச மணிந்த நமதடியாரைக் கண்டால் பத்தியுடன்
பணிந்து போற்றிப் போகக்கடவாயென்று திருவாய் மலர்ந்தனர். அதைக்
கேட்ட இயமன் அவரது பொற்பாத கமலங்களிற் றொழுது வாழ்த்தி
சுவாமி! தேவரீர் திருமேனியின்மீது யான் பாசம்வீசிய பாவத்தை யொழித்
தருளவேண்டு மென்றிரங்கிக் கேட்டனன். இயமனை நோக்கி பரம சிவன்
காலனே! பூமியின் கண்ணே தொண்டைமா நாட்டில் திரலமாநகர மென்
றொரு தலமுண்டு. அதில் முன்னம் மதனால் அருச்சித்தேத்திய நமது
குறியையடுத்துப் பூசிப்பையேல் உனது சித்தசஞ்சலத்தை யொழிப்போ
மென்றனர். அவ்வுரையைக்கேட்ட இயமன் பரனிடம் விடைபெற்றுச் சந்
தோஷித்தனாய் அப்பதியை யுடைந்து அனங்கன் பூசித்த அரனைக்கண்டு

அன்புடன் பூசித்து ஆரணமொழியால் தோத்திரஞ்செய்து அஞ்சலித்துநின்ற சமையத்தில் காமதகனனாகிய கண்ணுதல்மூர்த்தி இடபவாகனத்தின்மீது திரிநேத்திரம் சதுர்ப்புஜம் காளகண்டத்துடன் பார்வதி சமேதராய் இயமன் முன்வந்து காலனே! நினது தோத்திரங்கேட்டு மகிழ்ந்தோம். என்மீது நீ பாசம்வீசிய பாவத்தையும ஒழித்தோம் இனிச்சுகமாய் வாழக்கடவாயெனத் திருவாய்மலர்ந்தருளிச் சிவலிங்கத்துள் அயிக்கமாயினர். தேவர்கள் புட்பவருடம் பொழிந்தனர். அச்சிவபெருமானை மதனனும் அந்தகனும் பூசித்த காரணத்தினால் மதனாந்தகேசனென்று உலகத்தார் கூறுகின்றனர். அச்சிவலிங்கத்தின் மேற்றிசையில் நான்கம்புவிசை தூரத்தில் எழுந்தருளியிருக்கும் மாயூரேசனைக்கண்டு துதித்துப் பணிந்து அதன் வடதிசையிலெழுந்தருளிய காளத்தீசரையும் பணிந்து துதித்து விடைபெற்றுத் தன்னுலகஞ் சேர்ந்திருந்தனனென்று சூதபுராணிகர் நைமிசாரணியமுனிவர்களுக்குச் சொல்லினர்.

இயமனருச்சனைச்சருக்கமுற்றிற்று.

௨

## வீரபத்திரச்சருக்கம்.

சிவத்தியானபரராகிய நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவர் புகன்ற இயமன் சரிதமாகிய வமுதத்தைச் செவியாகிய வாயினாலுண்டு களித்து அம்முனிவரது திருவடியிற்பணிந்து தேவரீரது திருவாக்கால் வீரபத்திரக் கடவுள் சரிதத்தையும் சொல்லவேண்டுமென்றுகேட்கச் சூதபுராணிகர் கூறுகின்றார். கேளுங்கள் முனிவர்களே! சர்வஜீவதயாபரனாகிய சாம்பவமூர்த்தி கயிலாயத்திலே ஒரு பகல் திருமால் பிரமன் இந்திரன் திக்குப்பாலகர் கின்னரர் கிம்புருடர் முதலிய சகலதேவரும் வணங்க அவர்களுக்குத் தக்கவாறு அருள் பாலித்துக்கொண்டு நவரத்தினமமுத்திய சிங்காதனத்திலே அரசிருந்தனர் அவ்வேளையிலே இசைக்கியானந் தேர்ந்த நாரதமுனிவர் அச்சபையையடைந்து சிவபெருமானைக்கண்டு சேவித்து நின்றனர்.

கடவுள் அம்முனிவரை நோக்கி அன்பனே! உனது வரவின் செய்தியை யுரைப்பாயெனக் கட்டளையிட உடனே முனிவர் வணங்கி சுவாமி! தேவரீருக்குத் தெரியாத தொன்றுமில்லை. ஆயினும் மண்ணுலகத்திலே விலாசகாஞ்சி யென்னும் பதியிலே வச்சிராங்கத னென்பவன் ஒருவனிருக்கின்றான். அவன் அரசர் குலத்திலே பிறந்தும் அருகக் கடவுளைத் தெய்வமாகக்கொண்ட புத்தசமயத்தை யடைந்து தமது பாதபத்தியையும் சிவசின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷத்தையும் மறந்து இருக்கின்றனன். அதனால் அவன் நகரத்தில் சமண சமயமானது இருள்போல் எங்கும் வியாபித்து நிறைந்திருக்கின்றது. எம்போலிகளான தமதடிமைச் சைவர்களெல்லாம் தமது பஞ்சாக்ஷரத்தை யுச்சரிக்கவும் அஞ்சிமறைந்து இத்துயர் நீங்குவதெக்காலமோவென்று ஏங்குகின்றனர். அக்கொடிய சமணமதத்தை நாசஞ்செய்

தற்குத் தேவரீர் அருள்செய்ய வேண்டு மென்று பிரார்த்தித்து நிற்க, அம்போது சுவாமி, வீரபத்திரர் முகத்தை நோக்கி உனது பத்தினியுடன் பூலோகத்திற்குச் சென்று வச்சிராங்கத னென்னும் அரசனைப் புத்தசமயத்தில் நின்றும் நீக்கி சைவசமயத்தைப் போதித்து அவனால் அவ்வூரி லுள்ளவரையும் சைவசமயத்தவராக்கி அவ்வூரையும் புதுக்கிவருவா யென்று கட்டளையிட வீரபத்திரரும் மனமகிழ்ந்து அஷ்டாங்க நமஸ்காரம் பண்ணி விடை பெற்றுக்கொண்டு அனேக பூதகணங்கள் சூழ தனது பத்தினியுடன் தேரிலேறி பூமியின்கண்வந்து தாலமாநகரத்தை யடைந்தனர்.

அவ்வீரனது வன்மைகளை யெல்லாம் புத்தர்கள் கண்டெதிர்ந்து நீங்கள் அசேதனமாகிய எலும்பை யணிந்தவனுக்குத் தொண்டு பூண்டவ ராகையால் இப்பதியில் வரக்கூடா தென்று ஒரு சிங்கத்தைப் பல எருமைக் கடாக்கள் தடுத்ததுபோல் தடுத்தார்கள். வீரன் அத்தடையைமீறித் தனது சேனையுடன் பரமசிவனெழுந்தருளிய ஆலயத்தையடைந்தனன். இச்செய்திகளை யெல்லாம் புத்தரா லுணர்ந்த வச்சிராங்கத மன்னன் கோபக்குறியுடைய வனாய்ப் பல சேனைகள் புடைசூழத் தன்னை மறந்து சிவாலயத்தையடைந்து சூரியனைப் போலும் ஆதனத்தி லமர்ந்தருளிய வீரபத்திரரை நோக்கி அடா சாம்பலைப் பூசும் சழக்கனே! நீ யார்? இங்குவந்த காரியம் யாது? சீக்கிரம் தெரிப்பிப்பா யென்று கூறினன். அதுகேட்ட வீரபத்திரர் யாம் வசிப்பது கைலாயம். என் பெயர் வீரபத்திரன் சர்வஜீவதயாபரனாகிய சிவபெருமான்பிரபாவங்களையெல்லாம் உனக்குணர்த்தவந்தேனென்றுகூற அதைக்கேட்ட அரசன் மிகக் கோபித்துப் புன்னகைபுரிந்து யாவருமிகழும் எலும்பு தோல் பாம்பு பன்றிக்கொம்பு கொக்கிறகு ஆமைஓடு முதலிய அசுத்தப்பொருளை அணியெனக்கொள்ளும் பித்தன் பெருமையைப் பேசவந்தவன் பெரும்பித்தனாவனென்று இகழ்ந்து கூறினன். அப்போது வீரபத்திரக் கடவுளுக்குக் கோபம்மிகுந்து தனது நெற்றிக்கண்ணைத் திறந்தனர் உடனே அழலிற்பட்ட தளிர்போல்வாடி வெப்பம் சகியாதவனாய் அரசன் மூர்ச்சையடைய மந்திரி முதலானோர்கண்டு உபசாரஞ்செய்ய மூர்ச்சைதெளிந்து வீரபத்திரருடைய திருவடிகளிற் பணிந்து அய்யனே! தேவரீரது பெருமையை அறியாதுபேசிய அடியேன் பிழையைப் பொறுத்து மோட்சத்தைத் தருவதாகிய சைவமார்க்கத்தை உபதேசித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துப்போற்ற வீரபத்திரர் கிருபைகூர்ந்து தனது திருக்கரத்தால் அரசன் சரீரத்தைப் பரிசித்து வெப்பத்தை நீக்கிச் சொல்லுகின்றார்.

கேளும் அரசனே மாவிரதம் பாசுபதம் காளாமுகம் வாமம் வைரவம் சைவம் ஆகிய இவ்வாறும் உட்சமயம். பாஞ்சராத்திரம் பட்டாசாரியம் சமணம் புத்தம் மீமாஞ்சை லோகாயிதம் ஆகிய இவ்வாறும் புறச்சமயம். இவைகளில் புறச்சமயத்தைநீக்கி உட்சமயத்தைக்கொள்ளுவ துத்தமம். இவ்வாறினும் சைவசமயஞ் சிறந்தது. அதனினுஞ் சிறந்தது வீரசைவம். அதேனெனில், தான்வேறு ஈசன் வேறென் றிசைப்பது சைவம். அதுவே நாமென்று அங்கலிங்க சையோகத்தைக் கூறுவது வீரசைவம். ஆகையால் வீரசைவம்

விசேடமென்று அரசன் வினவிய அநேக ஆட்சேபத்திற்குஞ் சமாதானஞ் சொல்லித் திருவாய் மலர்ந்தருளினர். பின்பு அரசன் வீரபத்திரரை வணங்கி எந்தையே! தேவரீருரைத்தவாறே அடியேனுக்கு வீரசைவதீக்ஷையை விதிப் படிப் போதிக்க வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனன். அது கேட்ட வீரன் அவ்வாறே அரசனுக் குபதேசித்து விபூதி ருத்திராக்ஷம் தரிப்பித்து இலிங்கதாரணம் செய்வித்துச் சைவனாக்கிப் பின்பு அவ்வரசனால் அந்நகரி லுள்ள யாவரையும் சைவமார்க்கத்தி லொழுகும்படிச் செய்வித்துப் பின்னும் அரசனை நோக்கிச் சொல்லுகின்றார். அன்பனே! இத்தலம் யாவர்க்கும் இகபர மோக்ஷங்களைப் பாலித்து எத்தலங்களிலும் சிறந்ததாய் விளங்கும். இப்பதியி லுள்ள தேவாலயங்களைப் புதுக்கி ஆதிசைவரால் நித்திய நைமித்தியங்களைச் செய்வித்துப் பிரமோத்ஸவத்தையும் நடத்திப் பின்பு பேரானந்த மடையக் கடவாயெனக் கட்டளை யிட்டனர். அது கேட்ட வச்சிராங்கத மன்னன் பெருமகிழ்ச்சி யடைந்து எம்பெருமானே! தேவரீரை விட்டிருக்க அடியேன் எவ்வாறு துணிவே னென்று திருவடிகளைச் சிரமேற் சூடிக் கொண்டு கை கட்டி யெதிரே நிற்க வீரபத்திரர் அரசனை நோக்கி நீ நமது திருவுருவைப் பிரதிஷ்டைசெய்து பூசிப்பாயெனக் கட்டளையிட்டுக் கயிலையை யடைந்தனர்.

அது கண்டவரசர் பெருந்தகை அத்தியந்த ஆச்சரியத்துடன் திக்கு நோக்கி பலமுறை நமஸ்கரித்து நால்வகைச் சேனைகளும் புடைசூழ்ந்துவர ஆலயத்தை யடைந்து ஸ்ரீ மாயூர நாதரைத் தெரிசித்துச் சிற்ப சாஸ்திரிகளால் அப்பெருமானுக்கும் சௌந்தரநாயகியார் முதலிய மூர்த்திகளுக்கும் கெர்ப்பக்கிருகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் மதில் கோபுரம் துஜஸ்தம்பம் பலிபீடம் முதலியவைகளைத் தக்கபடி யமைத்துப் பஞ்ச மூர்த்திகளுக்கும் இரதம் வாகனம் ஆபரணாதிகளையும் வகுத்து நகரத்தையும் புதுக்கித் தனது பரமாசாரியரான வீரபத்திரக்கடவுளைப் பிரதிட்டைசெய்து ஆலயம் சமைத்துப் பூசைபுரிந்து காளத்திநாதர் இலக்குமிநாராயணர் இவர்கள் வீற்றிருக்கும் ஆலயங்களையும் மென்மேலாகச் சிறப்புகள் செய்து ஆலயத்திற்கு நித்திய நைமித்தியங்களையும் திருவிழாவையும் நியமித்து நடாத்திச் சிலநாள் அரசாண்டிருந்து வீரபத்திரக் கடவுளுடைய திருவடிநிழலை யடைந்தனன். அன்று முதல் அந்த நகரத்திற்கு மயூரபுரி புலியூர் வச்சிராங்கதபுரி விலாசகாஞ்சி பனைப்புரி பிரமபுரம் இந்திரபுரம் சக்கமாபுரி கலியாணபுரம் சோதிலிங்கபுரம் என்று தசநாமம் வழங்குகின்ற தென்று தணிகையி லமருஞ் சரவணபவனுரைக்கக் கேட்ட அகத்தியமுனிவர் முருகக்கடவுளடியிற்பணிந்து அலர்கொண்டருச்சித்து சோடசோபசாரஞ்செய்து தெய்வயானையம்மையையும் வள்ளிநாச்சியாரையும் வாழ்த்தி அமரர் சிறைதவிர்த்த ஆண்டவனே! உமது திருவாக்கால் தாலேயம்பதியின் மான்மியங்கேட்டுப் பிறவிப்பயனை யடைந்துய்ந்தேன். அத்திருத்தலத்தை அடியேனடைந்து காண விடைதரல்வேண்டுமென்று லோபாமுத்திரையுடன் வணங்க அவ்வாறே முருகக்கடவுள் அனுக்கிரகித்தனரென்று நைமிசாரணியமுனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினர்.

வீரபத்திரச்சருக்கமுற்றிற்று.

## அகத்தியன்பூசனைச்சருக்கம்.

சிவாகமங்களைத்தெரிந்த நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவர்கூறிய சரித்திரத்தைக்கேட்டு வணங்கி சுவாமி! அடியேங்கட்கு வீரபத்திரர் கதையைக் கூறினீர். இனி அகத்தியர் பூசித்த சரித்திரத்தைக் கூறவேண்டுமென்று வணங்கிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார். கேளும் முனிவர்களே! அகத்தியர் முருகக்கடவுளிடத்தில விடைபெற்றுத் தணிகையைவிட்டு நீங்கி திருப்புலிசனை சேவைசெய்ய வழிகொண்டு தனது மனைவியார் பின்வர மலை வனம் பாலை சோலை முதலிய விடங்களைக்கடந்து தாலமாநகரினையடைந்து அங்குள்ள அனேக வைபவ விநோதங்களையெல்லாம் தனது பத்தினியாருக்குக்காட்டி மகிழ்வுசெய்து பரமசிவனெழுந்தருளும் ஆலயத்தைச்சேர்ந்து அங்குள்ள சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து நெஞ்சிலன்புபெருக விழிகளில் நீர்சொரிய கரங்களைச் சிரமேற்குவித்து ஆலயத்தை வலம்வந்து சோதிலிங்கப்பெருமானையும் சௌந்தரநாயகியம்மையையும் பலமுறை பணிந்தெழுந்து ஐந்தெழுத்தையும் அகலாதுச் சரித்து பூசை செய்து அன்புருவாகிச் சண்முகக் கடவுளிடத்தில் கேட்டருளிய சரித்திரப் படியே சொல்லித் துதித்தனர். அதைத் திருச்செவியி லேற்று மகிழ்ந்த மாயூர நாதர் தரிசனந்தந்தளித்து முனிவனே! நினது துதியைக்கேட்டு ஆனந்தமடைந்தோம். என்று அத்த மத்தக சையோகஞ் செய்து சரீரத்தைப் பரிசித்து என்னை யொத்தவன் நீயே உமையை யொத்தவள் லோபா முத்திரையே உன்னைப் போலும் மெய்ஞ்ஞானத்தை யுடையவ ரொருவருமில்லை யினி நீ யுன் மனைவி யுடன் பொதியமலையை யடையக் கடவாயென்று கட்டளையிட்டு இலிங்கத்தில் மறைந்தருளினார். பின்பு அகத்திய முனிவர் பாலாற்றின் வடதிசையில் ஒரு சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து அகிலாண்ட நாயகி யம்மையையும் அமைத்துப் பூசித் தருச்சித் தேத்தி வணங்கி காஞ்சியை யடைந்து ஏகம்பரைத் தொழுது சிதம்பரத்தைச் சேர்ந்து நடேசரைச் சேவித்து தனது மனைவியாருடன் அகத்திய முனிவர் பொதியாசல மடைந்து சத்தினி பாதத்தால் பந்த பாசத்தை முற்றக்களைந்து பரமசிவன் திருவடியைச் சிந்தித்திருந்தனர். அவ்வகத்தியர் பிரதிட்டை செய்து பூசித்த லிங்கத்தை அகத்தீசரென்றும் அப்பெருமானெழுந்தருளிய தலத்தை நெடும்புலி மாநகர மென்றும் வேதங்களால் கூறப்படுமென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதபுராணிகர் கூறினார்.

அகத்தியன்பூசனைச்சருக்க முற்றிற்று.

உ

# விவாகச்சருக்கம்.

சித்தசுத்தியடைந்த நைமிசாரணிய முனிவர்கள் சூதமுனிவரை வணங்கி தீன்தயாபரமூர்த்தியே! அடியேங்களுய்யும்பொருட்டு அகத்தியர் சரித்திரத்தைக் கூறினீர். இன்னும் உமது திருவாக்கால் பரமேசன் திருமணக்கதையையும்கேட்க, ஆவல் கொண்டோமென்று வேண்ட சூதபுராணிகர் சொல்லத் தொடங்கினர். கேளுந் தபோதனர்களே! கயிலாயபதியான் கட்டளைப்படி மயிலுருவடைந்த உமையம்மையார் தாலையம்பதிப்பரமனைப் பூசைசெய்து துதித்திருக்க, அப்போது சாம்பவ மூர்த்தி யெதிரில் தோன்றி அம்மை யாருக்குக் காட்சிதந்து பாவாய்! முன்னம் உனக்கு நான் கொடுத்த சாபம் இன்றோடொழிந்தது. இனி உன்னை இந்நகரத்தில் தேவர் முனிவர் முதலிய யாவருங் காணத் திருமணஞ் செய்வேனென்று அம்மையார் மகிழக்கூறி தன தருகிலிருந்த திருமால்முகத்தை நோக்கி மாயவனே! இந்தப்பர்வத ராஜபுத்திரியை இவ்விடத்திற்றானே சித்திரை மாசத்தில் வரும் மக நக்ஷத்திரத்தில் திருமணஞ் செய்ய வேண்டியதால், அதற்குரிய முயற்சி செய்வா யென்று சிவபிரான் கட்டளையிட, திருமால் தகுதி யமைந்த பல சிவகணங்களை யழைத்து லோகமாதாவாகிய உமாதேவியாருக்கும் சர்வ ஜீவதயாபரனாகிய சிவபெருமானுக்கும் திருமணம் நடக்கின்றதென்று கூறி எல்லாத் தேவர்களையும் இவ்விடத் தழையுங்களென்று விடுத்தார்.

அஷ்டதிக்குப் பாலகர்களும் தேவர்களும் வித்தியாதரர்களும் நாகலோகத்தார்களும் சூரியன் முதலிய நவக்கிரகங்களும் காந்தர்வர்களும் இயக்கர்களும் பிரமன் முதலியோர்களும் வைகுந்தத்திலுள்ளவர்களும் கயிலாயத்திலுள்ளவர்களும் ஆகிய யாவரும் வந்து அங்கடைந்தார்கள். திருமாலின் கட்டளைப்படி அவ்விடத்துத் தேவகம்மியன் தூய்மையாகிய இரத்தினங்களால் ஒளிவிளங்க அழகிய மண்டபங்களும் குளிர்ச்சி பொருந்திய முத்துக்களினால் திருமணப் பந்தல்களும் நிருமித்தான். அந்நகரத்திலுள்ள பெண்கள் அலங்காரமாக வீதிகளில் வாழை கமுகு கொடி தோரணம் முதலியவைகளை நாட்டி பூரணகலசம் பாலிகை விளக்கு முதலிய அஷ்டமங்கலங்களமைத்து, அன்புடன் கைகோத்து விளையாடுவார்கள். இவ்விதச் சிறப்பமைந்த தாலையம்பதியில் மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் நாகலோகத்தவரும் சிவபிரான் திருமணத்திற்காக அன்போடு வந்து நெருங்கியிருக்க, அப்பொழுது சித்திரை மாசத்தில் மகநட்சத்திரம் கூடிய சுபதினம் வந்ததை யறிந்து இன்றையதினம்தான் திருமணத்தினமென்று திருமால் சிவபெருமானுக்குக்கூறினர். எமது தந்தை யாராகிய சிவபெருமானும் குபேரன் அலங்கரிக்க மணக்கோலங் கொண்டு அத்திருமணத்திற் காக அமைத்துள்ள மண்டபத்தில் வந்து சேர்ந்தார். இப்பால் திருமால் கட்டளைப்படி இலக்குமியும் சரஸ்வதியும் வந்து உமாதேவியாரை ஆடையா பரணங்களாலலங்காரம் செய்து சிவபிரானுக்கு வலப்பாகத்தில் அமைத்தார்கள். அப்போது கற்பகத்தரு காமதேனு சங்கநிதி பதுமநிதி இவைகள் சிவபிரான் திருமணத்திற்கு வேண்டிய பொருள்களை அப்போதைக் கப்போது கொடுத்து ஏவல் புரிந்து நின்று கொண்டிருக்க, அவ்விடத் தடைந்த மகா தவசிகளும் மறையவரும் வேத மந்திரமோத, பிரமன் திருமணத்திற்குரிய சடங்குகளெல்லாம் செய்து முடித்தான்.

மணஞ்செய் முகூர்த்தம் சமீபித்ததென்று பிரகஸ்பதி பகவான் கூற அதைக்கேட்ட பர்வத ராஜன் இனிமையுடன் எழுந்திருந்து தோண் மீது

தரித்திருந்த உத்தரியத்தை இடையிற் கட்டிக்கொண்டு தனது புத்திரியாகிய உமாதேவியாரை தனது மடித்தலத்தில் வைத்துக்கொண்டு நெல்வித்தின் மீது உட்கார்ந்து சிவபிரானது பொன்போலும் அழகிய திருக்கரத்தின் மீது தனது புத்திரியினது மெல்லிய திருக்கரத்தை வைத்து மனைவியாகிய மேனு தேவி வார்க்கும் நீரை விட்டான். உடனே தேவதுந்துபி முழங்கத் தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். மற்றுஞ் செய்ய வேண்டிய சடங்குக ளனைத்தையும் பிரமன் செய்து முடிக்கச் சிவபிரான் வெள்ளிய பொரியைத் திருக்கரத்தா லள்ளி அக்கினிக்கு அவிகொடுத்து சௌந்தர நாயகியாரது சிறுவிரலைப் பிடித்துக்கொண்டு தேவியின் திருவடியைப் பொன்னுலாகிய அம்மியின் மீதெடுத்து வைத்து அருந்ததியின் வடிவத்தைக் காட்டி அக்கினியை வலமாகவந்தார். பின்பு திருவருள் நிரம்பிய சிவபிரானுக்கும் சௌந்தர நாயகியாருக்கும் அநேக அரம்பை மாதர்கள் ஆலாத்தி சுற்றினார்கள். யாவராலுங் காண்டற் கரிய சிவபிரானது கிருபை நிறைந்த திருக்கோலத்தை இத்தலத்தின் கண் தரிசிக்கப் பெற்றோ மென்று தேவர்கள் நாகர்கள் முதலானவர்கள் கடவுளைப் பலவாறு வேண்டித் தோத்திரஞ் செய்து வழிபட்டார்கள்.

ஒளி விளங்கும் ஆபரண மணிந்த சௌந்தர நாயகியார் தமது தாய் தந்தையர்களாகிய மேனை பர்வதராஜன் இவர்களது திருவடிகளில் வணங்கினாள். திருமணத்திற்கு வந்த தேவர்கள் முதல் எவர்களுக்கும் முறைப்படி அவ்விடத்து வந்திருந்த காமதேனு திருவமுது படைக்க சந்தனம் புட்ப முதலிய வரிசைகளைக் கற்பகத்தரு கொடுக்க திருமால் உபசார வார்த்தைகள் கூற கொன்றை மாலை யணிந்த மாயூரநாதரும் சவுந்தர நாயகியும் மகிழ்ச்சி யுற்றிருந்தனர். பின்பு சகதீசனாகிய மாயூரேசனும் மயில்போலும் சாயலையுடைய சவுந்தர நாயகி யாரும் மிக்க அலங்கார மமைந்த அத்தாலமா நகரின் திருவீதியி லெழுந்தருளத் திருமணக் கோலம் வரவேண்டி சிவபிரான் இடப வாகனத்தின் மீதும் உமாதேவியார் அன்ன வாகனத்தின் மீதும் ஆரோகணித்து, பலவித வாத்தியங்கள் கடல்போலச் சத்திக்கச் சித்தர் சாரணர் தும்புரு நாரதர் கின்னரர் கிம்புருடர் முதலியோர் இசை பாடிக்கொண்டு வரவும், ஊர்வசி திலோத்தமை முதலிய தேவ மாதர்கள் நாட்டியம் புரிந்துகொண்டு வரவும், இந்திரன் கையில் பிரம்பு கொண்டு வழி விலக்கிவரவும், அக்கினி பகவான் இருளை யகற்றி வரவும், சவுனகாதி முனிவர்கள் ஒருங்கு கூடி வேத பாராயணஞ் செய்து வரவும், மற்று முள்ள தேவர்கள் புடைசூழ்ந்து வரவும் அழகமைந்த அத்தாலமா நகரத்தை வலமாக வந்தார்கள்.

அத்திருமணக் கோலத்தைத் தேவர்களும் நாகர்களும் அத்தாலமாபுரி வாசிகள் முதலாகிய பல தேசத்தார்களும் தரிசித்து வணங்கித் தமது துன்பங்களை நீக்கிச் சந்தோஷ மடைந்தார்கள். பின்பு சிவபெருமான் சிறப்பமைந்த மாடவீதியை வலமாக வந்து ஆகாயத்தை யளாவிய கோபுரவாயிலை யடைந்து அநேகங்கோடி அரம்பை மாதர் கூடி மங்கல வாழ்த்துகள் கூறித் துதிக்க, உள்ளே சென்று திருமண மண்டபத்தில், வீற்றிருந்து திருவருள் சுரந்தவராய்த் திருமணத்திற்கு வந்திருந்த தேவேந்திரன் பிரமனாதிய ஒவ்வொருவருக்குந் தக்கவாறு விடை கொடுத்துச் சவுந்தர நாயகி யாருடன் அளவளாவி ஆனந்த சந்தோஷ முற்றிருந்தனர் ஆகையால் அந்த விலாசகாஞ்சி யென்னுந் தாலமா நகரம் எல்லா நகரத்திற்கும் மேன்மை யானதென்று சூதபுராணிகர் நைமிசாரணிய முனிவர்களுக்குச் சொல்லித்தன்னிருக்கை சேர்ந்தார். அவ்வுரையைக் கேட்ட முனிவர்கள் அவரிடம் விடை பெற்று அத்தலத்தை யடைந்து ஸ்ரீ மாயூர நாதரைத் தரிசித்துப் பேரானந்த மடைந்தனர்.

விவாகச்சருக்க முற்றிற்று.